
இரட்சணிய யாத்திரிகம்

ஓர் ஆராய்ச்சி



டாக்டர் வீ.ஞானசிகாமணி

இரட்சணிய யாத்திரிகம்

ஓர் ஆராய்ச்சி

டாக்டர் வீ. ஞானசிகாமணி

எம் ஏ. பிஎச். டி., டிப். தெலு.,

கிறிஸ்டியன் சொசைட்டி ஃபார் ஓரியன்டல் கல்சுரல்

அண்டு சோசியல் ஸ்டடீஸ்

சென்னை

முதல் பதிப்பு : 1983

நற்செய்தி அச்சகம், சென்னை-600 060

A STUDY OF

Iratcanya Yaathirikam

Dr. V. GNANASIKHAMANI,

M.A., Ph. D., Dip. Tel.,

CHRISTIAN SOCIETY FOR ORIENTAL CULTURAL AND SOCIAL STUDIES

MADRAS

FIRST EDITION : 1983

Price Rs. 12-00


Printed at Narcheythi Printers, Madras 600-060

ப டை ய ல்

பேரா. டான் டிவெல்ட் அவர்கட்கு

திருமறைப் பேராசிரியர், விளக்கவுரையாளர், நற்செய்தி ஊழியர்

‘‘கடவுள் என் இருதயத்தைத் திறந்தார்;
அவரைத் துதிக்க என் வாயைத் திறந்தேன்.’’



(கிருஷ்ணபிள்ளை கிறிஸ்தவனான வரலாறு, பக். 28)



எ. ஆ. இருஷ்ணபிள்ளை

தோற்றம் : 23-4-1827 மறைவு : 3-2-1900

திருமுழுக்கு : 18-4-1858

ஆசிரியரின் உரை

மகாகவி எ.ஆ. கிருஷ்ணபிள்ளையவர்களின் வாழ்க்கையையும், எல்லா எழுத்துகளையும் ஆராய்ந்து 1978இல் எ. ஆ. கிருஷ்ண பிள்ளையின் நூல்கள் - ஓர் ஆராய்ச்சி என்னும் ஆராய்ச்சி நூலினை வெளியிட்டேன்; இவ்வாய்வுரை சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையில் பேராசிரியர் டாக்டர் மு. வரத ராசனுர் அவர்களின் மேற்பார்வையில் பிஎச். டி. பட்டத்திற்காக எழுதப்பட்டதாகும்.

கடந்த சிலகாலமாக அவ்வாய்வுரைக் கிட்டாத நிலையில் என்னுடைய நீண்ட நாளைய பழைய எண்ணம் மேலிட்டது. அதாவது இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய சமய நிர்ணயம், ஆகிய நூல்களைக் குறித்து தனித் தனியே ஆராய்ச்சி நூல்கள் வெளியிடவேண்டும் என்பதாகும். அந்த விருப்பத்தின் முதல் நிறைவாக மீட்பர் பெருமான் இயேசு வின் திருவருளால் 'இரட்சணிய யாத்திரிகம்-ஓர் ஆராய்ச்சி' என்னும் நூல் வெளிவருகின்றது.

இரட்சணிய யாத்திரிகத்தில் என்னுடைய ஆர்வம் நான் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் வரலாற்றுத் துறையில் பட்ட வகுப்பு மாணவனாக இருந்த காலம்முதல் (1962-65) தொடர்ந்தது. இந்த ஆய்வுரை ஒரு முழுநிறைவு உடையதாகவே அமைந் துள்ளது. இதில் ஆறு இயல்களும் ஏழு பின்னிணைப்புகளும் அமைந்துள்ளன. காப்பியத்தின் பொருளை ஆழமாகவும், விரிவா கவும், பகுத்தும் தொகுத்தும், ஒப்பிட்டும், பிற இலக்கியச் செல் வாக்குகளைக் கண்டும் எழுதப்பட்டுள்ளது. எனவே, இரட்சணிய யாத்திரிகம் என்னும் ஒப்புயர்வற்ற கிறித்தவத் தமிழ்க் காப்பி யத்தை ஒரு முழுமையான பார்வையுடன் கற்பதற்கு இந்நூல் ஒரு காப்பியக் கல்விக் கையேடுபோல இருத்தலைக் காணலாம். கிருஷ்ணபிள்ளை யவர்களின் எல்லா நூல்களையும் சேர்த்து மொத்த மாக நான் செய்த ஆய்வுரை இந்நூல் செய்வதற்குப் பெரிதும் துணைபுரிந்தது.

நூல் எழுதினுலும் அதனை வெளியிடப் பொருள் உதவி வேண்டுமே. 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லையே!' கடவுள் அதற்கும் ஒழுங்கு செய்துவைத்திருந்தார். பேராசிரியர் டாக்டர் கெ. இராஜரத்தினம், எம்.ஏ., பிஎச்.டி., (லண்டன்) அவர்கள் பொருளுதவி செய்து இதனைக் 'கிறிஸ்டியன் சொசைட்டி ஃபார் ஓரியன்டல் கல்சுரல் அண்டு சோசியல் ஸ்டடீஸ் (Christian Society for Oriental Cultural and Social Studies) என்னும் தம் முடைய நிறுவனத்தின் மூலம் வெளியிட முன்வந்தார்கள். அவர் களுக்கு என் மனமார்ந்த நன்றியினையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில்

மாணவனாக இருந்ததுமுதல் அவர்களை அறிவேன். அவர்கள் பல் திறப்பட்ட தொண்டுகளில் ஈடுபட்டுப் பெருந்தொண்டாற்றி வருகின்றார்கள். பொருளாதாரப் பேராசிரியராகிய அவர்கள், அகில உலகப் பொருளாதார ஆராய்ச்சி, திருச்சபை, கல்வி, சமுதாயம் ஆகிய பலதுறைகளில், உலகத்தின் பல பகுதிகளிலும் பணியாற்றி வருகின்றார்கள். அவர்கள் இந்நூலுக்கு ஒரு முன்னுரையும் எழுதியிருக்கின்றார்கள். அதற்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இரட்சணிய யாத்திரிகச் சான்றோன் பேராசிரியர் டாக்டர் பொன்னு ஆ. சாட்சியாரவர்கள் ஏற்ற ஓர் அணிந்துரையினை வழங்கியிருக்கிறார்கள். இரட்சணிய யாத்திரிகத்தின் சில பகுதிகளுக்கு உரை இயற்றி, பாட்டுரைகள் நிகழ்த்தி, கட்டுரைகள் எழுதி, அறியதொரு இரட்சணிய யாத்திரிகச் சுருக்கப் பதிப்பும் வெளியிட்டுப் பலவகையிலும் இத்தண்டமிழ்க் கிறித்தவப் பெருங் காப்பியத்தை நாடறியச் செய்து வந்த அவர்களுக்கு என் நன்றி, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இரவு பகலாகப் பெரிதும் உழைத்து இந்நூலினை அச்சிட்டுக் கொடுத்த நற்செய்தி அச்சக நண்பர்களுக்கு என் நன்றி என்றும் உரியது.

உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவைச் சார்பில் வரலாற்றுச் சிறப்புடைய வேலூரில் நடக்கும் இரண்டாவது உலகக் கிறிஸ்தவத் தமிழ் மாநாட்டில் இந்நூல் வெளியிடப்படுவது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். எல்லாம் நடப்பதற்குக் காரணமாக அமையும் மீட்பர் இயேசு பெருமானைப் போற்றுகிறேன்.

''தன்னொரு மகவைத் தந்த தற்பர னன்பு வாழி
பொன்னுல கிழிந்து வந்த புண்ணியம் வாழி வாழி
மன்னுயிர் புரக்க வந்த மனுமகன் சரணம் வாழி
என்னையிந் நிலைபா லிக்கு மெம்பிரான் கிருபை வாழி.''

வேதாகம மாணவர் பதிப்பகம் — வீ. ஞானசிகாமணி
4. அசோசியேசன் சாலை
மாதவரம், சென்னை 600 060
26-12-83
மேசியாவாணன் பிறந்த நாள்.

FOREWORD

The great Tamil Christian Poet H. A. Krishna Pillai's 'Iratcnya Yaathirigam' - Pilgrimage or Progress of salvation is a *major* Christian epic in *about* 4000 verses of sublime poetry. This is an adaptation of the immortal allegory of John Bunyan's 'Pligrim's Progress'.

Krishna Pillai's epic is writtern in five cantos narrating the journey of salvation from earth to heaven, reflecting the *oriantal* and cultural *context* of Tamil country. *It is an* epic of Christian Bhakthi.

The epic's *literary merits* are *valued and well* established. It stands in line with great Tamil epic like Kambaramayana which itself is an adaptation of Valmiki's Ramayana.

Veeramamunivar's (Fr. Beschi) 'Thembavani' is another major Christian epic. What literary shape Plutorch's stories took when they came through the mind of Shakespeare is what has happened to Bunyan's' Motcha Prayaanam' when it came through the *mind* of the gifted poet H A. Krishna Pillai. This poet became a follower of Christ in the middle of the 19th centuary from on orthodox Vaishnavite family.

The author of this book Dr. V. Gnanasikhamani has made an indepth and analytical study of the epic with a critical approach taking into account the various literary Social and Religious aspects. The appendices offer further scope for study.

I am glad to write this foreword to this study of Iratcanya Yaathirigam by Dr. V. Gnanasikhamani. I know him since his student days in the Madras Christian College and latter *on as a research* scholar in the Tamil Department of the Madras University. He is highly qualified to write on this subject because his Ph. D. study was on the complete works of H A. krishna Pillai. Besides Publishing his desertation which is out of print now, he has edited and published four other works by the same *poet; two* of them *were* in manuscripts *before* their publication. As a pioneering resear cher in the field Tamil Christian literature his contributions are valuable in exploring the lore of our rich literary heritage.

I am happy to publish this study as one of the publi cation of the Christian Society for Oriantal Cultural and Social Studies, Madras.

Madras 600-006
Dec. 20, 1983.

K. RAJARATNAM
Director

பேரா. டாக்டர் பொன்னு ஆ. சத்தியசாட்சி

பொதுச் செயலாளர்
உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவை

சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம், சென்னை 600 059

அணிந்துரை

மகாகவி கிருஷ்ண பிள்ளையின் வாழ்க்கையை இரட்சணிய யாத்திரிகத்தினின்றும் வேறுபடுத்திப் பார்க்க இயலாது. இரட்சணிய யாத்திரிகத்தை மகாகவியின் வாழ்க்கையினின்றும் வேறுபடுத்திப் பார்க்க இயலாது. இரண்டும் இரண்டறக் கலந்து கிடப்பவை. இந்த இரண்டுடன் மற்றொன்றும் மூன்றாவதாகக் கலந்து கொண்டது. அது, கர்த்தருடைய ஊழியத்தை அமைதியாக அரிதின் ஆற்றி வருகிற டாக்டர் வீ. ஞானசிகாமணியின் உள்ளம். கிருஷ்ணபிள்ளையின் எல்லா நூல்களையும் தம்முடைய ஆய்வுக்குரிய பொருளாக வைத்து ஆய்ந்து, உலகின் பழமை சான்ற பல்கலைக் கழகங்களில் ஒன்றாகிய சென்னைப் பல்கலைக் கழகத்தால் ''டாக்டர்'' என்ற அறிவாளர் பட்டம் சூட்டப்பெற்றுள்ள ஞானசிகாமணி தமிழ்க் கிறிஸ்தவ உலகிற்கு இறைவனால் வழங்கப்பட்டிருக்கிற ஒரு நன்கொடை என்றால் அது மிகையாது. 1977இல் சென்னைப் பேராயத்தின் ஆதரவில் எடுக்கப்பெற்ற மகாகவியவர்களின் 150ஆவது பிறந்தநாள் விழாவின்கண் நம்முடைய டாக்டர் அவர்களுக்கு ''இரட்சணிய யாத்திரிகச் சான்றோன்'' எனப்பட்டம் சூட்டப்பெற்றதை அவர்கள் ''கொள்ளையாடிய பொருளாக எண்ணாமல்,'' அதனை நியாயப்படுத்திக் கொண்டே போகிறார்கள் என்பதை உன்னுந்தொறும் என்மனம் எத்துணை மகிழ்ச்சியுறுகின்றது! யாத்திரிகம் பற்றியும் மகாகவியவர்களைப் பற்றியும் முன் எழுதியும் அச்சிட்டும் உதவியுள்ள நூல்கள் போக இப்போது அவர்கள் ''நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்'' தம்மை நெருங்க வொட்டாமல் அவற்றிற்கு அப்பால் விலகிச் சென்று, ''தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கி'', இன்பம் விழையாமல் வினை விழைந்து 'இரட்சணிய யாத்திரிகம்-ஓர் ஆராய்ச்சி' என்ற இந்நூலை எழுதி அச்சிட்டு வெளியிடுகிறார்கள்; செல்வத்துள் செல்வமொன்றனை உலகிற்கு நன்கொடையாக வழங்குகிறார்கள். அதுவும், உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவை வேலூர் மாநகரில் நடாத்துகின்ற இரண்டாவது உலகக் கிறிஸ்தவத் தமிழ் மாநாட்டில் இந்நூல் வெளியிடப்படுவது நூலுக்கும் சிறப்பு, பேரவைக்கும் சிறப்பு.

இந்த நூல் அச்சுக் கோவை வடிவத்தில் இருந்தபோது இதனைப் படித்துப்பார்த்தேன். நூலின் முதற்கண்ணிருந்து இறுதி வரையிலும் ஆய்வுச் செய்திகள் நிரம்பிக்கிடக்கின்றன. காப்பியம் இயற்றப்பட்ட காலஅளவு, காப்பியத்தை இயற்றிக் கொண்டிருந்த போதும் அதற்கு முன்னரும் மகாகவியர்களின் உள்ளத்தில்

இரட்சணிய யாத்திரிகம் என்னும் மாளிகை கட்டப்பட்டெழுந்த வரலாறு, முதனூற்செய்திகள், யாத்திரிகம் வழிநூல் என்பது எந்த அளவுவரை கொள்ளப்படலாம், காப்பியத் தலைவன் யார், பாட்டுடைத் தலைவன் யாவன், கதை அமைப்பில் மகாகவி செய்து கொண்ட புதுமைகள் என்ன, இறையியல் விரிவு, விவிலியத் திருமறையுடன் யாத்திரிகத்துக்கு உள்ள நெருக்கம், அணிகள், பாவினங்கள் இப்படிப் பலப்பல அரிய பொருள்கள் இந்தப் பெரிய நூலின் கண் ஆய்வு செய்யப்படுகின்றன.

மகாகவியின் கைப்பட எழுதிய யாத்திரிகச் செய்யுட்கள் அடங்கிய பக்கங்கள் இரண்டொன்று உள்ளவாறே படியெடுக்கப் பட்டு நூலின்கண் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றைக் கண்ணுறும் போது இரட்சணிய யாத்திரிகத்தில் ஈடுபாடுடைய எவருக்கும் உள்ளத்தில் ஒரு நெகிழ்ச்சி ஏற்படாமல் இருந்திட முடியாது. பாக்களும் பாவினங்களும் ஆகியவற்றைக் கம்பராமாயணத்தில் உள்ளபடியும் யாத்திரிகத்தில் உள்ளபடியும் கணக்கிட்டுக் காட்டப் பட்டுள்ளன, இவற்றிற்கு வரிப்படம் ஒன்றும் அமைக்கப்பட் டுள்ளது! வண்ண வகைகளும் கணக்கிட்டுக்காட்டப்பட்டுள்ளன. இவையன்றி யாத்திரிகத்தின்கண் ஆளப்பட்டுள்ள திருக்குறள் தொடர்கள், கருத்துகள், சமயச்சொல்லாட்சிகள், போதாக் குறைக்கு இரட்சணிய யாத்திரிகச் சுருக்கம் ஒன்று! இந்தச் சுருக்கம் மகாகவியவர்களே எழுதியது! இவற்றை நோக்கும் போது இந்த நூலுக்கு இரட்சணிய யாத்திரிகச் சுரங்கமென்றோ, இரட்சணிய யாத்திரிகக களஞ்சியமென்றோ பெயர் சூட்டியிருக்க லாமெனத் தோன்றுகிறது.

நூல் என்றொன்று வெளியிடப்பட்டால் அது செறிவு மிக்க தாக இருந்திட வேண்டும். ஆசிரியரின் உறுதியான உழைப்பும், கருத்தாழமும், அவற்றின் இறவாத தன்மையும், எழிலும் நூலின்கண் யாண்டும் பொலிந்திட வேண்டும். பக்கத்திற்குப் பக்கம் முத்துக்குவியல்களைப்போலக் கருத்துக் குவியல்கள் காணப் பட வேண்டும். நூலின்கண் சென்றவிடமெல்லாம் சிந்தனைக்கு விருந்திருக்க வேண்டும். நூலை வாங்குகின்றவர், அதனைக் கற்ற பின்னர், இந்த நூல் என்றென்றும் பாதுகாக்கப்பட வேண்டிய அரிய செல்வம் என அதைப் போற்றி வைத்து மகிழக்கூடிய பெருமையும் அருமையும் அந்த நூலுக்கு இருந்திடுதல் வேண்டும். இத்தகு சிறப்புகள் கிறிஸ்து பெருமானின் அன்பு வழியாக எனக்கு வாய்க்கப் பெற்ற என் இனிய இளவல் ஞானசிகாமணி யின் இந்த நூலுக்கு அமைந்திருப்பது கண்ணுற்று மகிழ்கிறேன்.

ஞானசிகாமணியின் நடையைப் பற்றி ஒருசொல். அவருடைய நடை உடை பாவனைகளில் ஆரவாரம் இல்லாதது போலவே அவருடைய எழுத்திலும் ஆரவாரம் காணப்படுவதில்லை. யாரும் புரிந்துகொள்ளக் கூடிய எளிய நடை, பகட்டற்ற நடை, உள்ளத்

தின் ஆழ்ந்த இடங்களில் ஊறுகின்ற எண்ணங்களை அமைதியான ஆற்றொழுக்காகப் பாய்ச்சுகின்ற நடை, பிழையற்ற நடை, நல்ல நடை, உண்மையைச் சொல்லிவிடுகிறேன், இந்த நூலை நான் படித்துக் கொண்டிருந்தபோது டாக்டர் ஊ.வே.சா. அவர்களின் எளிய தமிழ்நடையே என்நினைவில் தோன்றிக் கொண்டிருந்தது

இந்த அரிய நூல் வேலூரில் நடைபெறுகின்ற இரண்டாவது உலகக் கிறிஸ்தவத் தமிழ் மாநாட்டின்கண் வெளியிடப்படுவது குறித்து மிக மகிழ்ச்சியுறுகிறேன் என்பதனை மீண்டும் சொல்ல விழைகிறேன். தமிழையும், உய்வளிக்கும் உயர்ந்த மெய்ப்பொருளையும் விரும்புகின்றவர் யாவரும் இந்த நூலை வாங்கிப் பயனடைவார்களாக.

தாம்பரம்
20-12-1983

பொன்னு ஆ. சத்திய சாட்சி

நற்செய்திப் பாவேந்தரின் வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு: ஏப்பிரல் 23, 1827. (கொல்லம் 1003, சித்திரைத் திங்கள் 12ஆம் நாள்).

பெற்றோர்: தந்தை: சங்கரநாராயணர்; தாய்: தெய்வநாயகியம்மையார்.

குலம்: வேளாளர்

சமயம்: வைணவம்

பிறப்பிடம்: கரையிருப்பு, திருநெல்வேலி மாவட்டம்.

திருமணம்: 14ஆம் வயதில் 9 வயதுள்ள முத்தம்மாள் என்ற சிறுமியைத் திருமணம் செய்வித்தனர்.

கிறித்தவர்களைத் துன்புறுத்தல்: தமது பதினெட்டாம் வயதில் நல்லூர்க் கிறித்தவர்களைத் துன்புறுத்தினார்.

பாளையங்கோட்டை: நல்லூர் நிகழ்ச்சியின் விளைவாக 1845இல் பாளையங்கோட்டையில் குடிபுகுந்தார். இக் காலத்தில் இவரும் தம்பியார் முத்தைய பிள்ளையும் தமிழ்ப் புலமை மிகுதியும் பெற்றனர். திருப்பாற்கடனாத கவிராயரிடம் பயின்றனர்.

தமிழாசிரியர்: 1853இல் சாயர்புரம் திருமறைக் கல்லூரியில் தமிழாசிரியரானார். பேராயர் டாக்டர் கால்டுவெல் இவரைத் தேர்வில் தேர்ந்தெடுத்து இப்பணியில் அமர்த்தினார்.

சென்னையில்: சாயர்புரத்தில் பணியாற்றி வந்தபோது இரட்சகரால் தடுத்தாட்கொள்ளப்பெற்று திருமுழுக்குப் பெறுவதற்காக 1857இல் சென்னை வந்தார். சென்னையில் இருந்தபோது, 'தினவர்த்தமானி' இதழின் துணையாசிரியராயும், மாநில உயர்நிலைப் பள்ளித் துணைத் தமிழ்ப் பண்டிதராயும் சிலகாலம் பணியாற்றினார். ஆங்கிலத் தமிழ் அகராதித் தொகுப்பாளரான பீட்டர் பெர்சிவல் ஐயர் அவர்களின்கீழ் இங்குப் பணியாற்றிய போது அவருக்குத் தமிழாசிரியராகவும் இருந்தார்.

திருமுழுக்கு: 1858இல் ஏப்பிரல் 18ஆம் நாள் தமது முப்பதாம் அகவையில் மயிலாப்பூரில் உள்ள 'தூய தாமசு திருச்சபையில், திருமுழுக்குப் பெற்றார். இது முதல் என்று ஆல்பிரடு கிருஷ்ணபிள்ளை என்று அழைக்கப் பெற்றார். H. A. கிருஷ்ண பிள்ளை என்பது பெருவழக்கு.

மீண்டும் பாளையங்கோட்டையில்: சென்னையில் திருமுழுக்குப் பெற்ற பின்னர் கிருஷ்ண பிள்ளை பாளையங்கோட்டை திரும்பினார். குடும்பத்தினரும் கிறித்தவராயினர். இவருடைய தம்பி முத்தைய பிள்ளை இவருக்கு முன்னதாகவே கிறித்தவராயினார். 1860 அளவில் 'இரட்சணிய சரிதம்' என்னும் காப்பியம் பாடத் தொடங்கினார். அது நிறைவு பெறவில்லை. 1864-1875 சாயர்புரம் கல்விச்சாலையில் மீண்டும் கிருஷ்ண பிள்ளை பணியாற்றினார். 1865இல் வேதமாணிக்கம் என்பவர் இயற்றிய 'வேதப் பொருள் அம்மானை' என்னும் நூலைப் பதிப்பித்தார்.

1876இல் பாளையங்கோட்டை திருச்சபைத் திருத்தொண்டர் கழகத்தினர் (C. M. S College) கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியரானார். இக்காலத்தில் கிருஷ்ண பிள்ளையும் குற்றாலத்திற்கு அருகில் ஒரு காப்பியத்தோட்டம் அமைத்தார். 1878இல் இரட்சணிய யாத்திரிகம் பாடத்தொடங்கினார்,

திருவனந்தபுரத்தில்: 1886இல் திருவனந்தபுரம் மகாராசர் கல்லூரியில் தலைமைப்பேராசிரியராய் விளங்கினார். இக்காலத்தில் சுந்தரம் பிள்ளை இங்கு தத்துவப் பேராசிரியராய் விளங்கினார். சுந்தரம்பிள்ளை மனோன்மணீயம் இயற்றிவந்த இதே காலத்தில் கிருஷ்ண பிள்ளையும் இரட்சணிய யாத்திரிகம் இயற்றிவந்தார் என்பது குறிக்கத்தக்கது.

குலசேசரன் பட்டினம்: 1890 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திருவனந்தபுரத்தை விட்டு இப்பட்டினம் வந்து 1891 வரையில் உப்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டார்.

இலக்கியத் திருத்தொண்டர்: 1892-1900 (வாழ்நாள் இறுதி வரை) கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் ஆசிரியராய்த் தொண்டாற்றினார். இக்காலத்தில் இவருடைய நூல்கள் பலவும் வெளிவந்தன. 1892 அளவில் இரட்சணிய யாத்திரிகம் பாடி நிறைவு செய்யப்பட்டது.

மறைவு 3-2-1900

சமகாலப் புலவர்கள்: வேதநாயக சாஸ்திரியார்(கி.பி. 1774-1864); வேதநாயகம் பிள்ளை (கி.பி. 1826-1889); மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை (கி. பி. 1815-1876); பேராசிரியர் ராவ்பகதூர் சுந்தரம்பிள்ளை (கி.பி. 1855-1897).

பதிப்பு: 'வேதப் பொருள் அம்மானை,' 'பரதகண்ட புராதனம், முதலியவை. 'பரதகண்ட புராதனம், என்ற நூலின் ஆசிரியர் டாக்டர் கால்டுவெல் ஐயர்.

தொகுப்பு: 'காவியதரும சங்கிரகம்'

இயற்றிய நூல்கள்:

உரைநடை: 'இலக்கண சூடாமணி' (1883)-'தாம் கிறித்தவரான வரலாறு, (1893;) இது 1977இல் முதன் முதல் தமிழில் அச்சானது. 'இரட்சணிய சமய நிர்ணயம், (1898).

செய்யுள்: இரட்சணிய யாத்திரிகம், (1894); இரட்சணிய மனோகரம் (1899); 1978இல் இரட்சணிய மனோகரத்தின் ஒரு விரிவான பதிப்பு வெளிவந்துள்ளது. போற்றித் திரு அகவல், (1884, இது விளக்கவுரையுடன் 1977இல் முதன் முதல் வெளியிடப்பட்டது. 'இரட்சணிய சரிதம்' (1861).

கிட்டாத நூல்கள் 'இரட்சணியக் குறள்,' 'இரட்சணிய பால போதனை.'

குறுக்க விளக்கம்

இ. ச.	—	இரட்சணிய சரிதம்.
இ. ச. நி.	—	இரட்சணிய சமய நிர்ணயம்.
இ. ம.	—	இரட்சணிய மனோகரம்.
இ. யா.	—	இரட்சணிய யாத்திரிகம்.
ஒ. நோ.	—	ஒப்பு நோக்கு.
கி. இ. ச.	—	கிறித்தவ இலக்கிய சங்கம்.
கி. பி.	—	கிறித்துவுக்குப் பின்னர்.
தி. தி. க.	—	திருச்சபைத் திருத்தொண்டர் கழகம்
பக்.	—	பக்கம், பக்கங்கள்.
போ. தி.	—	போற்றித் திருஅகவல்.
cf.	—	*Confer* (Compare).
C L.S.	—	Christian Literature Society.
ed.	—	Edition.
Ed.	—	Editor.
ff.	—	Following.
Op. cit.	—	*Opere citato* (in the work quoted).
P.	—	Page.
PP.	—	Pages.

பொருளடக்கம்

இரட்சணிய யாத்திரிகம்

ஓர் ஆராய்ச்சி

இயல் ஒன்று

இரட்சணிய யாத்திரிகத்தின் தோற்றமும் பதிப்பும்

காப்பியம் தோன்றிய சூழ்நிலை

கிருஷ்ண பிள்ளை கி. பி. 1858இல் கிறித்தவராயினர். 1860-க்குள் இவருடைய குடும்பத்தாரனைவரும் கிறித்தவத்தைத் தழுவினர். இவ்வாறு இவர் குடும்பத்தினருடன் வாழ்ந்து வருங்கால் இயேசுவின் தூய அருட்செயல்களைச் சிந்திக்கவும், செந்தமிழ்க் கவிமாலை சாற்றி அவருடைய திருவடிகளைப் போற்றவும் வேண்டும் என்னும் வேணவா இவருக்கு உண்டாயிற்று.

தம் மனத்தில் அழுந்திய இரட்சணிய சத்தியத்தை, 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்,' என்னும் பொருண்மொழிக் கிணங்கத் தம் நாட்டவரான, 'முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமக் கவி' களுடன் பணிவாய்ப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்னும் விருப்பமும் உள்ளத்தில் ஊன்றி வளர்ந்தன.[1] தன்னைப்போன்ற கொடிய பாவியைத் தடுத்தாட்கொண்ட மீட்பரின் திருவடிகட்குச் செந்தமிழ் மாலையாக இரட்சணிய யாத்திரிகத்தை அணிவிக்க புலவர் விரும்பினர் :

> என்னனைய பாவியர்இந் நிலவுலகில் யாண்டும் இலர்
> எனினும் நாயேன்
> தன்னையொரு பொருளாகத் தடுத்தாண்ட கிறிஸ்தியேசு
> சாமி செய்ய
> பொன்னனைய திருவடிக்குச் செந்தமிழ்மா லிகையொன்று
> புனைவான் எண்ணித்
> துன்னுநவ ரட்சணிய யாத்திரிக மலர்எடுத்துத்
> தொடுக்கல் உற்றேன்''

தற்சிறப்புப் பாயிரம் —10

இவற்றின் விளைவாகவே 'இரட்சணிய யாத்திரிகம்' என்னும் பெருங்காப்பியம் பிறந்தது.

இயற்றத் தொடங்கிய காலம்

கிருஷ்ண பிள்ளை கிறித்தவரான பின்னர் மீண்டும் சாயர்புரம் சென்று 1875 வரையில் தமிழாசிரியர் பணியாற்றினர். இவர்

சாயர்புரத்தில் பணியாற்றிய காலத்திலேயே இரட்சணிய யாதிரிகத்தில் சில பாடல்களை இயற்றியிருக்கக்கூடும் என்றும் ஆனால் இவர் 1876இல் பாளையங்கோட்டைக்கு வந்த பின்னரே இதன் பெரும்பகுதி இயற்றப்பெற்றது என்றும் தேவதாஸ் கூறு கிறார்.[2] டென்னிஸ் அட்சனும் இக்கருத்தினையே அறிவிக்கிறார்.[3]

ஆனால், கிருஷ்ண பிள்ளை பாளையங்கோட்டைக்கு வந்த ஈராண்டுகள் கழித்தே இந்நூல் வெளிவரத் தொடங்கியது. பாளை யங்கோட்டையிலிருந்து வெளிவந்த 'நற்போதகம்' இதழில் 1878 ஏப்பிரலிலிருந்து காப்பியத்தின் தொடக்க முதல் அவ்வப்போது பாடிய பாடல்கள் வெளியிடப்பட்டன. 1891இன் பிற்பகுதியில் நூல் முடிந்ததாகப் புலவரே கூறுகின்றார்;[4] காப்பியம் பாடி முடித்தற்கு ஏறத்தாழப் பதினான்கு ஆண்டுகள் ஆயின என்று டி. உவாக்கர் குறிப்பிடுகிறார்.[5] எனவே, கிருஷ்ண பிள்ளை பாளையங்கோட்டையில் இருக்கும்போது 1878 முதல் பாடத் தொடங்கி 1891இல் ஏறத்தாழப் பதினான்கு ஆண்டுகளில் காப்பி யத்தை நிறைவு செய்தார் என்பதனை அறிகிறோம்.

புலவர், காப்பியம் செய்வது குறித்துச் சொல்லும்போது, ''எனக்குள் ஆதி தொடுத்துள்ள ப்ரீதி வரவரக் கதித்து வந்ததினா லும்......''[6] என்று குறிக்கிறார். இதனால் இவர் குடும்பத்தாருடன் கிறித்துவின் திருவடிகளைச் சரணடைந்த காலம் முதல் இவருக்கு இந்தப் பெருவிருப்பம் இருந்துவந்தது என்பது புலனாகிறது. மேலும், இரசணிய யாத்திரிகத்தின் மூலநூலான 'திருப்பயணி யின் முன்னேற்றம்' இவர் கிறித்தவராவதற்கு முன்னதாகவே இவருக்குக் கொடுக்கப்பட்டது என்பதும், இவர் கிறித்தவரா வதற்கு இந்நூலின் செல்வாக்கு ஒரு பெருங்காரணம் என்பதும் ஈண்டு எண்ணற்பாலன.[7]

காப்பியம் வளர்ந்த வகை

கவிஞர் காப்பியம் பாடி முடிப்பதற்குப் பதினான்கு ஆண்டுகள் ஆயின என்பதைக் கண்டோம். இவ்வாண்டுகளில் இவர் காப்பியம் பாடுதலையே தம் தலைமைப் பணியாகக் கொண்டாரா என்றால், இல்லை என்பது பின்வரும் அவரது குறிப்பால் புலனாகிறது:

> '' திருவருட்பலத்தால் என் உத்தியோக விஷயத்திற் செல விட்ட நேரம்போக மீந்த நேரங்களிலும், விசேஷமாய் வியாதிப்பட்டிருந்த இராக்காலங்களிலும் உழைத்து இந்த நூலைச் செய்து முடிக்க அருகனானேன்.........ஆண்டாண்டு நேர்ந்த பல விக்கினங்கள் இடையூறுகளால் தடுக்கலுற்று

இடைக்கிடை சிறிது காலம் ஒரு செய்யுளாவது எழுதவும் வாய்க்காமல் கழிந்து போனதுமுண்டு.''[8]

இச்செய்திகளினால் கிருஷ்ண பிள்ளை தம்முடைய அலுவலுக்கிடையிலும், சிறப்பாக வியாதிப்பட்டிருந்த இரவுநேரங்களிலும் காப்பியம் பாடியுள்ளார் என்பதனை அறிகிறோம். காப்பியம் இயற்றத் தொடங்கிய ஓராண்டிற்குப் பின்னர் 1879இல் இவர் கடுமையான மலேரியாக் காய்ச்சலினால் தாக்கப்பட்டார்; உயிர் வாழ்வோம் என்ற நம்பிக்கையே இவருக்கு இல்லாதிருந்தது. இதனைப் புலவர் தம் முன்னுரையில் குறிப்பால் உணர்த்தியுள்ளார்:

''ஆரம்பந் தொடங்கி உத்தேசம் ஆயிரஞ் செய்யுள் முடியுமட்டாக (பின்னே எனக்கு ஜீவன் கிடைத்த போதிலும்) இந்த நூலைப் பூரணமாய்ப் பாடி முடிப்பேன் என்ற நம்பிக்கை கிஞ்சித்துமில்லாதிருந்தது.''[9]


இவ்வாக்கியத்தை ஆதாரமாகக்கொண்டு டாக்டர் டென்னிஸ் அட்சன், 'கிருஷ்ண பிள்ளை முதலில் பணியனுடைய நூலின் பொருளை அப்படியே பின்பற்றி 1000 பாடல்களில் காப்பியத்தைப் பாடி முடிக்கத் திட்டமிட்டார்'[10] என்றும், நற்போதகத்தில் வெளியிடப்பட்ட பாடல்களைப் படித்துவந்த இவருடைய நண்பர்கள், நிறுத்தாமல் தொடர்ந்து பாடுமாறு வேண்டிக் கொண்டதனால் புலவர் ஊக்கமடைந்து தம்முடைய முதல் திட்டத்தை மீண்டும் விரிவுபடுத்திப் பாக்கள் இயற்றி, இதனை ஒரு பெருங்காப்பியமாய்ச் செய்தார்'[11] என்றும் கூறுகிறார். ஆனால், கிருஷ்ண பிள்ளை தாம் மேலே குறித்துள்ள வாக்கியத்தில் கூறுவதெல்லாம் 'நூலின் தொடக்கம் முதல் சுமார்[12] ஆயிரம் பாடல் பாடி முடிவது வரையில் (பின்னர் எனக்கு உயிர் கிடைத்த போதிலும்) இந்நூலை முற்றிலும் பாடி நிறைவேற்றுவோம் என்னும் நம்பிக்கை சிறிதும்இல்லை,' என்பதே. எனவே, கிருஷ்ண பிள்ளை முதலில் 1000 பாடலில் காப்பியம் இயற்றத் திட்டமிட்டு, பின்னர் அதனை விரித்துப் பெருங் காப்பியமாக்கினார் என்னும் கொள்கை ஏற்புடையதாய் இல்லை என்பதைக் காண்கிறோம்.

கிருஷ்ண பிள்ளை இரட்சணிய யாத்திரிகப் பாக்களைத் தம் கைப்பட எழுதிய சுவடி ஒன்று எனக்குக் கிட்டியுள்ளது. இது கிருஷ்ண பிள்ளையின் கையெழுத்துச் சுவடியே என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இதன் முதல் மூன்று தாள்கள் கிட்டவில்லை. பக்க எண்ணிட்டு இருப்பதால் இதனை அறிகிறோம். இச்சுவடியின் முதல் பக்கமாக உள்ள நான்காம் பக்கத்தில் 282ஆம் பாடலிலிருந்து தொடர் எண்ணிட்டு எழுதப்பட்டுள்ளது. கிட்டாத

மூன்று தாள்களில் சுமார் இருபது பாடல்கள் எழுதப்பட்டிருக் கலாம். எனவே 262-க்கு முற்பட்ட பாடல்கள் இன்னொரு சுவடி யில் எழுதப்பட்டிருக்கின்றன. கிட்டியுள்ள சுவடியில் 282 முதல் 1480 வரையில் தொடர் எண்ணிட்டு எழுதியுள்ள பாடல்கள் உள்ளன. எனவே, நாம் முன்னர்க் கண்ட 1000 பாடல் திட்டக் கொள்கையை இஃது இன்னும் ஆதாரமற்றதாக்குகிறது.


சுவடியில் சிற்சில இடங்களில் அடித்துத் திருத்தியும், ஒரு நாள் எழுதியதை மறுநாள் எழுதத் தொடங்கு முன்னர் ஒரு முறை திருப்பிப் பார்த்து இடையில் சில இடங்களில் பாடல்கள் சிலவற்றைச் சேர்ந்து எழுதியும் வந்துள்ளார் என்பது தெரிய வருகிறது. இவ்வாறு சில இடங்களில் அடித்துத் திருத்தி இடையில் பாடல்கள் சில சேர்த்து எழுதியிருப்பதனுல் இது படியெடுக்கப்பட்ட சுவடியன்று என்பது தெளிவு. சுவடியின் ஒரு பக்கத்தில்தான் பாக்கள் எழுதப்பட்டுள்ளன. இடையில் சேர்க் பட்ட பாடல்களும் திருத்தங்களும் எதிர்ப்புறமுள்ள வெற்றிடத் தில் தரப்பட்டுள்ளன. கிருஷ்ண பிள்ளையின் தம்பியார் மைந்தர் நீதிபதி சர் தேவதாஸ் கூறுவது போல், அடித்தல் திருத்தல் மிக மிக அருகியே உள்ளன.[13] இது கவிஞருடைய கவிபாடும் ஆற்றலைப் புலப்படுத்துகிறது. இவரைக் 'கிறித்தவக் கம்பர்' என்று போற்றுவதை உறுதிபடுத்துகிறது. தேவதாஸ், கிருஷ்ண பிள்ளை இரட்சணிய யாத்திரிகம் எழுதிய சுவடியை நேரில் காணும் வாயப்புப் பெற்றவர். அச்சுவடி அழகான கையெழுத்தில் எழுதப்பட்டுள்ளது. முத்துப்போன்ற மணிமணியான கையெழுத்து நம் நாட்டு மூதறிஞர்களிடம் காணப்படும் ஒரு தனிச்சிறப்பாகும்.

புலவர் அவ்வப்போது பாடிய பாடல்களுக்குப் பின்னுல் தேதி யிட்டுள்ளார். சுவடியில் 626ஆம் பாடலுக்குப் பின்னர் 1-1-82 என்று நாட்குறிப்பு உள்ளது. கிடைத்துள்ள பாடல்களுள் 282 முதல் 626-க்கு இடையில் எங்கும் நாட்குறிப்பு இல்லை. தேவதாஸ், '1880-க்கும் 1881-க்கும் இடையில் கிருஷ்ண பிள்ளை நண்பகல் நேரங்களில் கட்டிலில் ஓய்வு பெற்றிருக்கும்போது, அடிக்கடி எழுந்து தம் அலுவலறைக்குச் சென்று அங்குத் தமிழில் இருந்த திருப்பயணியின் முன்னேற்ற நூலின் சில பகுதிகளைப் படித்து விட்டு அவற்றைக் கவிதையாக, கட்டப்பட்ட ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதுவார்'[14] என்று கூறுகிருர். கிட்டியுள்ள சுவடி அதுவாகவே இருக்கலாம். அல்லது அதற்கு முற்பட்டதாய் இருக்கலாம். ஏன் என்ருல், சுவடியில் நமக்கு 1-1-82-க்கு முன்னர்பாடியவற்றுள் 282 முதல் 626 வரையிலான பாடல்கள் கிட்டுகின்றன. அவ்வப்போது பாடல் பாடிய பின்னர் இவர் குறித்துள்ள நாட்குறிப்புப் பின்வருமாறு:




இப்பக்கத்தில் அடித்தல்திருத்தல் இல்லாமல் பாடல்கள் எழுதப்பட்டுள்ளமை காண்கிறோம். யாப்பு மாற்றத்தின்போது 'வேறு' என்று குறித்துள்ளமையையும் காண்கிறோம்.

இப்பாடல்கள் வருமிடம் : ஆதி பருவம், வியாக்கியானி அரமனைப் படலம் 200-207.



இப்பக்கத்திலும் அடித்தல் திருத்தல் இல்லாமல் பாடல் எழுதியிருப்பதைக் காண்கிறோம். கவிஞரின் கவிபாடும் ஆற்றலுக்கு இது ஒரு சான்றாகும்.

இப்பாடல்கள் வருமிடம் : ஆதிபருவம், வியாக்கியானி அரமனைப் படலம் 67-73.



கிருஷ்ண பிள்ளை இரட்சணிய யாத்திரிகம் இயற்றிய மூலக்கையெழுத்துச் சுவடியில் ஒவ்வொரு நாளிலும் பாடப்பட்ட பாடல்களுக்குப் பின்னர் தேதி குறிப்பிட்டுள்ளார். இங்கே ஒரு பக்கத்தில் இரணடு நாள்களில் இயற்றிய பாடல்களுக்குப் பின்னர் தேதி குறிப்பிட்டுள்ளதைக் காணகிறோம்.

பதிப்பு நூலில் இப்பாடல்கள் வருமிடம: குமார பருவம், சம்பாஷணைப் படலம், 60-68.

பாடல் எண்		நாள்	பாடல் எண்		நாள்
626	...	1-1-82	826	...	3-6-82
710	...	1-2-82	831	...	4-6-82
724	...	18-5-82	837	...	5-6-82
755	...	24-5-82	845	...	22-6-82
759	...	25-5-82	846	...	23-6-82
765	...	26-5-82	848	...	3-7-82
766	...	28-5-82	867	...	31-7-82
788	...	29-5-82	874	...	7-8-82
793	...	30-5-82	877	....	8-8-82
808	....	31-5-82	1000	...	31-8-82
819	...	1-6-82	1371	...	27-7-84
824	...	2-6-82	1480	....	19-10-84

இச்சுவடி வாயிலாக நாம் இரட்சணிய யாத்திரிகம் இயற்றப்பட்ட வரலாறு பற்றிய பல புதிய உண்மைகளை அறிகிறோம். இவற்றை ஏற்ற இடத்தில் விரிவாக ஆராயலாம். இங்கே சில செய்திகளை மட்டும் காணலாம்.


புலவர் காப்பியம் பாடுங்கால், 'ஆண்டாண்டு நேர்ந்த பல விக்கினங்கள், இடையூறுகளால் தடுக்கலுற்றுச் சிறிது காலம் ஒரு செய்யுளாவது எழுதவும் வாய்க்காமல் கழிந்து போனதுமுண்டு' என்று முன்னர்க் குறிப்பிட்டமை நாட்குறிப்பு அட்டவணைமீது ஒரு கண்ணோட்டம் செலுத்தினால் நன்கு தெரியவரும். 28-5-83இல் ஒரே பாடலும், 3-6-82இல் இரு பாடல்களும் இயற்றியுள்ளார். 31-8-82-க்கும் 27-7-1884-க்கும் இடையில் ஒரு நீண்ட இடை இருப்பதைக் காண்கிறோம். இதனால் 1883ஆம் ஆண்டு முழுவதும் ஒரு பாடலும் இயற்றவில்லை என்பது புலனாகிறது.

1480ஆவது பாடல் இரண்டாம் பருவமாகிய குமார பருவத்தின் இறுதிப் பாடலாய் அமைகிறது. இதுவரையில் 19-10-1884-க்குள் பாடி முடிக்கப்பட்டது. சுவடியில் இவ்வாறு தேதியிட்ட பிறகு 'H.A.K' என்று கையெழுத்திட்டுள்ளார். இலக்கண சூடாமணியிலும் காவிய தரும சங்கிரகத்திலும் இவ்வாறே கையெழுத்திட்டுள்ளார் என்பதும் குறிக்கத்தக்கது. கிருஷ்ண பிள்ளை சி. எம். எஸ். கல்லூரியில் 1886 வரையில் பணியாற்றிய பின்னர், 1887 முதல் 1890 வரையில் திருவனந்தபுரம் மகாராசர் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராய்த் தொண்டாற்றினார். அங்கு இவருக்குக் காப்பியம் பாடுவதற்கு நிரம்ப ஓய்வும் அமைதியான நல்ல சூழ்நிலையும் கிட்டின. எனவே, ஏனைய மூன்று பருவங்களின்

களின் பெரும்பான்மையான பாடல்களை அங்கே பாடியிருத்தல் வேண்டும். அந்நாள்களில் இவருக்குப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் அரிய நட்புக் கிட்டியது. மேலும் அஃது அவர் மனோன்மணீய நாடகம் இயற்றி வந்த காலம் என்பதனை முன்னரே கண்டோம்.[15] திருவனந்தபுரம் மகாராசர் கல்லூரியில் இரு பேரிலக்கியப் படைப்புகளான இரட்சணிய யாத்திரிகமும் மனோன்மணீயமும் இருபெரும் புலவரால் ஒரே காலத்தில் இயற்றப் பட்டு வந்ததை அறிகிறோம். இவ்விரு இலக்கியங்களும் தழுவல் களாய் இருப்பினும், சிறப்பு மிக்க தமிழ் இலக்கியங்களாய் விளங்கு கின்றன என்பதும் ஈண்டு நினைக்கற்பாலது.

மனோன்மணீய ஆசிரியர் கிருஷ்ண பிள்ளையின் கவிபாடும் ஆற்றலை மனந்திறந்து பாராட்டியுள்ளார். அவரது பாராட்டு; "என்ன புலவரே, சில செய்யுள் அடிகள் இயற்றுவதற்கு நான் பெரிதும் உழைக்கிறேன்; ஆனால், தங்கள் மனத்தினின்று மடை திறந்தாற்போல் கவிகள் புறப்பட்டுவரப் பாட்டிற்கு பாட்டு எழுதிக் கொண்டே போகிறீர்களே!"[16] என்பதாகும். தம்மிலும் கவிபாட வல்லவரும் தம்முடன் பணியாற்றுபவருமான புலவரை இங்ஙனம் வியந்து போற்றும் சுந்தரம் பிள்ளையின் அருங்குணத்தை இங்கு காண்கிறோம்.

இரட்சணிய யாத்திரிகத்தின் எஞ்சிய பாடல்களைக் கவிஞர் எழுதிய இன்னொரு கையெழுத்துப்படி, 1981ஆம் ஆண்டில் பேரா. ஒய். ஞானப்பிரகாசம் அவர்களின் உதவியுடன் கிட்டியது. இதில் மேலே குறிப்பிட்ட கையெழுத்துப் படியில் எழுதப்பட்டுள்ள பாடல் பகுதியின் முடிவிலிருந்து தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகம் அழிம்பன் நோவுவிப் படலத்திலிருந்து தொடங்கி காப்பியத்தின் இறுதிப் படலமான சுவர்க்காரோகணப் படலத்தில் 102ஆம் பாடலுடன் முடிகின்றது. இன்னும் 8 பாடல்கள் பாடி பின்னர் காப்பியத்தைச் செம்மை செய்தபோது இப்படலத்தை 110 பாடல்களுடன் அமைத்திருக்கின்றார். முதல் கையெழுத்துச் சுவடியின் பாடல்களுக்கும் இரண்டாம் கையெழுத்துச் சுவடியின் பாடல்களுக்கும் இடையில், பின்னர் வனம்புகு படலம் என்று ஒரு படலத்தை அமைத்துப் 13 பாடல்கள் பாடியுள்ளார். இரண்டா வது கையெழுத்துச் சுவடியில நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் ஆகியனவற்றுள் அடங்கிய பாடல்கள் உள்ளன. பருவப் பெயர்கள் பின்னரே இடப்பட்டுள்ளன. நிதான பருவம் முடியும் வரையில் உள்ள பாடல்களை 1—1—1888 அளவில் பாடி நிறைவடையச் செய்துள்ளார். வேறு தேதி இந்தச் சுவடியில் குறிக்கப்படவில்லை. இக்காலத்தில் கவிஞர் திருவனந்த புரம் மகாராசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணியாற்றி வந்தார் என்பது முன்னரே குறிக்கப்பட்டது.


77
78
1479
1480
19-10-1884
H. A. K.

நமக்குக் கிட்டியுள்ள இரட்சணிய யாத்திரிகத்தின் முதல் மூலக் கையெழுத்துச் சுவடியில் இறுதிப் பகுதி இது. இதனோடு இரண்டாம் பருவமாகிய குமார பருவம் முடிவுறுகிறது முதலில் கவிஞர் பாடியபோது இதுவரையுள்ள பகுதிக்கு 'ஆரமப பருவம்' என்றே பெயர் சூட்ட எண்ணியுள்ளார் என்பதை இக்குறிப்பான் அறிகிறோம்.

இதுவரையில் **19-10-1884-க்கு** முன்னர் பாடியுள்ளார் என்பதும் தெரியவரும். இதன் பிறகு **10** ஆண்டுகள் கழித்தே 'இரட்சணிய யாத்திரிகம்' வெளிவந்தது. இங்கே இவர் 'H. A. K.' என்று குறித்துள்ளதுபோல இன்னும் பிற இடங் களிலும் குறித்துள்ளார்.

இப்பாடல் வருமிடம் : குமார பருவம், காட்சிப் படலம் 82 - 86.

தோற்றமும் பதிப்பும்

புலவர் மகாராசர் கல்லூரியில் பணியாற்றியபோது இரட்சணிய யாத்திரிகம் பாடி முடிக்கப்படவில்லை. 1890 வரையில் அங்கு பணியாற்றிய பின்னர் 1891-ல் குலசேகரன் பட்டினம் சென்று, அங்குத் தனுக்கோடிராஜுவின் உப்பு உற்பத்தித் தொழிலைக் கண்காணித்து வந்தார். அங்கு இருக்கும்போதுதான் 1891 நவம்பருக்கு முன்னர்[17] இரட்சணிய யாத்திரிகம், 'நற்போதகம்' என்னும் இதழில் வெளிவந்தவாறு பாடிமுடிந்தது.

மாதிரிப் பதிப்பும் மக்கள் வரவேற்பும்

1891, நவம்பரில் இரட்சணிய யாத்திரிகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பாடல்களின் தொகுப்பு ஒன்றனை அச்சிட்டுத் தமிழறிஞர் பலருக்குக் கிருஷ்ண பிள்ளை அனுப்பினார். 'நூல் முழுதும் அச்சாகுமானால் அது கற்போருக்குப் பயன்படுமா? அச்சாகும் செலவுக்குப் போதுமான படிகள் விற்கப்படுமா?' என்ற வாறு அறிஞர்களிடையே நூல் பெறும் வரவேற்பினை அறிதற் பொருட்டு இவ்வாறு செய்தார். இதன் விளைவாகக் காப்பியம் அச்சாகுமானால் 400 படிகளுக்கு மேல் வாங்குவதாக அறிஞர் பலர் அறிவித்ததுடன் தத்தம் கருத்தையும் எழுதியனுப்பினர்.[18]

1891-ல் சென்னை மாநிலக் கல்லூரியில் நடந்த தமிழ் இலக்கிய மன்றக் கூட்டம் ஒன்றிற்கு இலக்கியப் புலமைவாய்ந்த சர் ஜான் என்பவர் தலைமை வகித்தார் அவர் தலைமையுரையில், ''அண்மைக் காலத்தில் தமிழில் போற்றத்தக்க தரமான இலக்கியம் எதுவும் எழுதப்படவில்லை'' என்று குறிப்பிட்டார். இரட்சணிய யாத்திரிகத்தின் நூறு பாடல் தொகுப்பினைப் படித்த நிருபர் ஒருவர், அக்கூட்டத்திற்குச் சென்றிருந்தார். தலைமையுரையில் சொல்லிய குறிப்பினைக் கேட்ட அந்நிருபர், 1892, மார்ச்சுத் திங்களில் 'மெயில்' எனனும் ஆங்கில இதழில், ஜான் பனியன் என்பார் இயற்றிய அழியா வாழ்வு பெற்ற திருப்பயணியின் முன்னேற்றம் (Pilgrim's Progress) என்னும் நூலின் கதையைத் தழுவித் தரமான தமிழ் இலக்கியம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது என்றும், சேக்ஸ்பியரின் நாடகங்களுக்கும் புளூட்டார்க்கின் பாத்திரங்களுக்கும் (Lives) என்ன தொடர்பு உண்டோ அதே தொடர்பு இரட்சணிய யாத்திரிகத்திற்கும் திருப்பயணியின் முன்னேற்றத்திற்கும் உண்டு என்றும் எழுதினர்.[19]

பதிப்பிற்கு முன் திருத்தம்

கிருஷ்ண பிள்ளை இரட்சணிய யாத்திரிகத்தைத் தாமே பதிப்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கும்போது 1892-ல் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தில் இலக்கியத் தொண்டராய்ப் பொறுப்பேற்றார். திருத்தொண்டர் டி. உவாக்கர், காப்பியம்

தனி ஒருவரால் வெளியிடப்படுவதைவிட ஒரு பொது நிறுவனத் தால் வெளியிடப்படுவது பலருக்கும் பயன்பட ஏதுவாகும் என்று எண்ணி இதனைச் சங்கத்தின் வாயிலாகவே வெளியிடக் கருதி னார். இது குறித்து ஜான் மர்டாக்கு ஐயருடன் கலந்து பேசி சங்கத்தின் மூலமாகவே வெளியிட ஏற்பாடு செய்தார். புலவரும் தம் நூல் பொது மக்களுக்குப் பயன்படுவதே போதும் என்ற எண்ணத்தினராய் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார்.

ஆனால், இரட்சணிய யாத்திரிகம், 'நற்போதக'த்தில் வெளி யிட்டவாறே பதிப்பிக்கப் பெறவில்லை. 1892 செப்டம்பருக்கு முன்னால்-இதனை அச்சுக்கு அனுப்புவதற்கு முன்னர், சில திருத் தங்களைச் செய்து செம்மைப்படுத்தினார். புதியனவாகச் சில படலங் களை இயற்றி இணைத்தார்.[20]

புதிய சேர்க்கை

நமக்குக் கிட்டியுள்ள கையெழுத்துச் சுவடிகளை ஆராய்ந்தால், கிருஷ்ண பிள்ளை புதியனவாகப் பாடிய பாடல்கள், அமைப்பில் செய்த மாற்றங்கள் ஆகியவற்றை அறிந்துகொள்ளலாம். சுவடி யில் காணப்படும் 282ஆம் பாடல் முதலானவை, பதிப்பிக்கப் பெற்றுள்ள இரட்சணிய யாத்திரிகத்தில் ஆதி பருவத்தின் 13ஆம் படலமான கடைதிறப்புப் படலத்தின் 46ஆம் பாடலிலிருந்து தொடர்கிறது. சுவடியில் காணப்படும் 765ஆம் பாடல் ஆதி பருவத்தின் இறுதிப் பாடலாய் அமைகிறது. சுவடியில் அடுத்து அமைந்துள்ள 766 முதல் 1480 வரையிலுள்ள 714 பாடல்கள் அப்படியே இரண்டாம் பருவத்தின் பாடல்களாய் அமைந்துள்ளன. ஆனால், ஆதி பருவத்தில் உள்ள மொத்தப்பாடல் 1116, இதன்படி நமக்குக் கிட்டியுள்ள எண்ணின் எல்லையைக் கடந்து 351 (1116-765) பாடல்கள் தனியாகப் பின்னர் இயற்றப்பட்டுச் சேர்க்கப் பட்டன என்பதை அறிகிறோம். பாயிரத்திலும் பதிகத்திலும் உள்ள 19 பாடல்கள் நூல் முடிந்த பிறகே இயற்றப்பட்டிருக்க வேண்டும். எனவே, இவை நீங்கலாக 332 பாடல்களே ஆதி பருவத்தில் பின்னர்ப் பாடிச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு.

இனி, இச்சேர்க்கைப் பாடல்கள் எவை என்பதைக் கவனிக்க வேண்டும். கி. பி. 1878, ஏப்பிரல் 'நற்போதகம்' இதழிலிருந்து இரட்சணிய யாத்திரிகத்தின் பாடல்கள் தொடக்கமுதலாக வெளி யிடப்பெற்றன என்பதை அறிந்தோம். அவ்வாறு வெளியிடப் பட்ட நிலையில் முதற்படலமாய் அமைவது, 'மெய்யுணர்ச்சிப் படலம்.'[21] அடுத்து அமைவது, குருதரிசனப் படலம்;[22] மூன்றாம் படலமாய் அமைவன சுவிசேஷ மார்க்கப் படலத்தின் 169 முதல் 174 வரையிலுள்ள பாடல்கள்.[23] 'நற்போதக'த்தில் இப்பாடல்கள்

பதிப்பில் உள்ளவாறு படலப் பிரிவுகளின்கீழ் வெளியிடப் பெறுமல் மூல நூலின் கதைப் போக்கினையொட்டி நெடுகப் பாடப்பட்ட வண்ணம் வெளியிடப்பட்டன.

ஆதி பருவததில் புதியனவாய் இயற்றிச் சேர்க்கப்பட்டவை என்று கண்ட பாடல்கள் ஒன்பதாம் படலமான சுவிசேஷ மார்க்கப் படலத்திலும் அதற்கு முற்பட்ட படலங்களிலும் அமைந்துள்ளன. இவற்றுள்ளே தான் மூலத்தின் கதைப்போக்கில் இல்லாத வகையில் படலங்கள் அமைந்துள்ளன. இவையே புதியனவாய்ச் சேர்க்கப் பட்டவை. இவை: 1. வரலாற்றுப் படலம் (10 பாடல்கள்); 4. பரமராச்சியப் படலம் (66); 5. அரசியற் படலம் (14); 6. சிருஷ்டிப் படலம் (19); 7 இராஜதுரோகப் படலம் (16); 8. பூர்வபாதைப் படலம் (39); 9. சுவிசேஷ மார்க்கப் படலம் (1-168) என்பன. ஆக, இவற்றின் தொகை 332. இத்தொகையும் நாம் ஆதி பருவத்தில் புதியனவாய்ச் சேர்க்கப்பட்டவை என்று கண்ட பாடல்தொகை 332-ம் முற்றும் பொருந்தி வருகின்றன. எனவே, மேற்குறிப்பிட்ட படலங்களே ஆதி பருவத்தில் 1892, ஜூன், ஜூலை, ஆகஸ்டுத் திங்களில்[24] புதியனவாய் இயற்றிச் சேர்க்கப்பட்டவை.

ஐந்து பருவங்கள்

சுவடியில் உள்ள 1480ஆம் பாடலுக்கு அடியில் 'ஆரம்பப் பருவம் முற்றிற்று'[25] என்று எழுதப்பட்டுள்ளது. ஆனல் பாடல்களின் அமைப்பினைச் செம்மைப்படுத்தியபோது இதனை இரு பருவங்களாகப் பிரித்து, ஆரம்பப் பருவம் என்ற பெயரை மாற்றி, 'ஆதி பருவம்' என்றும், அடுத்த பிரிவைக் 'குமார பருவம்' என்றும் வழங்கினர். மூன்றும் பருவமான நிதான பருவத்தில் 'இரட்சணிய நவநீதப்படலம்' என்ற ஒரு படலத்தைச் சேர்த்துள்ளார்.

இரண்டாவது கிட்டிய கையெழுத்துச் சுவடியில் இந்தப் படலத்தில் :

கடவுள் வணக்கம்	3
திவ்விய அழைப்பு	100
ஜெபம்	1
	104

என்று குறித்து 104 பாடல்கள் அமைக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தாலும் காப்பியத்தைச் செம்மை செய்தபோது 100 பாடல்களே அமைத்து எல்லாவற்றிலுமே அழைப்பு விடுத்து இயற்றியுள்ளார் என்பது தெரியவருகின்றது. இது இவர் 1868-ல் 'இரட்சணிய நவநீதம்' என்ற தலைப்பில் ஒரு தனி நூலாய் இயற்றிய 100 பாடல்களே.[26] இரட்சணிய யாத்திரிகத்தைப் பதிப்பிக்கையில், தொடக்கத்தில் இவற்றை இயற்றியபோது இருந்த

கடுமையான நடையை மென்மைப்படுத்தினர்.[27] நர்ன்காம், ஐந்தாம் பருவங்களான ஆரணிய பருவமும், இரட்சணிய பருவமும் பெரும்பாலும் மூலத்தை ஒட்டிச் செல்வன.

இரட்சணிய யாத்திரிகத்தின் பருவங்கள் அமைத்த காலத்திலே தான் முதல் இரண்டு பருவங்களுக்குரிய படலங்களையும், ஆரணிய பருவத்தின் முதல் படலமாக உள்ள 'வனம்புகு படலத்தையும்' அமைத்துள்ளார். மொத்தத்தில் 47 படலங்கள் வகுத்துள்ளார். இப்பணிகள் எல்லாம் நூல் அச்சுக்குப் போவதற்கு முன்னரே செய்யப்பட்டவை.[28]

தேவாரங்கள்

இரட்சணிய யாத்திரிகத்தில் ஆங்காங்கே மொத்தம் பதினெரு தேவாரங்கள் அமைகின்றன.[29] இவற்றுள் சிலவற்றையோ, எல்லாவற்றையுமோ புலவர் ஒரு காலத்தில் இயற்றியிருக்க வேண்டும். இவை பெரும்பாலும் 1880, 1881ஆம் அண்டுகளில் இயற்றப்பெற்றவை என்று தேவதாஸ் கூறுகிருர்.[30] ஆனுல் 46ஆம் படலமாகிய இகபரசந்திப் படலத்தில் போற்றித் திருவிருத்தங்கள் வரும் பகுதியில் மூல ஏட்டுப்படியில் கவிஞர் இவ்வாறு ஒரு குறிப்பு எழுதியுள்ளார்.

''இரட்சணிய மனோகரப் புத்தகத்திலிருந்து இந்த 36 கவிகளையும் தனித்தனி யிங்கே எழுதவேண்டும்.''

இதனுல் இத் தேவாரங்கள் எல்லாம் இரட்சணிய மனோகரப் புத்தகத்திற்குரியவை என்பதை அறிகின்றோம். இரட்சணிய மனோகரம் கவிஞரால் 1899 இல்தான் பதிப்பிக்கப்பட்டுள்ளது. முதலிரண்டு பருவங்களிலும் ஐந்து தேவாரங்கள் அமைகின்றன. இவை கையெழுத்துச் சுவடியிலுள்ள பாடல் எல்லைக்குள் அமைந்துள்ளன. சுவடியில் இத் தேவாரங்கள் அமைகிற இடங்களில் இவற்றின் தலைப்பு மட்டும் கொடுக்கப்பட்டுள்ளதே யல்லாமல், பாடல் எழுதப்ப -வில்லை. இதனுல், அவை முன்னரே தனியாக எழுதப்பட்டிருந்தன என்பதும், பின்னர் காபியம் பாடப்பட்ட போது இடப்பொருத்தத்துடன் அப்பாக்கள் அமைக்கப்பட்டன என்பதும் தெளிவாகும். இத் தேவாரங்கள் இரட்சணிய மனோகரத்தில் 'இரட்சணியத் தேவாரம்' என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. இரட்சணிய யாத்திரிகத்தில் அமைந்துள்ள தேவாரங்களின் மொத்தக் கவிகள் 144.

யாத்திரிகத்தின் முதற்பதிப்பு

இஃது அச்சுக்குப் போவதற்கு முன்னுல் கிருஷ்ண பிள்ளையும் அவர்தம் மைந்தரும் சேர்ந்து காப்பியம் முழுவதையும் படி

யெடுத்தனர். இது 1892 திசம்பர் இறுதியில் டாக்டர் மர்டாக்கிடம் சேர்க்கப்பட்டு, 1893, மார்ச்சு பத்தாம் நாள் அச்சுக்குக் கொடுக்கப்பட்டது.[31] அச்சுத்தாள்களைக் கிருஷ்ணபிள்ளையே திருத்தியுள்ளார். இரட்சணிய யாத்திரிகம், 1894, மேத் திங்களில் சென்னைக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தால் முதற் பதிப்பாய் வெளிவந்தது.

இதில் டி. உவாக்கரின் ஆங்கில முன்னுரையும் கிருஷ்ணபிள்ளையின் முன்னுரையும் அமைந்துள்ளன. புலவர் எழுதிய அரும்பத வகராதியும், யமகம், திரிபு, சிலேடை முதலிய 21 பாடல்களுக்கு இவர் எழுதிய குறிப்புரையும் இணைக்கப்பட்டுள்ளன. அரும்பத வகராதியில் புலவர் தொகுத்துக் கொடுத்த 1500 சொற்களுள் 1080 சொற்கள் மட்டுமே பதிப்பிக்கப்பட்டுள்ளன. யாத்திரிகத்தின் பாடல் தொகை 3766 (3622+144 தேவாரப் பாடல்கள்).

இரண்டாம் பதிப்பு

முதற்பதிப்பின் 1000 படிகளும் விரைவில் செலவானமையால் நூல் பல ஆண்டுகளாகக் கிட்டாமல் இருந்தது, புலவருடைய நூற்றாண்டு விழாவின்போது எச். ஏ. பாப்லி, தாஸ்கிருஷ்ணையா ஆகியோரின் பெருமுயற்சியால் சங்கத்தாரால் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது. இப்பதிப்பில் ஆதி பருவம், குமார பருவம் என்னும் முதலிரு பருவங்களும் முதற்பாகமாய் 1927லும் ஏனைய மூன்று பருவங்களும் இரண்டாம் பாகமாய் 1934லும் வெளியிடப்பட்டன. இரண்டாம் பாகத்திற்குப் படல அட்டவணை தரப்படவில்லை.

இரண்டாம் பதிப்பிற்கு எச். ஏ. பாப்லி ஐயர், தாம் எழுதியுள்ள ஒரு பக்க அளவு ஆங்கில முன்னுரையில் பதிப்பின் வரலாற்றை விளக்குகிறார். பதிப்பாசிரியர் ஜே. எஸ். மாசிலாமணி ஐயர். இவர், இதில் தாம் எழுதியுள்ள கிருஷ்ண பிள்ளையின் வாழ்க்கைச் சுருக்கத்தை இணைத்துள்ளாரேயன்றிப் பதிப்பைப் பற்றி வேறு ஒரு குறிப்பும் தரவில்லை. முதற்பருவத்திலுள்ள பாயிரப் பதிகங்களுக்கும், ஆதி பருவத்தின் 'வரலாற்றுப் படலம்,' 'மெய்யுணர்ச்சிப் படலம்,' 'குருதரிசனப் படலம்' என்பவற்றிற்கும் இவர் உரை செய்துள்ளார். பி. எஸ். கடம்பவனம் குமார பருவத்திலுள்ள 'இரட்சணிய சரிதப் படலத்தின்' 495 பாடல்களுள் 130 பாடல்களுக்குப் பொழிப்புரை எழுதியுள்ளார்.

இரண்டாம் பாகத்தில் 'நிதான பருவ'த்தில் இரட்சணிய நவநீதப் படலத்திலுள்ள 100 பாடல்களுள் பதினைந்து[32] பாடல்களை நீக்கிப் பதிப்பித்துள்ளார், மாசிலாமணி ஐயர். இப் படலம் பின்னர்ச் சற்று விரிவாக ஆராயப்படுகிறது. புறச் சமயக் கண்டனம் இப்பாடல்களில் ஓரளவு கடுமையாய் இருப்பதனால்

இவற்றை நீக்கியுள்ளார் என்பது தோன்றுகிறது. பாடல் நீக்கப் பட்டதைப்பற்றி இவர் எங்கும் குறிப்பிடவில்லை.

கிருஷ்ண பிள்ளை தாம் முதற்பதிப்புக்கு எழுதிய முன்னுரையில்,

> ''அரும்பதவகராதியில் சில முக்கியமான பதங்கள் விடுபட்டுப் போயினவென்று பின்னர்த் தெரியவந்தது. இரண்டாம் பதிப்புக் காலத்தில் இந்தப் பதிப்பில் விடுபட்ட அரும்பதங் களையுந் திருத்திச் சேர்த்து அச்சிடுவிக்கக் குறிப்பிட்டிருக் கிறேன்''.[33]

என்று எழுதியுள்ளார். எனினும், இவருடைய முன்னுரைமட்டும் அப்படியே பின்னர் வந்த பதிப்பில் அச்சிடப்பட்டுள்ளதேயன்றி, குறித்த திருத்தங்கள் செய்யப்படவில்லை. இதன் காரணம் புலவர் குறிப்பிட்டிருந்த திருத்தங்கள் இரண்டாம் முறை பதிப்பித்தவர் களுக்குக் கிட்டாமல் இருக்கலாம் என்பதே.

மூன்றும் பதிப்பு

இரண்டாம் பதிப்பில் வெளியிடப்பட்ட இரு பருவங்களை யுடைய முதற்பாகம் மட்டும் முழுவதும் பொழிப்புரையுடனும் குறிப்புரையுடனும் மூன்றும் பதிப்பாய்க் கிறித்தவ இலக்கியச் சங்கத்தாரால் 1958-ல் வெளியிடப்பட்டது.

இதற்கு உரை எழுதியவர்களும் அவர்கள் உரை எழுதிய பகுதிகளும் பின்வருமாறு:

1. ஜே. எஸ். மாசிலாமணி-ஆதி பருவம் முதல் நான்கு படலங்கள்.
2. பி. எஸ். கடம்பவனம்-குமார பருவம் இரட்சணிய சரிதப்படலம்.
3. பொ. ஆ. சத்தியசாட்சி-ஆதி பருவம் 5-12 படலங்கள்; குமார பருவம் 3, 4, படலங்கள்.
4. வ. தங்கையா-ஆதி பருவம் 13-19 படலங்கள்.
5. ஜே. மாசிலாமணி-குமார பருவம் முதலாம் படலம்.[34]

இந்த உரைகள் முழுவதும் ஐவரால் எழுதப்பட்டுள்ளதால் ஒரே தரத்தனவாயில்லை. கிருஷ்ண பிள்ளை காப்பியத்தின் முதற்பதிப் பிற்கு அரும்பதவகராதியும், சில பாடல்களுக்குக் குறிப்புரையும் எழுதினமையால், நூலாசிரியரே இதன் முதல் உரையாசிரியர் ஆவர்.

இந்நாள்களில் சங்கத்தின் பதிப்பாசிரியராய் இருந்த வித்து வான் டி. கோவில்பிச்சை என்பாரின் பெருமுயற்சியால் மூன்றும் பதிப்பு வெளிவந்தது. முதற்பதிப்பிற்கு டி. உவாக்கர் எழுதிய முன்னுரை இதில் விடப்பட்டுள்ளது பெருங்குறையாகும். இரண் டாம் பருவத்திலுள்ள இரட்சணிய சரிதப் படலத்தில் 495 பாடல் களே ஆசிரியர் பாடியவை. முதலிரு பதிப்புகளிலும் இவ் வெண்ணிக்கையே காணப்படுகிறது. பின்னர் பால் கடம்பவனம்

THE

RAKSHANYA YÂTHRIKUM:

TAMIL POETICAL WORK.

BASED ON THE STORY

OF

THE PILGRIM'S PROGRESS

OF

JOHN BUNYAN.

BY

H. A. KRISHNA PILLAI

PALAMCOTTAH.

First Edition, 1,000 Copies

MADRAS:

THE CHRISTIAN LITERATURE SOCIETY.

S. P. C. K. PRESS, VEPERY.

1894.

(Copyright Registered)

இரட்சணிய யாத்திரிகத்தின் முதற்பதிப்பின் உட்பக்கத்திலுள்ள முகப்பு அமைப்பு இவ்வாறு உள்ளது.

என்பவர் இப் படலத்திற்கு உரை எழுதித் தனி நூலாக வெளியிட்டார்; அப்பொழுது இரட்சணிய யாத்திரிகத்தின் முடிவில் அமைந்துள்ள இரண்டு விருத்தப்பாக்களையும், இரட்சணிய மனோகரத்தின் முடிவில் அமைந்துள்ள ஒரு வெண்பாவையும் அதனுடன் இணைத்துப் பதிப்பித்தார். இரட்சணிய யாத்திரிகத்தின் மூன்றாம் பதிப்பில் அதைக் கவனிக்காமல் இரட்சணிய சரிதப் படலத்தில் 498 (495+3) பாடல்கள் அமையுமாறு தவறாகப் பதிப்பித்துள்ளனர்.

வித்துவான் வ. தங்கையா, 'இரட்சணிய யாத்திரிகத்தின் வரலாற்றுரை' என்ற தலைப்பில் எழுதியுள்ள ஆராய்ச்சியுரை குறிப்பிடத்தக்கது. இதில் சங்க இலக்கியம், நீதி நூல்களை அடுத்துக் காப்பியங்கள், புராணங்கள் இவற்றின் தோற்ற வரலாற்றையும், தேம்பாவணி முதலான கிறித்தவக் காப்பியங்களின் வரலாற்றினையும் சுருக்கமாக ஆராய்கிறார். இவர் யாத்திரிகத்தின் உரை வரலாற்றைக் கூறுகின்றாரே யன்றிப் பொருளாராய்ச்சி ஏதும் செய்ய வில்லை. இரண்டாம் பாகம் இதுகாறும் வெளியிடப்படவில்லை; இதற்கு உரையும் எழுதப்படவில்லை.

கவியரசர் கிருஷ்ண பிள்ளையின் 150ஆம் பிறந்த நாள் விழா சென்னையில் 1977 ஏப்பிரல் திங்களில் கொண்டாடப்பெற்ற போது பேராசிரியர் பொன்னு ஆ. சத்தியசாட்சி பெரிதும் முயன்று இரட்சணிய யாத்திரிகப் பாக்களின் சுருக்கம் ஒன்று தொகுத்து, கற்போருக்கு எளிதில் விளங்குவதற்கு ஏதுவாக ஆங்காங்கே தக்க தலைப்புகளிட்டு, கடினமான சொற்களுக்குப் பொருட்குறிப்பும் தந்து வெளியிட ஏற்பாடு செய்தார். இரட்சணிய யாத்திரிகம் மக்களுக்குக் கிட்டாத நிலையில் இந்த வெளியீடு மிகப் பயனுடையதாகும். அப் பதிப்பிற்கு நான் ஓர் ஆராய்ச்சி முன்னுரையும் எழுதியுள்ளேன். இரட்சணிய யாத்திரிகம் முழுவதும் முதலிரு பதிப்புகளுக்குப் பின்னர் இதுகாறும் வெளிவரவில்லை. வெகு விரைவில் அடிக்குறிப்புகள் அமைந்த மூலநூலின் பதிப்பு ஒன்றினை வெளியிடவேண்டும் என்று எண்ணி அதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளேன்.

1. இரட்சணிய யாத்திரிகம், முதற்பதிப்பு, பக். IX.
2. David Devadoss, op. cit., pp. 78f.
3. Dennis Hudson, op. cit., p. 463.
4. இரட்சணிய யாத்திரிகம், முதற்பதிப்பு, பக். XVII.
5. ஷை. பக். VI.
6. ஷை. பக். X.
7. காண்க, நான் கிறிஸ்துவைக் கண்ட வரலாறு.
8. இரட்சணிய யாத்திரிகம், முதற்பதிப்பு, பக். X.
9. ஷை. பக். X.
10. Dennis Hudson. op. cit., p. 463.
11. Ibid. pp. 465 ff.

12. உத்தேசம் என்னும் சொல்லுக்கு 'நோக்கம் போதப்பிரகாரம் மூன்றி ஞென்று' என்று ஒரு பொருளையும் தருகிறது மதுரைத் தமிழ்ப் பேரகராதி (1937) பக். 267.
13. David Devadoss, op. cit., p. 79.
14. Ibid. p. 79.
15. எ. ஆ. கிருஷ்ணபிள்ளையின் நூல்கள் - ஓர் ஆராய்ச்சி, பக். 51.
16. David Devadoss, op. cit , p. 79. மேலும் காண்க. டி. ஜி. தங்கராசனர், கிறிஸ்தவக் கம்பன் கிருஷ்ணபிள்ளை. பக். 104.
17. இரட்சணிய யாத்திரிகம, முதற்பதிப்பு, பக். XVII.
18. ஷெ., பக் XVII.
19. David Devadoss, op. cit., pp. 80, ff.
20. Account of Work done by H.A. Krishna Pillai, pp. 1-2.
21. நற்போதகம், 1878 ஏப்பிரல், பக். 76-78. மே, பக். 90-94.
22. ஷெ., 1878 மே, பக். 90-94. ஜூன், பக். 109-112.
23. ஷெ., 1878 ஜூன், 109-112 காண்க.
24. Account of Work done by H. A. Krishna Pillai. p. 1.
25. Ibid ,
26. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தாம் ஏற்கெனவே பாடி வெளியிட்டிருந்த 'சிவகாமி சரிதம்' என்னும் தனிக்கவிதை நூலைப் பின்னர் தாம் பாடிய மனோன்மணீய நாடகத்தில் பகுதியாய்ப் பொருத்தமுற இணைத் துள்ளதுபோல இதுவும் உள்ளது.
27. Account of Work done by H. A. Krishna Pillai. p. 4.
28. Ibid., P. 2.
29. எ. ஆ. கிருஷ்ணபிள்ளையின நூல்கள் ஓர் ஆராய்ச்சி, பக். 330.
30. David Devadoss, op. cit., p. 79.
31. Account of Work done by H. A. Krishna Pillai, p. 4.
32. 25, 35, 39, 41- 51, 53.
33. இரட்சணிய யாத்திரிகம், முதற் பதிப்பு, பக். XVII-XVIII.
34. ஷெ. 3ஆம் பதிப்பு, பக். 1.

★★★

இயல் இரண்டு

இரட்சணிய யாத்திரிகமும் முதனூலும்

தொடர்புடைய இரு இலக்கியங்களை ஒப்பிட்டுத் திறனாய்வு செய்யும்பொழுதே அவற்றின் பொதுத் தன்மைகளையும் அவற்றிற் கிடையிலுள்ள சிறப்பியல்புகளையும் தக்கவாறு அறிதல்கூடும். ஒட்டியோ தழுவியோ அமைக்கப்பெற்ற ஓர் இலக்கியத்தின் சிறப் பினையும் தனித்தன்மையினையும் புலப்படுத்துவதற்கு அது தழுவிய முதனூலுடன் ஒப்பாய்வு செய்யப் பெறல் வேண்டும். இங்கே டாக்டர் க. கைலாசபதியின் பின்வரும் கருத்துக் குறிப்பிடத்தக் தக்கது;

> ''காலத்திற்குக் காலந் தோன்றும் ஆற்றல் வாய்ந்த பெருங் கவிஞர்கள் தமக்கு முன்னிருந்தோரது சிந்தனைகளையும் உணர்வுகளையும் பற்றுக்கோடாகக் கொள்ளும் அதே பொழு தில், அவற்றை மாற்றியும் புதுக்கியும் ஒருவகையான இலக் கிய இரசவாதஞ் செய்கின்றனர்; தமது காலத்துச் சமு தாயத் தேவைகளுக்கேற்பவும், அறிவு நிலைக்கியையவும் பழைய கற்பனைகளுக்கு உருவமாற்றம் செய்கின்றனர். மகா கவிஞன் ஒருவன் பழைய செம்பைக் கட்டித் தங்கமாக்கி விடுகிறான்.''[1]

இவர்தம் கூற்றால் பழமை வளத்தினை உண்டு தேக்கிப் புதுமை மலரும் பான்மை புலனாகும். இங்கே இரட்சணிய யாத்திரிகத்தை யும் இதன் முதனூலையும் பற்றிய ஒப்பாய்வு இடம்பெறுகிறது. இது கம்பராமாயணத்தையும் வால்மீகிராமாயணத்தையும் ஒப்பிடு தலைப் போன்றதாகும். எனவே இங்கு செய்யப்படும் ஒப்பாய்வு முதனூலுக்கும் வழி நூலுக்கும் இடையில் நிகழ்த்தப்படுவதாகும்.

1. இரட்சணிய யாத்திரிகத்தின் முதனூல்

வழிநூலும் முதனூலும்

இரட்சணிய யாத்திரிகம் முதனூலன்று; வழிநூல். தொல் காப்பியர் தமிழ் நூல்களை முதனூல், வழிநூல் என இருவகையாக மரபியலில் பகுத் துரைக்கிறார்.[2] பின்னாளில் இவற்றிற்கும் மேலாகச் சார்புநூல் என ஒரு பகுப்பையும் பவணந்தி முனிவர் கொள்ளு கிறார்.[3] இவற்றுள் வழிநூல் என்பது:

> ''முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
> பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
> அழியா மரபினது வழிநூ லாகும்''[4]

என்று பவணந்தி முனிவர் கூறுகிறார்.

தமக்கு முன் ஒருவர் இயற்றிய நூலின் முடிவினை முழுவதும் ஒத்துச் சென்று, பின்னூலாசிரியர் தாம் அதில் செய்ய விரும்பும் வேறுபாடுகளை அழியா மரபுடன் ஒப்ப அமைத்து இயற்றுவது வழிநூலாகும். இரட்சணிய யாத்திரிகம் இவ்விலக்கணம் பொருந்த இயற்றப்பட்ட வழிநூலாகும். இதன் முதனூல் ஜான் பனியன் என்பவர், ஆங்கில மொழியில், பதினேழாம் நூற்றாண்டிலே இயற்றிய' திருப்பயணியின் முன்னேற்றம், (Pilgress)[5] என்னும் நூலாகும்.

வேதாகமமும் முதனூலாகும்

பனியனது நூல் மட்டுமே இரட்சணிய யாத்திரிகத்தின் முதனூல் என்று சொல்லவியலாது. பொதுவான காப்பியக் கதைக்கு அது முதனூலாகலாம். கிருஷ்ண பிள்ளையே,

> ''இரட்சணிய வேதத்தின் உத்தர பாகமாகிய சுவிசேஷ சத்தியத்தையும், ...தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெகு காலமாய் இந்நாட்டிற் பயன்பட்டு வருகிற 'மோட்சப் பிரயாணம்,' என்னும் புஸ்தகத்திலடங்கிய அருமையான பொருளையும் அதன் கருத்தையுந் தழுவி தேவ கிருபையை முன்னிட்டு, 'இரட்சணிய யாத்திரிகம்' என்ற இந்தக் காவியத்தைச் செய்யுட் பாவாக இயற்றத் துணிந்தேன்,''[6]

என்று குறிப்பிட்டுள்ளமையால் திருப்பயணியின் முன்னேற்றத்துடன் வேதத்தின் இரண்டு பிரிவுகளுள் ஒன்றான புதிய ஏற்பாட்டையும், சிறப்பாக நற்செய்தி நூல்கள் நான்கையும்[7] தழுவி காப்பியம் செய்துள்ளார் என்பதனை அறிகிறோம். மேலும் இரட்சணிய யாத்திரிகத்தை ஆராயும்போது வேதாகமத்தின் முதற்பிரிவான பழைய ஏற்பாட்டின் செய்திகளைத் தொகுத்தும் சிதறிய நிலையிலும் பயன் படுத்தியுள்ளமையைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, ஆதி பருவத்தில் வருகின்ற 'சிருஷ்டிப்புப் படலம்,' 'இராஜ துரோகப் படலம்,' 'பூர்வபாதைப் படலம்,' உள்ளிட்டவற்றைக் குறிப்பிடலாம். எனவே, பழைய ஏற்பாடு உட்பட முழு வேதமும், திருப்பயணியின் முன்னேற்ற நூலுடன் யாத்திரிகத்திற்கு முதநூல்களாகின்றன என்பது தெளிவு.

இரு நூலுக்கும் பொதுமூலம்

எஸ். ஃபரார் (S. Farrar) என்பவர், 'திருப்பயணியின் முன்னேற்றமானது அடிப்படையில், வேத நூலின்-அதிலும் சிறப்பாக நற்செய்தி நூல்களின்- விளக்க உரையாகும்; பனியன் தொடர்ந்து வேதத்தை மேற்கோள் காட்டுகிறார்,[8] என்று குறிப்பிடுகிறார். ஆதலின் திருப்பயணியின் முன்னேற்றம், இரட்சணிய யாத்திரிகம் ஆகிய இரு நூல்களுக்கும் பொதுமூலம் வேத நூலாகும். இதனால்,

பொருள் அடிப்படையில் இரு நூல்களுக்கும் இடையில் பொது வான ஒப்புமை இருத்தல் இயல்பே; எனினும் இரண்டும் படைப் பிலும் அமைப்பிலும் சிறந்த தனித்தன்மை வேறுபாடுகளுடன் சிறந்து விளங்குகின்றன.

முதனூலாசிரியர்

'திருத்தூய்மையாளர் இயக்கம், (Puritan Movement) தோற்றுவித்த தலைசிறந்த இலக்கிய ஞானி ஜான் பனியன் என்று பிரித்தானிக்காகக் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது'[9] இத்தகு சிறப்புக்குரியவரான பனியன் இங்கிலாந்தில் பெட்போர்டு நகரத் துக்கு அண்மையிலுள்ள எல்சிட்டோ என்ற ஊரில் கி.பி.1628-ல் பிறந்தார். இருவருடைய பெற்றோர் எளியவர். பெற்றோர் ஓரளவு தொடக்கக் கல்வியைத் தம் மைந்தருக்கு அளித்தனர். பனியன் இளமையிலே கல்வியில் கருத்திருத்தவில்லை. தீய நண்பர்கள் நட்பும் போக்கும் இவர் இளமையைப் பெரிதும் கவர்ந்தன. பெற்றோர் இங்கிலாந்துத் திருச்சபையினர். ஆயினும் வெறும் பெயருக்குக் கிறித்தவராகவே பனியன் வாழ்ந்தார்; தம் தந்தையா ரின் ஒட்டு வேலை (Tinker) யைக் கற்றிருந்தார்.

இவருக்குள் ஆன்மிக மறுமலர்ச்சித் தோன்றக் காரணமா யிருந்தவர் இவருடைய் முதல் மனைவியார். இவ்வம்மையார் சீதன மாய்க் கொண்டு வந்த, 'மோட்ச மார்க்கம்' ('The Plain Man's Pathway To Heaven'), 'பக்தி மார்க்கம்' ('The Practice of Piety') என்ற இரு நூல்களே இவருடைய வாழ்க்கையைமாற்றின. 1654-ல் இவர் திருமுழுக்குப் பெற்றார். இவரது ஆன்மிக வாழ்க்கை மீட்சிக் குப் பெரிதும் உதவியாயிருந்தது பெட்போர்டு நகரத்துத் 'திரு முழுக்கர் திருச்சபை' (Baptist Church). இவர் நாட்டுத் திருச்சபை யின் சட்டத்துக்கு மாறாகப் போதனை செய்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டு 1661-ல் பெட்போர்டு சிறையில் வைக்கப்பட்டார்; 1672-ல் இரண்டாம் சார்லஸ் மன்னர் ஆட்சிக்கு வந்த போது விடுதலை பெற்றார்.

பனியன் வாழ்ந்த காலம், அரசியல் கொந்தளிப்பும், சமயச் சீர்திருத்தக் கலவரச் சூழ்நிலையும் மிகுதியாய் இருந்த காலம்.[10] அக்காலச் சூழ்நிலை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் முக்காற் பகுதிமுழுவதும் வாழ்ந்த வழி நூலாசிரியர் வாழ்வுக்கும் பொருத்த மாய்க் காணப்படுகிறது.[11]

முதனூல் தோற்றம்

பனியனின் சிறை வாழ்வின்போது தோன்றியது 'திருப்பயணி யின் முன்னேற்றம்' என்னும் நூல் என்பர். அதனால், இதனைச் 'சிறைநூல்' என்றும் வழங்குவர். பனியனின் முதற் பன்னிரண்

டாண்டு சிறை வாழ்வில் உடல் சிறைப்பட்டதேயன்றி, உள்ளம் சிறைப்படவில்லை. மனம், தான் வாழ்வதற்கான ஓர் ஆன்மிக உலகைப் படைத்துக்கொண்டது.[12] அக்காலத்தில் பனியன் கையில் இருந்த இரண்டு நூல்களுள் ஒன்று ஆங்கில வேதாகமம் என்பது குறிப்பிடத் தக்கது.[13] அவர் முழு வேதத்தையும் மனப்பாடமாகக் கற்றார். அவருடைய சிறைப்படா மனத்துடன் வேதாகமம் இரண்டறக் கலந்தது. அதன் விளைவு, 'திருப்பயணியின் முன்னேற்றம்' என்னும் புகழ்மிகு விண்ணுலக யாத்திரை நூல்.

இரு பாகங்கள்

திருப்பயணியின் முன்னேற்றம் 1678-ல் முதன்முதல் வெளிவந்தது. இதுவே சிறையில் எழுதப்பட்டது. இதன் இரண்டாம் பாகம், ஆறு ஆண்டுகள் கழித்து, 1684-ல் வெளிவந்தது. பிறகு இரு பாகங்களையும் இணைத்தே 'திருப்பயணியின் முன்னேற்றம்' என்னும் நூலாய் வெளியிடப்பட்டு வருகிறது. முதற்பாகம் கிறித்தவனின் திருப்பயண முன்னேற்றத்தைச் சொல்லுவது; இரண்டாவது அவன் மனைவி கிறித்தினளின் திருப்பயண முன்னேற்றத்தைச் சொல்லுவது.

முதனூற் சிறப்பு

உலக முற்றுருவக இலக்கியங்களுள் இது தலைசிறந்ததெனக் கருதப்படுகிறது;[14] உலகப் புகழ்பெற்ற பேரிலக்கியங்கள் நூற்றுள் ஒன்றெனப் போற்றப்படுகிறது.[15] விற்பனைக்கென்று எவ்வித விளம்பரமும், நூல் 1678-ல் வெளிபிடப்பெறுவதற்கு முன்பும் பின்பும் செய்யப்படவில்லை; ஆனால், அடுத்த பத்து ஆண்டுகளில் 1,00,000 படிகள் விற்பனையாயின. அடுத்த 250 ஆண்டுகள் கிறித்தவ வேதத்திற்கு அடுத்த நிலையில் அதிகமாக விற்பனையாயிற்று. வெளி வந்த முதல் நூறு ஆண்டுகளில் 160 பதிப்புகள் ஆங்கில மொழியில் மட்டும் வெளிவந்தன. இன்று இந்நூல் 200-க்கு மேற்பட்ட உலக மொழிகளில் மொழியாக்கம் பெற்றுள்ளது.[16]

ஆனால் இந்நூல் முதல் இரு நூற்றுண்டு வரை இலக்கியத் திறனயவாளரால் அதிகமாகப் போற்றப்படவில்லை. 1830-ல் சூதே (Southey) என்பவர், 'மக்களின் தீர்ப்பு நீதிமன்றத்தாரால் ஒப்புக் கொள்ளப்பட்டது' என்றார்.[17] மெக்காலே என்பவர், 'ஜான் மில்டன், பனியன் ஆகிய இருவர் மட்டுமே பதினேழாம் நூற்றுண்டின் படைப்பாற்றல் மிக்க பெரும் புலவர்கள்' என்றார். பெர்னட்ஷா, 'பனியன்' சேக்ஸ்பியரைவிட மேம்பட்டவர்,' என்றார்.[18]

முதனூலின் முதற்பாகத்தின் சிறப்பு

திருப்பயணியின் முன்னேற்றத்தின் இரு பாகங்களுள் முதற்பாகமே பெரிதும் சிறப்புடையது. இதன் சிறப்பு மில்டனது

'சுவர்க்க நீக்கம்' (Paradise Lost) பெறும் இலக்கியச் சிறப்பினைப் போன்றது எனலாம். இரண்டாம் பாகம்: 'சுவர்க்க மீட்சி' (Paradise Regained) பெறும் இலக்கியச் சிறப்பினைப் போன்றது எனலாம்.

திருப்பயணியின் முன்னேற்றத்தின் முதற்பாகம் தன்னில்தான் முழுமையானது; தன்னிறைவு உடையது; ஒரே சீரான கதைப் போக்குடன் விளங்குகிறது. அதன் சமயப் பொருளுக்கோ, ஒத்திசைவுச் (Unity) சூழலுக்கோ இன்னொரு தொடர்ச்சி தேவை இல்லை. 1678ஆம் ஆண்டில் முதற்பாகம் வெளியிடப்பட்ட போது அஃது ஒரு தொடர்நிலைச் செய்யுள் (Great Poem) அல்லது நாவலைப் போன்ற கவர்ச்சியுடையதாய் விளங்கியது என்று பேரா. ஆர். ஷராக்கு என்பவர் சொல்லுகிறார்.[19] ரோனல்டு ஏ. நாக்ஸ் (Ronald A. knox) என்பவர், 'கிறித்தவன் திருப்பயணம் செய்கிறான்,' என்று முதற்பாகத்தைப் பற்றியும், 'கிறித்தினள் உல்லாசத் திருப்பயணம் போகிறாள்,' என்று இரண்டாம்பாகத்தைப்பற்றியும் குறிப்பிடுகிறார்.[20] இக்கூற்றின்மூலம் இவற்றிற்கிடையில் உள்ள வேறுபாடும் நன்கு புலப்படும்.

2. தமிழ் மொழியில் திருப்பயணியின் முன்னேற்றம்

உரைநடையில்

திருப்பயணியின் முன்னேற்றத்தின் முதற்பாகம் மட்டும் கி. பி. 1793-ல் தமிழாக்கம் பெற்று அதன் ஆங்கில மூலத்துடன் முதற் பதிப்பாக வேப்பேரியில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. அதன் இரண்டாம் பதிப்பு 1826-ல் வெளியானது. அடுத்த நிலையில் தமிழ்மட்டும் 1841-லும் அதன் திருத்திய பதிப்பு 1842-லும், மூன்றும் பதிப்பு 1848-லும் வெளிவந்தன. இப் பதிப்புகள் 'சென்னைச் சமய நூற்கழத்'தினரால் (Madras Tract Society) வெளியிடப் பட்டன. இவ்வைந்து பதிப்புகளும் முதற்பாகத்தின் மொழியாக்கமே. இரு பாகங்களும் மறைத்திரு எல். ஸ்பால்டிங்கு (Rev. L. Spaulding) என்பவரால் மொழியாக்கம் பெற்று, 'யாழ்ப்பாண சமய நூற்கழக'த்தவரால் (Jaffna Tract Society) 1853-ல் வெளியிடப்பட்டது.[21] அடுத்து சாமுவேல் பவுல் ஐயர் என்பவர், இரு பாகங்களையும் இணைத்துப் புது மொழியாக்கம் செய்தார். இதனைக் கிறித்தவ இலக்கிய சங்கத்தார் வெளியிட்டனர். இன்றளவும் படிக்கப்படுவது இம் மொழிபெயர்ப்பே. வேறு மொழி பெயர்ப்பு வரவில்லை. ஆனால் மொழி நடையில் திருத்தம் செய்து வெளியிட்டுள்ளனர். இரு பாகங்களும் இணைத்து 'மோட்சப் பிரயாணம்,' (பரதேசியின் மோட்சப் பிரயாணம்) என்னும் தலைப்பிலேயே பல பதிப்புகள் வந்துள்ளன. சிறுவர்க்கென

இந்நூலின் சுருக்கம், 1937-ல் இராஜ சூடாமணி என்பவரால் தமிழில் இயற்றப்பட்டது. இதனைச் சென்னை 'கி. இ. ச' வெளியிட்டது.

பாட்டில்

முத்திவழி அம்மானை : திருப்பயணியின் முன்னேற்றத்திலுள்ள இரு பாகங்களுள் முதலது மட்டும் கன்னித்தமிழில் பா வடிவத்தில் கனிந்துள்ளது. திருநெல்வேலியிலுள்ள ஆழ்வார் தோப்பூர் கிராமத்தின் முனிசிபாய் இருந்த சுவீகர நாடார் என்பவர், இதனை அம்மானையாகப் பாடியுள்ளார். இந்நூல் 1887-ல் 'முத்திவழி அம்மானை' என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. சாமுவேல் பவுல் ஐயர் 1882-ல் இயற்றிய உரைநடையைத் தாம் அம்மானையாகப் பாடியுள்ளதை ஆசிரியர்,

''செம்மையுடன் நல்ல தெளிவாய்ப் பொருள்காட்டி
உண்மைப் பவுலையர் உரைதிருப்பும் வாசகத்தைப்
பாட்டாக அம்மானைப் பாவிசைந்த தல்லாமல்
கூட்டினது மில்லை குறைக்கவுமில் லைபொருளை''[22]

என்று குறிப்பிடுகிறார்.

நூல் தமிழ் மொழியின் அம்மானை இலக்கிய மரபினை அடியொற்றி இயற்றியுள்ளமையின், இலக்கியச் சிறப்புடன் மிளிர்கிறது. இதில் மொத்தம் 5978 கண்ணிகளும் 165 விருத்தங்களும் உள்ளன.

இவ்வாறு கூட்டாமலும் குறைக்காமலும் தாம் பாடியிருப்பதாகக் கூறியிருந்தாலும், ஆங்காங்கே தம் கருத்துகளையும், நயம்பட அறிவித்திருக்கின்றார். பிறசமயத்திலிருந்து கிடைக்கக்கூடிய நல்ல கருத்துகளையும் புலப்படுத்துகின்றார். நிட்டானுபூதியிலும் பிரபுலிங்கலீலையிலும் வரும் இந்தப் பாடல்களில் இயேசு கிறிஸ்து மறைமுகமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளார் என்று கூறுகின்றார்.

ஒருமொழியாலே சுருதியாகம நூலுயர் புராணமு மெலா
மொழியும்
ஒருமொழியாலே சரிதைநற் கிரியாயோக பாவனை யெலா
மொழியும்
ஒருமொழியாலே யண்ட பூதங்க ளொடுங்கிடுந் தன்னிலை
தோன்றும்
ஒருமொழி சும்மா விருத்தலா மதிலொலொப்பிலாப் பரகதி
யடைவார்.

உரைசெயிற் பரமஞான மொன்றுமே முத்திக்கேது
சரியைநற் கிரியையோகம் தாமொரு மூன்றுஞான
மருவுதற் கேதுவென்றே மறைபுகன் றுரைக்குமிந்தக்
கருவியைப் பொருளென்றெண்ணிக் களிப்பவர் கயவரன்றே.[23]

'ஒருமொழி', 'பரமஞானம்' என்பவை இயேசுவைக் காட்டுவனவாம்.

மூலத்தில் வசன கவிதைபோல் அமைந்திருக்கும் (ஆங்கில மூலத்தில் பாவடிவிலே அமைந்துள்ளமை காண்க) பகுதிகளை விருத்தப் பாக்களில் அமைத்துப்பாடுகின்றார் கிறித்தவனுக்கு முன்னால் திருப்பயணம் செய்யும் உண்மை என்பவன் பின்வரும் பாடல்களைப் பாடிச் செல்லுகின்றான்.

''பத்தரா யுள்ள பேர்க்குப் பற்பல தொல்லை துன்பம்
சுற்றியே வளையு மந்தச் சோதனை யானதெல்லாம்
நித்தமுன் திரைபோல் வந்து நெருங்கினு நிலைபே ராமல்
பத்தியாய் வென்ற பேர்க்குப் பரனருள் கிடைக்கு மாதோ
பரகதி பெறவென் றிந்தப் பாதையில் நடக்கும் பேர்கள்
வரமுடன் மாமிசத்தை யொட்டிய கவலை யெல்லாம்
திரமுடன் செயித்தே நல்ல சீலராய்ச் செய்கொண்டாக்கால்
பரனடி பெரலா மென்று பாடினே னென்று னுண்மை.''[24]

பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்நூலின் ஒரு புதிய பதிப்பினைக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ் பெரிதும் முயன்று கொண்டு வருவது மிகவும் போற்றி வரவேற்கத்தக்கதாகும்.

இரட்சணிய யாத்திரிகம் : திருப்பயணியின் முன்னேற்றம் பெற்றுள்ள இரண்டாவது பா வடிவம் 'இரட்சணிய யாத்திரிகம்' என்னும் பெருங்காப்பியமாகும். இதுவும் முற்பகுதியினைத் தழுவியே இயற்றப்பட்டது. ஆனால், 'முத்திவழி அம்மானை' யைப் போல உரைநடையில் இருந்த செய்தி வெறுமெனப் பாட்டில் செய்யப் படவில்லை. ஒய். இயேசுதாஸ் என்பவர், 'திருப்பயணியின் முன்னேற்றத்தில் இரண்டு பாகங்கள் இருக்கின்றன; ஆனால், இரட்சணிய யாத்திரிகத்தில் ஐந்து பாகங்கள் இருக்கின்றன,' என்று எழுதுகிறார்.[25] திருப்பயணியின் முன்னேற்றத்தில் உள்ள இரு பாகங்களையும் தழுவிக் காப்பியம் செய்யப்பட்டுள்ளதுபோல இயேசுதாஸ் கூற்று அமைந்திருக்கிறது. ஆனால், கிருஷ்ண பிள்ளை முதற் பகுதியினை மட்டும் தழுவி, அதனை ஐந்து பாகமாக அமைத்துள்ளார். மேலும் அவர் தமிழாக்கத்தைத் தழுவியே காப்பியம் செய்துள்ளார். ஆதலின், 'இவர் பின்பற்றிய மொழியாக்கம் எது?' என்னும் வினா எழுகிறது.

கிருஷ்ண பிள்ளை தழுவிய தமிழாக்கம்

சுவீகர நாடார் 'முத்திவழி அம்மானை' நூலில் பின்பற்றிய மொழிபெயர்ப்பு எது என்பதனைத் தெளிவாகக் கூறியுள்ளார். கிருஷ்ண பிள்ளை, 'மோட்சப் பிரயாணம்' என்ற நூலின் மொழியாக்கத்தைத் தழுவியுள்ளேன் என்று மட்டும் குறிப்பிடுகிறார்[26] இவர் தழுவிய மொழியாக்கம் எது?

கிருஷ்ண பிள்ளை முதற்பாகத்தை மட்டும் பின்பற்றியிருப்பதாலும், முதற்பாகம் மட்டும் 1853-க்கு முன்னர் பதிப்புகள் வந்துள்ளமையாலும் அப்பதிப்புகளில் ஏதேனும் ஒன்றினைக் கிருஷ்ண பிள்ளை பின்பற்றியிருக்கலாம். குறிப்பாக, 1848-ன் பதிப்பினைத் தழுவியிருக்கலாம் என்று எண்ணலாம். 1857-ல் தனுக்கோடி ராஜு மூலம் முதன்முதல் கிருஷ்ண பிள்ளைக்குத் திருப்பயணியின் முன்னேற்றம் கொடுக்கப்பட்டது என்பதைக் கண்டோம்.[27] ஆனல் அப்பதிப்பு, எது என்பதை அறிய இயலவில்லை. அட்சன் என்பார் அஃது 1853-ன் மொழியாக்கமாகவே இருக்கலாம் என்று கருதுகிறர்.[28] 1882-க்கு முற்பட்ட பதிப்பு எதுவும் இப்பொழுது கிட்டவில்லை.

கிருஷ்ண பிள்ளை காப்பியம் இயற்றத் தொடங்கியது 1878ல்; எனவே, இவர் 1853ஆம் ஆண்டு மொழியாக்கத்தைப் பின்பற்றியிருக்கலாம். மேலும், கி. பி. 1882-க்கு முன்னர் இரட்சணிய யாத்திரிகத்தில் 1000 பாடல்களே இயற்றப்பட்டன என்பதைக் கண்டோம்.[29] கிருஷ்ண பிள்ளை கூர்த்த மதியினராதலின், 1882-ல் வெளிவந்த மொழியாக்கத்தையும் கவனித்திருக்கலாம். இம்மொழிபெயர்ப்பு வெளிவந்த 11 ஆண்டுகள் கழித்தே-அதாவது, 1893-ல் இரட்சணிய யாத்திரிகம் அச்சுக்கு கொடுக்கப்பட்டது.

சாமுவேல் பவுல் ஐயர் 1882ஆம் ஆண்டில் தம் மொழியாக்கத்திற்கு எழுதிய முன்னுரையில் தமக்கு முன்னர்த் திருப்பயணியின் முன்னேற்றத்தை மொழிபெயர்த்தவர்கள் மூலத்துடன் கூட்டலும் குறைத்தலும் செய்துள்ளார்கள் என்று குறிப்பிடுகிறர்[30] அவை எவையென்பதைக் குறிப்பிடவில்லை. ஆனல் முந்தைய மொழியாக்கங்கள் இவருக்குப் பயன்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. மிகவும் அண்மைக்காலப் பதிப்பில் சாமுவேல் பவுல் ஐயரின் முன்னுரை இல்லாமலே கி. இ. ச. அதனைப் பதிப்பித்துள்ள நிலை சிறப்புடையதாய் இல்லை. கூட்டியும் குறைத்தும் தமக்கு முற்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள் மொழியாக்கம் செய்துள்ளனர் என்று சாமுவேல் பவுல் ஐயர் குறிப்பிடுவதனல், கிருஷ்ண பிள்ளை மூலத்திலிருந்து விலகியும், மூலத்தினை ஒட்டியும் செல்லுவதைக் கண்டறிவதற்கு முந்தைய மொழிபெயர்ப்புத் தேவை என எண்ணலாம். ஆனல், கிருஷ்ணபிள்ளை வரிக்கு வரி மொழிபெயர்ப்பு நூல் செய்யவில்லை; கதையைத் தழுவியே காப்பியம் செய்துள்ளார். மேலும், முந்தைய மொழிபெயர்ப்புகளில் குறிப்பிடத்தக்க கூட்டலும் குறைத்தலும் இருந்திருக்குமானல், 1882-ன் மொழிபெயர்ப்பைக் கண்டபோது புலவர் அவற்றைத் திருத்திக்கொண்டிருக்கலாம்.

இங்கு ஒப்பாவிற்குப் பயன்படுத்தப்படுவது 1882-ன் மொழியாக்கமே. இத்துடன் 1966-ல் இலண்டன் லட்டர்வொர்த்து அச்சகத்தினர் (London Lutterworth Press) வெளியிட்ட திருப்பயணியின் முன்னேற்றத்தின் ஆங்கில மூலமும் பயன்படுத்தப்படுகிறது.

இப்பதிப்பின் வாசகம் பனியனின் மறைவின்போது எப்படி இருந்ததோ அப்படியே பதிப்பிக்கப்பட்டுள்ளது என்று இப்பதிப்பின் பாடத் தூய்மையைக் குறிப்பிட்டுள்ளனர்.[31]

நோக்கமும் இலக்கிய வடிவமும்

மனித வாழ்க்கையில் எளிய மக்களுக்கும் வேதாகாமத்தின் உண்மைப்பொருளை விளக்க வேண்டும் என்பதே பனியனுடைய நோக்கம் என்று ஃபிரார் என்னும் அறிஞர் குறிப்பிடுகிறார்.[32] ஆதலின் அவர், யாவரும் போற்றத்தக்க இனிய எளிய உரைநடையில் தம் மணிமுடிப்படைப்பான நூலினை இயற்றியுள்ளார். நூல் பெற்றுள்ள புகழுக்கு அதன் இலக்கியவடிவமும் காரணமாகலாம். திருப்பயணியின் முன்னேற்றத்தின் பொருளாழம் குறித்து டாக்டர் ஜான்சன் பின்வருமாறு குறிப்பிடுகிறார் : 'மிகமிக ஆழ்ந்த புலமை நிறைந்த அறிஞர் ஒருவருக்கு இதைவிடச் சிறப்பாகப் போற்றக் கூடிய வேறு ஒன்றினைக் கண்டுபிடிக்கவியலாது; அதே நேரத்தில் ஒரு சிறுவனுக்கு மிக்க மகிழ்ச்சியூட்டும் இயல்பு நிறைந்தது வேறு ஒன்றும் இல்லை. இவையே இந்நூலின் மாபெருஞ்சிறப்பாகும்.'[33] எளிய மனத்தினரும் விளங்கிக்கொள்ளுமாறு நூல் இயற்றப்பட்டிருப்பினும், இதன் ஆன்மிகப் பொருளாழம் எண்ணற்ற அறிஞர்களின் வாழ்நாள் அறிவுநலனைக் கவர்ந்துள்ளது. மாந்தர் அறிவிற்கு வான்புகழ் வள்ளுவர் கூறுவதுபோல, ''தொட்டனைத் தூறும் மணற்கேணி'' யாய் இந்நூல் துலங்குகிறது.[34]

இரட்சணிய யாத்திரிகம் இயற்றியமைக்குக் கிருஷ்ண பிள்ளை கூறும் காரணங்களுள் ஒன்று,

''என் மனசிலமுந்திய இரட்சணிய சத்தியத்தை
என் சுதேசிகளான
'முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்கவி கட்கு'ப்
பணிவாய் வற்புறுத்திக் காட்ட வேண்டுமென்ற
விருப்பத்தையும்........''[35]

என்று குறிப்பிடுவதாகும். இவர் சாமானிய எளிய மனத்தினருக்கு என்று இல்லாமல் முத்தமிழிலும் துறைபோன தம் நாட்டு உத்தமக் கவிகளுடன் வேதத்தின் சத்தியத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்தில் இயற்றினர் என்பது போதரும். எனவே, இவர் காப்பிய யாப்பில் நூல் செய்துள்ளார்.

பனியன் சாமானிய மக்களுக்கு வேதத்தின் உண்மைகளை விளக்கச் செய்த நூல் சிறந்த அறிஞர்க்கும் ஏற்புடைய விளக்கமாய் அமைந்துள்ளமைபோல, துறைபோன புலவர்க்கென்று இயற்றப்பட்ட நூல் அது வெளிப்படுத்தும் பொருளால் யாவர்க்கும் பயன் படுதல் இயல்பேயாம். எனவே, இரு நூல்களின் இலக்கிய வடிவம் வேறு என்றாலும், இவை திருமறையின் பொருளை

மனித வாழ்க்கையில் முற்றுருவக இலக்கிய நலத்துடன் வெளிப் படுத்தத் தோன்றியவைகளே என்னும் பொதுமை புலனாகிறது.

3. நூல்களில் நூலாசிரியர்களின் வாழ்க்கை

பனியனும் திருப்பயணியின் முன்னேற்றமும்

இரண்டு நூல்களிலும் ஆசிரியர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் பாலோடு கலந்த இழைபோலச் செல்கின்றன. அறுபது ஆண்டுகள் உயிர் வாழ்ந்த ஜான் பனியன், அறுபது நூல்கள் இயற்றினார்.[36] அவற்றுள், இலக்கிய உலகில் பனியனுக்குச் சிறப்புத் தேடித் தந் தவை நான்கு: 'Grace Abounding', 'The Holy War', 'The Pilgrim's Progress,' 'The Life And Death of Mr. Badman,' இந்த நான் கனுள்ளும் சிறந்தவை 'அருளின் பெருக்கம்' (Grace Abounding), 'திருப்பயணியின் முன்னேற்றம்' (The Pilgrim's Progress) ஆகிய இரண்டுமாகும். இவற்றுள்ளும் பனியனுடைய மணிமுடிப் படைப்பாய் விளங்குவது திருப்பயணியின் முன்னேற்றம்.[37] 'திருப்போர்' (The Holy War) என்னும் நூலும் தமிழாக்கம் பெற்றுள்ளது.[38]

'அருளின் பெருக்கம்' என்னும் நூல் பனியனது ஆன்மிக அனுபவ வாழ்க்கை வரலாறு ஆகும். 'பனியன் திருப்பயணியின் முன்னேற்றத்தை எழுதியபோது, துணிகரமான நிகழ்ச்சிகள் நிறைந்த தம்முடைய நீண்ட ஆன்மிக வாழ்க்கை வரலாற்றினை ஒரு முற்றுருவகமாக மொழிபெயர்த்து அமைக்க வேண்டிய அள் வினதாய் இருந்தது என்று பேரா. ஜான் ஷராக்குக் கூறுகிறார்.[39] இக்கூற்றால் திருப்பயணியின் முன்னேற்றம் என்னும் நூலில் 'அரு ளின் பெருக்கம்' என்னும் நூலும் கலந்துள்ளமையைச் சில எடுத்து காட்டுக்களில் காணலாம்:

கிறித்தவன் பாத்திரம் மனந்திருந்தி மறுபிறப்படைந்து இறை பக்தியுடன் உலகில் வாழ்ந்த ஒரு வாழ்க்கைப் போராட்டத்தின் அனுபவத்தைச் சொல்லுகிறது யாத்திரிகனுடைய இந்த வாழ்க்கை முன்னேற்றத்தில் பல இடங்களில் பனியனைக் காண லாம். திருப்பயணியின் முன்னேற்றத்தில் வருகின்ற சுவிசேடன் (Evangelist) பெட்போர்டு திருச்சபையின் குருவும், பனியனை ஆன்மிக வாழ்விற்கு ஆற்றுப்படுத்திய அவருடைய குருவு மான ஜான் கிப்போர்டு (John Gifford) என்பவரே என்பர்.[40] 'அருளின் பெருக்கம்' என்ற நூலின் நிறை நிலையில், பனியன், தம் மனைவியையும் மக்களையும் விட்டுச் சிறைக்குச் செல்வது தமக்குத் தம் தசையை எலும்பிலிருந்து பிய்த்து எடுப்பதுபோன்ற துன்பம் தருவது என்று கூறுகின்றார். பனியனது வாழ்க்கையின் இந்த உண் மைச் செய்தி பரதேசியின் முன்னேற்றத்தின் தொடக்கத்திற்கு உதவியாய் அமைகிறது. கிறித்தவன் தன் முன்னேற்றத்தின்

தொடக்கத்திலேயே மனைவி மக்களை விட்டுப் பிரிந்து மிகுந்த வருத்தத்துடன் செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறு வரக்கூடிய பல நிகழ்ச்சிகளுள் இஃது ஒன்றாகும்.[41]

கிருஷ்ண பிள்ளையும் இரட்சணிய யாத்நிரிகமும்

அமி கார்மைக்கேல் அம்மையார், கிருஷ்ண பிள்ளை தம்மிடம், 'இரட்சணிய யாத்திரிகத்தில் என்னுடைய வாழ்க்கையையே ஊற்றி விட்டிருக்கிறேன். என்னுடைய இதயத்தின் ஆழத்தின் ஆழும் அதில் இருக்கிறது' என்று சொன்னார் என்பதனைக் குறிப்பிடுகிறார்[42] பனியன் கிறித்தவக் குடும்பத்தில் பிறந்தும், கிறித்தவச் சூழலில் வாழ்ந்தும் உண்மையான கிறித்தவராய் வாழாமல், பேருக்குக் கிறித்தவராய் (Nominal christian) வாழ்ந்தார்; திருமணத்திற்குப் பின்னரே மனந்திருந்தி, கி.பி. 1654-ல் திருமுழுக்குப் பெற்று, தூயவாழ்வு நடத்தினர். கிருஷ்ண பிள்ளையும் தம் 30ஆம் வயதிலே மிகுந்த எதிர்ப்பு, துன்பம் இவற்றினூடே கிறித்தவ ரானார்.[43] எனவே, இவ் விருவர் வாழ்விலும் ஆன்மிக அனுபவ நிகழ்ச்சிகள் பல ஒத்து வருதல் இயல்பாகும்.

இரட்சணிய யாத்திரிகத்தின் தொடக்கத்திலேயே யாத்திரிகனின் மனைவி மக்கள் அவனுடைய அறிவுரையைக் கேட்டு அவனைப் பின்பற்றவில்லை; நாசபுரியிலே தங்கிவிடுகின்றார்கள். கிறித்தவன் அவர்களை விட்டுப் பிரிந்து துயரத்துடன் தனித்து யாத்திரை செய்கிறான். கிருஷ்ண பிள்ளை கிறித்தவரானதும் அவர் மனைவியார் கைக்குழந்தையுடன் தம் தாய்வீடு சென்றுவிடுகிறார். ஏறத்தாழ ஈராண்டுகள் கழித்தே மனைவி மக்கள் கிறித்தவராகிறார்கள். கிறித்தவன் மனைவி கிறித்தினளும் இரண்டாம் பாகத்தில் தன் மக்களுடன் திருப்பயணம் தொடர்வதை திருப்பயணியின் முன்னேற்ற நூலிற் காண்கிறோம். யாத்திரையின் தொடக்க நிலையில் ஆசிரியர் கூற்றாய் அமையும் ஒரு பாடலைக் காணலாம்:

''கண்ணிணை கலுழி காலக் கணவனுக் குளம ருட்சி
நண்ணிய தினியென் செய்கோ நானெனக் கவன்று ணைந்தாள்
நுண்ணறி வுடைய நீரார் நூலொடு பழகித் தேராப்
பெண்ணறி வென்ப தெல்லாம் பேதைமையுடைத்தாமன்றே.''[44]

இப்பாடலில் யாத்திரிகனின் மனநிலையை அறிந்து வருந்தும் அவன் மனைவியின் அறிவுடைமையைக் குறிப்பிடும்போது. 'பெரியோர் நூலுடன் பழகித் தெளிவடையாத பெண்ணறிவு என்பது பேதைமையுடையது,' என்று கூறுகிறார். இங்கே கிருஷ்ண பிள்ளை கல்வியறிவில்லாத தம் மனைவியைக் குறிப்பிடுகிறார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இவ்வாறு காப்பியத்தினூடே பல இடங்களைக் குறிப்பிட்டுக் காட்டலாம். கிருஷ்ண பிள்ளை, காப்பியத்தை நிறைவு செய்யும் அந்திப் பலி தேவாரத்தின் இறுதிப்பாடலில்,

திமிர நீங்குமுன் றேக நீங்கியென் சீவ னம்மையிற் சேரினும்
குமர நாயகன் றிருவ டித்துணை கூட்டி யுய்யருட் கொண்டலே
எமரொ டுந்தடுத் தாண்ட பேரரு ளென்றும் வாழிய வாழிய
அமரர் நாயக வாழி வாழிய வகில லோகசர் வேசனே!''[46]

என்று தம்மைத் தம் குடும்பத்துடன் தடுத்தாண்கொண்ட இறைவர் திருவருளை வழுத்தி அமைகிறார். இவ்வாறு இரு நூல்களிலும் நூலாசிரியர்களின் வாழ்வு காப்பியத்தின் உயிரோடு உயிராய்ப் பின்னிப் பிணைந்து செல்வதைக் காண்கிறோம்.

4. நூல்களின் முற்றுருவக இயல்பு

முற்றுருவகத்தின் தோற்றம் முதலில் மெய்ப்பொருளியல்பினதாயும் இறையியல் தன்மைத்தாயும் விளங்கியது. முற்றுருவகங்கள் பெரிதும் சமயச்சார்புடையன எனலாம். மேலும், உருவகங்கள் தொடக்க முதலே கதை இயல்பினவாக (தொடர் உரை) விளங்குகின்றன என்று ஜான் மேக்குவீன் (John Macqueen) என்பவர் சொல்லுகிறார்.[46] முற்றுருவகம் சமயநிலையில்மட்டும் நில்லாமல், இலக்கியப் படைப்பிற்கும் பெரிதும் செல்வாக்குடையதாய் விளங்குகிறது. இலக்கியப்படைப்பிற்கு அல்லது விளக்கத்திற்குப் பயன்படுவது முற்றுருவகம்; இதற்கு எடுத்துக்காட்டாய் விளங்குவது ஜான் பனியனது திருப்பயணியின் முன்னேற்றம்; அது ஒரு பல்திறக் கூட்டொருமை முற்றுருவகம் என்கிறது அமெரிக்கக் கலைக்களஞ்சியம்.[47]

தண்டியாசிரியர் முற்றுருவக அணியைப்பற்றிச் சொல்லும்போது
''முற்றே யவயவ மவயவி யெனுஅ''[48]

என்று கூறுகிறார். இதன் பொருள், 'அவயவ அவயவிகளையேற்ற இடத்தோடும், பிறவற்றோடும் முற்ற உருவகம் செய்துரைப்பது முற்றுருவகம்' என்பதாகும்.[49] மாறனலங்கார ஆசிரியரும் இதே கருத்தினை அறிவிக்கிறார்.[50] இங்கு முற்றுருவகத்திற்குச் சொல்லப்படும் விளக்கம், ஒரு பாடல் முழுவதிலும் அவயவ அவயவிகளை உருவகம் செய்தலாம். இஃது ஒரு நூலுக்குரிய வரையறை அன்று. எனினும், பொருள் வகையில் ஒரு முழு நூலின் அவயவ அவயவிகளை உருவகம் செய்தலுக்கு இதனைக் கொள்ளத்தகும். அவ்வாறாயின், ஆங்கிலத்தில் முற்றுருவகம் (Allegory) என்று வழங்கப்படும் தனிநூல் வகைக்கும் இதனை ஒப்பமைத்து கொள்ளலாம்.

எனவே, மேலோட்டமாகக் காணப்படும் பொருளைவிட உள்ளுறை பொருளை உருவகம், பொதுக்குறியீடுகள், ஆகியவற்றின் மூலம் திட்டமிட்ட உள்நோக்கத்துடன் அறிவிப்பது முற்றுருவகமாகிறது. இதனைப் பல்திற உறவுநிலைகளில் அமைக்கப்பட்ட தொடர் உருவகம் எனலாம். அது நீண்ட தொடர்ச்சியையும்

உட்சிக்கலையும் உடையதாய் ஒரு முழுமையான வாழ்வுப்பொருளை விளக்குவதாய் அமைகிறது. முற்றுருவக நூல்களுள் பெரிதும் விரும்பிக் கற்கப்படுவது பனியனின் முற்றுருவக நூல் என்று பிரித் தானியக் கலைக்களஞ்சியம் கூறுகிறது[51] திருப்பயணியின் முன் னேற்றம் முற்றுருவக நூல்களுள் தலைசிறந்ததெனக் கருதப்படு கிறது.[52]

பனியனது திருப்பயணியின் முன்னேற்றம் மேலோட்டமான பொருளில் ஒருவன் உலகத்திற் செய்யும் யாத்திரையைச் சொல்லு கிறது; ஆனால், உள்ளுறைப் பொருளில் ஒரு கிறித்தவ வாழ்வின் ஆன்மிகத் திருச்செலவை உணர்த்துகிறது. முற்றுருவக நூல்களுள் சிறந்ததென இலக்கியத் திறனாய்வாளரால் போற்றப்படும் திருப் பயணியின் முன்னேற்றத்தின் முற்றுருவகக் கதையைத் தழுவித் தமிழில் ஒரு முற்றுருவகக் காப்பியம் கிருஷ்ண பிள்ளை படைத் துள்ளார். கதையில் வரும் பாத்திரங்களும் இடங்களும் நிகழ்ச்சி களும் உருவகங்களே. குரு, வன்னெஞ்சன், மென்னெஞ்சன், லௌகிகன், அறிவீனன், விடாதகண்டன், பாப்பரக்கன், வாய்ச் சாலகன், வியாக்கியானி, நிலைகேடன் என்பவை போல்வன பாத்திரங்களின் பெயர்கள். எழிற்சத்திரம், நாசபுரி, மாயாபுரி, தருமபுரி, தருமசேத்திரம், மரண நிழலின் பள்ளத்தாக்கு, துன்ப மலை, ஆனந்த சைலம் என்பவை போல்வன இடங்களின் பெயர் கள். இவ்வாறு புலவர் முற்றுருவகப் பண்பினை நூலில் முற்றிலும் போற்றிப் புதுப்பொலிவு தந்துள்ளார்.

தமிழில் முற்றுருவக இயல்புடைய நூல்வகை முற்றிலும் புதியது அன்று. வடமொழியில் எழுதப்பட்ட 'பிரபோதச் சந்திரோதயம்' என்னும் நாடக நூலைத் தமிழில் விரித்து ஒரு நூலைத் திருவேங்கடநாதர் என்பவர் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் பாடியுள்ளார். இந்நூலில் முற்றுருவக இயல்புகள் அமைந் துள்ளன.[53]

இதுகாறும் இரு நூல்களுக்கும் பொதுமை நிலையில் கவனிக் கத்தக்கனவற்றை ஆராய்ந்தோம். இனி, வழி நூலாசிரியர் முதல் நூலினைத் தழுவிய தன்மையில் தம் நூலினை அழியா மரபினதாக்கும் பொருட்டு இலக்கிய அமைப்பிலும் படைப்பிலும் செய்த கலைநுட்ப வேறுபாடுகளை ஆராயலாம்.

5. கிருஷ்ண பிள்ளை கண்ட புதுமைப் பொலிவு

கதை அமைப்பில்

பாவி ஒருவன் தன் பாவத்தின் கவலையால் வருந்தி நாச நாட்டி னின்று பேரின்ப நாட்டிற்குச் செல்ல விழைந்து, அங்குச் செல்லும் திருநெறியைத் தேடுங்கால் குருவைச் சந்திக்கிறான். குரு அவனைத்

திருநெறிக்கு ஆற்றுப்படுத்துகிறார். கிறித்துவின் அருளால் மனந் திருந்திய அவன், பேரின்ப வீட்டினை நோக்கித் திருவருள் துணையுடன் முன்னேறுகிறான். திருப்பயணியின் முன்னேற்றத்தில் புயலும் அமைதியும் மாறிமாறி வருகின்றன. முடிவில் அவன் வீடுபேறு அடைகிறான். அது முதனூலின் கதைப்போக்கு. இதனைக் கிருஷ்ண பிள்ளை அப்படியே பின்பற்றுகிறார்.

ஆனால், இவர் காப்பிய இலக்கணத்துக்கு ஏற்பவும் தம் படைப்பாற்றலுக்கு இசையவும் முதனூலைப் புதுப்பிக்கிறார். காப்பியத்தின் விறுவிறுப்பான முழுக் கதை ஓட்டத்திற்கு எவ்விதக் குறையும் நேராவண்ணம், அதன் கதையோட்டத்துடன் தாம் செய்ய விரும்பும் மாற்றங்களைக் கதையின் உயிருடன் ஒன்றுகலந்த நிலையில் இணைப்பதாலும், கதைப்போக்கினைத் தாம் விரும்புமாறு பொருத்தமாக வளைத்துக்கொள்வதாலும் காப்பியத்திற்குப் புதுமைப் பொலிவூட்டுகிறார், புதிய படைப்பாக்குகின்றார். மறுபிறப் படையச் செய்கின்றார். இவற்றினூடே வீடுபேறு அடையும் காப்பியத்தின் இலக்குத் தலைமை பெற்று விளங்குகிறது. காப்பியத்தின் ஓத்திசைவுக்கு ஊறு நேரவில்லை.

திருவசனங்களை நூல் முழுதும் பனியன் மேற்கோள் காட்டுகிறார்; இம்மேற்கோள்கள் கதைமாந்தர் வாழ்க்கை அனுபவம் வாயிலாக வெளிப்படுமாறு செய்துள்ளார். கிருஷ்ண பிள்ளை இம்முறையினையும் செம்மையாகத் தழுவுகிறார்.

பனியன் திருமறையின் கருத்துகளைத் திரட்டியோ, நீண்ட பிரசங்கம்போலவோ செய்யவில்லை. கிறித்துவின் வாழ்க்கையிலிருந்து கருத்துகளை பனியன் மேற்கோள் காட்டுகிறார். கிறித்துவின் வாழ்க்கை வரலாற்றினை நெடுகச் சொல்லவில்லை. ஆனால், கிருஷ்ண பிள்ளை இவற்றை, கற்போருக்குச் சோர்வு ஏற்படா வண்ணமும், கதையோட்டத்தின் விறுவிறுப்புக் குன்றாவண்ணமும் அதற்கு ஊறு நேரா வகையிலும் செய்கிறார். காப்பிய அமைப்பு இப்புதுமைகள் செய்வதற்குப் புலவருக்கு இடமளிக்கிறது.

இவற்றைச் சில சான்றுகளால் நிறுவலாம் காப்பியத்தின் முதற்படலம் வரலாற்றுப் படலம். இஃது மூலநூல் தொடர்பு இல்லாதது. மூல நூலின் கதை இரண்டாம் படலமான மெய்யுணர்ச்சிப் படலத்திலிருந்தே தொடங்குகிறது. முதற்படலத்தின் மூலம் கிருஷ்ண பிள்ளை காப்பியத்தின் தோற்றத்திற்கு ஒரு வரலாற்று முன்னுரை தருகிறார். திருச்சபையின் சிறப்பையும் வாழ்வியிலையும் குறிப்பிட்டு, திருச்சபையின் ஓர் அங்கமான பனியன் செய்த பாவனை சரிதத்தைத் தாம் சொல்லுவதாகக் கூறித் தொடர்கிறார்.[54] பனியனிடத்திலிருந்துகொண்டு கனவைத் தொடங்குகிறார்.[55]

குருவை நாடிச் சென்ற யாத்திரிகனைக் குரு திருநெறிக்கு ஆற்றுப்படுத்துமுகத்தான், அவனுக்குக் கடவுள் அரசு, உலகப் படைப்பு, மாந்தர் படைப்பு, சாத்தானுடைய புரட்சியும் வீழ்ச்சியும், முதல் மாந்தர் வீழ்ச்சி முதலானவற்றை ஆதி பருவத்தில் நான்கு முதல் எட்டுப் படலங்கள்வரை பாடுகிறார்.[56] இவை எல்லாம் மூலத்தில் இல்லாதவை.

கிறித்துவின் வாழ்க்கை முழுதும் பாட விரும்பிக் கவிஞர் அதனை இரண்டு சந்தர்ப்பங்களில் பொருத்தமாக அமைக்கிறார். ஆத்தும விசாரியை ஆற்றுப்படுத்தும் குரு வாயிலாக ஒரு பகுதியை அமைக்கிறார்.[57] ஏனையவற்றைத் திருநெறிச் செலவில் ஆங்காங்கே கேட்டு அறிந்து செல்க என்று குறிப்பிட்டு அவனை அனுப்புவதுடன் ஆதி பருவத்தில் நிறுத்திக் கொள்கிறார்.

''பகைப்புலத்தார் சதிவினையும் பரமசுத னரும்பாடும் பகையைச் சிந்தி
செகப்புலையன் சிரஞ்சிதைத்த செயப்பாடும் பரலோகத் திருவோ லக்கத்
தகைப்புலவ ரெடுத்தேத்துத் தந்தைகளி கூருதலும் பிறவு மெல்லா
வகைப்பாடு மாண்டாண்டு கேட்டறிதி வழிக்கிடையில் மைந்த வென்றான்.''[58]

இரண்டாம் பருவத்தில் வேதியன் எழிற்சத்திரம் வரும்வரையில் காத்திருந்து அங்கே பக்திமாது வாயிலாக விடப்பட்ட பகுதியை அகமுருகும் பக்திக் கனல் நிறைந்த கவிதையில் பாடி நிறைவு செய்கிறார்.[59]

''பத்தி யென்னும்ப வித்திரை பாங்குளார்
சித்த மும்மவர் செப்பிய சீர்மையும்
உய்த்து ணர்ந்துள்ளு வப்பொடு மொள்ளிய
வித்த கக்கனி வாய்மலர் விண்டனள்.

எம்மு யிர்த்துணை யீரிறை வன்னொரு
செம்மல் மேயசி லுவையின் பாடுகள்
மம்மர் நீங்கிய வானவர்க் காயினும்
அம்ம சொல்லிய எவிடற் காவதோ.

பாழி யம்புவி யுய்யப்ப ரன்சுதன்
வாழி மேனிவ தைப்புண்ட நீர்மையை
ஊழி யூழிநீ னைத்தழு தொண்கணீர்
ஆழி யாகவு குப்பினு மாற்றுமோ!

பெருகு மன்பிற் பிணித்தவப் பெற்றியை
உருகு முள்ளத்திர யானுரை செய்வதற்
கருகி யல்லென்மற் றுயினு மாவியின்
திருவ ருட்கொட றிந்தன செய்புகேன்.''[60]

வ.வே.சு. ஐயர், கம்பரையும் வால்மீகியையும் ஒப்பிடும்போது கம்பரின் கதை ஏறத்தாழ அதனுடைய எல்லா விவரங்களிலும் வால்மீகியினுடையதே; ஆனால், கம்பர் வால்மீகியிலிருந்து ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டால் அதனை முழுக்க முழுக்கத் தம்முடைய சொந்தப் படைப்பாக மாற்றிவிடுகிறார் என்று குறிப்பிடுகிறார்.[61] கிருஷ்ண பிள்ளைக்கும் பனியனுக்கும் இவ்வாறே கூறலாம். கிருஷ்ண பிள்ளை பனியனிடமிருந்து எடுத்துக்கொள்ளுகிற நிகழ்ச்சிகளைத் தம் சொந்தப் படைப்பாக மாற்றிவிடுகிறார். ஆனால் கதை என்னவோ பனியனுடையதே. கிருஷ்ண பிள்ளை முதனூலை விட்டு விலகிச் செல்லுமிடங்களிலும் தமது முத்திரையைச் செம்மையாகப் பதியவைக்கிறார்.

காப்பிய அமைப்பில்

திருப்பயணியின் முன்னேற்றம் தொடக்க முதல் முடிவு வரையில் இடையில் பெரும் பிரிவுகளோ, துணைப் பிரிவுகளோ இல்லாமல் செல்கிறது. 1678ஆம் ஆண்டு பதிப்பு முதலாக வந்த பதிப்புகளும் இப்படிப்பட்டனவே. பொதுவாக ஆங்கில மொழியில் இவ்வாறே பதிப்பிக்கப்படுகிறது.[62] எனினும், தமிழ்மொழியாக்கத்தில் இடையிடையே பொருள் அமைவுக்கேற்ப துணைத்தலைப்புகள் இடப்பட்டுள்ளன.

பெரும் பிரிவுகள்

ஆனால், கிருஷ்ண பிள்ளை தமது காப்பியத்தை ஐந்து பெரும் பிரிவுகளாக அமைத்துள்ளார். இவற்றைப் 'பருவங்கள்' என வழங்குகிறார். யாத்திரிகனின் திருச்செலவு முன்னேற்றத்தில் இவை ஐந்து பருவ வளர்ச்சிகளாய் அமைகின்றன. ஒரு முழு வாழ்க்கையில் இடைவிடாத தொடர்ச்சியே காணப்படினும், பருவ வளர் நிலைகளைக் காண்கிறோம். எனவே, புலவர் பருவங்களாகப் பகுத்திருக்கிறார் என்பது புலப்படுகிறது. வேதியன், குரு ஆற்றுப்படுத்திய திருநெறியில் சுருதி நூலின் துணையுடன் திருச்செலவில் முன்னேறுகிறான். நம்பிக்கை இழவு உளையைக் கடந்து இடுக்க வாயிலை நோக்கி முன்னேறுகிறான்; அடுத்து லெளகீகன் இவனை வழிதப்பச் செய்கிறான். குரு இரண்டாம் முறை சந்தித்து அவனைக் கண்டித்து உணர்த்தித் திருநெறியில் திருப்புகிறார்; இடுக்க வாயிலை அடைகிறான். இடுக்க வாயில் கிறித்துவைக் குறிக்கும். இங்கே திருநெறியின் தெளிவு ஓரளவு கைவரப்பெற்று வியாக்கியானி வீட்டைக் கடந்து சிலுவைக்குன்றினை அடைகிறான். இந்த இடத்தில் அவனை இதுகாறும் முதுகில் அழுத்திவந்த பாவக் கொடுஞ்சுமை அறுந்து விழுகிறது. இங்கே செந்நெறி இதுவெனத் தெளிவாகக் காட்டும் பயணப் பத்திரம் அருளப்படுகிறது. இதனை அவன் புண்ணிய நகர் வாயிலோனிடம் காட்டினால்தான் அவனை உள்ளே விடுவர். பாவச் சுமை நீங்கிய யாத்திரிகன் வெள்ளுடை அணிந்தவனாய் அடுத்துத் தொடர்ந்து முன்னேறி உபாதி மலையைக்

கடக்கிறான். திருப்பயணத் தொடக்க வரலாற்றினைக் கூறும் இப் பகுதியைப் புலவர் பொருத்தமாக 'ஆதி பருவம்' என்று வழங்கு கிறார்.

அடுத்து, அவன் எழிற்சத்திரத்தை அடைகிறான். அங்கே விவேகி, யூகி, பக்தி, சிநேகி என்னும் தவ மகளிர் நால்வருடன் பக்தி வாழ்வின் பல்வேறு இயல்புகள் குறித்து உரையாடி, விருந் துண்டு மகிழ்ந்து, ஆன்மிக உறுதிபெற்று எழிற்சத்திரத்தை நீங்கி முன்னேறுதலுடன் இரண்டாம் பருவம் முடிகிறது. எழிற்சத்திரத் திலிருந்து இவனுக்கு விண்ணுலகும் அதில் நுழைவதற்கான திரு வாயிலும் காட்டப்படுகின்றன. இப் பகுதிககுப் புலவர் 'குமார பருவம்' என்று பெயரிடுகிறார். மேலேழுந்தவாரியாகக் காண்கின்ற விடத்து மூல நூலின் பொருட் பகுப்புடன் இப்பெயர் பொருந்து வதாகத் தோன்றவில்லை. ஆனால், 'குமார' என்பதற்கு இளமை என்று பொருள்கொண்டால், முதற்பருவம் ஆன்மிக யாத்திரை யில் பிள்ளைப்பருவத்தையும், இஃது இளமைப் பருவத்தையும் குறிக்கிறது எனலாம். மேலும், இப்பகுதியில்தான் கிறித்துவின் மீட்புத்திருப்பணிகள் இரட்சணிய சரிதமாகத் தவமகள் பக்தி வாயி லாக விளக்கப்படுகின்றன. இப்பருவத்தின் 70 விழுக்காட்டுப் பாடல்கள் அதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே, கடவுள் திருமகன் கிறித்துவின் மீட்புத் திருப்பாடுகளையும் விளக்குவதால் இப்பருவத்திற்குக் 'குமார பருவம்' என்று பெயரிடப்பட்டிருப் பினும் பொருந்துவதே.

பின்வரும் பகுதியில் மறைவாணன் எழிற்சத்திரத்தினின்று விடைபெற்ற பின்னர், வனத்துள்ளே சென்று இடுக்க வழியில் முன்னேறுகிறான்; தனக்கு முன்னர் நிதானி என்பவன் செந்நெறி யில் சென்றுகொண்டிருப்பதை அறிகிறான்; விரைந்து அவனுடன் சேர்ந்துகொள்கிறான். திருநெறி மாயாபுரியினூடே செல்கிறது. இருவரும் மாயாபுரியை அடைகின்றனர். அங்கே இருவரும் சிறைப்படுகின்றனர். நிதானி உயிர்த்தியாகி ஆகிறான். வேதியன் தப்பிச் செல்கிறான். இப்பகுதி 'நிதான பருவம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இறையருளால் தெளிந்த நிலையில் முன்னறி திறனுடன் முற்செல்லும் நிதானியுடன் திருப்பயணி சேர்ந்து தெளிவுபெற்றுத் துன்பச் சூழலிலகப்பட்டும் தன்னிலை தவறாமல் உறுதிப்பாடான நிதான நிலையைப்பெற்ற காரணத்தால் வந்த பெயராதல்வேண்டும். நிதான பருவமாவது, திருப்பயணி தன் போக்கில் இடையிடை நேர்ந்த அச்சமும் தடுமாற்றமும் நீக்கப் பட்டு இறுதி இலட்சியத்தில் ஓர் உறுதிப்பாட்டைப் பெற்ற பகுதி என்பதாம். அடுத்துப் புகவிருக்கும் ஆரணியத்தின் கடுஞ்சோதனை களில் வெற்றிபெற ஓர் உறுதிப்பாடு தேவைப்படுகிறதன்றோ? அத்

தகையா தகுதியை அவன் பெற்றுள்ளான் என்பதனை எடுத்துக் காட்டும் நோக்கத்தாலும் இப்பெயரிட்டமை ஏற்புடையதே.

மாயாபுரியில் மாண்ட உண்மை என்பவனின் உயிர்த்தியாகத்தின் விளைவால் பிறக்கும் நம்பிக்கை என்பவன் இங்கிருந்து திருப்பயணத்தில் கிறித்தவனுடன் கலந்துகொள்கிறான். இருவரும் ஆன்ம யாத்திரையில் வனாந்தர வழியின் இயல்புகள் நிறைந்த தங்கச் சுரங்கம், சோக பூமி இவற்றைக் கடக்கின்றனர். இவர்களுடைய விசுவாசம் கடுமையாகச் சோதிக்கப்படுவதற்குக் காரணமாக அமைகிற அகோர ராட்சதன், விடாதகண்டன், கார்வண்ணன் முதலியோரைச் சந்தித்துத் திருநெறியில் பின்வாங்காமல் முன்னேறுகின்றனர். கிறித்தவனும் நம்பிக்கையும் நிலைகேடனுதியர் பற்றிச் செய்யும் உரையாடலுடன் பருவம் முடிகிறது. இயற்கை வனாந்தர இயல்பும், ஆன்மிக யாத்திரையில் வனாந்தர வாழ்வியல்புகளும் அமைந்துள்ளமையாலும் இஃது 'ஆரணிய பருவம்' என்று வழங்கப் படுகிறதுபோலும்! எனவே, இங்கு வாழ்வியல் நிலையுடனும் இயற்கை முறைப்படியும் விரிந்த வனாந்தரத்தினூடே செல்லும் நெருக்கமான திருநெறியில் உறுதியுடன் யாத்திரையில் முன்னேறுதலைக் குறிப்பதற்கு வழங்கப்படும் பெயர் பொருத்தமாகவே இருக்கிறது.

காப்பியத்தின் இலக்கு நிறைவடைதலைப் பாடுகிறது இறுதிப் பருவம். திருப்பயணிகள் ஆன்மிக வாழ்வில் தேர்ந்து, உலகியற் சோதனைகளை எல்லாம் வென்று, திருநெறியில் வலம் இடம் விலகாது வாழ்ந்து, உயர்நிலை அடைந்தோராய் மெய்வாழ்வைக் கண்ணுறுகின்றனர்; தர்மசேத்திரத்தை அடைகின்றனர். மாந்தர் தவிர்க்க முடியாத மரண அனுபவத்தைப் பெற்று வீடுபேற்றினை அடைந்து பேரின்ப வாழ்வினைத் துய்க்கின்றனர். இப் பகுதியைப் புலவர் மிகப் பொருத்தமாக 'இரட்சணிய பருவம்' என்று வழங்குகிறார். யாத்திரையின் இலக்கு இரட்சணியம். எனவே, திருப்பயணி திருமீட்படைதலுடன் காப்பியம் இனிது நிறைவடைகிறது.

இவ்வாறு கிருஷ்ண பிள்ளை, முதனூலாகிய திருப்பயணியின் முன்னேற்றத்தை, இரட்சணிய யாத்திரிகக் காப்பியத்தில் ஐந்து பருவங்களாக வகுத்து மிகச் செம்மையாக அமைத்துள்ளார்.[63]

சிறு பிரிவுகள்

கிருஷ்ண பிள்ளை, பெரும்பிரிவுகளாகிய பருவம் ஒவ்வொன்றிலும் முன்னேற்றத் திருநெறியில் அமைந்துள்ள நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப அவற்றைச் சிறுபிரிவுகளாக-படலங்களாக வகுத்துள்ளார். ஆதி பருவத்தில் 19 படலங்களும், குமார பருவத்தில் 4 படலங்களும், நிதான பருவத்தில் 11 படலங்களும், ஆரணிய பருவத்தில் 10 படலங்களும், இரட்சணிய பருவத்தில் மூன்று படலங்களுமாக

மொத்தத்தில் 47 படலங்கள் வகுத்துள்ளார். முதனூலான ஆங்கில மூலத்தில் பெரும்பிரிவுகள் இல்லாததுபோலச் சிறுபிரிவுகளும் இல்லை. ஆனல், தமிழாக்கத்தில் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பத் தலைப் பிட்டுள்ள சிறுபிரிவுகள் உண்டு. இத்தலைப்புகள் ஓரோ வழிப் படலத் தலைப்புடன் பொருந்தி வருகின்றன. சான்ருக, 'சுவிசேஷகனின் முதலாம் சந்திப்பு' என்பது 'குருதரிசனப் படலம்' என்ற பெயர் பெறுகிறது.

பின்னணியில்

இலக்கியத் தோற்றத்திற்கு நிலைக்களன் மக்கள் வாழ்க்கை, மக்கள் வாழ்க்கையும், மொழியும் இலக்கியமும், நாகரிகமும் பண்பாடும் நாட்டுக்கு நாடு, இடத்துக்கு இடம் வேறுபடுபவை. வாழ்வியல் உண்மைகளும் அவற்றின் அனுபவங்களும் அகில வுலகத் தன்மையனவாக இருக்கும் பண்புள்ளவை. ஆனல், அவை இலக்கியமாகும்போது அவ்வந்நாட்டின் மொழி, இலக்கிய மரபுகள், பண்பாடு இவற்றின் பின்னணியில் தோன்றுகின்றன. பனியனுடைய நூல் மேலைநாட்டு நாகரிகத்தின் பின்னணியில் தோன்றியது. ஆனல், பனியன் ஒரு குறிப்பிட்ட பூகோள எல்லைக்குள் நூலை அமைக்கவில்லை. ஓர் உயிரின் திருப்பயண முன்னேற்றத்தினை உலகளாவிய நிலையில் உரைத்துள்ளார். இதனல், இந்நூல் எந் நாட்டு மொழியில் பெயர்க்கப்பட்டாலும்வெற்றிபெற்று வருகிறது. இருநூற்றுக்கு மேற்பட்ட உலகமொழிகளில் உலாவி வருகிறது. ஆனல் பண்பட்ட இலக்கிய, மரபுடைய ஒரு நாட்டின் இலக்கியத்தில் பெருங்காப்பியமாக அமையும்போது, அது வெளிப்படும் நாட்டின் மொழி, இலக்கியம், சமுதாயச் சிந்தனைகளைப் பின்னணியாகக் கொண்டுஅமையவேண்டும். அவ்வாறு அமைதலே சிறப்பு. அப்போதுதான் அந்தப் புதுப்பொருள் தாமரை இலையின்மேல் நிற்கும் நீர்த்துளிபோல இராது; பாலும் நீரும்போல வேற்றுமை இன்றி ஒன்ருய்க் கலந்து உள்ளத்தில் பதியும்.

கம்பர் காட்டிய வழி

கிருஷ்ணபிள்ளை கம்பராமாயணத்தில் கற்றுத் துறைபோன புலமையாளர். வடமொழிப் புலமை உடையவராதலால், இவர் வால்மீகி இராமாயணத்தையும் நன்கு கற்றிருத்தல் இயல்பே. கவிச்சக்கரவர்த்தி கம்பர் கையில் வடமொழி வால்மீகி இராமாயணம் தமிழ் மொழிக் கம்பராமாயணமான பான்மையினை நன்கு உணர்ந்தவர். பனியனுடைய திருப்பயணியின் முன்னேற்றம் அதனுடைய் முற்றுருவகத் தன்மையினல் இலக்கியப் பொருளில் உலகளாவியதாய் இருத்தல் இயல்பு. என்ருலும், தமிழ் நாட்டுக்கு அதன் சமயப் பொருள் புதிது. அதனைப் புலவர் தமிழ் இலக்கிய மரபில் அமைத்து இந்நாட்டுக்குரியதாக்கி, அதற்கு இலக்கிய உலகில் ஓர் அழியா வாழ்வு கொடுத்துவிடுகிருர்.

தன் தவற்றினை உணர்ந்து மனம் வருந்தி-திருந்தி, வரவிருக்கும் தண்டனைக்குத் தப்பி உய்யும் ஆற்றினை நாடிச் செல்லும் மனிதன் எந்நாட்டிலும் இருப்பது இயல்பு. ஆனால், அவன் தமிழ் நாட்டில் தோன்றியவனாக இருக்கும்போது, இந்நாட்டின் பண்பாட்டின்படியும் இயற்கைப் பின்னணியின்படியும் அமைதல் வேண்டும். இந்த ஆன்மவிசாரியை அறிமுகம் செய்யும் முதற் பாட்டிலேயே புலவர்,

''வண்டினம் பயிலச் செய்ய மலர்முகை யவிழ்ந்து செந்தேன்
ஒண்டுளி பிலிற்றி யெங்கு முறுமணங் கமழ வோங்குந்
தண்டலைப் பரப்பி னூடே தனித்தொரு மனித னிற்கக்
கண்டனன் கனவி லன்னோ னிலையிது கழறுங் காலை''[64]

என்று இயற்கைப் பின்னணியினைச் சொல்லோவியந் தீட்டி, அதில் தவிப்புடன் தனித்து நிற்கும் மனிதனைக் காட்டுகிறார். அவனுடைய மனநிலையைக் காட்டுவதற்குத் தமிழ் இலக்கியத்தில் பயின்ற உவமையையே பயன்படுத்துகிறார்.

''இருதலைக் கொள்ளி யுற்ற வெறும்பென வேகு மார்க்கம்
ஒருதலை யானுங் காணா துணங்கியோன்.........''[65]

என்னும் இவ்வுவமை திருவாசகத்தில் பயின்றுள்ளது. சமய வாழ்வில் தன்னை ஆற்றுப்படுத்தும் ஆசிரியரைக் 'குரு' என்று வழங்குவது மரபு. வேதியனைத் திருநெறியில் ஆற்றுப்படுத்தும் சுவிசேடகனைக் 'குரு' என்றே வழங்குகிறார்.

திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு இவற்றைப் பாடும் பகுதிகளில் அவற்றைத் தமிழ்நாட்டிற் கொண்டு வந்து காட்டுகிறார். பழந்தமிழ் இலக்கிய மரபு நாட்டை ஐவகை நிலங்களாக வகுக்கிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை இவற்றின் மக்கள் வாழ்வு காப்பியத்தில் இடம்பெறுகிறது. யாவரும் புனித நதியாகப் போற்றும் கங்கையாற்றை நாட்டில் பாயவிடுகிறார். இது, 'சீவ கங்கை.' பின்வரும் பாட்டில் இதன் ஒரு காட்சியைக் காணலாம்.

''முத்தலைச் சிகரி நின்று முளைத்தவிச் சீவ கங்கை
வித்தக விமல ஞான போனகம் விளைவித் தூட்டிப்
பித்தளையுலகைத் தூய்மை பிறங்குபொன் னுலக மாக்கி
உத்தமந் திகழ்த்துஞ் சீர்சா லொழுக்குடைத் தின்று
மென்றும்''[66]

இச்சீவ கங்கையின் தோற்றம் இமயமலையன்று. அது 'முத்தலைச் சிகரி', இது விண்ணுலகில் பிதா, மைந்தர், தூய ஆவி என்னும் திரித்துவமாகிய முத்தலைச் சிகரியிலிருந்து தோன்றி வைதிகமாகிய குற்றமற்ற ஞான உணவை விளைவித்து, உலக மாந்தர்க்கு அவ்வுணவை ஊட்டி, பித்தளை உலகைத் தூய்மையாக விளங்கும் பொன்னுலகமாக்கி, உண்மை விளங்குகின்ற செம்மையான ஒழுக்கை

இன்றும் என்றும் உடையது என்று கவிஞர் காட்டுகிறார். பின்வரும் பாடல் மருதநில மக்கள் வாழ்வைக் காட்டுகிறது;

''நீர்வளங் கண்டு கோமா னிலவளம் பெருக்கு மாக்கள்
ஏர்வளம் பெறத்தி ருத்தி யிறைவனை வழுத்தி யேத்திச்
சீர்வளந் தருநல் வித்தைத் தெளித்துநீர் பாய்ச்சி நாளும்
பார்வளம் பெறச்செய் சாலிப் பயிர்வளம் படுப்பர்
மன்னோ.'' [67]

பனியன் கூறும் மாயாபுரி அங்காடியைக் கிருஷ்ண பிள்ளை மாயாபுரிப் படலமாக அமைக்கிறார். மாயாபுரி என்பது மாயையான உலக வாழ்வின் உருவக விளக்கமாகும். பனியன் உலகை மாயாபுரியாக உருவகம் செய்யும் போது அதிலுள்ள தெருக்களை, பிரித்தானியத் தெரு, பிரெஞ்சு நாட்டுத் தெரு, செர்மானியத் தெரு என்று மேலை நாடுகளை அடுக்குகிறார். [68] ஆனால், கிருஷ்ண பிள்ளை உலகினை மாயாபுரி நகரமாகச் சொல்லோவியப்படுத்தும் போது அதிற் பல பாக்கங்களை அமைக்கிறார். அவற்றுள் ஒன்று இந்தியப் பாக்கம் என்று கூறுகிறார்;

''சோது மல்குமா யாபுரி நகரிடைக் குழுமீ
ஓத ரும்பல பாக்கங்க ளுள்ளன வவற்றில்
ஆதி யாயது மரும்பொருள் சுரப்பது மங்கங்
கேதி லார்விழைந் திடுவது மிந்தியப் பாக்கம்.'' [69]

அதன் தெருக்களை அந்நாளின் சமுதாய அமைப்பின்படி பார்ப்பனர் வாழும் தெரு, சத்திரியர் வாழும் தெரு, வைசியர் வாழும் தெரு, சூத்திரர் வாழும் தெரு என்றவாறு அமைத்து நாட்டின பண்பாட்டுடன் இணைத்துப் பின்னனி அமைக்கிறார். [70] இன்னவாறெல்லாம் கிருஷ்ண பிள்ளை பின்னணி அமைத்துக் காப்பியத்தை இந்நாட்டுக் குரியதாய், இம்மண்ணில் தோன்றியதாய் நடத்திச் செல்கிறார்.

பாத்திரங்களில்

பனியன் படைத்த தலைமைப் பாத்திரங்களைக் கிருஷ்ண பிள்ளை அப்படியே வைத்துக்கொள்ளுகிறார்; ஆனால், அவர்களைத் தம் காப்பியத் தேவைக்கு ஏற்றாற்போல பயன்படுத்துகிறார். தம் சொந்தக் கருத்துகளை அறிவித்தற்குக் கிருஷ்ண பிள்ளைக்கு இப்பாத்திரங்கள் பெரிதும் பயன்படுகின்றனர். பாத்திரப் பெயர்களை மொழியாக்கத்தில் உள்ளவாறுபோல அமைக்கவில்லை; தம் கற்பனையாற்றலுக்கு ஏற்ப அவர்களை உருவகம் செய்துகொள்கிறார். கிறித்தவனை வேதியன், ஆன்மவிசாரி, மறைவாணன், ஆரியன் முதலிய பல பெயர்களால் வழங்குகிறார். 'உண்மை' (Faithful) என்று மொழிபெயர்ப்பில் உள்ளதை 'நிதானி' என்று வழங்குகிறார். 'பிடிவாதன்', 'இணங்குநெஞ்சன்' என்பவர்களை 'வன்னெஞ்சன்', 'மென்னெஞ்சன்' என்று மாற்றுகிறார். துணைப் பாத்திரங்களில் சிலவற்றை புதியனவாய்ப் படைக்கிறார்; சிலவற்றை நீக்கிவிடுகிறார்.

புதிய பாத்திரங்கள்

குரு காட்டிய இடுக்க வாயிலை நோக்கி ஆன்மவிசாரி செல்கிறான், அவனை நாசதேசத்திற்குத் திரும்ப அழைத்து வர வன்னெஞ்சனும் மென்னெஞ்சனும் செல்கின்றனர். ஆன்மவிசாரியுடன் சிறிது தூரம் உரையாடிச் சென்ற மென்னெஞ்சன் அவனுடன் திருப்பயணம் செய்யத் தீர்மானிக்கிறான். ஆனால், சிறிது நேரத்தில் அவர்களை ஒரு சோதனை எதிரிடுகிறது; வழி தவறி நம்பிக்கை இழவுச் சேற்றில் விழுகின்றனர். முன்னேறிச் செல்ல முடியாமல் சேற்றில் உழன்று அமிழ்ந்து அல்லற்படுகின்றனர். மென்னெஞ்சன் பின்வாங்கி நாசபுரிப் பக்கமாகச் சேற்றிலிருந்து கரையேறுதற்கு முற்படும்போது அவனுக்குப் பிரபஞ்சன், தூர்த்தன், காமமோகிதன் ஆகிய மூவரும் கைகொடுத்துத் தூக்கிவிடுகின்றனர்:

''என்று கூறிய வமைதியின் மறைந்துட னியைந்து
நின்ற காமமோ கிதன்பிர பஞ்சனன் னெறியைத்
தொன்று தொட்டறத் துடைத்திட முயல்கின்ற தூர்த்தன்
ஒன்றி மூவருங் குதுகலித் தோடிவந் துற்றார்.''[71]

ஆனால், மூலத்தில் மென்னெஞ்சன் மட்டும் கரையேறி வீடு திரும்புகிறான் என்றுள்ளது. கிருஷ்ண பிள்ளை படைத்துள்ள இம்மூவரின் பெயர்களே இவர்கள் குணவியல்பை விளக்குகின்றன.

உபாதிமலையின் உச்சியைப் பெரிதும் முயன்று ஏறிய வேதியன் அங்குள்ள நந்தவனத்துச் சுனையில் நீர் அருந்தி அயர்ந்து உறங்கி விடுகிறான். இது அவன் திருப்பயண முன்னேற்றத்துக்குத் தடையானது. பொழுது மறையும் வேளையில் யாரோ ஒருவர் வந்து அவனைத் தட்டி எழுப்பினார் என்று பனியன் எழுதுகிறார். ஆனால் கிருஷ்ண பிள்ளை 'புண்ணியன்' என்பவர் வந்து எழுப்பி மேலும் ஆற்றுப்படுத்துவதை நயமாகப் பாடுகின்றார்:

''தூங்கிய வேதியன் றுயிலு ணர்ந்திலன்
ஓங்கிர வியுங்கதி ரொடுக்கு வானெனு
ஆங்கொடு புண்ணிய னடுத்து ணர்த்துவான்
நீங்கரு மன்பினு னிகழ்த்து வானரோ.''[72]

நீக்கிவிட்ட பாத்திரங்கள்

நம்பிக்கை இழவு உளையிலிருந்து தப்பிச் செல்லும்போது வேதியன் லௌகீகன் என்பவனைச் சந்திக்கிறான். வேதியன் திருமீட்படைவதற்கு அவன் ஒரு குறுக்கு வழியைச் சொல்லுகிறான். தருமபுரியிலுள்ள அறக்கிழவோனிடம் ஆற்றுப்படுத்துகிறான். அவன் ஊரில் இல்லையாயினும் அவன் மகன் மரியாதை இவனுக்கு ஆவன செய்வான் என்று சொல்லுகிறான்.[73] வேதியன் அறக்கிழவோனைச்

சந்திப்பதற்கு முன்னமே குரு அவனைச் சந்தித்துத் திருத்துகிறார். கிருஷ்ண பிள்ளை இந்த மரியாதைப் பாத்திரத்தை நீக்கிவிடுகிறார்.

திருப்பயணிகள் ஆனந்தசைலத்தின் பேரின்ப அனுபவத்திற்குப் பின்னர் நாத்திக சாத்திரியைச் சந்தித்து அவனுடன் உரையாடு கின்றனர்.[14] இந்த நாத்திக சாத்திரியைக் கிருஷ்ண பிள்ளை விட்டு விடுகிறார். ஆனால், வேதியன் அழிம்பனுடன் போரிடும்போது, அழிம்பன் வேதியன்பால் ஏவும் படைகளில் ஒன்று நாத்திகப் படை;[15] வேதியன் அதனை வென்றுவிடுகிறான். எனவே, முதனூ லில் உள்ளவாறு நாத்திக சாத்திரி வரும் இடத்தில் அவனைக் கவிஞர் சொல்லவில்லை போலும்!

6. முதனூற் பாடல்களும் யாத்திரிகத் தேவாரங்களும்

முதனூலில் இடையிடையே பக்தி நயமிக்கப் பாடல் 19 வரு கின்றன. இவை திருப்பயண முன்னேற்றத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை அடுத்து மகிழ்ச்சிப் பெருக்காலோ அல்லது துன்பத் தாலோ உந்தப்பெற்றுக் கடவுளை நினைத்துப் பாடப்படுவனவாய் அமைந்துள்ளன. மொழியாக்கத்தில் இவை வசன கவிதையில் எழுதப்பட்டுள்ளன. திருப்பயணி சிலுவைக் குன்றில் சிலுவைத் தரிசனம் பெற்றபோது அவனுடைய முதுகில் இருந்த பாவச்சுமை தெறித்து விழுகிறது. அப்போது அவன் மகிழ்ச்சிப் பெருக்கால்:

'பாவபாரஞ் சுமந்தேன்
இதுவரையும் வந்தேன்,
இங்கே வருமட்டுமே
பாரம் நீங்கவில்லையே,
இங்கே வந்த நிமிஷம்
என் பாவபாரம் நாசம்,
இது என்ன இடமோ!
பாரம் நீங்கிப் போயிற்றே.
இங்கென் கட்டு விடவும்
என் வாழ்வு துவக்கிற்றே
இது என்ன இடமோ!
சிலுவையே நீ வாழ்க!
சிலுவையிலே மாண்ட
யேசுவே வாழ்க வாழ்க.''[76]

என்று பாடிக்கொண்டே வழி நடக்கிறான்.

முக்திவழி அம்மானை நூலாசிரியர் இப்பாடலை பின்வருமாறு பாடியுள்ளமை குறிப்பிடத் தக்கது:

''நாசதேச மீதிலே வசித்துவந்த நாண்முதல்
மோசமான பாரமென் முதுகின்மீ திருந்தது
ஏசுநாத நாமகீத மோதியோடி யித்தலம்
பாசமாக வந்தபோது பாரமோடி வீழ்ந்ததே.

எத்தலத்திலு வலைந்தி டைந்து பின்னிடாமலே
சித்தம்வைத் திரட்சை செய்த சீவநாயகனருள்
முத்திதேடி முதுகிலூரு மூட்டைநீங்க வேண்டியே
இத்தலத்தில் வந்தபோதி லென்பவந் தொலைந்ததே.

வேறு

பத்திநெறி கொண்டுபல தலங்கள் தேடிப்
பரவையுடன் நதிக ளெல்லாந் தீர்த்தமாடிச்
சித்திசெய்தும் நீங்காத பாவத்தின் பாரம்
சிலுவைதனைக் கண்டவுடன் நீங்கிப் போச்சு!
நித்தியமும் அழியாத சீவ வாழ்வு
நிலைப்பதற்கு மித்தலமே நுவக்க மாயிற்
றெத்திசையும் புகழ்சிலுவை வாழ்க! வாழ்க!
ஈசனதில் மாண்டுயிர்த்தோன் வாழ்க வென்றான்.

வேறு

நாடினான் பவச்சுமை நீங்கு நன்றியைப்
பாடினான் ஆடினான் பரவசத் தினால்
ஓடினான் ஆணியூடுருவு பொற்பதந்
தேடினான் நல்வழி தெரிந்த தேசிகன்.''[77]

துன்ப மலை வழியாகச்செந்நெறி செல்லுகிறது. மலையின்மீது ஏற ஏற அது இன்னும் உயருவதுபோலத் தோன்றியது. அப்பொழுது பின்வரும் பாடலைப் பாடியவாறு ஏறுகிறான்:

''இம்மலை மாஉயரம்; ஏறுவேன், ஏறுவேன்;
இச்சிகரம் கஷ்டம்; ஆனால் ஏறுவேன், ஏறுவேன்;
இப்பரம்பே ஜீவவழி: ஏறுவேன், ஏறுவேன்;
நெஞ்சே நீ அஞ்சாதே; ஏறுவேன், ஏறுவேன்;
மனமே மயங்காதே; ஏறுவேன், ஏறுவேன்!
....[78]

இரட்சணிய யாத்திரிகத்திலே நாம் மேலே கண்டவாறு 11 பாடல்கள் வருகின்றன; இவற்றைக் கிருஷ்ண பிள்ளை தேவாரங்கள் என்று வழங்குகிறார். இத் தேவாரங்களைப் புலவர் முதனூலாசிரியர் வைக்கும் இடச்சூழலில் வைக்கவில்லை; காப்பியப் போக்கிற்கேற்பத் தாம் பொருத்தமாகக் கருதும் இடங்களிலே அவற்றை அமைக்கிறார். சிலுவைக் குன்றில், சிலுவைக் காட்சிக்குப் பின்னர் முதனூலில் கிறித்தவன் பாடிய பாட்டை மேலே குறிப்பிட்டோம்.

இரட்சணிய யாத்திரிகத்தில் சிலுவைக் காட்சியைக் கண்ட கிறித்தவன் உடனே சிலுவைக் காட்சித் தேவாரம் பாடுவதாக அமையவில்லை, அவன் சிவபுட்கரிணியில் இளைப்பாறுங்கால் இறைவர் திருவருளை நினைந்து, 'விசுவாசக் காட்சி' என்னும் தேவாரத்தில் சிலுவைக் காட்சியைப் பாடுகிருன். இத்தேவாரத்தில் பத்துக் கவிகள் உள்ளன. எடுத்துக்காட்டாகச் சில கவிகளைக் காணலாம்:

விசுவாசக் காட்சி (பண் : காந்தாரம்) தேவாரம் :

1. கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை
வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ சனநிதியை
உள்ளமுவப் புறுதேனை யுயிர்க்குயிரை யுலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

... ...

10. காயொளியிற் கதிர்பரப்புங் களங்கறுநீ தியின்சுடரைப்
பாயொளிகொள் பசுபொன்னைப் பணிக்கருஞ்சிந்
[தாமணியைத்
தூயொளிகொ ணித்திலத்தைத் தூண்டாத சுடர்விளக்கைச்
சேயொளிகொள் செம்மணியைச் சிலுவைமிசைக்
[கண்டேனே.[79]

இரட்சணிய யாத்திரிகத்திலுள்ள தேவாரப் பாடல்கள் மூதனூற் பாடல்களைப் போலன்றிப் பொருளாழத்திலும் அனுபவத்திலும் பக்திப்பாங்கிலும் மிளிர்ந்து விளங்குகின்றன. தமிழ் முதற் காப்பியமாம் சிலப்பதிகாரத்தில் இடையிடையே இசைப்பாடல்கள் வருவதுபோல இரட்சணிய யாத்திரிகத்தில் பண்ணுடன் பாடத்தக்கத் தேவாரங்கள் வந்து காப்பியத்தைச் சிறப்பிக்கின்றன.

7. உரையாடல்கள்

முதனூலோ பெரிதும் உரையாடல்களினுல் வளர்ந்து செல்கிறது. திருப்பயண முன்னேற்றத்தில் யாத்திரிகனைச் சந்திக்கும் பாத்திரங்கள் செய்யும் உறையாடல்களாக இவை அமைகின்றன. இவை அளவில் சிறியனவாகவும் நீண்டும் அமைந்துள்ளன. ஆனுல் கிருஷ்ண பிள்ளை காப்பியப் பாங்கிற்கு ஏற்ப இவற்றைத் திருத்தி அமைத்துக் காப்பியத்தை நடத்துகிருர். காப்பியக்கதை ஓட்டத்திற்கும் கருத்து விளக்கத்திற்கும் உரையாடல்கள் பெரிதும் துணை செய்கின்றன.

8. குறையும் நிறையும்

பனியனுடைய திருப்பயணியின் முன்னேற்றத்தில் பனியன் திருச்சபையையும் அதன் கூட்டுவாழ்வையும், திருக்கட்டளைகளையும்

(சாக்கிரமெந்துகளையும்) புறக்கணித்துவிட்டார் என்பது திறனாய்வாளர் காணமுற்படும் குறையாகும்.[80] கிருஷ்ண பிள்ளை இவற்றை உணர்ந்து நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருச்சபையை முன்னிலைப்படுத்திக் காப்பியம் பாடுகின்றார்

பனியன் தமது நூலினை,

> ''இவ்வகண்ட லோகவனத்திலே நான் சஞ்சாரம் செய்த காலத்தில், ஒரு தரம் ஒரு மலையடிவாரத்தில் தங்கினேன். அங்கே ஒரு கெபி இருந்தது; அதனுள் போய்ப்படுத்து நித்திரை செய்தேன்; நான் அயர்ந்து நித்திரை செய்கையில் மா மகிமையான ஒரு சொப்பனங் கண்டேன். அச் சொப்பனத்தைச் சொல்லுகிறேன் கேள்,''[81]

என்னும் வாக்கியத்துடன் தொடங்குகிறார்.

கவிஞர் தம்மைத் திருச்சபையின் ஓர் அங்கமாகக்கொண்டு திருச்சபையினையும் அதன் திருத்தொண்டரையும் முன்னிலைப் படுத்திக் காப்பியம் பாடுகின்றார்:

> ''பத்த பாலனஞ் செய்திருள் பாறிட
> வித்த கக்சுடர் வீசி விளங்கிடும்
> மெய்த்தி ருச்சபை மெய்த்திருத் தொண்டரைச்
> சித்த மீது திகழ்த்தி விளம்புவாம.''[82]

கவிஞர் வரலாற்றுப் படலம் என்று ஒரு புதிய படலத்தை மேலும் காப்பியத்தின் தொடக்கத்திலேயே அமைத்து, முதல் பாடலில் கடவுள் துதி பாடிய பின்னர் அடுத்த மூன்று பாடல்களில் திருச் சபை சிறப்பினைப் பாடுகின்றார். திருச்சபை உலகம் உய்வதற்கு ஞாயிற்றின் பயன்போன்று இன்றியமையாதது என்றும், தண் மதியின் தண்மை போன்றது என்றும் காட்டி திருச்சபையின் வாழ்வைச் சொல்லோவியப் படுத்துகிறார்.

திருக்கட்டளைகள்

கிருஷ்ணபிள்ளை திருச்சபையின் திருக்கட்டளைகளை வரையறுத்துக் கூறுகின்றார்:

> ''பரசமய விருளகலச் சுவிசேஷ விரிகிரணம் பரப்பி நின்ற
> இரவியெனுங் திருச்சபையி னிலையாக வழங்கிவரு மிரண்டு [ஞான
> வரமிகுசாக் கிரமெந்தின் முன்னதுஞா னஸ்நானம் மற்றொன் [றிந்தப்
> பரமவிருந் தாநமது பரமகுரு வேயிவையேற் படுத் [தினரே.''[83]

திருச்சபையின் திருக்கட்டளைகள் இரண்டு என்றும், ஒன்று : திருமுழுக்கு; அடுத்தது : பரமவிருந்து (திருவிருந்து) என்றும் தெளிவாக வரையறுத்துக் கூறுகின்றார். முன்னது ஒருவரைத் திருச்சபைக்குள் சேர்க்கும் என்றும், பின்னது அவ்வாறு சேர்க்கப் பட்ட ஒருவர் பக்தியில் ஊன்றி நிலைத்து வாழ்வதற்கு வழிகோலும் என்றும் எழுதுகிறார்.[84] திருச்சபையையும் திருக்கட்டளைகளையும் குறித்து எட்டாம் இயலில் இன்னும் விரிவாக ஆராயப்படுகின்றது.

நிறைவுரை

பனியனது நூலை ஒட்டிக் கிருஷ்ண பிள்ளை காப்பியம் படைத் துள்ளார், எனினும், இது வெற்று வடிவ மொழியாக்கம் அன்று; வெறுந் தழுவலும் அன்று; கற்பனைத் திறனும் படைப்பாற்றலும் நிறைந்த கவிதைப் பாங்குடைய உள்ளத்தில் தோய்ந்து மறு படைப்புப் பெற்றுப் பெருங்காப்பியமாய் விளங்குகிறது. காப்பியம் முழுதும் படிக்கும்போது ஒருவருக்குத் தோன்றுகிற எண்ணம்: இது பழைய திட்டத்தின்மீது பழைய பொருள்களைக்கொண்டு கட்டப்பட்ட ஒரு கட்டடமே. ஆனால், அதே நேரத்தில், முன்னதை விட மிகமிக வியக்கத் தக்க தனித்தன்மையுடனும் சிறப்புடனும் விளங்குகிற ஒரு புத்தம் புதிய படைப்பாகும்.

இரட்சணிய யாத்திரிகத்தின் முதற்பதிப்புக்கு 1895இல் ஓர் ஆங்கிலத் திங்களிதழில் வெளிவந்த மதிப்புரையின் பின்வரும் பகுதி குறிக்கத்தக்கது:

> "ஓர் ஆங்கிலக் கதையைக் கீழைநாகரிகத்திற்குரிய சிறப்புடுப் பில் (Oriental Garb) செம்மையாக அமைத்திருப்பதனாலேயே கிருஷ்ண பிள்ளை மிக்க பாராட்டுக்குரியவராகிறார். சிறந்த ஆங்கில இலக்கியங்கள் பயனுள்ள வகையில் இந்திய மொழி களில் எவ்வாறு தழுவப்படலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாய் இரட்சணிய யாத்திரிகம் திகழ்கிறது."[85]

எனவே, இரட்சணிய யாத்திரிகம் கதையில் தழுவாலாயினும் மொழியாலும் நடையாலும் பண்பாலும் உணர்ச்சியாலும் அமைப்பாலும் தமிழ் மண்ணில் தோன்றிய தனிப்பெருந் தமிழ்க் காப்பியமாகவே காட்சியளிக்கிறது. "முத்தமிழ்த் துறையின் முறை போகிய கவிஞர்" ஏற்றுப் போற்றத்தக்க தண்டமிழ்க் காப்பியமாய் விளங்குகிறது.

1. க. கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம், பக். 147.
2. தொல்காப்பியம்: மரபியல், 649, 650.
3. நன்னூல்: பாயிரவியல், 5.
4. மேலது., 7.

5. இந்நூல் தலைப்பு, 'மோட்சப் பிரயாணம்' எனவும், 'பரதேசியின் மோட்சப் பிரயாணம்' எனவும் மொழியாக்கம் பெற்றுள்ளது. இவ்வாய்வில் 'திருப் பயணியின் முன்னேற்றம்' என மொழியாக்கம் பெறுகிறது.
6. இரட்சணிய யாத்திரிகம், 3ஆம் பதிப்பு, பக். iii.
7. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்.
8. S. Farrar, English Literature, Reprint, pp. 160.
9. Ibid. pp. 413f. Encyclopaedia Britanica, Vol. IV, p. 413.
10. S Farrar. English Literature, Reprint, pp. 413f.
11. காண்க, எ. ஆ. கிருஷ்ணபிள்ளையின் நூல்கள்-ஓர் ஆராய்ச்சி, பக். 36-40,
12. Roger Sharroch, John Bunyan, Vol. II, P, 20,
13. D. O. Griffeth, John Bunyan, p. 70.
14. Encyclopaedia of Religian And Ethics, Vol. II, p. 899.
15. See, John Canning (Edited), 100 Great Books, Reprint, pp, 133ff.
16. Ibid., p. 133.
17. Quoted, Ibid. p. 133.
18. Ibid.. p. 133.
19. R. Sharrock, op. Cit., 73f.
20. Ibid., p 140.
21. John Murdoch, Classified Catalogue of Tamil printed Books, Reprint, p. II.
22. சுவிகர நாடார், முத்திவழி அம்மானை, பக். 4,
23. முத்தி வழி அம்மானை, பக். 17.
24. முத்தி வழி அம்மானை, பக். 154.
25. Y. Jesudoss, The Pilgrim's Progress and Iratcaniya Yaathrikam, Proceedings of the First International Conference seminar of Tamil Studies, Vol. II, p. 234.
26. இரட்சணிய யாத்திரிகம், 3ஆம் பதிப்பு. பக். III.
27. காண்க, எ. ஆ. கிருஷ்ணபிள்ளையின் நூல்கள் - ஓர் ஆராய்ச்சி, பக். 40.
28. Dennis Hudson, (Ed.). The Conversion Account of H.A. Krishna Pillai, Indian Church History Review, Vol. II, No. I, p. 29f.
29. காண்க, எ. ஆ. கிருஷ்ணபிள்ளையின் நூல்கள்-ஓர் ஆராய்ச்சி, பக். 66-72.
30. சாமுவேல் பவுல், மோட்சப் பிரயாணம் (மொழியாக்கம்), பக்-VI.
31. John Bunyan, The Pilgrim's Progress, 2nd Impression, p. 5.
32. S. Farrar, op. Cit., p. 160.
33. Quoted in Notes on John Bunyan's Pilgrim's Progress, p. 38.
34. திருக்குறள், 396.
35. இரட்சணிய யாத்திரிகம், 3ஆம் பதிப்பு, III.
36. Roger Sharrock, op. Cit., p. 52.
37. Ibid. p. 77.
38. திருப்போர், சென்னை, கிறித்தவ இலக்கியச் சங்கம், 1962.
39. Roger Sharrock, op. Cit., p. 54.
40. Ibid. p. 54.

41. Ibid. P. 67.
42. Amy Carmichael, Over weights of Joy, Reprint. p. 100.
43. எ. ஆ. கிருஷ்ணபிள்ளையின் நூல்கள் - ஓர் ஆராய்ச்சி பக். 40-41.
44. இரட்சணிய யாத்திரிகம், ஆதி பருவம், மெய்யுணர்ச்சிப்படலம், 44.
45. இ. யா : இரட்சணிய பருவம், சுவர்க்காரோகணப் படலம், தேவாரம் ; அந்திப் பலி, 10.
46. John Macqueen. Allegcry, p. I.
47. Encyclopacdia Americana, Vol. I, p. 588.
48. தண்டியலங்காரம், நூற்பா 37, பக், 62.
49. ஷை,. பக், 68,
50. மாறனலங்காரம், பக், 184.
51. Britanica Encyclopaedia Vol. IV, p 641.
52. Encyclopacdia of Religian and Ethigs, Vol. II, p. 899.
53. See, A B. Keith, The Sanskrit Drama, Reprint, p. 48.
54. ஆதிபருவம், வரலாற்றுப்படலம் 1-20.
55. ,, மெய்யுணர்ச்சிப் படலம், 1.
56. இ. யா., ஆதிபருவம், 4. பரமராஜ்யப்படலம், 5, அரசியல் படலம் 6. சிருஷ்டிப்படலம், 7, இராஜ துரோகப் படலம். 8. பூர்வபாதைப்படலம்
57. இ. யா., ஆதிபருவம், சுவிசேஷ மார்க்கப்படலம் 1-167.
58. சுவிசேட மார்க்கப் படலம், 167.
59. இ. யா., குமாரபருவம், இரட்சணிய சரிதப்படலம்
60. சம்பாஷணைப் படலம் 104-4, 108-11.
61. V. V. S. Aiyar. Kamba Ramayana A Study, 2nd ed , p. 37.
62. See, e g Tne Pilgrim's 2nd Impression, London. Lutterworth Press, 1966.
63. வி. ஞானசிகாமணி இரட்சணிய யாத்திரிகத்தில் இலக்கிய நயங்கள் வானொலிப் பேச்சு (கையெழுத்துப்படி), பக். 34.
64. இ. யா., ஆதிபருவம், மெய்யுணர்ச்சிப் படலம், 2,
65. ஷை, 5.
66. ஷை, பரமராஜ்யப் படலம் 4.
67. ஷை, 11.
68. மோட்சப் பிரயாணம், பக், 123.
69. இ.யா, நிதான பருவம், மாயாபுரிப்படலம் 32.
70. ஷை 35-38.
71. ஷை. ஆதிபருவம், அவநம்பிக்கைப் படலம், 19.
72. ஷை. உபாதிமலைப் படலம், 36-41.
73. ஷை. வெளகிப் படலம், 12-13.
74. மோட்சப் பிரயாணம், பக். 191-93.
75. இ. யா., நிதானபருவம், அழிம்பன் தோல்விப் படலம், 96.
76. மோட்சப் பிரயாணம், பக். 47.
77. முக்திவழி அம்மானை, பக். 74.
78. மோட்சப் பிரயாணம் பக். 52.
79. இ. யா., ஆதி பருவம், ஜீவபுஷ்கரிணிப் படலம்.
80. Rogers Sharrock, op. Cit , p. 139.
81. மோட்ச பிரயாணம், பக். 2.
82. பாயிரம் 8.
83. இ. யா., குமார பருவம், இரட்சணிய சரிதப்படலம், 51.
84. இ. யா., குமாரபருவம், இரட்சணிய சரிதப் படலம், 52,
85. See the Educational Review, May 1895.

இயல் மூன்று

காப்பியச் சிறப்புகள்

முன் இயலில் இரட்சணிய யாத்திரிகத்தை அதன் முதனூலுடன் ஒப்பிட்டு, வழி நூல் பல்லாற்றானும் தன் முதனூலினும் சிறந்து விளங்குதலைக் கண்டோம். இவ்வியலில் இரட்சணிய யாத்திரிகத்தின் காப்பியச் சிறப்புகளை நோக்காலம்.

'இரட்சணிய யாத்திரிகம்' என்பதன் பொருள், ஆன்ம ஈடேற்றத்தை அடைய விரும்புவோருடைய உள்ளத்தில், அவர்கள் அப்பேற்றினை அடையுமட்டில், வைதிக நெறியில் நிகழும் சிந்தை யாத்திரையின் தொடக்க முதல் முடிவு வரையிலுள்ள நிகழ்ச்சிகளை விளக்கும் நூல் என்பதாம். இதனை ஆன்ம மீட்பின் 'திருப்பயணக் காப்பியம்' எனலாம். இரட்சணியத்தை நாடிச் செல்லும் யாத்திரிகனின் பயணம் பற்றியது ஆதலால், இரட்சணிய யாத்திரிகம் என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. தகடூர் நோக்கி அதியமானெடுமானஞ்சி செய்த போர்ச்செலவு, 'தகடூர் யாத்திரை' எனப்பட்டது போல்வது.

1. கல்விக் காப்பியம்

காப்பியத்தை வளர்ச்சிக் காப்பியம், கலைக் காப்பியம் என இரு வகையாகப் பகுப்பர்.[1] இவற்றையே இயற்கைக் காப்பியம் என்றும் செயற்கைக் காப்பியம் என்றும் பகுப்பதுமுண்டு. இராமாயணம், மகாபாரதம் போன்றவை இயற்கைக் காப்பியங்கள். பேரா. தெ. பொ. மீ., 'மக்கட்சமுதாயம் முன்னேறி வரும்போது பின்னுளில் இத்தகைய இயற்கைக் காப்பியங்கட்குத் தேவையில்லாது போயிற்று. மக்களின் அடிமனத்திலிருந்து எழுந்த கட்டாயம் இவ்வாறு நீங்கவே, பாவலரும் கற்றோரும் அழகுணர்ச்சியில் ஈடுபட்டு, மிக முயன்று காப்பியம் பாடவும் சுவைக்கவும் தொடங்கினர். இம்முயற்சி காரணமாகப் பின்னைய காப்பியங்களைச் செயற்கைக் காப்பியங்கள் என்பதும் உண்டு. இவ்வாறு எழுவனவே, கல்விக் காப்பியங்களாம்'', என்பர்.[2] செயற்கைக் காப்பியத்தைத் தாமே படைத்து நாட்டு மக்களுக்குத் தருவது புலவரின் முயற்சியாகும். இரட்சணிய யாத்திரிகம். 'கலைக்காப்பியம்' அல்லது 'செயற்கைக் காப்பியம்' என வழங்கப்பட்டுவரும் கல்விக் காப்பிய வகையினைச் சேர்ந்ததாகும்.

2. பெருங்காப்பியம்

காப்பியத்தைப் 'பெருங்காப்பியம்' என்றும், 'சிறு காப்பியம்' என்றும் இருவகையாயும் வகுத்துள்ளனர்.[3] காப்பியம் 'பொருள்

தொடர்நிலைச் செய்யுள்' என்றும் வழங்கப்படும். பெருங்காப்பியத்திற்குத் தண்டியலங்காரம் பின்வருமாறு இலக்கணம் வகுக்கிறது ;

''பெருங்காப் பிய நிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர இயன்று,
நாற்பொருள் பயக்கும் நடைநெறித்து ஆகி,
தன் நிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்!
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து,
நன்மணம் புணர்தல், பொன்முடி கவித்தல்,
பூம்பொழில் நுகர்தல், புனல்விளை யாடல்,
தேம்பிழி மதுக்களி, சிறுவரைப் பெறுதல்,
புலவியிற் புலத்தல், கலவியிற் களித்தல்என்
றின்னன புனைந்த, நன்னடைத் தாகி,
மந்திரம், தூது, செலவு, இகல், வென்றி,
சந்தியின் தொடர்ந்து, 'சருக்கம், இலம்பகம்
பரிச்சேதம்' என்னும் பாங்மையின் விளங்கி,
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றியது என்ப.''[4]

இந்நூற்பாக் கூறும் காப்பிய இலக்கணத்தைக் காப்பிய அமைப்பு, பொருள், வருணனை, நிகழ்ச்சி என்னும் நான்கு கூறுகளில் அடக்கலாம்.[5]

காப்பிய அமைப்பு

வாழ்த்து வணக்கம், வருபொருள் உரைத்தல் என்பனவற்றுள் ஒன்றோ பலவோ காப்பியத் தொடக்கத்தில் அமைதல் வேண்டும். இரட்சணிய யாத்திரிகத்தில் இவை 'சிறப்புப் பாயிரம்' என்னும் பகுதியில் 'கடவுள் வாழ்த்து, நூலியற்றக் காரணம், நூலின் வழி, அதன் எல்லை, நுதலிய பொருள், நூற் பயன், யாப்பு, பதிகம்' என்னும் தலைப்புகளில் அமைந்துள்ளன.

கடவுள் வாழ்த்தில் 8 பாடல்கள் அமைந்துள்ளன. முதல் பாட்டில் பொதுவாகக் கடவுள் வணக்கமும், இரண்டாம் பாடலில் திரியேகக் கடவுளின் வணக்கமும், மூன்றும் பாடலில் கடவுள் வணக்கம் சிறப்பாக வேதத்துடன் இணைத்தும், நான்காம் பாடலில் ஆதியிலே திருவாக்காய் இருந்த தமது காதல் திருமைந்தரைக் கருணையால் உலகிற்கு அனுப்பி மீட்பினைப் புதுப்பித்தருளிய விண்ணகத் தந்தையின் திருவடிகளைச் சிறப்பாயும் வணங்குகின்றார். ஐந்தாம், ஆறும் பாடல்களில் திருமைந்தர் அஞ்சலி பாடுகின்றார். ஐந்தாம் பாட்டில் கன்னியிடம் பிறந்ததும்

சிலுவைத் தியாகமும் போற்றப்படுகின்றன. ஆறும் பாட்டில் அவருடைய பிறப்பால் மக்கள் அடையும் பயன் பாடப்படுகிறது. கன்னியிடம் பிறந்தது-கடவுள் மனிதனான வரலாற்றினையும் சிலுவைத் தியாகம் மானிட உயிர்கள் வான்கதி அடைய ஏது வாயினமையையும் தெரிவிப்பதால் அப்பாடலை இங்குக் குறிப் பிடல் தக்கதாம்:

''கன்னி பாலனாய்க் காசினி தனிலவ தரித்து
மன்னு சீவகோ டிகளெலாம் வான்கதி மருவத்
தன்னு யிர்ப்பரித் தியாகமுஞ் சிலுவையிற் றந்த
என்னு பாசனா மூர்த்தியை அஞ்சலித் திடுவாம்''[6]

ஏழாம் பாடலில் திரியேகத்தில் ஒருவரான பரிசுத்த ஆவி துதி பாடுகின்றார். எட்டாம் பாடலில் திருச்சபையின் திருத்தொண்டர் களை முன்னிலைப்படுத்துகிறார்.

ஒன்பதாம் பத்தாம் பாடல்களில் நூலியற்றக் காரணம் கூறு கின்றார். ஒன்பதாம் பாடலில், 'அழகுமிகு சத்திய வேதத்தின் முடிபான பொருளாகிய ஆன்மிக இரட்சணியத்தின் யாத்திரை என்னும் செம்மையான பொருளைப் பாடல்களினாலாகிய செந் தமிழ்க் காப்பியமாகத் திருவருள் துணையுடன் செய்யத் துணிந்த தாகக்' கூறுகின்றார். பத்தாம் பாடலில் தன்னைத் தடுத்தாட் கொண்ட கிறிஸ்து இயேசு பெருமானின்,

''பொன்னனைய திருவடிக்குச் செந்தமிழ்மா
லிகையொன்று புனைவா னெண்ணித்
துன்னுநவ ரட்சணிய யாத்திரிக
மலரெடுத்துத் தொடுக்க லுற்றேன்,''

என்று காரணங்காட்டுகிறார். பதினொன்று முதல் பதின்மூன்று பாடல்களில் வழியும் எல்லையும், பதினான்காம் பாட்டில் நூலில் நுதலிய பொருளும், பதினைந்தில் நூற்பயனும், பதினாறில் யாப்பும் கூறுகின்றார். இந்நூற் பயன்:

''தீவினைச் சலதிவீழ்ந் தழியும் சீவரை
வீவிலாக் கதிக்கரை வீடு சேர்க்குமோர்
தாவரு புண்ணியத் தனிம ரக்கலம்
சீவரட் சணியயாத் திரிகந் தேர்மினே.''

பதிகம் என்னும் தலைப்பில் மூன்று பாடல்களை எண்சீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைத்து, காப்பியத்தின் பொருளடக்கமாயுள்ள 47 படலங்களின் பெயர்களையும் வைத்துப் பாடுகின்றார்.

பதிகத்தில் அமைந்துள்ள மூன்று பாடல்களில் இறுதியான பாடலாக அமைந்துள்ள மேல்வரும் பாடலில் 'நிதானி கதி கூடுபடலம்' முதல் காப்பியத்தின் கடைசி படலமான 'சுவர்க்கா

ரோகணப் படலம்' ஈறுகப் பதினொன்கு படலங்களை இணைத்துப் பாடியுள்ளதைக் காண்கின்றோம்:

"நற்றவனி தாணிகதி நன்னம் பிக்கை
நல்வழிவே தியன்மீட்சி பொற் சுரங்கம்
செற்றமுறு விடாதகண்டச் சிறையா னந்தச்
சிகரிவிசு வாசவியல் திமிர வண்ணன்
குற்றமிகு சோகநில மறிவீ னற்குக்
கூறுமுறை நிலைகேடன் தரும சேத்ரம்
முற்றுமிக பரசந்தி சுவர்க்கப் பேறு
முறைவைப்பா நிகழ்படல நாற்பத் தேழே."

காப்பியத்தின் வளர்ச்சியும், கட்டுக்கோப்பு அமைப்பும், பொருளமைதியும் இதனால் புலப்படுவதற்கு ஏதுவாகின்றது.

பதிகத்தைத் தவிர்த்த இப்பகுதிக்குச் 'சிறப்புப் பாயிரம்' என்று தலைப்பிடப்பட்டிருப்பது பொருத்தமுடையதாய் இல்லை. பாயிரம், 'பொது', 'சிறப்பு' என இருவகைப்படும்[7] எனவும், 'சிறப்புப் பாயிரம் செய்யத்தக்கோர் நூலாசிரியரையன்றி ஏனையோர்'[8] எனவும், தற்புகழ்ச்சிக்குரிய இடம் எது[9] எனவும் நன்னூல் வகுக்கிறது. யாத்திரிகத்தின் பாயிரத்தைச் செய்தவர் கிருஷ்ணபிள்ளையாதலால், இது சிறப்புப் பாயிரம் என்பதற்குப் பதிலாகக் கம்பராமாயணத்திற் போலத் 'தற்சிறப்புப் பாயிரம்' என்றிருத்தல் பொருத்தமாம். ஆனால், யாத்திரிகத்தின் மூன்று பதிப்புகளிலுமே 'சிறப்புப் பாயிரம்' என்றே உள்ளது. யாத்திரிகத்திற்கு மறைத்திரு டி. உவாக்கர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள முன்னுரையைச் 'சிறப்புப் பாயிரம்' எனலாம்.

நூலமைப்பினைப்பற்றி இன்னும் எண்ணும்போது, 'சருக்கம், இலம்பகம், பரிச்சேதம்' என்னும் பிரிவுகள் இருக்க வேண்டும் என்கிறார் தண்டியாசிரியர். இவர் முதனூலிலிருந்து அவ்வாறே மொழி பெயர்த்துத் தருகிறார். தமிழ்க் காப்பியங்களில் சருக்கம், இலம்பகம் என்னும் பிரிவுகள் உள்ளன என்றாலும், பருவம்-சருக்கம் எனவும் காண்டம்-படலம் எனவும் வழங்கும் முறையே பெருவழக்கு. இவ்வழக்கினை மாற்றிப் பருவம் - படலம் எனக் கிருஷ்ணபிள்ளை கையாளுகிறார். வான்மீகியார் காண்டம்-சருக்கம் என வழங்கியுள்ளதைக் கம்பர் 'காண்டம்-படலம்' என மாற்றியமைத்துக்கொண்டார். காப்பியம் இயற்றும் ஆசிரியர், தாம் விரும்புமாறு பாகுபாடு செய்து கொள்ளலாம். காப்பிய அமைப்பிற்கும் இத்தகைய குறியீடுகளுக்கும் தொடர்புபடுத்தலாகாது. காவியத்தை ஓர் இலக்கண வரையறைக்குள் செறித்தலாகாது என்பர் ஆபர்கிராம்பி.[10]

காப்பிய அமைப்பிற் 'சந்தி' என்னும் உறுப்பையும் தண்டியாசிரியர் கூறுகிறார்: கதையின் போக்கினை அடியொற்றி இதனை

ஐவகையானது என்பர். அவை: முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்பன. கவிதையின் தோற்றுவாய், வளர்ச்சி, உச்சநிலை, மாற்றம், முடிவு என்பனவற்றையே 'சந்தி' என்பத னுள் அடக்குவர்.[11] இவை யாத்திரிகத்தின் ஐந்து பருவருங் களிலும் முறையே அமைந்திருத்தலைக் காணலாம்.[12]

காப்பியப் பொருள்

பெருங்காப்பியத்தில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் அமைதல் வேண்டும்; இவற்றுள் ஒன்றோ பலவோ குறையின், அது சிறுகாப்பியமாகும் என்பர் தண்டியாசிரியர். இரட்சணிய யாத்திரிகம் நாற்பொருள் பயக்கும் நடைநெறி யினது. வீடுபேற்றினை இலக்காக உடைய இக்காப்பியத்தில் அறமும் பொருளும் இயல்பாய் அமைந்துள்ளன. ஆனால், இன்பம் என்ற நிலையில் இந்நூல் 'சிற்றின்பம்' கூறாமல் 'பேரின்பம்' கூறு கிறது. புலவர் இதனைப் பாயிரத்தில் 'சிற்றின் பத்திறம் திருத்திய காதையுமன்று'[13] என்று புலப்படுத்துகிறார். பெருங் காப்பியத்தை ஏனைய நூல்களினின்றும் பிரித்து அறிவதற்கு நாற்பொருள் அமைப்பே சிறப்பிலக்கணமாகும்; எனினும், எல்லாப் பெருங் காப்பியங்களிலும் இந்நான்கு பொருள்களும் அமைந்திருப்பினும், கவியினுடைய பாவிகத்துக்கு ஏற்றவண்ணம் இவற்றுள் ஒன்றும் பலவும் சிறப்பாக அமைந்திருக்கும் என்னும் திரு.கி.வா. ஜகந்நாதன் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது.[14]

காப்பியத் தலைவன் தன்னிகரில்லாத் தலைவனாய் இருத்தல் வேண்டும். இரட்சணிய யாத்திரிகம் கடவுளைத் தலைவராய்க் கொண்ட காப்பியமன்று; ஆனால், இறைவர் இவ்வுலகில் தம் திருவருளுக்கு ஆட்பட்ட ஓர் எளிய மனித வாழ்வில் வாழ்ந்து, தம் அருள் துணை கொண்ட ஆன்மிக வல்லமையால் அதனை இவ்வாழ்வில் வெற்றி பெறச் செய்ததைப் பாடும் காப்பியம். அவ்வாழ்வுக்குரியவனே காப்பியத் தலைவன். இவனே யாத்திரி கன் என்றழைக்கப்படும் கிறித்தவன். இக்காப்பியத் தலைவன் இவ்வுலகில் வாழ்ந்த ஆன்மிக வாழ்வில் தன்னை எதிரிட்ட சோதனைகளை எல்லாம் வென்று, வீடுபேறு அடைந்து, தன்னிக ரில்லாத் தலைவனாகவே காப்பியத்தில் காட்சியளிக்கிறான். சாமானிய மனிதனைக் காப்பியத் தலைவனாகக்கொண்டு விளங்கு கிறது இரட்சணிய யாத்திரிகம்.

காப்பிய வருணனை

மலை, கடல், நாடு, நகர், அறுவகைப் பெரும்பொழுது சிறு பொழுதுகள், ஞாயிற்றின் தோற்றம், திங்களின் தோற்றம் இவற் றின் வருணனைகளும் பெருங்காப்பியத்தில் அமைதல் வேண்டும் என்பர். 'தமிழ்விடுதூது' இவ்வருணனைகள் பதினெட்டு எனக்

கூறுகிறது.[15] ஆனால் வருணனைகளை இவ்வாறு எண்ணிக்கையில் அடக்குதல் இயலாது. இவ்வருணனைகளுக்குட்பட்டுக் காப்பியப் புலவர் காப்பியம் செய்தல் யாங்ஙனம்? காப்பியத் தேவைக்கும் போக்கிற்கும் ஏற்ப யாத்திரிகத்தில் பல்வகை வருணனைகளும் பாங்குற அமைந்துள்ளன. இவற்றைச் சில எடுத்துக் காட்டு களினால் காணலாம்.

ஆதி பருவத்தில் பரமராச்சியப் படலத்தில் நாட்டு வருணனை, நகர வருணனைகளைச் சிறப்பாகக் காண்கிறோம். இப்படலத்தில் உள்ள 66 பாடல்களும் திருநாட்டுச் சிறப்பையும், திருநகரச் சிறப்பையும் இங்கு பாயும் ஆற்றுச் சிறப்பையும் பாடுகின்றன.

திருநாட்டுச் சிறப்பு, கடவுளின் புனிதமான, நீதியான ஆட்சி யின் மாட்சியில் தழைக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'' உன்னத பரலோ கத்தி
லொருதனிச் செங்கோ லோச்சி
மன்னர சாட்சி செய்யு
மகத்துவ கடவுள் வேந்தன்
பன்னரும் புனித நீதி
பரமகா ருணியம் பூத்த
சன்னிதி மகிமைச் செல்வந்
தழைப்பது திருநா டென்றும்''[16]

நாடு வளம் பெற ஆற்றுவளம் தேவை. விண்ணாட்டில் பாயும் ஆறு சீவகங்கை. அதன் தோற்றத்தையும், ஓட்டத்தையும் வருணிக்கிறது பின் வரும் பாடல்:

'' அருண்முகில் கிளம்பி யன்பி
ளுர்கலி யமுத மொண்டு
திருமலி தருரட்சண்ய
திவ்விய சிகரி போர்த்துப்
பொருவருங் கருணை மாரி
பொழிந்தபுண் ணியமா நீத்தம்
ஒருமுக மாகிச் சீவ
கங்கையா யுலாய தன்றே.''[17]

முத்தி மாநகரில் உள்ள கோடிக்கணக்கான மாளிகைகளின் வருணனையைப் பின்வரும் பாடல் விவரிக்கின்றது.

''மின்னலையும் வெயிலையும் விரிவி மேதரு
பொன்னினு மணியினும் புனைந்த வோவெனப்
பன்னிற மாடங்கள் பந்தி பந்தியா
உன்னதத் திமைப்பன வுலப்பில் கோடியே''[18]

திருநகர மக்களின் வாழ்வை இரத்தினச் சுருக்கமாக, தம்பிரான் சித்தமே தமது சித்தம் என்னும் பக்தி பூண்டு வாழ்வார்கள் என்று கூறுகின்றார் கவிஞர்:

''முக்தி மாநகர் முழுதுந் தம்பிரான்
சித்தம் யாதது செய்து நிற்பதே
நித்தி யானந்த நிகரில் வாழ்வெனுப்
பத்தி செய்யுமாற் பரம சிந்தையாய்.''[19]

ஞாயிறு, திங்கள் இவற்றின் தோற்றத்தையும் வருணனையையும் காப்பியத்தில் ஆங்காங்கே அழகுற அமைத்துள்ளார். குமார பருவத்திலே சம்பாஷணைப் படலத்தில் வரும் ஒரு பாடலைக் காணலாம். வேதியனுகிய யாத்திரிகன் எழிற் சத்திரத்தை நோக்கித் திருச்செலவில் முன்னேறும்போது ஞாயிறு மறைகிறுன்; கரிய இருள் முழு உலகத்தையும் கவ்விக்கொள்ளுகிறது. இதனை உவமை நயமிக்க வருணனையில் அமைக்கிறுர். வெஞ்சுடரோன் இறத்தலால் நிலமகள் என்னும் தையலாள் பெரிதும் வருந்தி, துன்பம் என்னும் கொடிய நெருப்பு தன்னை மேன்மேலும் சுடுதலால் உடம்பெல்லாம் கருகிப்போன வகையினைப் போன்றது அவ்விருள் படர்ந்த நிலை என்கிறுர். பாடலைக் காணலாம்:

''வெய்யவ னிறத்தலிற் பரிந்து மேதினித்
தையலாள் துக்கவெந் தழல்சு டச்சுட
மெய்யெலாங் கருகிய விதத்தை மானுமால்
வையக முழுவதும் புதைத்த மையினுன்''[20]

நீராடலைக் குறித்து, ''அன்பு மல்கிய சீவமா நதித்துறை யாடி''[21] என்று கூறுகின்றுர்.

காப்பிய நிகழ்ச்சி

திருமணம், முடிசூடுதல், பொழில் விளையாடல், நீர்விளையாட்டு, மது உண்டு களித்தல், மக்கட்பேறு, ஊடல், கூடல், அமைச்சரோடு ஆராய்தல், தூது, வெளி நாட்டுப் பயணம், போர், வெற்றி ஆகியவையும் தொடர்புற்று அமைதல் வேண்டும் என்கிறது தண்டியலங்காரம். இக்காப்பியத் தலைவனுகிய யாத்திரிகன் தன் மனைவி மக்களை நாசநாட்டில் விட்டு, யாத்திரையைத் தொடங்குகிறுன்; ஆதலின், மணவாழ்வு தொடர்பான நிகழ்ச்சிகள் காப்பியத்தில் இடம்பெற ஏதுவில்லை. முத்தியை நோக்கி நடக்கும் இக்காப்பியத்தின் இலக்குக்கு ஒவ்வாத நிகழ்ச்சிகள் இடம்பெறவில்லை. முடிவில் சீவன் முத்தர்கள் விண்ணகத்தில் முடிசூட்டப்படுகின்றுர்கள். காப்பியத்தில் அமையும் போர்க் களங்கள் யாவும் ஆன்மிகத் தொடர்புடையனவாகவே அமைந்துள்ளன. எழிற் சத்திரத்தை விட்டு நீங்கும் கிறித்தவன், பின்வரும் பாடலில் போர் வீரனுகவே காட்சியளிக்கிறுன்:

''மந்தி ராயுத வருக்கமு மருந்தன வுணவும்
அந்த ணன்றனக் கின்றமை யாப்பொரு ளாகப்
புந்தி யாலுற மதித்துநன் றறிமொழி புகன்று
சிந்தி யாலுறப் புனைந்தனன் றிவ்யபோர்க் கோலம்.''[22]

மேலும், காப்பியம் எண்வகைச் சுவையும் மெய்ப்பாட்டுக் குறிப்பும் அமைந்து விளங்கவேண்டும் என்பர் தண்டியாசிரியர். இவை யாத்திரிகத்தில் அமைந்துள்ளமை இவ்வியலில் பின்னர் ஆராயப்படும்.

தண்டியாசிரியர் பெருங்காப்பிய இலக்கணமாய்க் கூறிய எல்லாவற்றையும் விடாமற் பாடி முடிக்கவேண்டும் என்று காப்பியம் எழுதலாகாது என்பது அறிஞர் கருத்து; உண்மை யான இலக்கியம் ஓரளவு பழைய மரபினை ஒட்டி அமைவதே ஆயினும், பழைய இலக்கணம் அதனைக் கட்டுப்படுத்துவதாய் இருத்தல் ஆகாது. 'வாழ்க்கையிலிருந்து நேரே முகிழ்த்து எழுவதே சிறந்த இலக்கியம்' என்றும், முன்னைய இலக்கியத்தைப் பார்த்தோ அல்லது மரபுகளுக்குக் கட்டுப்பட்டோ எழுவது சிறந்த இலக்கியம் ஆகாது',என்றும் அறிஞர் கருதுகின்றனர்.[23] எனவே, காப்பியத்தின் கதைப் போக்கிற்கு இன்றியமையாதனவற்றை மட்டும் கூறுதல் அமையும் என்பர். கி. வா. ஜ.,'தமிழ்க் காப்பியங் கள்' என்னும் தமது நூலில் ''காப்பியமாகிய அகலக்கவி செய்வார் மரபை நினைத்து கவி இயற்றினும், பொருள்போன வழியே சொல் போக வேண்டுமாதலின், அவர் சில இடங்களில் பழைய இலக் கணங்களையும் கடந்து செல்ல நேரும். அப்பொழுது அவர் வழங்கிய வழக்கே இலக்கியமாதலின், அதில் காணப்பட்ட அமைப்பே இலக்கணமாகிவிடும். இலக்கண நூல்களின் எல்லா இலக்கணங்களையும் வரையறுத்தல் இயலாதது. காலந்தோறும் கவிஞரின் கருத்துகள் வேறுபடுதலால், இலக்கியமும் வேறுபடும்; அதற்கேற்ப இலக்கணமும் வேறுபடும்; விரிவும் அடையும்,'' என்பர்.[24] எனவே இரட்சணிய யாத்திரிகம் இவ்வாறு வளர்ச்சி நிலையுற்ற பெருங்காப்பியமாய் விளங்குகிறது.

காப்பியப் புலவராகிய கிருஷ்ண பிள்ளையே தமது காப்பியம் குறித்து எழுதியுள்ள கருத்தும் ஈண்டு எண்ணத்தக்கது:

''இந்நூல்,

''பெருங்காப் பியமே காப்பிய மென்றாங்
கிரண்டா யியலும் பொருட்டொடர் நிலையே''

என்ற பிரமாணப்படி அமைக்கப்பட்ட பெருங்காப்பியமாம். ஆயின், அதற்குரிய அங்கங்கள் யாவுமொருங்கே அமைந்துள் ளனவாவெனில், அப்படியன்று. இரட்சணிய சமயக்

கொள்கைக்கு அடாததும் அநாவசியகமானதுமான சில அங்கங்களையும் அநுசிதமான புனைந்துரைகளையும் தவிர்த்து, உத்கிருஷ்டமுள்ள,

''தன்னிக ரில்லாத் தலைவனை உடைத்தாய்
நாற்பொருட் பயக்கு நடைநெறித் தாகி''

என்ற இத்யாதி புனித அங்கங்களெல்லாவற்றையுந் தழுவி இயற்றப்பட்டது.

''கூறிய வுறுப்பிற் சிலகுறைந் தியலினும்
வேறுபா டின்றென விளம்பினர் புலவர்''

என்பதனால் இது பெருங்காப்பியமே யாமென்க''[25] என்பதாம்.

3. காப்பிய நோக்கு

இக் காப்பியப் பொருளை ஒருசேரத் தொகுத்துக் காண்கின்ற போது, பக்திக் காப்பியம், இறையியல் நாடகக் காப்பியம், கனவில் முகிழ்த்தக் காப்பியம் என்னும் மூவகைக் காட்சியும் முதன்மையாய்த் தோன்றும்.

பக்திக் காப்பியம்

மதத்தையும் ஒழுக்கத்தையும் பற்றிய கலைக்களஞ்சியம் ஒன்று 'முற்றுருவக விளக்கத்தின் தாய் பக்தி என்பது முற்றிலும் சரியே,' என்று கூறுகிறது.[26] வாரன் என்பவர், 'பக்திக் கவிதை உருவக நிலையிலன்றி அமைய இயலாததுபோலத் தோன்றும்; அது உண்மையே.' என்கிறார்.[27] இரட்சணிய யாத்திரிகம் முற்றுருவகத் தாலான ஒரு காப்பியம். பக்திமிக்க யாத்திரிகன் கிறித்துவின்பால் கொண்ட பக்தி வாழ்வில் அருள்வழி நின்று, இடையூறுகள் பல எதிரிட்ட போதிலும் தளராது, திருநெறியில் முன்னேறி, வீடு பேற்றனை அடைகிறான்.

''நித்திய சீவா னந்த நின்மல போகந் துய்க்கும்
முத்திவீட் டாசை பற்றி முன்நின் றிழுக்க மூண்ட
உத்தம பத்தி பின்னின் றுந்திட வொளிகொள் வேத
சத்திய நெறிதி கழ்த்தத் தடம்பிற ழாது செல்வான்''[28]

என்றபடி, பத்தியின் உந்துதல் இக்காப்பியத்தின் பின்னணியாய்ப் பொலிகிறது.

''பழுத்த பத்தியிற் பரவசராகி''[29] செய்யும் யாத்திரையைக் காப்பியம் பாடுகிறது. சத்தியத்தைக் கடைப்பிடித்துத் தம்பிரான் அருளால் பக்தி மார்க்கத்தில் நிலைநின்றுவெற்றி முழக்கத்துடன் முத்தி வீட்டினுள் நுழைதலைக் காப்பியம் பின்வரும் பாடலில் கூறுகின்றது:

''சத்தி யங்கடைப் பிடித்துநற் தம்பிரா னருளாற்
பத்தி மார்க்கத்து நிலைநின்ற பவித்திரன் பவஞ்சப்
பித்தி யாவையும் புறநிறீஇப் பேரின்ப மல்கு
முத்தி வீட்டினுட் புகுந்தனன் செயத்தொனி முழங்க.''[30]

பக்திக்குத் தாய் முற்றுருவக விளக்கமாய் அமைதலினாலும், இரட்சணிய யாத்திரிகக் காப்பியம் முற்றிலுமே முற்றுருவக விளக்கமாய் அமைந்துள்ளமையாலும் இது தமிழில் முற்றுருவகப் பாங்கில் தோன்றியுள்ள பக்திக் காப்பியமாக விளங்குகின்றது.

இறையியல் நாடகக் காப்பியம்

தமிழ் முதற்காப்பியமும் முத்தமிழ்க் காப்பியமுமாம் சிலப்பதிகாரத்தை 'நாடகக் காப்பியம்' என்பர் அறிஞர். இரட்சணிய யாத்திரிகத்தில் 'இயல், இசை, நாடகம்' என்னும் முத்தமிழும் விரவி நிற்கின்றன. இதில் அமைந்துள்ள பதினொரு தேவாரங்களும் இசைத் தமிழுக்கு இடமாய் இலங்குகின்றன.

காப்பியத்தின் தொடக்க முதலே நாடகத்தின் விறுவிறுப்பினைக் காண்கிறோம். புலவர் யாத்திரிகனை அறிமுகப்படுத்தும் போது, அழகிய ஒரு திரைப்பின்னணியை அமைத்து நாடகப் பாங்குடன் அறிமுகஞ்செய்கிறார். அத்திரைப் பின்னணி 'வண்டுக் கூட்டங்கள் இன்னிசை எழுப்ப, செவ்விய மலர் மொட்டுகள் அவிழ்ந்து செந்தேன் துளிகளைத் தூற்றி எங்கும் நறுமணம் பரப்பிக்கொண்டிருக்கும் ஓர் அழகிய சோலையின்கண் தனிமையில் இருந்த ஒரு மனிதனைக் கண்டேன்''[31] என்பதாம். அவன் நிலையினைப் பின் வரும் பாடல் நாடகப்பாங்கில் அறிவித் திருத்தலைக் காணலாம் :

''வாடிய முகத்தன் சென்னி வணங்கியோன் மலங்கு வார் நீர்
ஓடிய விழியன் கந்தை யுடையின னொருங்கு பாவங்
கூடிய சும்மை தாங்கிக் கூனுறு முதுகன் பல்கால்
வீடிய னெறியை நாடும் விருப்பினன் வெருண்ட
[நெஞ்சன்''[32]

முதுகின்மீதிருந்த பாவச் சுமையுடன், கையில் இருந்த சுருதி நூல் அவன் குற்றத்தை உணர்த்தி வழிப்படுத்தும் உணர்வு நிலைமை காப்பியத்தில் நிறைந்த பண்புடையதாய் விளங்குகிறது. இதனைப் புலவர்,

''கையுறு புத்த கத்தைக் கருத்துற விரித்து நோக்கி
மெய்யுற நடுங்கி விம்மி வேதனை பொறுத்த லாற்றா
தையகோ வைய கோவென் றலறிநெட் டுயிர்த்தி யாது
செய்யுறு கரும மென்று திகைத்துநின் றயரு நீரான்''[33]

என்று நாடக விறுவிறுப்பில் அறிவிக்கிறார். காப்பியத் தலைவன் விறு விறுப்புடன் செய்யும் யாத்திரையில் அவன் சந்திக்கும் பாத்திரங்கள் அவனுடைய பல்வேறு மனநிலைகளை விவரிப்பன வாய் உள்ளன. இப்பாத்திரங்களைப் புலவர் தம் படைப்பாற்ற லினால் உண்மையியல் சார்ந்த துணைப் பாத்திரங்களாக அமைத்து விடுகிறார். இவர்களெல்லாரும் வாழ்க்கையில் பலதிற இறையியல் நிலைகளின் விளக்கங்களாய் அமைந்துள்ளனர்.

இந்நாடகக் காப்பியத்தில் அமைந்துள்ள சிறப்பான காட்சிகள், யாத்திரிகன் தீமையுடன் போராடும் களங்களான அழிம்பன், விடாத கண்டகன் முதலானவர்களுடன் செய்யும் போர்க் களங்களாகும். காப்பியத்தில் இடையிடையே மிகுதி யாய் வரும் உரையாடல்கள் நாடகப் பாங்கினை நன்கு வளர்க் கின்றன; சுருதி நூல் விளம்பும் வாழ்க்கையை உலகத்தில் நடித்துக் காட்டியதுபோலக் காப்பியப் பொருட்போக்கு அமைந்துள்ளது. காப்பியத்தை முழுமையாய்ப் பார்க்கின்ற பொழுது அதன் ஐந்து பருவங்களிலும் நாடகத்தின் ஐவகை நிகழ்ச்சிகளான தொடக்கம், குழப்பம், உச்சநிலை, வீழ்ச்சி முடிவு என்பனவற்றைக் காணலாம். ஆதலின், யாத்திரிகத்தை நாடகக் கூறுகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு இடம்பெற்றுள்ள ஓர் இறையியல் நாடகக் காப்பியம் என்று வழங்கலாம்.

கனவில் முகிழ்த்த காப்பியம்

உலக வனத்தில், ஒரு மலையடிவாரத்திலிருந்த பூம்பொழில் ஒன்றில், இறைவர் திருவடிகளை எண்ணத்தில் நிறுத்தி ஆழ்ந்து உறங்கும் வேளையில் இறைவர் அருளால் கனவு ஒன்று தோன்றிய தென்றும், அக்கனவிலே முதுகின்மேல் சுமையும், கையில் சுருதி நூலும் உடைய மனக்கலக்கமிக்க ஒருவனைக் கண்டேன் என்றும் அவனுடைய நிலையைக்கூறுகிறேன் என்றும் புலவர் காப்பியத்தைத் தொடங்குகிறார். 'விஞ்சியோர் கனவு கண்ட விதந்தனைப் பகரு வேனே' என்பது பாடலடி.[34]

தாம் கனவிலிருந்த நிலையிலேயே அவனுடைய யாத்திரை முன்னேற்றத்தைக் காப்பியத்தின் கருவூலமாகக் கொண்டு கூறி, யாத்திரிகன் முடிவில் முத்தி அடைந்து இறைவர் திருமுன்னர்ப் பேரின்பவாழ்வில் இன்புறுதலுடன் கனவும் முடிகிறது; காப்பியமும் நிறைவடைகிறது.

''சோதியின் பிழம்பு போர்ப்பத் துனுக்குறீஇத் துயிலா நின்ற
மீதுயர் கிரியின் சாரல் விழித்தெனன் விமல ராசன்
பாதபங் கயம்ப ராவிப் பவித்திர தரிசனத்தைக்
காதலா யகம்பொ றித்துக்காட்டினே னுலகுக் கம்மா''[35]

என்று மலைச்சாரலில் கனவிலிருந்த நிலையில் காப்பியத்தை நடத்தி முடித்துப் புலவர் விழித்துக்கொள்ளுகிறார். கனவு நிலையிலிருந்து தரிசனங்கண்டு பாடப்பட்டதாகத் தமிழ்மொழியில் உள்ள காப்பியம் இஃது ஒன்றே.

4. சமுதாய நோக்கு

டாக்டர் வ. சுப. மாணிக்கம், 'காப்பியப் புலவனின் நோக்கம் சமுதாயமே. காப்பியப் படைப்பின் மூலம் சமுதாயத்தை வழிப் படுத்துவதே புலவனின் தனி நோக்கம். சமுதாயத்துக்குத் தான் உணர்ந்த உண்மையை வடித்துக்காட்டுதல் அவன் கடமையும் பொறுப்புமாகும்,' என்கிறார்.[36]

கிருஷ்ண பிள்ளை சமுதாயச் சீர்திருத்தவாதியாய் விளங்கு கிறார்; சாதிவேறுபாடுகள் தலைதூக்கி வாழ்ந்த 19ஆம் நூற்றாண்டி லேயே சாதிவேறுபாட்டை நீக்கி வாழ்ந்தார். ஆனால், இவர்க்கு இம்மனப்பான்மை கிறித்தவரான பின்னரே வந்தது என்பதை இவருடைய வாழ்க்கை வரலாற்றினால் அறிகிறோம். கிறித்துவின் அடியாராதற்கு முன்னர்ச் சாதிவேறுபாட்டை இவர் தீவிரமாகக் கடைப்பிடித்தார். சாயர்புரத்தில் இவர் முதலில் பணியாற்றிய போது தீண்டாமையைத் தாம் உயர்குல வேளாளர் என்ற உயர் நிலை அளவில் கடுமையாய்க் கடைப்பிடித்தார். பொதுமக்கள் தண்ணீர் எடுக்கும் கிணற்றில் தண்ணீர் எடாமல், தாம் வேறு கிணற்றில் தண்ணீர் எடுத்துத் தாமே அதனைத் தோளில் சுமந்து வீட்டிற்குச் சென்றார். இதன்பொருட்டே சாயர்புரம் திருமறைக் கல்லூரியின் முதல்வர் அக்ஸ்டபிள் இவருக்கெனத் தனியே ஒரு வீடுகட்டி, கிணறும் வெட்டிக்கொடுத்தார்.

1858ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள், 20ஆம் நாளில் சென்னை யிலிருந்த சலிவன் தோட்டத்துக் கிறித்தவக் குழாத்துடன் சேர்ந்து கொண்டது குறித்துத் தன்வரலாற்றில் குறிப்பிடும்போது, :''அன் றைக்கே......வெகுகாலமாய் என்னைப் பாதித்துக்கொண்டிருந்த ஜாதிக் கட்டுப்பாடுகள் தெறிபட்டன,''[37] என்று எழுதுகிறார். இரட்சணிய யாத்திரிகத்தில் சாதிப்பெருமையை,

> ''சாதிப் பெருமைக் காதாரஞ் சாசு வதநி ராதாரராம்
> சாதிப் பெருமைக் கன்புமுற்றும் சந்மப் பகைசால் சத்துருவாம்''[38]

என்று சாடுகிறார். சாதியைப் பற்றிப்பேசும் பின்வரும் பாடலும் உன்னத்தக்கது:

''சாதி யிரண்டே யந்நியரைத் தனேப்போ னேசித் தாத்மார்த்த
போத மடைந்த புங்கவரே புனிதர் பிறரைப் புறக்கணித்துப்
பேத மியற்றிக் குலப்பிரமை பிடித்தோ ரீன ருமதுபிடி
வாதம் வேண்டாங் கிறிஸ்துயேசு மலர்த்தாள் வணங்கும்
செகத்தீரே''[39]

நெடுங்காலத்துக்கு முன்பே ஔவை மூதாட்டியார், ''சாதி இரண்டொழிய வேறில்லே,''[40] என்று பறைசாற்றியதைப் புலவர் நினைவுபடுத்தி, 'ஆண் பெண் என்னும் இரண்டினைத் தவிர வேறு சாதி இல்லை,' என்ருர்.

இரட்சணிய யாத்திரிகத்தில் வரும் பல்வகைப் பாங்கினரும் சமுதாயத்தில் வாழும் பல்திற மக்களின் நடத்தையைச் சொல்லோவியப்படுத்திக் காட்டுகின்றனர். இவர்கள் சமூக சீர் திருத்தத்திற்கு ஏதுவாக அமைந்துள்ளார்கள். தாம் காண விழைந்த சமுதாயத்தில் அவர் இடம் பெற வேண்டும் என்று விரும்பிய சீர்திருத்தங்களைத் தொகுத்து நிதானியின் வாயிலாக மாயாபுரி நகர மக்களுக்குக் குற்றமற்ற இரட்சணிய நவநீத சத்தியமாக, இரட்சணிய நவநீதப் படலத்தில் விவரிக்கின்ருர்.[41]

புலவர் காணவிழைந்த சமுதாயத்தைப் 'பரமராச்சியப் படல'த்திலும் 'தர்ம சேத்திரப்படல'த்திலும் வரையறுத்துக் கூறக் காண்கின்ருேம்.

உலகில் கவிஞர் காண விழைந்த சமுதாயத்தைத் தருமசேத்திரத்தைப் பின்வரும் பாடல்களால் ஓரளவு உணரலாம்:

''வானமும் பூமியு மிணைந்த மாண்பது
ஞானமும் நன்மையு நனிக தித்தது
தீனமு மீனமுஞ் சேர்வின் ருயதெவ்
வூனமும் பாவமு மொழிந்த நீரது.

ஆரிய ரேகுடி யமையத் தக்கது
பூரிய ரவ்வழிப் புகப்பெ ருதது
சூரியன் கதிரன வரதந் துன்னலால்
காரிரு ளெங்கணுங் காணெ ணுதது.

புனிதமே யெங்கணும் பொலியும் பொற்பது
தனிதமா ரருண்மழை பொழியுஞ் சால்பது
மனிதர்வா னவரென மருளத் தக்கது
நனிதவ வொழுக்கத்தி னலங்கொண் மொய்ம்பது.

புண்ணிய நதிவளம் பொருந்து பொற்பது
தண்ணளித் தடங்களின் பெருக்கஞ் சான்றது
கண்ணிய பயிர்வளங் கவின்கொள் காட்சியின்
வண்ணமித் துணையென வகுக்கொ ணுதது.

சீலமு மொழுக்கமுந் திகழ்ந்த செவ்வியிற்
பாலொடு தேன்கலந் தோடும் பாலது
ஞாலமுற் றுந்தொகூஉ நன்க ருந்தினுஞ்
சால்வும் பயன்படுந் தகைமை சான்றது.''[42]

சுருங்கச் சொன்னால், விண்ணக வாழ்வினை மண்ணகத்தில் மக்கள் வாழவேண்டும் என்பது அவர் காணவிழைந்த சமுதாயம்.

இந்தச் சமுதாய வாழ்வை மனிதனுடைய வீழ்ச்சிக்கு முற்பட்ட நிலையில் அவனுடைய பக்தி வாழ்வின் சிறப்பினைப் பாடியபோதே எதிர்நோக்கி இருக்கின்றார். அந்தச் சமுதாய வாழ்வின் விளக்கம் சிருட்டிப்புப் படலத்திலுள்ள மேல்வரும் பாடல்களில் மிளிர்வதைக் காணலாம்:

''பாபமே யில்லை பாவ பயங்கர மில்லை தேவ
சாபமு மில்லை சாவுஞ் சஞ்சலத் தொடர்புமில்லை
கோபமும் பகையு மில்லை குணதோட மில்லை மிக்க
ஆவலு மில்லை பூரு வாச்சிர மத்தர்க் கம்மா.

அரசனைச் சிந்தை யுள்ளி யநுதினங் காலை மாலை
வரசரோ ருகப் பொற்பாதம் வழுத்துவர் வணங்கி யேத்தித்
திரை செறி கடல்சூழ் வைப்பின் சீர்மைகண் டதிச யித்து
விரசுவர் விண்ணோர் தம்பால் வித்தகம் பயில்வர் மாந்தர்.

பூதலப் பொருள்க ளெல்லாம் பொதுவன்றிச் சொந்த மில்லை
ஆதலிற் கொள்வா ரில்லர் கொடுப்பவ ராரு மில்லர்
போதர நிறைவே யன்றிப் புகலவோர் குறையு மில்லை
ஊதிய நயநட்டங்க ளொருவர்க்கு மொன்று மில்லை.

பிணிமூப்புச் சாக்கா டென்னப் பேச்சினு மறியார் தம்மைத்
தணிவரும் வருத்தந் துன்பஞ் சஞ்சலித் தழுபுன் கண்ணீர்
புணர்வதோ வென்று மின்றாய்ப் பொறிபுலன் புனித மாமெய்
உணர்வொடு பத்தி செய்வா ரும்பரும் வியக்க மாதோ.''[43]

5. புறச் சமயத்துடன் உரையாடல்

சமய அடிப்படையில் எழுந்த காப்பியங்களில் தருக்க முறையில் தம் சமய உண்மைகளை விளக்குவதுடன், பிற சமயங்களை மறுக்கும் போக்கினையும் காண்கிறோம். சிலப்பதிகாரம் மணிமேகலை முதலான காப்பியங்களில் இவ்வியல்புகள் இடம்பெற்றுள்ளன. மணிமேகலையில், 'சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதை'யில் புறச்சமய மறுப்புகளைக் காண்கிறோம். தமிழகத்திற் புகுந்த பிற சமயங்களுக்குக் காப்பியங்கள் தோன்றினதும், இந்தச் சமய விளக்கங்களும் மறுப்புகளும் தோன்றின எனலாம்.

'குண்டலகேசி' என்னும் பௌத்த சமயக் காப்பியம் சமண சமயக் கொள்கைகளை மறுப்பதற்காகவே இயற்றப்பட்டது என்றும், அதனை மறுப்பதற்காகவும் சமணத்தை நிலைநாட்டுவதற்காகவும் 'நீலகேசி' காப்பியம் தோன்றியது என்றும் அறிகிறோம்.[44] சமண பௌத்தர்களை அடுத்து வைதிக நெறியினரும் அத்தகைய முயற்சிகளை மேற்கொண்டனர்[45] திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகங்களில் எல்லாம் புறச்சமய கண்டனங்களையும் காண்கிறோம். பிற்காலத்தில் சைவ வைணவ சமயங்களுக்கிடையிலும் சமயப்பூசலைக் காண்கிறோம்.

கிறித்தவம் தமிழகத்திற்கு வந்ததும், இந்நிலை மேலும் ஒருபடி தலைதூக்கியது, கிறித்தவம் விரைவாகப் பரவி வந்த 19ஆம் நூற்றாண்டில் சமய கண்டனங்கள் கடுமையாகவே இருந்தன. இதன் தொடர்பாக நூல்கள் பல எழுந்தன. 19ஆம் நூற்றாண்டின் இந்தச் சூழலில் தோன்றிய இரட்சணிய யாத்திரிகத்தில் சமய மறுப்புகள் இருத்தல் இயல்பே. ஆனால். இவை இலக்கியச் சுவையுடன் உணர்ச்சிக்கு விருந்தாய் அமைந்துள்ளன.

யாத்திரிகன் அழிம்பன் என்பவனுடன் செய்யும் போரில் புறச்சமயமறுப்பு. தலைமையிடம் பெறுகிறது. இந்த அழிம்பன் மில்ட்டன் படைத்துள்ள சாத்தானுக்கு ஒப்பானவன். யாத்திரிகத்தில் அழிப்பனும் கிறித்தவனும் செய்யும் போர், உடல் வல்லமையைக் காட்டி வெற்றிபெறும் போராய் அமையவில்லை. புலவர் இங்கே காப்பியத்தில் ஒரு புதுமை செய்கிறார். இஃது ஆன்மிக வல்லமையைக் காட்டி வெற்றிபெறும் போராய் இருக்கிறது. அழிம்பன் பல 'சாப'க் கணைகளைக் கிறித்தவன்மீது எய்கிறான். கிறித்தவன் அவற்றை 'ஆசி' என்னும் கணையை வீசி வென்றுவிடுகிறான். அழிம்பன் விடும் 'பாச'க்கணையை வேதியன் 'ஈசுர நேச'க் கணையால் முரித்துவிடுகிறான்[46] அழிம்பன் 'அறுசமய முகங்கொண்ட அத்திரத்தை' ஏவினான்: அதனை வேதியன் 'ஈசுரனுடைய சுருதியத்திரத்தை' ஏவி அழித்துவிடுகிறான்[47] இச்சமயப் போரின் முடிவில் வேதியனாகிய கிறித்தவன் ஆவியின் பட்டயத்தாலும் திருவருள் வல்லமையாலும் வெற்றியடைகிறான்[48].

''அணித்த ழிம்பனைக் கண்டுநன் றாமென வகத்திற்
குணித்து வல்விரைந் தொருகையிற் கேடகங் கொளுவிப்
பணித்த மந்திரப் பட்டய மொருகையிற் பற்றித்
துணித்து வஞ்சநெஞ் சுழக்குவல் காவெனச் சொல்லி.

மந்தி ரத்தனி வாட்படை யோங்கிவன் கண்ணன்
தந்தி ரத்தட மார்புறப் புகுத்தலுந் தலைசாய்ந்
தந்த ரம்பட வலறின னழிபெருங் குருதி
சிந்தி யங்கவன் வெஞ்சினத் தீத்தழல் சிதைத்த.

நெஞ்சு ரங்கிழிந் தழிம்பனீ ணிலத்துறீஇ நெடிது
சஞ்ச லம்படத் தடஞ்சிறை யிரண்டையுந் தடிவான்
செஞ்சொ லாரணன் மந்திர வாள்கரந் திகழ்த்த
அஞ்சி வாய்வெரீஇ மீக்கிளர்ந் ததேகாதி யடைந்தான்.

திரும விந்தவீ செகமெலாந் திரளினும் செயித்தற்
கருமை யாயவெவ் வழிம்பனை யாரணக் கிழவன்
ஒருமை யாய்ப்பொரு தோட்டினன் வெற்றிபெற் றுய்ந்தான்
தரும மேசெயந் தருமெனல் சதோதய சரதம்.

மன்னு திவ்யசர் வாயுத வருக்கத்தின் வலியும்
பொன்னி லத்தர சன்றரு திருவருட் பொலிவுந்
தன்னி ருந்துணை யாக்கலி னழிம்பனைச் சமரில்
வெந்நி டத்துரந் தான்றிட மெய்விசு வாசி.''[49]

இரட்சணிய யாத்திரிகத்தில் புறச்சமய மறுப்புச் சற்றுக் கடுமையாகக் காணப்படும் இடம், மாயாபுரி மக்களுக்கு நிதானி என்பவன் வழங்கும் செய்தியில் அமைந்துள்ளது. இப்பாடல்கள் அமைந்த நவநீதப் படலம் எழுதப்பட்ட வரலாற்றை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். இப்படலத்தில் சமய மறுப்புக் கடுமையாய்த் தோன்றுவதாகக் காணப்பட்ட 15 பாடல்களை இரட்சணிய யாத்திரிகத்தின் இரண்டாம் பதிப்பாசிரியரான ஜெ. எஸ். மாசிலாமணி நீக்கியே பதிப்பித்தார். மூலநூலாசிரியரின் பாடல்களை இவ்வாறு நீக்கியது முறையெனத் தோன்றவில்லை.[50]

6. காப்பிய மாந்தர்

காப்பியத் தலைவன்

பெருங்காப்பியம், 'தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாய்' அமைதல்வேண்டும் என்று தண்டியாசிரியர் கூறியதைப் பார்த்தோம். ஒரு காப்பியத்தின் தலைவன், அக்காப்பிய மாந்தருக்குள் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாய் அமைதல் வேண்டும். இரட்சணிய யாத்திரிகத்தின் காப்பியத் தலைவன் யார் என்பது குறித்து முரண்பட்ட கருத்துகள் நிலவி வருகின்றன. கலைக் களஞ்சியம் 'கிறிஸ்துநாதரே இரட்சணிய யாத்திரிகத்தின் தன்னிகரற்ற காப்பியத் தலைவர்' என்று குறிப்பிடுகிறது[51] இரட்சணிய யாத்திரிகத்தின் காப்பியத் தலைமையினைக் கிறித்துவும் கிறித்தவனும் பகிர்ந்து கொள்ளுகின்றனர் என்கிறார் டாக்டர் டென்னிஸ் அட்சன்[52] ஆனால், உண்மையில் யாத்திரிகத்தின் காப்பியத் தலைவர் கிறித்து வல்லவர்; கிறித்தவனாகிய யாத்திரிகனே. சகுந்தலையைக் குறித்த நூல் 'சாகுந்தலம்' என்றாவது போல யாத்திரிகனைப்பற்றிய காவியம் 'யாத்திரிகம்' ஆயிற்று.

யாத்திரிகன் முத்தி அடையும் யாத்திரையின் முன்னேற்றத்தைப் பாடுதலே காப்பியப் பொருள்.

கம்பராமயணத்துக்கு இராமர் காப்பியத் தலைவராய் இருப்பதுபோல யாத்திரிகத்திற்குக் கிறித்து காப்பியத்தலைவரா கார். கிறித்துவைக் காப்பியத் தலைவராய்க் கொண்ட ஒரு தமிழ் கிறித்தவக் காப்பியமுண்டு. அதற்குக் 'கிறிஸ்தாயணம்' என்பது பெயர். யாத்திரிகத்தில் காப்பியத் தலைவனுக்குத் தலைவராய்க் கிறித்துபெருமான் விளங்குகிறார். கிறித்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிக் கிறித்துவைப்போல, கிறித்துவின் அருளால், முயன்று ஒழுகி வீடு பேற்றினை அடைபவனாய் விளங்குகிறான் கிறித்தவன். இங்கே பாவத்தில் படிந்த ஓர் உயிரே கிறித்தவனாக உருவகம் செய்யப்படுகிறது.

கிருஷ்ணபிள்ளை தம் காப்பியத்தில் கிறித்துவுக்கு முக்கியமான இடம் அளிக்கிறார் என்றாலும், அது கிறித்தவனுடைய திருப் பயண முன்னேற்றத்திற்குத் துணையாகவே அமைகிறது. கிறித் தவனை ஆற்றுப்படுத்தும் முகத்தான் கிறித்துவின் வாழ்க்கையைப் புலவர் தம் காப்பியத்திற்பாடுகிறார். யாத்திரிகனை முதலிற் செந் நெறியில் ஆற்றுப்படுத்திய குருவும்: அடுத்து எழிற்சத்திரத்தில் அவனுடன் உரையாடிய பக்திப்பெண்மணியும் கிறித்துவின் மீட்புத் திருப்பணியை, அவரது வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது வழியாக யாத்திரிகனுக்கு அறிவிக்கின்றனர். கிறித்துவின் வாழ்க்கையைச் சுட்டும் பகுதிகள் காப்பியத்தில் ஏறத்தாழ 20 விழுக்காடு காணப்படுகிறது.[53] தாம் யாத்திரிகத்திற்கு எழுதி யுள்ள முன்னுரையின் முடிவில் கிருஷ்ணபிள்ளை, ''தன்னிகரில் லாப் பாட்டுடைத் தலைவனாகிய ஸ்ரீ கிறிஸ்து பகவானுடைய உபய சரணாரவிந்தங்களுக்கு அனந்த ஸ்தோத்திரம்''[54] என்று கிறித் துவைப் போற்றி வணங்குகிறாரேயன்றிக் காப்பியத் தலைமையைப் பற்றிக் கூறவில்லை என்பது தெளிவு. காப்பியம் கிறித்தவனின் யாத்திரையைப் பாடுகின்றதேயன்றி கிறித்துபெருமானின் யாத் திரையைப் பாடவில்லை. இரட்சணிய யாத்திரை செய்பவன் கிறித்தவனேயன்றிக் கிறித்துவல்லவர்.

காப்பியத் தலைவனாகிய யாத்திரிகன் தன்னைக் குறித்துத் தானே கூறும்போது பின்வருமாறு விவரிக்கின்றான்:

''நாசதே சத்துளே னயந்து நாடொறும்
பாசவெவ் வினைத்தொழில் பயின்ற பாமர
நீசன்முற் பெயரவ பத்த னின்மல
ஈசனா ரருள்பிடித் திழுத்த திவ்வழி.''[55]

யாத்திரிகனின் வாய்ச்சொற்களால் அவன் பக்திநெறி பிடித்தற்கு முன்னர் அவபக்தனாய் ஒழுகிய நிலையினை இப்பாடலில் காண்கிறோம். அவன் சத்தியத்தை உணரும் மெய்யுணர்ச்சிப் படலத்தில் பாவ உணர்வினாலும், பாவத்தினால் வரும் தண்டனை உணர்வினாலும் அவன் படும் துயரத்தினால், அவனிடம் மனந்திரும்புதலுக்கு ஏதுவான குணவியல்புகளைக் காண்கிறோம். சிலுவைக்குன்றில் அவன் பாவபாரம் நீங்கப் பெற்றும், வெள்ளுடை யணிவிக்கப்பெற்றும், பயணப்பத்திரம் பெற்றும் விண்ணகவாசிக்குரிய பண்புகளை அடைகின்றான். அதுமுதல் அவன் முத்தி நோக்கியே திருச்செலவில் முன்னேறி விண் வாழ்வுக்குரிய ஆன்மிகப் பண்புகளிலே நாளும் வளர்ந்து, தேர்ந்து மற்ற எல்லா யாத்திரிகர்க்கும் முன்மாதிரியாக விளங்குகின்றான்; ஒளிர்விடுகின்றான். எழிற்சத்திரத்து வாயிற் காவலன் அவனை:

"உள்ளமும் வாக்குமொத் துளது போலுமால்
கள்ளமி னீர்மையன் கருதுங் காலெனா"[56]

என்று அறிவிக்கிறான். இங்கு அவன் மெய்யுணர்ச்சி, நற்புத்தி, உண்மையான தேவ பக்தி என்பனபோன்ற மேன்மையான நற்குணங்களைப் பெற்று, அவற்றையே துணையாகக்கொண்டு முத்தி மார்க்கத்து நெறிபிசகாமல் முன்னேறுகிறான்.[57] மெய்ம்மறை வெளிப்படுத்தும் நேரான நெருக்க நெறியில் திருப்பயணஞ் செய்யுங்கால் நேரிட்ட இடையூறுகள், சோதனைகள், குறுக்கீடுகள், நிந்தைகள், பாடுகள், கள்ளவழிகள் எல்லாவற்றிலும் திருவருள் வல்லமையால்[58] தன் மெய்வாழ்வு இலக்கினின்று வழுவாது முன்னேறுவதால் தன்னிகரில்லாப் பண்பினனாக விளங்குகின்றான்.

காப்பியத் தலைவனாகிய கிறித்தவனுக்குப் புலவர் பல்வேறு பெயர்களைச் சூட்டியுள்ளார். முதனூலில் அவன் கிறித்தவன் என்றும், யாத்திரிகன் என்றும் குறிக்கப்படுகிறான். கிருஷ்ணபிள்ளை, காப்பியத் தொடக்கத்தில் அவனை 'ஆத்துமவிசாரி' என்கிறார்; அடுத்து அவனை, 'வேதியன்', 'கிறிஸ்தவன்', 'நிவர்த்தன்', 'வித்தகன்', 'மறைக்கிழவன்', 'பனவன்', 'ஆரியன்', 'செஞ்சொலாரணன்', 'மெய்விசுவாசி,' 'வேதியர்திலகன்', 'மறைவலாளன்' உள்ளிட்ட பல பெயர்களால் வழங்கி அவனுடைய பன்முக இயல்புகளையும் சுட்டுகிறார். இதனால், கிறித்தவனின் சீரிய பண்புகளும் அவன் குணக்குன்றாய் விளங்கும் மாட்சியும் புலனாகின்றன.

யாத்திரையில் கிறித்தவனுக்கு வழித்துணைவராய் இருவர் அமைகின்றனர். இவ்விருவரும் வீடுபேற்றினை நோக்கித் திருப் பயணம் செய்வோரே. 'நிதானி' என்பவன் செந்நெறியில் யாத்திரிகனுக்கு முன்னால் செல்பவனாகக் காணப்படுகின்றான். காப்பியத்தில் இவன் தொடர்புடைய பகுதிக்குப் புலவர் 'நிதான

பருவம்' என்று பெயர் வழங்கியுள்ளார். இது மூன்றாவது பருவம். கிறித்தவன் தன் யாத்திரை முன்னேற்றத்தில் நிதானியுடன் கலந்துகொண்ட பிறகு, இருவரும் மாயாபுரி வழியே செந்நெறியில் வலம்இடம் விலகாது செல்கின்றனர். இதன் விளைவாய் மாயாபுரியில் இருவரும் சிறைப்படுகின்றனர். நிதானி உயிர்த் தியாகியாகின்றான். இவன் மறைவுக்குப் பின்னர் 'நம்பிக்கை' கிறித்தவனுக்கு வழித்துணையாய் வருகின்றான். அவன் திருநெறி வாழ்வில் தன்னைக் கிறித்தவனுக்கு மகனெனவும் அடியவனென வும் கூறிக்கொள்வதுடன் தன்னையே அவனுக்கு உடைமையாக்கி விடுகிறான்;

''எந்தை சொற்றதே யமையுமா யினுமெனக் கினிநீ
தந்தை யானுனக் கொருசிறு தனயனுந் தயைகூர்
அந்த ணாளநீ யென்னெச மானன்யா னடியன்
சொந்த நிற்கெனப் பகர்ந்தனன் றூயநம் பிக்கை.''[59]

இருவரும் திருப்பயணத்தில் முன்னேறுகின்றனர். கிறித்தவன் மனந்தளரும் சில இடங்களில் நம்பிக்கைத் துணையாய் இருந்து நெறிப்படுத்துகிறான். முடிவில் இருவரும் மரணவாற்றைக் கடந்து முத்தியடைகின்றனர்.

காப்பியத் தலைவன் காப்பிய நிகழ்ச்சிகளில் தன்னிகரில்லாத் தலைவனாய் விளங்குகிறான். தன்னுடன் திருப்பயணம் செய்தவர் களுக்கிடையே ஆன்மிக அனுபவ முதிர்ச்சியால் கிறித்தவன் தலைவனாய் விளங்குவதுடன், யாத்திரையில் இடையிடையே அவனை எதிர்த்த தீயசக்திகளையும் வென்று விளங்குகிறான். இந்த யாத்திரையில் மிகப்பெரிய எதிரியாய்த் தோன்றுபவன் அழிம்பன். இவன் சாத்தானுக்கு ஒப்பாய்க் காணப்படுகிறான். கிறித்தவன் இவனைத் திருவருள் வல்லமையால் வென்று யாத்திரையில் முன்னேறுகிறான்; ஏனைய எதிர்ப்புகளை எல்லாம் அவ்வாறே வென்று, காப்பியத் தலைவனாய் விளங்குகிறான். சாதாரண மனிதனை, ஒரு மானிட உயிரைக் காப்பியத் தலைவனாய்க் கொண்டுள்ள இக்காப்பியம் உலக மக்கள் ஒவ்வொருவருக்கும் உரிய விண்ணுலக யாத்திரையைப் பாடும் காப்பியமன்றோ!

காப்பிய மாந்தர்

காப்பியப் பாத்திரங்களின் படைப்புப்பற்றிய அரிஸ்டாட்டி லின் கருத்துக் கருதத்தக்கது. பாத்திரப்படைப்பில் நான்கு கருத் துக்களை நோக்கமாகக்கொள்ளவேண்டும் என்று அவர் சுட்டி யுள்ளார்: முதலில் பாத்திரங்கள் நல்லவர்களாய் அமைய வேண்டும்; இது மிக முக்கியமானது. இரண்டாவது, பண்பிற்கு ஏற்பப் பொருத்தமுள்ள பாத்திரங்களாய் இருத்தல் வேண்டும்;

அடுத்த நிலையில், பாத்திரங்கள் வாழ்க்கை உண்மை நிலையினைச் சார்ந்தவர்களாய் இருத்தல் வேண்டும்; இறுதியாகப் பாத்திரங்கள் கொள்கைப் பற்றுள்ளவர்களாய் அமைதல் வேண்டும் என்பன.[60] இரட்சணிய யாத்திரிகத்தின் காப்பிய மாந்தர்க்கு இக்கருத்துகள் அமைவுடையனவே. ஜான் பனியனின் பாத்திரங்களைப்பற்றிச் சொல்லும்போது அறிஞர் ஒருவர், அவர் படைத்த பாத்திரங்கள் 'வெறுங்கற்பனை மாந்தர் அல்லர்; நாம் வாழ்க்கையில் காணும் உண்மைமாந்தர்கள்,' என்று எழுதுகிறார்.[61] எஸ்.ஃபரார் (S. Farrar) என்பவர் பனியனுடைய பாத்திரப் படைப்புகளைக் குறிப்பிடும்போது பனியன் தன்னைச் சுற்றிலும் வாழ்ந்த மனிதர்களின் வாழ்க்கையினைக் கூர்த்த மதியினராய் ஆழ்ந்து கவனித்ததன் விளைவாய்த் தோன்றியவர்கள்; அவர்கள் மனிதத்துவத்தின் வெறுங் கேலிச் சித்திரங்களோ, இலக்கிய நையாண்டிப் புனைவுகளோ அல்லர் என்று கூறுகின்றார்.[62] இக்கூற்றுகள் இரட்சணிய யாத்திரிகத்தின் பாத்திரங்களுக்கு முற்றிலும் பொருந்தும், கிருஷ்ண பிள்ளை, பனியனுடைய பாத்திரங்களின் வாழ்க்கையைச் சிறந்த காப்பிய இலக்கிய நயத்துடன் வெளிப்படுத்தியுள்ளார். மேலும், அவர்களைத் தம் அறிவுத்திறனாலும் அனுபவத்தாலும் வாழ்க்கை உண்மையியல் சார்ந்த மாந்தர்களாயும் படைத்திருக்கிறார்.

யாத்திரிகத்தின் பாத்திரங்களை முத்திறத்தவராகப் பகுத்துக் காணலாம். காப்பியத்தலைவனுக்குத் துணையாய் அமையும் பாத்திரங்களை நன்மைப் பாத்திரங்கள் எனலாம். குரு, நிதானி, நம்பிக்கை உள்ளிட்டவர்களை நன்மைப் பாத்திரங்களுக்குக் காட்டாகக் கூறலாம். அடுத்த நிலையில் காப்பியத்தின் இலக்கிற்கு எதிராய் அமையும் பாத்திரங்களைத் தீமைப் பாத்திரங்கள் எனலாம். அழிம்பன் விடாதகண்டன், பாப்பரக்கன் என்பாரை இதற்கு எடுத்துக்காட்டலாம். நன்மை, தீமை, இவற்றின் போராட்டத்தினூடே காப்பியம் படலத்துக்குப் படலம்-பருவத்திற்குப் பருவம்-வளர்கிறது; கற்போருக்கும் கவர்ச்சியாய் இருக்கிறது. 'அறம் வெல்லும்; பாவம் தோற்கும்,' என்பது காப்பிய நியதியாய்க் காணப்படுகிறது. உண்மை வாழ்க்கையில் முற்றிலும் நல்லவர்களும் இல்லை, முற்றிலும் தீயவர்களும் இல்லை என்றாலும், பெரும்பான்மை கருதி நல்லவர்கள் தீயவர்கள் என்று கூறுவது இயல்புதானே!

மூன்றாம் நிலையில் நல்லவர்களாயும் இல்லாமல், தீயவர்களாயும் இல்லாமல் வாழ்கிற மக்களையும் காண்கிறோம். இவர்களை 'இரண்டுங்கெட்ட நிலையினர்' எனலாம். இரட்சணிய யாத்திரிகத்தின் காப்பியக் குறிக்கோளுடன் ஒப்புநோக்கும்போது நன்மைக்கும் தீமைக்கும் இடைப்பட்ட நிலையினரான மாந்தர்

சிலரையும் காணலாம். இணங்கு நெஞ்சன், மாயசாலகன், மாயவேடன், அறிவீனன் என்பவர் இத்தகையவராவர். இவர்களுக்கு வீடுபேற்றினை அடைய ஓரளவு ஆசையிருப்பினும், அதனை இடுக்க வழியின் வாழ்விலே சென்றடைய விரும்பாது பின் வாங்கியவர்களாய்க் காணப்படுகின்றார்கள்.

காப்பியத்தில் வரும் தலைமையான துணைப்பாத்திரங்களாகக் குரு, நிதானி, நம்பிக்கை என்பவர்களைக் குறிப்பிடலாம். புலவர் சுவிசேடகனையே குரு என்று வழங்குகிறார்.

குருவை அறிமுகப்படுத்தும் பாடல்களிலே அவருடைய பண்பு நலம் புலப்படுகிறது:

'' தண்ணளி தயங்கிய முகத்துத் தாமரைக்
கண்ணிணை மல்கிய கருணைக் காட்டிட
உண்ணிறை யன்புமிக் கொழுகிற் றென்னவே
வண்ணவான் மொழிச்சுவை யமிர்து வார்ந்துக.

எண்ணருந் துயர்க்கெலா மிறுதி காட்டுமெய்ப்
புண்ணிய முருக்கொடு பொலிந்தி லங்கிய
வண்ணமென் றுணர்வுளார் மனங்க ளிப்புற
நண்ணின னிருஞ்சுவி சேட நாமத்தன்.''[63]

சுவிசேடகனின் குணவியல்பை இன்னும் ஒருசில தொடர்களால் உணரலாம். 'பல்கலை கற்றுணர் பரமயோகி',[64] 'அனையவை யறிந்தடுத்தவர்க்கு நன்மையே நினை சுவிசேடன்,'[65] என்னும் அடிகள் குருவினியல்புகளைக் காட்டுகின்றன. லௌகீகன், குறிப்பிடத்தக்க ஒரு பாத்திரப்படைப்பு. இவனுக்கென்று ஒரு படலத்தையே அமைக்கிறார் கவிஞர். இச்சாபுரத்தைச் சேர்ந்த இவன், திருப்பயணியைத் திசை திருப்பிவிடுகிறான்.[66] பாத்திரங்களின் பெயர்களே அவர்களுடைய குணவியல்புகளை விளக்குவனவாய் அமைந்துள்ளன.

7. யாத்திரிகத்தில் வேதாகமம்

யாத்திரிகம், பனியனது திருப்பயணியின் முன்னேற்றத்தையும் கிறித்தவ வேதாகமத்தையும் முதனூலாகக்கொண்டு பாடப்பட்ட காவியம் என்பதை முன்னரே அறிந்தோம். வேதாகமத்தின் உண்மைகளைக் காப்பியத்தில் விளக்குதல் கிருஷ்ண பிள்ளையின் தலைமை நோக்கங்களுள் ஒன்று என்பதையும் குறிப்பிட்டோம். இந்த நோக்கத்தைக் காப்பியக் கதையில் இணைத்து, காப்பிய ஓட்டத்திதிற்குக் குறைவு நேராவண்ணமும் காப்பியம் அழகிற சிறக்குமாறும் அமைத்துவிடுகிறார். வேதம் 'பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு' என்னும் இருபகுதிகளாய் அமைந்துள்ளது.

பழைய ஏற்பாட்டைக் 'கிரியை உடன்படிக்கை' என்றும், 'புதிய ஏற்பாட்டைக் 'கிருபை உடன்படிக்கை' என்றும் கிருஷ்ணபிள்ளை வழங்குகிறார்[67] இவற்றின் பொருள் ஒற்றுமையைப் 'பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டின் ஒளிப்பிடம்; புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டின் வெளிப்பாடு' என்று விளங்குவர். கிருஷ்ண பிள்ளை இரண்டு ஏற்பாடுகளையும் அவை அமைந்துள்ள வரலாற்றுப் பொருள் விளக்க முறையிலேயே யாத்திரிகத்தில் கையாண்டுள்ளார். வேதாகமத்தைக் கிருஷ்ண பிள்ளை தம் காப்பியத்தில் இரண்டு வகையில் பயன்படுத்தியுள்ளார். ஒன்று: வேதத்தின் பகுதிகளில் செய்திகள் அமைந்துள்ளதுபோலவே முக்கியமான செய்திகளைத் தொகுத்துச் சொல்வது; மற்றொன்று: இரண்டு ஏற்பாடுகளின் செய்திகளையும் படிப்பினைகளையும் காப்பியத்தில் ஆங்காங்கே சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு ஆளுதல்.

யாத்திரிகமும் பழைய ஏற்பாடும்

பழைய ஏற்பாட்டின் முதல் நூலான 'ஆதியாகமம்' விண்ணக மண்ணகங்களின் தோற்றம், முதல் மாந்தர் தோற்றம் முதலானவற்றைச் சொல்லுகிறது. இதன் இறுதி நூலான 'மல்கியா' முதல் தூய நிலையிலிருந்து விழுந்த மக்களை மீட்க மேசியாவாகிய கிறித்துவின் வருகையை முன்னறிவிப்பதுடன் முடிகிறது. ஆதியாகமம் முதல் அதிகாரம் கூறும் செய்திக்கு முற்பட்ட கடவுள் அரசு நிலையினை வேதாகமம் வெளிப்படையாய்க் கூறவில்லை; அங்குமிங்கும் குறிப்பாலுணர்த்துகிறது.

கிருஷ்ண பிள்ளை இவற்றைத்தொகுத்து, வேதத்தின் வெளிப்பாட்டிற்கு முரண்படாத நிலையிலே 'அரசியற்பட,லத்தில் குருவின் மூலம் விளக்குகிறார்.[68] இதனை அடுத்து, சிருட்டிப் படல'த்தில் உலகத் தோற்றம், மாந்தர் தோற்றம், அவர்களின் தூய பக்தி வாழ்வு முதலானவற்றைப் பாடுகிறார். கட்புலனுகும் இவ்வுலகத்தையும் இதன் அடங்கல்களையும் ''கலைமதி மாந்தர்க்கென்றே கையளித் தனர்நங் கர்த்தன்,[69] என்று குறிப்பிடுகிறார். 'இராச துரோகப் படல'த்தில் சாத்தான் விண்ணகத்தில் செய்த புரட்சி, ஆதிமாந்தர்களை வஞ்சித்தமை, அவர்கள் 'சுவர்க்க நீக்கம்' செய்யப்பட்டமை ஆகியவற்றைப் பாடுகிறார். சாத்தானின் அரச துரோகத்தைக் குறிப்பிடும்போதே கடவுள் திருமகனார் மனுமக்களை மீட்கத் தம் திருவுளச் சித்தத்தைக் கடவுளுக்கு வெளிப்படுத்தியதையும் குறிப்பிடுகிறார். இப்பகுதி, மில்டனுடைய 'சுவர்க்க நீக்கம்' என்னும் காப்பியத்தின் சுருக்கம்போலத் தோன்றுகிறது.

அடுத்து, பழைய ஏற்பாட்டின் 39 ஆகமங்களின் செய்திகளைத் தொகுத்துக்கூற முற்படும்போது, முதல் மாந்தர் வீழ்ச்சிக்

குப் பின்னர் அவர்களை மீண்டும் முதல்நிலைக்கு மீட்க வந்த மேசியாவின் திருஅவதாரக் காலம் வரைக்கும் அதாவது, புதிய ஏற்பாட்டின் தொடக்கம் வரையிலான பகுதிகளை, 'விளக்கிச் சொல்லுங்கால்' என முன்னுரைத்தே நிகழ்ச்சித் தொகுப்பைத் தொடங்குகிறார்.

''மேலை நாண்முதல் மேசியா திருவவ தாரக்
காலை மட்டுமங் கங்குதோன் றியநமர் கருதிச்
சால நேர்பிடித் திறைதிரு வுளப்படி அமைத்து
வேலை ஞாலத்து விளக்கிய பாதையை விரிக்கில்''[70]

என்று தொடர்கிறார் கவிஞர். யாத்திரை தொடங்குகிற புது நெறிக்கு முன்னர் இருந்த பழைய நெறியின் இயல்பினை அவனுக்கு உணர்த்துமாற்றான் பழைய ஏற்பாட்டின் செய்திகளைக் காப்பியக் கதையுடன் இணைக்கிறார் கிருஷ்ண பிள்ளை. இவ்வமைப்பிலே பூர்வ பாதைப் படலத்தில், பழைய ஏற்பாட்டின் நிகழ்ச்சிகளைக் கடவுள் ஆபிரகாமுடன் செய்த விருத்த சேதன உடன்படிக்கை தொடங்கித் தொகுத்தளிக்கிறார். சாமுவேல் முதலான தீர்க்கத் தரிசிகளைக் குறிப்பிடுகிறார். இங்கு இடம்பெறாத பழைய ஏற்பாட்டின் நிகழ்ச்சிகள், காப்பியப் போக்கில் கருத்துக்கேற்ப அங்கங்கே இடம் பெறுகின்றன. சில இன்றியமையாத நிகழ்ச்சிகள் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றன.

இரு ஏற்பாடுகளுக்கும் இடையில்

கிறிஸ்துவின் வருகைக்கு வழிகோலிய பழைய ஏற்பாட்டு நெறியைப் ''பூர்வ பாதை'' என்று கவிஞர் கூறினார். இந்தத் திருநெறியை வெளிப்படுத்தும் பழைய ஏற்பாட்டின் இறுதி ஆகமம் மல்கியா, கிட்டத்தட்ட கி. மு. 400இல் இயற்றப்பட்டது. இயேசுவின் வருகையை எதிர்நோக்கிப் பழைய ஏற்பாடு நிறைவடைகிறது. புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் பிறப்புடன் தொடங்குகிறது. பழைய ஏற்பாட்டின் முடிவிற்கும் புதிய ஏற்பாட்டின் தொடக்கத்திற்கும் இடையில் சுமார் 400 ஆண்டுக் கால இடைவெளி இருக்கிறது. இந்த இடைவெளிக் காலத்தைக் கவிஞர் கருத்திற்கொண்டு காப்பியத்தில் பாடியுள்ளார். இக்காலத்தை அவர் குறிப்பிடும்போது: பூருவ பாதைக் காலத்து உண்மைப் பக்தர்களும் தீர்க்கரும் மறைந்தனர்; வரப்போகும் செய்திகளை அறிவிப்பாரும் இல்லை; கடவுள் அமைத்த பூருவ பாதையை இம் மாயவுலகத்திற்குரிய செயல்கள் என்னும் பெரிய புதர் அடைத்துக்கொண்டது; அதனால் அப்பாதை தூர்ந்து விடுகின்றது. இதனை உணர்ந்த வேத ஞானிகள் உள்ளத்தில் கலக்கம் கொண்டனர் என்று கூறுகின்றார்.[71] இக்காலத்தை இருண்டகாலம் என்பர்.

இந்நிலையில், 'மெய்யடியார்களும், இறைவாக்கினர் முன்னுரைத்த செய்திகளை அறிந்தவரும், கடவுள் திருமைந்தர் இவ்வுலகத்திற்கு மீட்பினைச் சம்பாதிக்கவும், பூருவ பாதையைப் புதுப்பிக்கவும் வருவார் என்று எதிர்நோக்கி இருந்தனர்; மழைதரும் மேகக் கூட்டங்களை எதிர்நோக்கி அவைகள் காணப்பெறுமையால் வாடும் பயிர்போல அவர்கள் நெஞ்சத்து வருந்துவாராயினர்' என்று பின்வரும் பாடலில் கூறுவதைக் காண்கிறோம்:

''தீர்க்க மெய்விசு வாசிகள் தீர்க்கர்சொற் றெருண்டோர்
பார்க்கி ரட்சணை யீட்டவும் பார்த்திவன் மருமான்
மார்க்க மிங்கிதைப் புதுக்கவும் வருவர்மற் றென்ற
கார்க்கு லம்வரக் காண்குறுப் பயிரினுட் கரிவார்.''[72]

கிருஷ்ண பிள்ளை இவ்வாறு முன்னுரை அமைத்த பின்னர் புதிய ஏற்பாட்டின் செய்தியைக் கூறுகின்றார்.

யாத்திரிகமும் புதிய ஏற்பாடும்

புதிய ஏற்பாடு கிறித்துவின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதுடன் தொடங்குகிறது. புதிய ஏற்பாட்டில் உள்ள 27 ஆகமங்களையும் அவற்றின் பொருளடக்கத்தின்படி நான்கு உட்பிரிவுகளாக வகுத்துரைப்பதுண்டு. முதலில் உள்ள நற்செய்தி நூல்கள் நான்கும், கிறித்துவின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறுகின்றன. அடுத்த ஒரு நூல் திருச்சபையின் தொடக்க வரலாற்றினைக் கூறுவதாகும். மூன்றாவதாக அமையும் 21 திருக்கடித ஆகமங்கள், கிறித்தவ வாழ்க்கையைப் பற்றியவை. இறுதிப் பிரிவிலுள்ள ஒரு நூல், மாந்தரின் இம்மை வரலாற்றின் ஒளியில் மறுமை வாழ்வை வெளிப்படுத்துவது. கிருஷ்ண பிள்ளை புதிய ஏற்பாட்டின் பொருளைத் தழுவியும் யாத்திரிகத்தை யாத்தார் என்பதை முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம்.

கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றினை-அதாவது, புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு நற்செய்தி நூல்களின் செய்தியை -ஏறக்குறைய 700 பாடல்களில் அகமுருகக் கிருஷ்ண பிள்ளை பாடியுள்ளார். ஆதிபருவத்தில் 'சுவிசேஷ மார்க்கப்படல' த்திலும் குமார பருவத்தில் 'இரட்சணிய சரிதப் படல' த்திலும் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றினை அவருடைய திருஅவதாரம் தொடங்கி விண்ணுலகம் சென்றது வரையில் பாடுகிறார். இதனால் கிறித்துவின் வாழ்க்கை முழுவதும் காப்பியத்தில் பாட வேண்டும் என்பது புலவரின் பேரவா என்பது தோன்றுகிறது. காப்பிய அமைப்பு அதற்கு இடங்கொடுத்து உதவுகிறது. யாத்திரிகனை ஆற்றுப்படுத்தும் குருவும் எழிற்சத்திரத்துப் பக்திமாதும் புலவர்க்காகக் கிறித்துவின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறிவிடுகின்றனர். கிருஷ்ணபிள்ளையே இந்த இடங்களில் குருவும் பக்தி

மாதுமாய்க் காட்சியளிக்கிறார். இவற்றில் இடம்பெறாத கிறித்துவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவும், கிறித்துவின் போதனைகளும் காப்பியத்திற் பல இடங்களிலும் கலந்து வருகின்றன.

கவிஞர் இயேசுபெருமானையும் அவருடைய போதனைகளையும் காப்பியத்தில் பாடியுள்ள திறத்தை ஒரு சில எடுத்துக் காட்டுகளினால் காணலாம். எல்லா உலகங்கட்கும் தலைவராகிய அழிவில்லாத கடவுள் இவ்வுலகம் நிலையான மகிழ்ச்சிகொள்ளும்படி அழகிய ஓர் ஊன் உடலில் வந்து பிறந்தார் என்பதைப் பின் வரும் பாடலில் அழகுணர்ச்சியுடன் பாடுகின்றார் :

''வானேமகி தலமோசுடர் மதியோவயங் காளிர்வான்
மீனேவிரி கடலோமழை முகிலோவொருவிதியில்
ஆனெறி யமைத்தாக்கிய வகிலாண்டவச் சுதனேர்
ஊனுடிய திருமேனிகொண் டுதித்தாருல குவப்ப.''[74]

இயேசுபெருமானின் மலைப்பொழிவு (மத்தேயு 5, 6, 7) எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்த ஒன்று. காந்தியடிகளாரின் உள்ளத்தையும் உணர்வையும் கொள்ளைகொண்ட ஒரு பேருரை. இம்மலைப்பொழிவின் சுருக்கத்தைப் புலவர் மூன்று பாடல்களில் செறிவாக நயம்படக் கூறுவதைக் காணலாம் :

''ஆவியி லெளியவ ரடைவர் வான்கதி
மேவருந் துயருறின் மேவு மாறுதல்
தாவருஞ் சாந்தருக் குலகந் தம்வசம்
ஈவிரக் கம்முளார்க் கிரக்கங் கிட்டுமால்.

நீதியைப் பசித்தவர் நிறையத் தேக்குவர்
ஏதமில் தூயர்கண் டடைவ ரீசனை
பேதமற் றைக்கியம் பிறங்கச் செய்குநர்
காதலர் கடவுள்வேந் தருக்குக் காண்மினே.

நீக்கமி னீதியி னிமித்தந் துன்புறில்
மேக்குயர் வானநாட் டின்ப மேவுவார்
மீக்கிளந் தவரெல்லாம் விபுத நாட்டுள
பாக்கிய மடைந்துயும் பவித்தி ரான்மிகள்.''[75]

சிலுவைத் திருப்பாடுகள்-சிலுவைத் தியாகம் போன்றவைத் திரும்பத் திரும்பக் காப்பியத்தில் வருகின்றன. இரட்சணிய சரிதப்படலத்தில் அவை தலைமையிடம் பெறுகின்றன. அவற்றை இங்குக் கூற முற்படும் கவிஞர் முத்தமிழ் முதலான ஆதிமொழிகளை எல்லாம் முழுதுங் கற்றுத் துறைபோகிய கவிஞராலும் வித்தகன் அடைந்த

ஆன்ம வேதனையை அறிவிக்க இயலாது என்று வியந்து, இதனைப் பேதையாகிய தாம் அறிந்தும், தம் மனத்தில் அதனை அறிவிக்க வேண்டும் என்று எழுந்த பேராசையினாலே பக்தி வயப்பட்டுப் பித்தனைப்போலப் பிதற்றுவதாய் அவையடக்கங்கூறி,[76] பின்னர் 279 திருப்பாடல்களில் ஆண்டவரின் திருப்பாடுகளை அவர் குருசில் உயிர்விடுவது வரையில் பாடுகின்றார், இவை கல்மனத்தையும் உருகச் செய்யும் பாடல்கள்.

பாவத்தின் சம்பளம் நிலையான அழிவு என்று உணராமல் கடவுள் அருளிச்செய்த கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் மக்கள் மீறி வாழ்ந்தனர். அதனால் நீதியான கடவுளின் கோபம் உண்டாயிற்று; மக்கள் கொடிய சாபங்களுக்குள்ளாயினர். மக்களுடைய பாவத்தின் த்ண்டனையும், அகவர்களுடைய சாபங்களும் எம்பெருமான் மீது விழுந்தன. எனவே அவர் சிலுவைக்குச் செல்லவேண்டியதாயிற்று என்று கவிஞர் கூறுகின்றார் :

"பாவத்தின் கூலி நித்ய பயங்கர மெனத்தே ராது
மாபத்து விதியை மாந்தர் வரைந்திட வெழுந்த தேவ
கோபத்தின் மிகுதி யாலே கூடிய குரூர மான
சாபத்தின் திரள்க ளெம்மான் தலைமிசை விழுந்த
வன்றே."[77]

மாந்தரின் நிலையான பேரின்ப வாழ்வில் தாம் கொண்ட பேரன்பினாலேயே அவர் பிணைப்பட்டு விண் வாழ்வினைவிட்டு மண் வாழ்விற்கு வந்து தன்னலமற்ற தமது திருமேனியையும் எலும்பையும் மக்கள் மெய்வாழ்வுக்குத் தியாகம் செய்தார்.[78] மனத்திற் கோபம் வருங்கால் தாம் நினைத்த அளவில் முழு உலகத்தையும் அழிக்கும் வல்லமையுள்ள தெய்வத் திருமைந்தர் பகைஞரால் கட்டப்பட்டபோதும், மாந்தர் மீட்பினைத் தம் மனத்தில் கொண்டவராய் இனி நடக்க வேண்டிய காரியங்களுக்குத் தம்மை ஒப்படைத்து, பேசாது, தம்மைச் சிறைப்பிடித்த மூர்க்கருடன், அவர்கள் நடத்திய வழியே சென்றார் என்கிறார் கவிஞர்:

"திருவுளம்வெ தும்பினேர்க ணத்தினிடை தீயுஞ்
சருவவுல கங்களுமெ னுந்தகைமை சான்ற
ஒருவருரை யாடிலர்மற் றென்றும்வினை வுன்னித்
திருவடிவ ருந்தவிட ரோடுநெறி சென்றார்."[79]

இயேசுபெருமான் வியாழக்கிழமை இரவு சிறைசெய்யப்பட்டார். வெள்ளிக்கிழமை காலையில் அவர் பொந்தியு பிலாத்து முன்னிலையில் நீதிவிசாரணைச் செய்யப்படப்போகிறார். வெள்ளியன்றுதான் அவர் சிலுவையில் அறைப்படுகின்றார். இதுவே உலகம் போற்றும் 'பெரிய வெள்ளிக்கிழமை' என்பது. கவிஞர்

இந்த வெள்ளிக்கிழமையின் தோற்றத்தையும் சிறப்பையும் பின்வரும் இரண்டு பாடல்களில் நயமாக அறிவிப்பதைக் காணலாம்;

''முடிந்த தன்றிரா முன்னவன் முகமறைத் தோங்கிப்
படிந்த பாவமா நடுச்சுவ ரடியொடு பாழ்பட்
டிடிந்து போகந ராத்தும சீவருக் கிரட்சை
விடிந்த தாமென விடிந்தது நலந்தரு வெள்ளி.

துரிய மாமுதல் சீவருக் கிரட்சணை தொகுத்து
விரிய வைத்தபுண் ணியம்பொலி தசும்பென விளங்கிப்
பெரிய வெள்ளியென் றொருபெய ருலகெலாம் பிறங்கற்
குரியதாயவப் பகற்பொழு தோங்கிய துவரி.''[80]

பலர் அவரை நீதிவிசாரணை செய்கின்றனர். ஆளுநர் பொந்தியு பிலாத்து உட்பட யாரும் அவரிடம் ஒரு குற்றத்தையும் காண வில்லை. ஆளுநர் பொந்தியு பிலாத்து புல்லுருவியைப் பாதுகாத்து, அதன் அருகிலுள்ள, புண்ணியத்தின் தன்மையை உண்டாக்கும் பயிரைப் பிடுங்கி அழிப்பவன்போலத் தன் அரியணைமீது கருத்து வைத்து நீதி தவறி இயேசுவுக்குச் சிலுவை மரணத்தீர்ப்பு கொடுக்கிறான்.[81] கிருஷ்ண பிள்ளை இயேசுவின் மரணத் தீர்ப்பின் குற்றம் ஆட்சியாளர்களுடையதன்று; அதற்கு மூலகாரணம் மக்கள் செய்த பாவங்களே என்று கூறுகின்றார்.

''மாரணத் தீர்ப்பிடு மன்ன னேவலன்
கோரணிப் படுத்துமக் கொடிய ரோவலர்
ஆரணன் பாடுக ளனைத்தி னுக்குமுற்
காரண நமது தீக் கருமங் காண்டியால்.''[82]

விண்ணும் மண்ணும் படைத்த கடவுள் திருமைந்தர் தம் படைப்பான மக்களுக்கு மீட்பருளும் பிராயச்சித்தப் பலியான தற்குத் தாம் அறையப்படப்போகின்ற சிலுவையைத் தாமே சுமந்து செல்லும் திருக்காட்சியைக் கவிஞர் பின்வரும் மூன்று பாடல்களில் சொல்லோவியம் தீட்டுவதைக் காணலாம்:

''வள்ளல் குருராயன் மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
எள்ளி யவதரித்த வெம்மான் சருவேசன்
கொள்ளை புரிந்து கொலைத்தீர்ப்புப் பெற்றுவரு
கள்ள ரிருவரொடுங் கல்வாரி நோக்கினர்.

மாரணத்தின் கூரொடிய வன்பேய் தலைநசுங்க
ஆரணஞ்சொல் லுண்மை யவனிமிசை விளங்கப்
பூரணமா ரட்சணிய புண்ணியங்கை கூடுதற்குக்
காரணமாஞ் செய்கைமுற்றக் கல்வாரி நோக்கினர்.

ஈசன் சினநோக்கி யீனநர ரைப்பிணித்த
பாசவினை நோக்கிப் பரிந்துநடு நின்றுவரும்
பேசரிய துன்பப் பிரளயத்தை நோக்கியிந்தக்
காசினியை நோக்கினுர் கல்வாரி நோக்கினுர்.''[83]

தெய்வத் திருமைந்தரை அவர் சுமந்து சென்ற சிலுவை மரத்தில் அறைந்து கொல்கொதாக் குன்றில் தோண்டி நிறுத்தினர். இரக்க உணர்ச்சித் ததும்ப கவிஞர் அதனைப் பாடுகின்றுர்:

''ஈண்டினியான் புகல்வதெவ னெம்பெருமான் திருமேனி
தீண்டினுர் சிலுவையோடு சேர்த்தினுர் செங்கையிலுங்
காண்டகுசே வடியிலும்வெவ் விருப்பாணி கடாவினுர்
நீண்டசிலு வையையெடுத்து நிறுத்தினுர் நிலங்கீண்டு.''[84]

திருமகனுர் குருசில் மாந்தர்பொருட்டுத் துன்புற்றுவந்த நேரத்தில் ஏழு திருமொழிகளைத் திருவாய்மலர்ந்தருளினுர். அவற்றுள் முதல் திருமொழி தம்மைக் குருசில் அறைந்த மக்களுக்காகத் தம் தந்தையாரிடம் மன்னிப்பு வேண்டியதாகும். ''தந்தையே, இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறுர்களே'' (லூக்.23:34) என்று வேண்டினுர். பின்வரும் பாடலில் கவிஞர் இதனைக் கூறும் திறத்தைக் காணலாம்:

''தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென வறிகில்லார் தாஞ்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் மருள்
[வள்ளல்!''[85]

இத்தகைய பண்பினரே கிறித்தவர் என்று சொல்லத்தக்கோர்[86] என்றும், இயேசு உலக மீட்பர் என்பதற்கு இஃது ஒன்றே போதுமான சான்றுகும்[87] என்றும் கிருஷ்ணப்பிள்ளை கூறுகின்றுர்.

தன் ஆன்மாவை இழந்த உலகிற்கு முடிவில்லா மீட்பு வரவும், அடைபட்ட நிலையான மெய்வாழ்வு வாசல் மீண்டும் திறக்கப்படவும், உயிர்வாழ்வுக்குக் காரணர் உயிர்விட்டார் எனவும் அச்சத்தால் மறைந்து கிடக்கும் சிப்பியையும் முத்துமணியையும் எடுத்துச் சேர்ப்பதற்குக் கடலில் குறிப்புடன் மூழ்கி மூச்சையடக்கும் மக்கள்போல கோடிக் கணக்கான ஆன்மாக்களை ஈடேற்றுவதற்கு என்றும் அழிவில்லாத கடவுள் மரணத்தில் ஒடுங்கினுர் என்று பாடுகின்றுர்:

''சீவனை யிழந்தவிச் செகத்துக் கீறிலா
சீவன்வந் திையயவுஞ் செறிந்த நித்திய
சீவவா யிலுக்கொரு திறப்புண்டாக்கவும்
சீவனி னதிபதி சீவன் விட்டனர்.

''கோழை யிப்பியைமணி குறித்துக் கூட்டுதற்
காழிநீர் குளித்துமுச் சடக்கு மாக்கள்போல்
ஏழைந ரான்மகோ டிகளை யிட்டுதற்
கூழியான் மரணத்துள் ளொடுங்கி னரரோ.''[88]

கடவுள் திருமைந்தர் மாந்தர் மீட்பின் பொருட்டு மரணத்திற்குள் ஒடுங்கிக் கல்லறையில் அடக்கம் செய்யப்பெற்ற பின்னர், மூன்றும் நாளில் உயிர்பெற்று எழுந்து, மாந்தற்கு மரணத்துக்குப் பின்னர் நீடு வாழ்வு உண்டு என்பதை விளக்கப்படுத்தினர்.

'' இன்னதோ ரமையந் தன்னி லிருநில வுலகுக் கெல்லாம்
பன்னரு நலத்த வாய பரகதிப் பயனை யீட்டித்
துன்னிய சடவி யோகத் துயிலுணர் சூழ்ச்சி யேபோல்
உன்னத தேவ மைந்த னுயிர்த்தெழுந் தருளிப் போனார்.''[89]

புலவர் திருச்சபைக்காகச் சிறப்பாக ஒரு படலம் அமைத்துப் பாடவில்லை. ஆனால், காப்பியத்தின் முதறபடலமான வரலாற்றுப் படலத்தில் வரும் 10 பாடல்களுள் 4 பாடல்களில் திருச்சபையைப் பாடுகிறார்.[90] கதைப்போக்குடன் தொடர்பில்லாதவையெனத் தோன்றும் இப்பாடல்களைப் பாடியதன் காரணம் என்ன? உலகில் ஒரு தனி உயிரின் இரட்சணிய யாத்திரையை மட்டும புலவர் பாடாமல், திருச்சபையின் இரட்சணிய யாத்திரையையும் உட்பொருளாக வைத்துப் பாடியுளளார் என்னும் பொருள் தொனிக்குமாறு இப்பாடல்கள் அமைந்துள்ளன. மற்றப்படி, முதனூல் கதையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இப்பாடல்கள் இங்குத் தேவையற்றவையெனத் தோன்றுகின்றன. திருச்சபையின் நம்பிக்கையை அறிவதற்குக் கவிஞர் ஒரு தனிப்படலம் அமைக்கிறார். இதனை ஆரணிய பருவத்தில யாததிரிகனும் நம்பிக்கையும் ''மெய்விசுவாசத்தின் இயல்பை''[91] உரையாடிக்கொண்டு செல்லுவதுபோல் கூறுகின்றார். மேலும் திருச்சபையைப் பற்றிய குறிப்புகள் காப்பிததினூடே பல இடஙகளில் வருகின்றன.

திருச்சபையின் வாழ்வே கிறித்தவ வாழ்க்கை. கிறித்தவனது யாத்திரை கிறிததவ வாழ்க்கை விளக்கமாய் அமைகிறது. எனவே, கிறித்தவ வாழ்வியற கூறுகள் காப்பிய முழுவதிலும் அமைந்துள்ளன. புலவர், புதிய ஏற்பாட்டின் இறுதி நூல் கூறும்

மக்களின் மறுமை வாழ்வைச் சொல்லோவியப்படுத்துவதை இரட்சணிய பருவத்திற் காண்கிறோம். இதன் தொடர்பாக இப் பருவத்தில் வரும் சுவர்க்காரோகணப் படலத்தைக் குறிப்பிட லாம்.

வேதாகமம் முழுவதிலும் ஒரு பொதுக்கண்ணோட்டம் செலுத்தினால், புதிய ஏற்பாட்டின் இறுதி ஆகமமான வெளிப் படுத்தல் ஆகமம் காட்டும் விண்ணக வாழ்வு, வேதாகமத்தின் முதல் நூலான ஆதியாகமத்தில் முதல் மாந்தர் வீழ்ச்சிக்கு முன்னர் இருந்த பேரின்ப வாழ்வு திரும்பப்பெற்ற நிலையே என்பது புலப்படும். இது, மில்ட்டனது 'சுவர்க்க நீக்கம்', 'சுவர்க்கம் மீண்டும் அடைதல்' ஆகிய இரு காப்பியங்களையும் இணைத்து எண்ணுதலைப்போன்றது. கிருஷ்ண பிள்ளை வேதாகமத்தின் முழுப் பார்வையைக் கருத்திற் கொண்டவராய்க் காப்பியம் படைத் திருக்கிறார் என்பது தோன்றுகிறது. காப்பியத் தொடக்கத்தில் முதல் மாந்தர் வீழ்ச்சிக்கு முன்னர் இருந்த விண்ணகவரசின் பேரின்ப வாழ்வைப் பரமராச்சியப் படலத்திலும் அரசியற்படலத் திலும் பாடுகிறார் என்பதைக் குறிப்பிட்டுள்ளோம். யாத்திரிகன், இரட்சணிய யாத்திரிகத்தில், முதல் மாந்தர் வீழ்ச்சியின் விளை வால் சாத்தானது ஆட்சிக்குட்பட்ட உலகிற் கிறித்துவின் திரு வருளால் முன்னேறிக் காப்பிய முடிவில் பேரின்பம் துய்க்கிறான். இப்பேரின்ப வாழ்வின் சொல்லோவியம் முதல் மாந்தர் வீழ்ச்சி யின் முன்னர் இருந்த பேரின்ப வாழ்வை மீண்டும் அனுபவிப்பது போலத் தோன்றச் செய்கிறார். முழு வேதாகமத்தையும் கிருஷ்ண பிள்ளை காப்பியக் கதையுடன் இணைத்துக் காப்பிய ஓட்டத்துக்கு இடையறவு நேராவண்ணம் காப்பியத்தில் முழுமையாகக் காட்டுந் திறன் போற்றத்தக்கது.

8. பிற இலக்கியத் தாக்குறவு

எந்தப் புலவனும் முழுக்கமுழுக்கத் தனக்கே சொந்தமான இலக்கியப்பொருளை உடையவனாய் இலங்குவதில்லை. அவனது படைப்பின் பொருட்செறிவும் அவனுக்கு முன்னர் மறைந்துபோன புலவர்களை அவன் போற்றியுள்ள திறத்திற்கு ஏற்ப அமைந்திருக் கும். எனவே, ஒரு புலவனைத் தனித்து மதிப்பிடுதல் இயலாது. இறந்த கால இலக்கியச் சூழலில் அவனை வைத்து ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். இது வரலாற்றுத் திறனாய்வுக்குப் பயன்படு வதுடன் முருகியற் கொள்கைக்கும் ஏற்றதாய் இருக்கிறது என்பது திறனாய்வாளர் கருத்து.[91] டாக்டர் வ. சுப. மாணிக்கம், 'கம்பர்' என்னும் தம்முடைய திறனாய்வு நூலில், 'பல தமிழ்க்காப்பியங் களுக்குப் பின் தோன்றியது இராமாயணம். அதனால், முன்னைக்

காப்பியங்களின் நல்லநல்ல கூறுகளைக் கம்பர் தழுவிக்கொண்டார் என்று சொன்னல், அது குறைவன்று. முன்னோர் மொழி பொரு ளேயன்றி அவர் சொல்லும் பொன்னே போற் போற்றுதல் என்ற நெறி இலக்கணத்துக்குக் கூறப்பட்டதாயினும், இலக்கியத்துக்கும் கொள்ளலாம்'[32] என்கிறார். எனவே, பின் தோன்றிய ஒரு காப்பியத்தில் முன் தோன்றிய சிறந்த இலக்கியங்களின் தாக்குறவு நிகழ்தல் இயல்பே என்பதை அறிகிறோம்.

கிருஷ்ண பிள்ளையே இரட்சணிய யாத்திரிகத்தில் பிற இலக்கி யங்களின் செல்வாக்குக் குறித்துத் தமது முன்னுரையில் குறித்துள் ளார்:

''இந்நூல் செய்யுள் நடை, பெரும்பாலும் ஸ்ரீமத் கம்ப ராமாயணச் செய்யுள் நடையையும், அதன் போக்கையும் அநு சரித்தே இ ய ன் ற மாத்திரம் அமைக்கப்பட்டது. ஏனெனில் கம்பராமாயணமொன்றே கற்றோரெவரும் வியந்து, புகழ்ந்து, மெச்சத்தக்கது.

'கம்ப நாடன் கவிதையைப்போற்
கற்றோர்க் கிதயங் களியாதே'
என்பது உண்மை மொழியன்றோ? அல்லாமல்—

'முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவம்'

என்ற வண்ணம், கம்பர், திருவள்ளுவநாயனர் முதலிய சில மகா கவிகளின் கருத்தும், பொருளும், சிறுசிறு சொற்றொடர் களும் இந்நூலகத்து அரதன கசிதம்போலப் பொருந்தப் பதிக்கப் பட்டன. அவைகள் இடைக்கிடையே மிளிரக் காண லாம்.''[33]

மேலேகண்ட கூற்றில் கிருஷ்ண பிள்ளை முதலில் கம்ப ராமாயணத்தையும் அடுத்துத் திருக்குறளையும் எவ்வளவு போற்றுகிறார் என்பதும் புலப்படுகிறது அன்றோ? கிருஷ்ண பிள்ளை தமது காப்பியத்தில் முன்னோர் இலக்கியங்களுள் சிறப்பாகக் கம்பராமாயணத்திலும் திருக்குறளிலும்—தாம் பெற்ற பயனைக் குறிப்பிடுகிறார். சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருவாக்குப்புராணம், முத்திவழி அம்மானை முதலான காப்பியங் களின் தாக்குறவும் யாத்திரிகத்திற் காணப்படுகின்றன என்றா லும், இங்கு விரிவினை அஞ்சி சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள கம்பராமாயணம், திருக்குறள் இரண்டின் தாக்குறவைமட்டும் காண்போம்.

இரட்சணிய யாத்திரிகத்தில் கம்பராமாயணம்

கம்பர், 'தமக்கு முன்தோன்றிய காப்பியங்களின் வனப்புகளை வடித்துக்கொண்டும், தம் மதிநுட்பத்தால் நுண்ணிய பல வனப்புகளைப் படைத்துக்கொண்டும், உவமை இல்லா ஒரு பெருங்காப்பியத்தை ஆக்கினார்; பின்னொரு புதிய காப்பியத் தோற்றத்திற்கு இடமில்லாதபடி இராமாயணத்தைக் காப்பிய எல்லைக் கல்லாக நிறுத்தினார்'[94] என்று டாக்டர் வ. சுப. மாணிக்கம் கருதுகிறார். கிருஷ்ண பிள்ளை, 'காப்பிய எல்லைக் கல்லாக' நிறுத்தப்பெற்ற இராமாயணத்தின் போக்கையும் செய்யுள் நடையையும் பின்பற்றியே இரட்சணிய யாத்திரிகம் என்னும் பெருங்காப்பியத்தைப் படைத்துச் சிறப்படைந்துள்ளார். காப்பியப் படைப்பின் பல பண்புகளில் கம்பராமாயணத்தின் எல்லையையும் கடந்து வேறு ஓர் எல்லைக் கல்லையும் தமது காப்பியத்தின் வாயிலாக நிறுத்தி வைத்துள்ளார் எனல் மிகவும் பொருந்தும். கம்பராமாயணத்தின் போக்கினையும் செய்யுள் நடையையும் கிருஷ்ண பிள்ளை பின்பற்றின ஆற்றை இனி ஆராயலாம்.

இரட்சணிய யாத்திரிகத்தின் கதை மூலம் பனியனது நூல் என்பதுபோல இதன் வடிவ மூலம் கம்பராமாயணம் எனலாம். பனியனது நூல் காப்பியமாக்கப்படுவதற்குக் காப்பியப் பண்புகள் பல தேவைப்பட்டன. காப்பியத்தின் தொடக்கத்தில் அமையும் வாழ்த்து, வணக்கம், மலை, கடல், நாடு, நகர் முதலான வருணனைகள், பெரும் பிரிவு சிறு பிரிவு ஆகிய அமைப்புகள் முதலானவற்றைச் சுட்டலாம். இவை போன்ற காப்பியப் பண்புகளைக் கருத்திற்கொண்டும் கிருஷ்ண பிள்ளை கம்பராமாயணத்தின் போக்கை அடியொற்றிக் காப்பியம் செய்திருப்பதாகக் கூறினார் என்று கருதலாம்.

இரட்சணிய யாத்திரிகத்தின் பெரும் பிரிவு, சிறு பிரிவுகள் பெயர் அமைப்பிலும் கம்பராமாயணத்தின் தாக்குறவு காணப்படுகிறது. இராமாயணத்தில் பெரும்பிரிவு 'காண்டம்' என்றும் சிறு பிரிவு 'படலம்' என்றும் வழங்குகிறது. கிருஷ்ண பிள்ளை பெரும்பிரிவைப் பருவம் என்றும், சிறு பிரிவைப் படலம் என்றும் வகுத்துக்கொண்டார். இதனை முன்னரும் குறிப்பிட்டிருக்கிறோம். பெரும்பிரிவுப் பெயர்களுள் இராமாயணத்தின் மூன்றாவது ஆரணிய காண்டம், யாத்திரிகத்தில் நான்காவது ஆரணிய பருவம் என அமைகிறது. பாரதத்தில் பெரும்பிரிவு 'பருவம்' என்றும் சிறு பிரிவு 'சருக்கம்' என்றும் அமைந்துள்ளது. கிருஷ்ண பிள்ளை பாரதத்தில் உள்ளதுபோலப் பெரும்பிரிவைப் 'பருவம்' என்றும், சிறு பிரிவை இராமாயணத்தில் உள்ளதுபோலப் 'படலம்' என்றும் வகுத்துக் கொண்டார்.

அட்சன் என்பவர் கம்பராமாயணத்தின் காண்டப் பிரிவுப் பொருளை ஒத்த அமைதியில் கிருஷ்ண பிள்ளை இரட்சணிய யாத்திரிகத்தில் ஐந்து பருவங்களின் பொருளை வகுத்துள்ளார் என்று எண்ணுகிறார்.[16] ஆனால், கிருஷ்ண பிள்ளை அவ்வாறு செய்யவில்லை என்பது தோன்றுகிறது. ஏன் எனில், கிருஷ்ண பிள்ளை, பருவங்கள் வகுத்தபோது முதனூலின் கதை வளர்ச்சிக்கு ஏற்ப வாழ்க்கைப் பருவங்கள் அல்லது முன்னேற்ற வளர் நிலைகள் என்ற அமைவில் வகுத்துள்ளார். இதனை முன் இயலில் அறிந்தோம். மேலும், கம்பராமாயணத்திற் பெரும்பிரிவாக ஆறு காண்டங்கள் உள்ளன; ஆனால், இரட்சணிய யாத்திரிகத்தில் ஐந்து பருவங்களே உள்ளன.

கிருஷ்ண பிள்ளை கம்பரைப்போலவே காப்பியத்தைத் தொடங்குகிறார்:

'உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலு நீங்கலா
அலகிலாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே''[17]

என்பது, இராமாயணத் தொடக்கப் பாடல். பின்வரும் இரட்சணிய யாத்திரிகத் தொடக்கப் பாடலும்,

''உலகம் யாவும் புரந்தரு ளுன்னதர்
அலகில் சோதி யருட்கட லாரணத்
திலகு மெய்த்திரி யேகர் பதத்துணை
குலவி யென்னெஞ் சிடங்குடி கொண்டவே.''[18]

என 'உலகம் யாவும்' என்றே தொடங்கி இறைவரின் பொது இயல்பைப் போற்றுதல் காணலாம்.

இரட்சணிய யாத்திரிகப் படலங்களில் காணப்படும் கம்பராமாயணப் படலச் செல்வாக்கு இருவகையில் வெளிப்படுகிறது. ஒன்று, பெயரமைப்பு; மற்றொன்று, பொருளமைப்பு. பாலகாண்டத்தின் அரசியற்படலம் ஆதி பருவத்தில் அரசியற்படலம் என்னும் பெயரிலேயே அமைகிறது. ஆனால், பொருள் வேறு. இப்படலத்தில் விண்ணுலக அரசியல் பேசப்படுகிறது. பாலகாண்டத்தின் 'நாட்டுப்படலம், நகரப்படலம், ஆற்றுப்படலம், என்னும் மூன்றும் இணைந்து இரட்சணிய யாத்திரிகத்தில் பரமராச்சியப் படலமாய் உருவெடுக்கிறது. நாடு, நகர், ஆறு இவற்றின் சிறப்புகள் இப்படலத்திலேயே பாடப்படுகின்றன. அரசியற் படலம் பரமராச்சியப்படலம் போன்ற படலங்களில் கம்பரின்

முத்திரையை அப்படியே காணலாம். கம்பர் இத்தகைய இடங்களில் கிருஷ்ண பிள்ளைக்குக் காப்பியம் பாடுவதற்குக் கை கொடுத்து உதவுகிறார். ஆற்றின் இயல்பை வருணிக்கும் கம்ப ராமாயணப் பாடல் ஒன்றையும் யாத்திரிகத்தின் பாடல் ஒன்றை யும் பார்த்தால், இப்பகுதிகளில் இராமாயணத்தின் தாக்குற வினை நன்கு தெளியலாம்.

''முல்லையைக் குறிஞ்சி யாக்கி மருதத்தை முல்லை யாக்கிப்
புல்லிய் நெய்த றன்னைப் பொருவரு மருத மாக்கி
யெல்லையில் பொருள்க ளெல்லா மிடைதடு மாறு நீராற்
செல்லுறு கதியிற் செல்லும் வினையெனச் சென்ற தன்றே''[99]

என்பது கம்பர் வாக்கு. இதன் வடிவத்தையே,

''வீற்றுவீற் ருகிச் சென்ற வகைநில வேறு பாட்டை
மாற்றிநன் மருத வைப்பா வளம்படுத் தறத்தை யோம்பி
ஏற்றமுந் தாழ்வு மின்ரு யெங்குமோர் சமமா யீண்டும்
ஆற்றல்சால் கடவுள் வேந்த ஞணையைப் பொருவும் வாரி''[100]

என வரும் இரட்சணிய யாத்திரிகப் பாடல் கொண்டுள்ளது வெளிப் படை.

இவையே அன்றி, இன்னும் பல இடங்களில் இராமாயணத் தின் தாக்குறவினைக் காணலாம். குமார பருவத்தில் வரும் இரட் சணிய் சரிதப்படலத்தில் இயேசு எருசலேம் நகரத்திலிருந்து கொல்கொதாக் குன்றினை நோக்கிச் செல்லும் நகர்நீங்கு காட்சி யில் கம்பர் காட்டும் இராமனது அயோத்தி நகர் நீங்கும் காட்சியைப் பார்க்கலாம். அயோத்தியா காண்டத்தில் வரும் 'வனம்புகு படலம்' பெயரளவில் நிதான பருவத்தில் 'வனம் புகு படலம்' என்றே அமைந்துள்ளது. அழிம்பன் தோல்விப் படலத்தில் அழிம்பனும் கிறித்தவனும் செய்யும் போரில், இராமனும் இராவணனும் செய்த போரின் சாயல்படிந்துள்ளது. கிட்கிந்தையின் பம்பைவாவி வருணனையை ஆரணிய பருவத்தில் வரும் விடாதகண்டப் படலத்தில் அமைந்துள்ள சீவநதி வருணனையில் பார்க்கலாம்.[101] இவ்வாறு காணத்தக்க இடங்கள் இன்னும் பல உண்டு.

இரட்சணிய யாத்திரிகத்தின் போக்கிலும் செய்யுள் நடை யிலும் கம்பராமாயணத்தின் தாக்குறவைக் கண்டோம். கம்பரா மாயணத்தின் பெருஞ்சிறப்புக்குச் சிறப்பான காரணங்களுள் ஒன்று பாத்திரப் படைப்பு. கம்பரின் பாத்திரப்படைப்புகளின் செல்வாக்கு யாத்திரிகத்தில் பல இடங்களில் காணப்படுகின்றது. கிருஷ்ண பிள்ளை படைத்துள்ள நடைமுறை வாழ்வியல் பாத் திரங்களினுலும் கிறித்தவக் கம்பராக விளங்குகிறார். பாத்திரப் படைப்பின் செல்வாக்கினை ஓரிரு எடுத்துக்காட்டுகளில் காணலாம்.

கிறித்தவனின் முத்தி இலக்கினை அழிக்க முற்படும் தீய சக்திகளின் மொத்தமாய்த் தோற்றமளிக்கும் அழிம்பனுடன்-சாத்தானுடன் கிறித்தவன் போரிடுதல் குறித்து வேறு இடத்திலும் குறித்திருக்கிறோம். கிறித்தவனும் அழிம்பனும் செய்யும் போர், நன்மை, பரஞானம், ஒளி, நல்லறம் ஆகியவற்றைத் தீமை, அறியாமை, இருள், பாவம் என்பன எதிர்த்துப் போரிடுதல் போன்றது என்று கூறுகின்றார்:

''நன்மைபர ஞானமொளி நல்லறமி வற்றைத்
தின்மையறி யாமையிருள் தீமறம டர்த்து
வன்மைமிகு வெஞ்சம மலைத்திடுதல் போலாந்
தொன்மறைவ லானெடுப சாசமர்தொ டுத்தல்''[102]

இதில் கிறித்தவனின் பண்புநலனும் அழிம்பனாகிய சாதானின் பண்புநலனும் புலப்படுகிறது. காப்பியத்தில் தீமைக்குத் தலைமைப் பாத்திரம் சாத்தான்; நன்மைக்குத் தலைமைப் பாத்திரம் கிறித்தவன். இந்தப் பாடலின் பண்புநலனில் கம்பராமாயணத்தின் முத்திரை பதிந்துள்ளதைக் காணலாம். இராமனும் இராவணனும் போரிடுகின்றனர். இப்போரினை இருவருடைய பண்புநலத்தினை உவமையாக்கிக் கம்பர் பாடுகின்றார். கருமமும், முதிர்ந்த நிலையில் தோன்றிய ஞானமும்போலவும், அவிஞ்சையும் விஞ்சையும்போலவும், வலிய கொடிய பாவமும் அழிவில்லா தருமமும் போலவும் இராவணனும் இராமனும் எதிர் எதிராகச் சென்று தாக்கினர் என்கிறார். நன்மைக்குக் காப்பியத்தின் தலைமைப் பாத்திரம் இராமன்; தீமைக்குக் காப்பியத்தின் தலைமைப் பாத்திரம் இராவணன். பாடலைப் பாருங்கள்:

''கரும முங்கடைக் கண்ணுறு ஞானமும்
அருமை சேரு மவிஞ்சையும் விஞ்சையும்
பெருமை சால்கொடும் பாவமும் பேர்கலாத்
தரும மும்மெனச் சென்றெதிர் தாக்கினார்''[103]

இறுதியில் இரண்டு காப்பியங்களிலும் அறம் வெல்லுகிறது: அதர்மம் (பாவம்) அழிகின்றது.

கிருஷ்ணபிள்ளை, கம்பரைப் பின்பற்றாமல், தவிர்த்த இடங்களும் உண்டு. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று சிருங்கார ரசத்தைப் பற்றியது. கம்பராமாயணத்தின் காமச் சுவை மிகுதியைத் திறனாய்வாளர் எடுத்துக்காட்டியுள்ளனர். காப்பியத்தில் இச் சுவைக்கு வழிகோலியவர் சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் என்று பேராசிரியர் தெ.பொ.மீ. குறித்துக்காட்டுகிறார்.[104] கிருஷ்ணபிள்ளை, இச்சுவை தொடர்பான உவமையையும் பயன்படுத்தவில்லை. தாம் சிற்றின்பம் தவிர்த்துப் பாடுதலை நூற்

பொருள் கூறியவிடத்தே 'சிற்றின் பத்திறம் திருத்திய கர்தையு மன்று'[105] என்று குறிப்பிட்டுள்ளார். இரட்சணிய யாத்திரிகம் பேரின்பம் பாடும் தன்னிகரற்றப் பெருங்காப்பியமே யாகும். கிருஷ்ணபிள்ளை கம்பரின் நடையை அடியொற்றிய பாங்கு பின்னர் ஆராயப்படுகிறது.

இரட்சணிய யாத்திரிகத்தில் திருக்குறள்

கிருஷ்ண பிள்ளை தம்முடைய இலக்கியப் படைப்புகளில் திருக்குறளை மிகுதியாய்ப் போற்றியுள்ளார். 'இரட்சணியக் குறள்' என்னும் ஒரு நூலை இவர் எழுதினர் என்பதும் கேள்விப் படுகிறோம். கம்பரை அடியொற்றிக் காப்பியம் செய்ததுபோல வான் புகழ் வள்ளுவரை அடியொற்றி ஒரு நூல் செய்ய இவர் முனைந்திருக்கலாம். ஆனல், அந்நூல் நமக்குக் கிட்டவில்லை.[106] அதறகு ஈடாக அவர் திருக்குறளைத் தம் நூல்களில் போற்றி யுள்ள பண்பே கிட்டியுள்ளது. திருக்குறள் தோன்றிய காலத் துக்குப் பின் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் அதன் தாக் குறவு இல்லாத தரமான தமிழ் இலக்கியமே இல்லை எனலாம்.

கிருஷ்ண பிள்ளை யாத்திரிகத்தில் முழுக்குறளையும், குறளின் பொருளையும், தொடரையும் எடுத்தாண்டுள்ளார்; காப்பியத்தை இலக்கிய வளப்படுத்தியுள்ளார். காப்பிய முழுவதிலும் ஏறத் தாழ 70-க்கு மேற்பட்ட குறட்பாக்கள் இடம்பெற்றுள்ளன. இரட்சணிய யாத்திரிகத்தில் திருக்குறளின் செல்வாக்குக் குறித்துத் தனியாக ஒருநூல் விரைவில் வெளிவரும் நிலையி லுள்ளது. யாத்திரிகத்தில் திருக்குறளின் தாக்குறவினைச் சில எடுத்துக்காட்டுகளின் மூலம் இங்கே காண்போம்.

யாத்திரிகன் தன் உறவினர்க்காக மிகவும் இரக்கமுற்று, அவர்களை எதிர்நோக்கி வரும் பேரழிவிற்கு அவர்கள் தப்பி உய்ய வேண்டும் என விரும்பி, அவர்களுக்கு அறிவுரை வழங்குகிறன். 'துன்பம் வரும் வரையில் காத்து இருக்க வேண்டா; துன்பம் வந்த பிறகு தப்பிச் செல்லலாம் என்று இருந்தால், வாழ்க்கை எரிமுகத்து வைக்கப்பெற்ற வைக்குவைபோலக் கெடும்' என்று எச்சரிக்கிறர் பின்வரும் பாடலில்:

''வருமுன்னர்க் காவா தார்க்கு வாழ்க்கையெத் துணைய [வேனும்
எரிமுன்ன ருற்றவைத்தூ றெனக்கெடு மென்பரின்னல்
பொருமுன்னர் விலகி யோடிப் புகலிட மாய கோமான்
திருமுன்ன ரடையி னித்ய சீவனை யடைதல்திண்ணம்''[107]

இந்த இரட்சணிய யாத்திரிகப் பாடலில் புலவர்,

''வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக்கெடும்''[108]

என்னும் திருக்குறளை எடுத்து இழைத்திருப்பதைப் பார்க்கலாம்.

திருவள்ளுவர், 'சொல்லும் செயலும் ஒவ்வாது வெவ்வேருய் நடக்கின்றவர்களின் நட்பானது, நனவின்கண் மட்டுமல்லாது கனவின்கண்ணும் துன்பம் தருவதாகும்; எனவே, அத்தகையோர் நட்பினை விடுத்தல் வேண்டும்' என்கிருர் பின்வரும் குறளில்.

''கனவிலும் இன்னது மன்னே, வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.''[109]

இக்குறளுக்கு விளக்கவுரை போல யாத்திரிகத்தில் ஒரு பாடல் அமைந்துள்ளது. யாத்திரிகன் செந்நெறிப் பயணத்தில் அலப்பன் என்பவனைச் சந்திக்கிருன். அவன்வெற்றுவாய்ப் பேச்சுப் பக்தனைக் காண்கின்ருனேயன்றி, அவனுடைய செயல் சொல்லுடன் சிறிதும் பொருந்தி வரவில்லை. அதனை உணர்ந்துகொண்ட யாத்திரிகன், அத்தகையோர் நட்பு பொய்போன்றதான கனவிடத்தும் துன்பம் தருவதாகும் என்பது 'வித்தகநூல் துணிபாம்' என்று குறிப்பிடுகிருன். இங்குப் புலவர் திருக்குறளை 'வித்தக நூல்' என்று போற்றுகிருர். இதோ, அப்பாடல்:

''செய்யும்வினை யொன்ருகச் செப்புமொழி பிறிதொன்ரு
வையகத்து நடிக்கின்ற மறவோர்தங் கூட்டுறவு
பொய்யாய கனவிடத்தும் பொல்லாங்கு தருமென்ருல்
மெய்யாயவறம்விளக்கும்வித்தகநூற் றுணிபென்ருன்.''[110]

நிறைவுரை

கிருஷ்ண பிள்ளை மரபுவழிக் காப்பியக் கவிஞராய் காட்சியளிக்கிருர். பழமைக் காப்பிய மரபுகளைப் போற்றியும், புதிய மரபுகளை வகுத்துக்கொண்டும், இரட்சணிய யாத்திரிகத்தைப் பெருங்காப்பியமாய் இயற்றியுள்ளார். இஃது இவரது மணி முடிப்படைப்பு. தமிழ்மொழியின் தன்னிகரற்ற காப்பியமாய் விளங்கும் கம்பரது இராமாயணத்தின் போக்கையும் நடையையும் அடியொற்றிக் காப்பியம் படைத்துக் கிருஷ்ண பிள்ளை வெற்றிபெற்றுள்ளார். இவரைக் 'கிறித்தவக் கம்பர்' என வழங்கும் வழக்கு, உண்மை வழக்கே என்பது உறுதிப்படுகின்றது. தமிழகம் புகுந்த புதிய சமயம் ஒன்றிற்குத் தமிழ்ப் புலவர் ஒருவர் படைத்தளித்த ஒரே புதிய பெரிய கிறித்தவக் காப்பியமாய் தன்னிகரற்று இரட்சணிய யாத்திரிகம் இலங்குகிறது என்பது மிகைக் கூற்ருகாது.

1 மு. வரதராசனுர், இலக்கிய மரபு, 2 ஆம் பதிப்பு, பக். 57
2 தமிழ்க் கலைக்களஞ்சியம், தொகுதி 3, பக். 505
3 எஸ். வையாபுரிப் பிள்ளை, காவிய காலம், 2 ஆம் பதிப்பு, பக். 9-11.
4 தண்டியலங்காரம், நூற்பா-8.
5 சோம இளவரசு, காப்பியத்திறன், பக். 135
6 பாயிரம்-5.

7 நன்னூல், நூற்பா-2
8 ஷை., 51-52
9 ஷை., 53
10 மேற்கோள்: மு. வரதராசனார் op. cit., பக். 60
11 சோம இளவரசு, op. cit., பக். 135-136
12 காண்க: இயல் இரண்டு: பெரும் பிரிவுகள், பக். 35-36
13 இ யா., சிறப்புப் பாயிரம், 14.
14 கி.வா. ஜெகந்நாதன், தமிழ்க் காப்பியங்கள், 2ஆம் பதிப்பு, பக். 146
15 தமிழ்விடு தூது, 34.
16 ஆதி பருவம்: பரமராச்சியப் படலம், 1
17 ஷை., 2
18 ஷை., 44
19 ஷை., 62
20 சம்பாஷணைப் படலம், 20
21 அவநம்பிக்கைப் படலம், 5
22 குமார பருவம்: காட்சிப் படலம், 82
23 மு. வரதராசன், op. cit., பக். 59
24 கி.வா. ஜகந்நாதன், op. cit , பக். 171
25 இ.யா. 3ஆம் பதிப்பு, பக். V-VI
26 Encyclopaedia of Religion and Ethics, Vol. I, P. 238
27 ரெனி வெல்லாக் & ஆஸ்டின் வாரன், (தமிழாக்கம்: எல். குளோரியா சுந்தரமதி), இலக்கியக் கொள்கை, பக். 291
28 நிதான பருவம்: மரணச் சுழலிறுத்த படலம், 47.
29 அவநம்பிக்கைப் படலம், 6
30 வியாக்கியானி அரமனைப் படலம், 96
31 மெய்யுணர்ச்சிப் படலம், 2
32 ஷை., 3
33 ஷை., 4
34 ஷை., 1
35 இரட்சணிய பருவம்: சுவர்க்காரோகணப் படலம், 106
36 வ. சுப. மாணிக்கம்: கம்பர், பக். 116-117
37 கிருஷ்ண பிள்ளை கிறித்தவரான வரலாறு பக். 37.
38 நிதான பருவம்: இரட்சணிய நவநீதப் படலம், 83
39 ஷை., 85
40 ஔவையார்: நல்வழி, 2
41 இரட்சணிய நவநீதப் படலம், 1-100
42 இரட்சணிய பருவம்: தர்மசேத்திரப்படலம், 4-8
43 சிருட்டிப் படலம், 11-14
44 மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, பக். 149-150
45 ப. அருணாசலம், பக்தி இலக்கியம் பக். 18
46 நிதான பருவம்: அழிம்பன் தோல்விப் படலம், 75, 76
47 காண்க: ஷை., 79-85
48 ஷை., 102-107
49 அழிம்பன் தோல்விப் படலம், 102-108
50 நவநீதப் படலத்தில் நீக்கப்பெற்ற 15 பாடல்கள்: 25, 35, 39, 41, 42, 43-51, 53
51 கலைக்களஞ்சியம், தொகுதி இரண்டு. பக். 36
52 D. Hudson, Life and Times of H.A. Krishna pillai, P. 468

53 கவிசேட மார்க்கப்படலம்: 174 + இரட்சணிய சரிதப் படலம் 495 = 669
54 இ.யா. 3ஆம் பதிப்பு, பக். IX
55 சம்பாஷணைப் படலம், 12
56 ,, 15
57 நிதான பருவம்: வனம்புகு படலம், 1
58 நிதானி நட்புப் படலம் 8
59 ஆரணிய பருவம்: கிறித்தவன் கதிவழி கூடிய படலம், 22
60 S.H. Butcher, Aristotle's Theory of Poetry and Fine Art, 3rd Indian Edition, pp. 54-55
61 Frank N. Magill (Ed.), Master Pieces of World Literature in Digest Form, pp. 54-55
62 S. Farrar, English Literature, P. 100
63 ஆதி பருவம்: குருதரிசனப் படலம், 8 3
64 ,, 11
65 ,, 12
66 ஆதி பருவம்: லௌகிகப் படலம் 6-10
67 இரட்சணிய யாத்திரிகம், 3ஆம் பதிப்பு, பக். IV
68 காண்க, ஆதிபருவம்: அரசியற் படலம்.
69 ,, சிருஷ்டிப்படலம் 3
70 ,, பூர்வ பாதைப் படலம் 11
71 கவிசேஷ மார்க்க படலம் 1-2
72 ,, 3
73 இது வேறு இடங்களிலும் இந்நூலுள் குறிப்பிடப்பட்டுள்ளது
74 கவிசேஷ மார்க்கப் படலம் 19
75 கவிசேஷ மார்க்கப்படலம், 47-491
76 இரட்சணிய சரிதப்படலம், 104; மேலும் காண்க 121
77 ,, 110
78 இரட்சணிய சரிதப் படலம், 161, 163
79 ,, 153
80 ,, 206, 207
81 இரட்சணிய சரிதப் படலம், 255-271
82 ,, 272
83 ,, 309-311
84 ,, 340
85 இரட்சணிய சரிதப் படலம் 342
86 ,, 343
87 ,, 344
88 ,, 381, 382
89 ,, 433
90 வரலாற்றுப் படலம் 2-5
91 ஆரணிய பருவம்: விசுவாச விளக்கப் படலம் 60
92 T. S. Eliot, The Sacred Wood, Reprint, P. 49
93 வ.சுப. மாணிக்கம், கம்பர், பக். 51
94 இரட்சணிய யாத்திரிகம், 3ஆம் பதிப்பு, பக். vi
95 வ.சுப. மாணிக்கம், op. cit., பக். 101
96 Dennis Hudson, op. cit., pp. 483, 484
97 கம்பராமாயணம்: தற்சிறப்புப் பாயிரம், கடவுள் வணக்கம் 1
98 ஆதி பருவம், வரலாற்றுப் படலம் 1

99 கம்பராமாயணம்: பாலகாண்டம், ஆற்றுப்படலம் 17

100 ஆதி பருவம்: பரமராஜ்யப் படலம் 8

101 ஒ.நோ. இரட்சணிய யாத்திரிகம்: ஆரணிய பருவம், விடாதகண்டப் படலம் 7-16

102 அழிம்பன் தோல்விப் படலம் 62

103 கம்பராமாயணம், யுத்தகாண்டம், இராவணன்வதைப்படலம் 24

104 T.P. Meenakshisundarn, A History of Tamil Literature, p. 95

105 இ.யா., சிறப்புப்பாயிரம் 14

106 காண்க இயல் ஒன்பது.

107 ஆதி பருவம் : மெய்யுணர்ச்சிப் படலம் 36

108 குறள் 435

109 குறள் 819

110 நிதான பருவம்: அலப்பலை வரைந்த படலம் 38

இயல் நான்கு

காப்பிய நடை நலம்

இரட்சணிய யாத்திரிகத்தின் செய்யுள் நடை, கம்பராமாயணத்தின் செய்யுள் நடையை இயன்ற அளவுக்குப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது என்று கிருஷ்ணபிள்ளை எழுதியுள்ள குறிப்பை முன்னரே பார்த்திருக்கிறோம். 'தனித்தன்மை மிக்க சிறப்புடன் விளங்கும் இலக்கிய நடையுடைய ஆசிரியர் பலர் மற்ற இலக்கிய ஆசிரியர்களின் ஆழ்ந்த தாக்குறவுக்கு உட்பட்டவராய் இருக்கின்றனர்; அவர்களுடைய நடை அத்தாக்குறவுக் கூறுகளைத் தாங்கிச் செல்லுவதைக் காணலாம்' என்பர் அட்சன் என்னும் திறனாய்வறிஞர்.[1] ''நடை, கவிஞரின் உள்ளப் பண்பைக் காட்டுவதுடன் அந்தப் பண்பை உருவாக்கிய சூழல், கற்ற நூல்கள், பழகிய பழக்கம் முதலியவற்றையும் புலப்படுத்தும்'' என்கிறார் பேராசிரியர் மு.வ.[2] கம்பரின் செய்யுள் நடை காப்பிய நடைக்கு இலக்கணமாய்த் திகழ்வது என்பர். பதினான்கு அகவையிலே கம்பராமாயணத்தின் கவிகளுள் பெரும்பகுதியை மனப்பாடமாக்கி அறிந்திருந்த கிருஷ்ணபிள்ளையின் கவிதை வளமிக்க உள்ளத்தில், அவர் காப்பியம் பாட முற்பட்டபோது கம்பரின் கவிதை நடை அமைதல் இயல்பன்றோ!

இங்கு 'நடை' என்பது விரிந்த பொருளில் கவிதையின் பல்வகைத் திறன்களையும் உருவக மொழிகளையும் உள்ளடக்கியே நோக்கப்படுகிறது. யாப்பமைதி, ஒலிநயம், அணிநலம் முதலிய கூறுகளை இந்நடை நலத்தில் சிறப்பாக ஆராய்வோம்.

யாப்பமைதி

இலக்கியப்படைப்பு, 'ஒலிகளால் அமைந்த ஒழுங்கமைப்பு', என்பர்.[3] இந்த ஒழுங்கமைப்பையே 'யாப்பு' எனலாம். யாப்பு, சொற்களைச் சரியான நிலையில் அமைப்பதற்கும் அவற்றைச் சுட்டுவதற்கும், அவற்றின் ஓசைப்போக்கில் நம் கவனத்தைத் திருப்புவதற்கும், தன் செல்வாக்கைப் பயன்படுத்துகிறது.[4] 'ஒலி நயம் இயற்கையாய் அமைந்தது; பொதுவானது; யாப்பு அதிலிருந்து சிறப்பாகத் தேர்ந்து அமைத்துக்கொண்டது' என்றும் விளக்குவர்.[5] கவிநயத்தைச் ''செஞ்சொற் கவி இன்பம்'', ''செவி நுகர் கனிகள்'' என்கிறார் கம்பர்.

சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கதேவர் பலவகை ஒலி நயத்துக்கும் சந்தத்திற்கும் இடமளிக்கும் இயல்புடைய விருத்த யாப்பைப் புகுத்திக் காப்பியம் அமைத்தார். கம்பர், அவ்விருத்த

யாப்பினைப் பின்பற்றித் தம் காப்பியத்தில் விருத்தத்தின் எல்லையையே கண்டுவிட்டார் என்பர்; ‘‘விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்’’[6] என்னும் உயர்புகழுக்குரியவராய் விளங்குகிறார். கம்பர் காப்பிய நடையையொட்டிக் காப்பியம் இயற்றிய கிருஷ்ண பிள்ளையும் தம் காப்பியத்தில் விருத்த யாப்பை மிகுதியும் மேற்கொண்டுள்ளார். கம்பராமாயணப் பா வகையையும்[7] இரட்சணிய யாத்திரிகத்தின் பா வகையையும் அவ்வவற்றின் எண்ணிக்கையுடன் பின் வரும் அட்டவணையிற் பார்க்கலாம் :

கம்பராமாயணம் (வை.மு.கோ. பதிப்பின்படி)	பாட்டுத் தொகை	இரட்சணியயாத்திரிகம் (முதற்பதிப்பு, 1891)	பாட்டுத் தொகை
1. கலி விருத்தம்	5077	1. கலி விருத்தம்	1197
2. அறுசீர் ஆசிரிய விருத்தம்	3185	2. கலித்துறை	1085
3. கலித்துறை	1805	3. அறுசீர் ஆசிரிய விருத்தம்	922
4. வஞ்சி விருத்தம்	225	4 தரவு கொச்சகக் கலிப்பா	453
5. எழுசீர் ஆசிரிய விருத்தம்	178	5. எழுசீர் ஆசிரிய விருத்தம்	65
6. தரவு கொச்சகக் கலிப்பா	86	6. வஞ்சி விருத்தம்	13
7. எண்சீர் ஆசிரிய விருத்தம்	6	7. கலித்தாழிசை	10
8. வஞ்சித்துறை	5	8. திருத்தாண்டகம்	10
		9. வஞ்சித்துறை	8
		10. எண்சீர் ஆசிரிய விருத்தம்	3
	10567		3766

அட்டவணையிற் கண்டவாறு கம்பர் எண்வகைப் பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றுள் கொச்சகக் கலிப்பா, பாவகையைச் சார்ந்தது. ஏனையவை பாவினம். கிருஷ்ண பிள்ளை 10 வகைப் பாடல்களைப் பாடியுள்ளார். தரவு கொச்சகக் கலிப்பாத் தவிர்த்த ஏனைய வெல்லாம் பாவினம். கலித்தாழிசையும் திருத்தாண்டகமும் கம்பர் வாக்கில் இல்லை. கலிவிருத்தம் இரு காப்பியங்களிலுமே தலைமையிடம் பெறுகின்றது. கம்பர் காப்பியத்தில் மூன்றாம் இடம் பெற்றுள்ள கலித்துறை யாத்திரிகத்தில் இரண்டாம் இடம் பெறுகிறது. இராமாயணத்தில் இரண்டாம் இடம் பெற்றுள்ள அறுசீர் ஆசிரிய விருத்தம் இரட்சணிய யாத்திரிகத்தில் மூன்றாம் இடம் பெறுகிறது. யாத்திரிகத்தில் நான்காம் இடம் பெற்றுள்ள தரவு கொச்சகக் கலிப்பா, கம்பர் காப்பியத்தில் ஆறாம் இடம் பெறுகிறது. இரட்சணிய யாத்திரிகத்தில் பயின்றுள்ள யாப்பு வகைகளை வரைபடம் வாயிலாகவும் விளக்கலாம்.

ஒலிநயம்

எட்கர் ஆலன் போ என்பவர், ‘அழகின் ஓசையொழுங்குடைய படைப்பே பாட்டு,’[8] என்பர். வரையறுக்கப்பட்ட சிறந்த ஒலிநய அமைப்பே யாப்புக்கு உயிர்நிலையாகும். ஒலிகளுக்கு மூன்று

தன்மைகள் உண்டு: ஒன்று, கால அளவு; அதனால் அமையும் நீட்டல், குறுக்கல் வேறுபாடு; அடுத்தது வன்மையாகவும் மென்மையாகவும் ஒலிக்கும் வேறுபாடு; மூன்றாவது ஒலிக்கும் முறை; எடுத்தும் படுத்தும் ஒலிக்கும் அழுத்தத்தின் வேறுபாடு. இம்மூவகையாலும் வேறுபடும் ஒலிகளை வெவ்வேறு வகையாய் அமைத்து, வந்த அமைப்பே திரும்பத்திரும்ப வருமாறு செய்தால் பிறக்கும் இனிய ஒழுங்கே ஒலிநயம் என்று விளக்குவர் ஆபர் கிராம்பி என்பார்.[9] பின்வரும் இரட்சணிய யாத்திரிகப் பாடலைக் காணலாம்.


''நம்பி நல்லுரை நன்றெென நன்மனச் சாட்சி
எம்பி யாமிரு வேமல மொன்றுபட் டென்றும்
இம்பர் மெய்ப்புரு டார்த்தமி யற்றுவ மென்னில்
உம்ப ருற்றழி யாநல முண்ணுவ மோர்தி.''[10]

தேமா கூவிளம் கூவிளம் கூவிளம் தேமா
தேமா கூவிளம் கூவிளம் கூவிளம் தேமா
தேமா கூவிளம் கூவிளம் கூவிளம் தேமா
தேமா கூவிளம் கூவிளம் கூவிளம் தேமா

இக்கலித்துறைப் பாடலில் வந்த ஒலியே திரும்பத்திரும்ப வந்து 'செவிநுகர்' இன்பம் தருவதை உணர்கிறோம்.

பாக்களிற்பயிலும் அசைகளையும் சீர்களையும் கவி தன் திறமையால் தேவைக்கு ஏற்ப பலவாறு இழைத்துப் பாவினங்களிற் பலவகை ஓசை நயங்களை உண்டாக்கிவிடுகிறான். விருத்தப்பாவினம் ஓசை வேறுபாடுகளுக்கு நிரம்ப இடம் தருகின்றது என்பதை முன்னர்க் குறித்தோம். கம்பர் இராமாயணத்தில் 96 வகை வண்ணங்களைப் படைத்துள்ளார் என்பதனை, ''வரமிகு கம்பன் சொன்ன வண்ணமுந் தொண்ணூற்றாறே'' என்னும் பெருந்தொகைப் பாடலடிகளால் அறிகிறோம்.[11] இப்பாடல் உத்தர காண்டத்தையும் கம்பராமாயணத்துடன் இணைத்தே விளம்புகிறது என்று ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் கூறுகிறார்.[12] வேறொரு பாடல் கம்பர் காப்பியத்தில் உள்ள வண்ணங்களின் தொகையை 87 என்று குறிக்கிறது என்றும் ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் குறிப்பிடுகிறார்.[13] தமிழகப் புலவர் குழுவின் தலைவர் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கம்பராமாயணப் பதிப்பு நடந்த காலத்தில், கம்பராமாயணத்திலுள்ள வண்ணங்களை ஆராய்ந்ததாயும் அவ்வாறு ஆராய்ந்தபோது அதில் 86 சந்தங்கள் அமைந்திருந்தன என்றும் கூறுகிறார்.[14]

இரட்சணிய யாத்திரிகத்தில் அமைந்துள்ள சந்தங்களை ஆராய்வதற்கு மகாவித்துவான் மே. வீ. வே. அவர்கள் எனக்குத் தக்க முறையில் வழிகாட்டித் துணைபுரிந்தார்கள். இரட்சணிய யாத்திரி



1 தரவு கொச்சகக் கலிப்பா
2 கலித்தாழிசை
3 கலித்துறை
4 வஞ்சித்துறை
5 அறுசீர் ஆசிரிய விருத்தம்
6 எழுசீர் ஆசிரிய விருத்தம்
7 எண்சீர் ஆசிரிய விருத்தம்
8 கலி விருத்தம்
9 வஞ்சி விருத்தம்
10 திருத்தாண்டகம்

கத்திலுள்ள வண்ணங்களை ஆராய்ந்தபோது அதில் ஏறத்தாழ 96 வகை வண்ணங்கள் அமைந்திருப்பது தெரியவருகிறது. அவை அமைந்துள்ள ஆற்றினைப் பின் வரும் அட்டவணையிற் காணலாம்: பா வகைகளும் அவை ஒவ்வொன்றிலும் ஓசை வேறுபடும் பகுதிகளும் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

வரிசை எண்	பாவகை	வண்ணங்களின் தொகை
1	தரவுகொச்சகக் கலிப்பா	12
2	கலித்தாழிசை	2
3	கலித்துறை	26
4	வஞ்சித்துறை	1
5	அறுசீர் ஆசிரிய் விருத்தம்	25
6	எழுசீர் ஆசிரிய விருத்தம்	6
7	எண்சீர் ஆசிரியர் விருத்தம்	1
8	கலி விருத்தம்	20
9	வஞ்சி விருத்தம்	2
10	திருத்தாண்டகம்	1
		96

முதல் அடியில் வந்த சீர் அமைப்பின் வாய்பாடே பின் மூன்று அடிகளிலும் அமையுமாயின், அதனைத் 'தெளிசந்தம்' என்பர். பின்வரும் பாடல் அவ்வாறு அமைந்துள்ளமை காணலாம் :

''மெய்யா ரணமும் விசுவா சிகடம்
பொய்யா வுரையும் பொருள்செய் திலனுற்
பையா டரவப் பணிவெவ் விடமுண்
டையோ வழலூ டமிழ்வே னளியேன்.''[15]

தேமா புளிமா புளிமா புளிமா
தேமா புளிமா புளிமா புளிமா
தேமா புளிமா புளிமா புளிமா
தேமா புளிமா புளிமா புளிமா

முதற் சீரைத் தவிர்த்துப் பிற சீர்களில் வெவ்வேறோசையுள்ள அசைகள் மாறிமாறிக் கலந்து வந்து பாட்டின் ஓசையை வேறுபடுத்துமானால் அவற்றைக் 'கலவைச் சந்தம்,' என்பர். பின் வரும் கலிவிருத்தப் பாட்டில், 2, 3 ஆம் சீர்களில் அசைகள் மாறி மாறி வந்து கலவைச் சந்தம் அமைந்திருத்தலைக் காணலாம் :

''வானர மியந்திகழ் மதில்வ ளைத்தவக்
கோனக ரெங்கணுங் குலவு சோதிய
பானுவின் குழுக்களைப் பத்தி செய்தென
மேனிலை மாளிகை விதம்பல் கோடியே.''[16]

கூவிளம் கருவிளம் புளிமா கூவிளம்
கூவிளம் கூவிளம் புளிமா கூவிளம்
கூவிளம் கருவிளம் தேமா கூவிளம்
கூவிளம் கூவிளம் புளிமா கூவிளம்

இரட்சணிய யாத்திரிகத்தில் இவ்வாறு தெளி சந்தங்களும் கலவைச் சந்தங்களும் பாவினங்களிற் பயின்றுள்ளன; ஓசை இன்பத்தை மிகுவிக்கின்றன.

புலவர் குழந்தை கலிவிருத்தத்தில் 34 வகை ஓசை வேறு பாடுகளையும்,[17] அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் 40 வகை ஓசை வேறுபாடுகளையும்,[18] எழுசீர் விருத்தத்தில் 24 வகை ஓசை வேறு பாடுகளையும்[19] தரவுகொச்சகக் கலிப்பாவில் 13 வகை ஓசை வேறுபாடுகளையும்:[20] கலித்துறையில் 26 வகை வேறுபாடுகளை யும்[21] 'தொடையதிகாரம்' என்னும் தம் நூலில் பொதுவாய் ஆராய்ந்து, கூறுகிறார்.

கம்பர், கலிவிருத்தத்தில் ஏறத்தாழ 60 வகை ஓசை நயங்களை அமைத்துளார் என்று பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் கூறு கிறார்.[22] அறுசீர் விருத்தத்தில் கம்பரில் 5க்கு மேற்பட்ட சந்தங் கள் உண்டு என்று பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை கூறுகிறார்.[23]

இரட்சணிய யாத்திரிகத்தில் வரும் ஒலி அமைப்புகளை உணர்ச்சிக்கேற்ற ஒலி நயம், பொருளுக்கேற்ற ஒலி நயம், கற் போர்க்குச் சோர்வுதட்டாமல் இருப்பதற்காக அமைக்கும் ஒலி நயம் எனப் பல்வகைப்படுத்தலாம்.

உணர்ச்சியும் ஒலி நயமும்

உணர்ச்சியை உயிராய்க்கொண்ட பாட்டுக்கு ஒலி நயம் இன்றியமையாதது. புலவர் பாட்டில் அமைத்த உணர்ச்சியைப் படிப்பவர்க்கு உணர்த்துவது ஒலி நயமேயாகும். ஒலி நயம் இல்லாமல், உணர்ச்சியனுபவம் பாட்டின் சொற்களில் வாழ வழி இல்லை என்பர்.[24]

யாத்திரிகத்தில் அழிம்பனும் கிறித்தவனும் கடும்போர் புரிகின்றனர். அழிம்பன் எய்யும் கணைகளை வேதியன் வென்றழித்து விடுகிறான். அவன் நிராயுதபாணியாய் நின்று திருவருள் வல்ல மையால் அழிம்பனுடன் போரிடுகிறான். போர்ப்பயிற்சி இன்றி யும் கையில் போராயுதமின்றியும் தன்னை எதிர்த்து நிற்கும் வேதியன்மீது தன் கோபக்கனலைப் பின்வரும் பாடலில் அழிம்பன் வீசுவதைப் புலவர் காட்டுகிறார்.

"விற்றொழி லாதிப டைக்கல வித்தைகள் வேறொன் றுங்
கற்றிலே யுத்தக ளத்திலும் வந்தெதிர் கால்வைத்தாய்
மற்றெது செய்குதி மற்கட வன்பிடி மானக்கை
பற்றிய கேடக மொன் றிறில் வளிபடு பஞ்சாவாய்."[25]

இப்பாட்டில் வல்லெழுத்துகள் மிகுதியும் பயின்று இருசீர் அசைகள் வந்து சினக் கனலையும் அலட்சியத் தன்மையையும் வெளிப்படுத்துவதை அறிகிறோம்.

கடவுளின் திருமைந்தர் கொடிய சிலுவை சுமந்து, கொல்கொதாவுக்குத் தள்ளாடிச் செல்லுதலைக் கண்ணுற்ற எருசலேம் மகளிர், அழுது புலம்புகின்றனர்:

"நிந்தனையாஞ் செந்நெருப்பு நெஞ்சைக்கொ ளுத்திடவும்
நொந்தொருசொற் சொல்லாத நோன்மைநு னித்துணரின்
மைந்தருக்கிச் சாந்தம் வருமோம கேசனெனுஞ்
சிந்தைசெ றுநருக்குச் சேராத தென்னென்பார்."[26]

மெல்லோசை மிக்குள்ள இப்பாடலில் மகளிர் அழுது புலம்பும் உணர்வினை நமக்கு நல்கும் ஒலி அமைதியைக் காண்கிறோம்.

பொருளுக்கேற்ற சந்தம்

யாத்திரிகன் ஆனந்த சைலத்தை அடைகிறான். அங்கே பேரின்ப மகிழ்ச்சி ஆரவாரம் ஒருபுறமிருக்க, குளிர்ச்சி பொருந்திய அம்மலையில் கடுங்காற்று இடியுடன் மழை பொழிகிறது. பின் வரும் பாடல் மழை பொழிதலை நம் மனக்கண்முன் நிறுத்துகிறது:

"புதுவிரை மதுமலர் பொதுளிய முதுசினை
பொழிலுழை தழுவுவ புயல்
வதுவையி னதிபதி பொருவரு கிருபையின்
மலைதலை பொழிவன மழை
அதிரடி முழவெழ வரிமுரல் சுருதியி
னகவுவ மகளிரின் மயில்
மதுரிய நறைகுட மடிபடி புகுபய
ளளவிய விளைவன வயல்."[27]

இவ்வாறு பொருளுக்கேற்ற சந்தம் நிரம்ப வந்து யாத்திரிகத்தின் காப்பியச் சிறப்பை வளப்படுத்தி உள்ளது. காப்பியத்தைக் கற்போர் அதன் உணர்வுடன் ஒன்றிவிடுமாறு செய்கின்றன இத்தகைய வண்ணங்கள்.

சோர்வு நீக்கும் சந்தம்

கற்போருக்குச் சோர்வு நேரா வண்ணம் இருக்குமாறு சந்தங்களை மாற்றியமைத்து ஒலி நயம் அமைத்தல் ஒரு முறை. சுவிசேட மார்க்கப்படலத்தில் கிறித்துவின் வாழ்க்கையின் ஒரு பகுதியை

174 பாடல்களில் பாடுகிறார் கவிஞர். ஒரே செய்தியை இவ்வளவு நீண்ட நிலையில் அமைத்துப் பாடும்போது கற்போருக்குச் சோர்வு ஏற்படுதல் இயல்பே. 11 முறை சந்தங்களை இப்படலத்தில் மாற்றி யமைப்பதன் மூலம் புலவர் இச்சோர்வை நீக்குவதுடன், கற்ப வரின் ஆர்வத்தையும் தூண்டிவிடுகிறார். இவ்வாறே இரட்சணிய சரிதப் படலத்தில் வரும் 495 பாடல்களிலே பொருளுக்கும் சூழலுக்கும் ஏற்பச் சந்தங்களை 31 முறை மாற்றியமைத்து, ஒலி நயச் சிறப்பைப் புலப்படுத்துகிறார். இரட்சணிய யாத்திரிகத்தில் உபதேசங்களாகக் காணப்படும் இவை போன்ற இடங்களில் புலவர் ஒலி நயத்தின் மூலம் இலக்கியச் சிறப்பை அமைத்துவிடு கிறார்.

எதுகை மோனை

ஒலி நயம் வேறு, எதுகை மோனை முதலியன வேறு; ஆயினும், பாட்டில் எதுகை மோனை நன்கு அமைவதால் ஒலி நயம் சிறந்து விளங்கும் என்பர்.[28] எதுகை தமிழ் மொழியின் தனிசிறந்த பண்பு. குறிப்பிட்ட இடத்தில் வந்த ஒலியே திரும்பத் திரும்ப வருதல் எதுகையாகும்.[29] பாடல் அடியின் முதற்சொல்லில் அவ்வாறு ஓசை ஒன்றி வருதலே சிறப்பாகப் போற்றப்படுகிறது. அது 'அடி எதுகை' எனப்படும். யாத்திரிகத்தின் பாடல்களில் எல்லாம் அடியெதுகை இயற்கையாய் அமைந்து கவிதையை வளப்படுத்துகிறது. ஓர் எடுத்துக்காட்டு:

''பொருளெலாம் பொதுமை மேய
　　புகழெலா மிறைமை நாடும்
அருளெலாம் செல்வ முள்ளத்
　　தவாவெலா மறுமை யாக்கந்
தெருளெலா மான்ம போதஞ்
　　செயலெலாந் திருத்தொண் டென்ப
மருளெலா மொழிந்து நோற்கு
　　மலைப்பிர தேசத் தோர்க்கே.''[30]

இவ்வறு சீர் ஆசிரிய விருத்தத்தில் அடி எதுகை நான்கு அடிகளி லும் முதற்சீரில் அமைந்து தனியாகு எதுகையாய் நிற்றல் காணலாம்.

பாட்டில் முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை. 'உணர்ச்சியும் கற்பனையும் நன்கு அமைத்துப் பாடும் புலவர், பாட்டுக்கு அழகான ஒலி நயம் உள்ள யாப்பு அமைத்துப் பாடுதல் இன்றியமையாதது; அதற்குத் துணையாக மோனையும் எதுகையும் எளிதில் அமைந்தால், அந்த அளவிற்கு அவற்றை அணியெனப்

போற்றுதல் நல்லது' என்பர் திறனாய்வாளர்.[31] யாத்திரிகப் பாடல்களில் மோனையும் எதுகையும் இயல்பாய் அமைந்து பாட்டிற்கு அழகிய ஒலிநயம் தருகின்றன. பின் வரும் விருத்தப் பாவைப் பார்க்கலாம்:

> ''மண்ணுரு வினைமருங் குறவு மண்ணுளே
> மண்ணுகர் வாழ்க்கையை மண்ணின் வைகுவை
> மண்ணின்மண் ணுகுவை மறித்தி தோரலை
> மண்ணினை யிகத்தியென் மதிகொண் டேழைநீ.''[32]

அளவடிகளில் பொழிப்பு மோனையும் சிறுபான்மை ஒரூஉ மோனையும் வரவேண்டும் என்பர்.[33] நாம் மேலே கண்ட யாத்திரிகப் பாடலில் அடிமோனையும், பொழிப்பு மோனையும் சிறுபான்மை ஒரூஉ மோனையும் அமைந்திருத்தலைக் காண்கிறோம்.

அளவடிச் செய்யுள்களிற்போலன்றி, நெடிலடி, கழிநெடிலடிச் செய்யுள்களில் ஒவ்வொரு வகையிலும் வெவ்வேறு இடங்களிலும் மோனைவரும் என்பர்.[34]

> ''கொடிதி னிற்கொடி தாயவிக் கொடுஞ்சுடு பாலை
> கொடிதெ னப்படும் யாவிலுங் கொடிதெனத் தேர்ந்து
> கொடிதி னுக்கந்தங் குணித்தது மூதுரைக் கூற்றேற்
> கொடிது மற்றிதிற் பிறிதெது குவலயப் பரப்பில்.''[35]

இக்கலித்துறைப் பாடலில் வெவ்வேறு இடங்களில் மோனை வந்து ஒலிநயம் சிறப்புறுதலைக் காண்கிறோம். இவ்வாறே இரட்சணிய யாத்திரிகத்தில் பல்வகை மோனையும் எதுகையும் பாங்குற அமைந்து சொல்லின்பம் பயக்கின்றன.

அணி நலம்

கவிதையில் அமையும் அணிகள் அதற்கு அழகு செய்கின்றன. அணிகள், 'செய்யுள்களில் எடுத்துக்கூறப்படும் பொருள்களை அழகு பெற வெளிப்படுத்தி, அப்பொருள்களின் நயங்களையும், அவற்றால் வெளிப்படும் இன்பங்களையும், அவற்றுள் பொதிந்துள்ள உண்மைகளையும் அவரவர் உணர்திறனுக்கு ஏற்பத் தரும் கருவிகள்'[36] எனலாம். வேமன, 'நடையே கவிதையின் உயிராகும்; குணங்கள் அதற்கு அழகூட்டுகின்றன; அணிகள் அவ்வழகிற்கு அழகூட்டுகின்றன' என்று கருதுகிறார்.[37]

தொல்காப்பியத்தில் உவமை அணியே உவமை இயலில் பேசப்படுகிறது. பிற்காலத்தில் உவமை அணியே பல அணிகளாய் வளர்ச்சியுற்றது. இதனால், உவமை அணியை எல்லா அணி

களுக்கும் தாய் என்பர். அப்பைய் தீட்சிதரின் வாக்கின் மொழி யாக்கமாகியப் பின்வரும் ஆசிரியப்பா அதனைத் தெளிவுபடுத்து கிறது :

''உவமை என்னும் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குற புனைந்து
காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவர் இதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்கும்மே.[38]

தேசிய கவிஞர் பாரதியாரும், ''எல்லா அலங்காரங்களும் உவமை யணியின் விஸ்தாரங்களைத் தவிர வேறொன்றுமில்லை; 'உபமாலங் காரமே அலங்கார சாஸ்திரத்தின் பிராணன்' என்று பழைய் இலக்கணக்காரர் சொல்லுகிறார்கள்,'' என்கிறார்.[39]

அணிகளைப் பொருளணிகள், சொல்லணிகள் எனப் பகுப்பர். இரட்சணிய யாத்திரிகத்தில், பொருளணிகளும் சொல்லணிகளும் ஏறக்குறைய 400க்கு மேல் வந்து காப்பியத்தைக் கவினுறச் செய் கின்றன. பத்துப்பாடலுக்கு ஓர் அணி அமைந்து காப்பியத்தை அழகுபடுத்துகின்றன. அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காணலாம்.

உவமை அணி

ஒப்புமையின் அடிப்படையில் பிறப்பது உவமை அணி. தொல் காப்பியர் 'வினை, பயன், மெய், உரு' என்னும் நான்கின் அடிப் படையில் உவமை தோன்றும் என்பர்.[40] உபமேயப் பொருளின் ஒரு பகுதி மட்டும் ஒத்திருத்தலே போதும் என்பர். உவமையாக வரும் பொருள் சிறப்புடையதாகவும் உயர்ந்த கருத்தைத் தருவ தாகவும் இருக்கவேண்டும் என்பர் தொல்காப்பினர்.[41] கவிஞனு டைய அனுபவப் பொருளாய் விளங்கும் உவமைகள் அவனுடைய உணர்வுமிக்க பாடல்களுக்கு ஒளிவிளக்காய் நின்று, செய்யுட் செய்திகளை விளக்கப்படுத்துகின்றன; கற்பனையையும் நடையையும் சிறப்பிக்கின்றன.

இரட்சணிய யாத்திரிகம் முழுவதிலும் ஏறத்தாழ 250க்கு மேற்பட்ட உவமைகள் வந்து அணிசெய்கின்றன. ஆன்மவிசாரி, தன் கையிலுள்ள சுருதி நூலை விரித்துப் படிக்கிறான்; அதில் காணப்படும் தன் அவல நிலையை உணர்கிறான்; அதிலிருந்து தப்பிப் பிழைக்கும் ஆற்றிலை அறியாது தளர்ந்து தனித்து நிற்கிறான். அவனது மனநிலையைப் புலவர் 'உலவையுற்ற சருகெனச் சுழல்வான்'[42] என்று உவமை கூறி விளக்குகிறார். காற்றினிடைப்பட்ட சருகின் நிலை அவன் மனநிலைக்கு உவமை

யாயிற்று. இவ்வுவமை திருமறையிலும் ஆளப்பட்டுள்ளது.[43] இவ்வாறு திருமறையில் வரும் உவமைகளையும் புலவர் எடுத்தாள்கிறார்.

வேதியன் எழிற்சத்திரத்தை அடைகிறான். அவன் மாளிகையின் உள்ளே இருக்கும்போது தென்றல் வீசுகிறது. தென்றலைக் கவிஞர்கள் பலவாறு உவமித்துள்ளார்கள். கிருஷ்ணபிள்ளை தென்றலின் பயனுக்கு ஒரு புதிய உவமை கூறுகிறார். பலகணி வழியாக வீசும் தென்றல் உடலைப் புளகம் அடையச் செய்கிறது. எளிதில் உணரக்கூடிய இந்த அனுபவத்திற்குப் புலவர் ஓர் ஆன்மிக அனுபவத்தை உவமித்து, அதன் தன்மையை வாழ்க்கை அனுபவமாக விளக்குகிறார்:

''மாயமில் லுளத்திடை வந்து தைவிக
தூயவா வியினருட் டுன்னு மாறுபோல்
மேயசா ளரந்தொறும் வீசு மிவ்வகத்
தேயவ ருடல்புள கேறத் தென்றலே.''[44]

'மாயம் இல்லாத உள்ளத்தில் கடவுளுடைய தூய ஆவியின் திருவருள் வந்து நிறையும்போது உள்ளத்தில் ஏற்படும் அனுபவம் போன்றது, தென்றல் உடல் மீது படுதலினால் ஏற்படும் அனுபவம்' என்கிறார். இதுபோன்று புலவர் மிக நுணுக்கமாக உவமைகளை நிரம்பக் கையாளுகிறார். 'உவமைத்திறனே நுண்ணறிவுக்கு ஒரு சிறந்த சான்று'[45] என்னும் கூற்று கிருஷ்ண பிள்ளைக்கு மிகவும் பொருத்தமாகும்.

உருவக அணி

உவமையிலிருந்து தோன்றும் உருவகம் பொருளணிகளுள் ஓர் அணி. தண்டியாசிரியர், உவமைக்கும் பொருளுக்கும் வேற்றுமை தோன்றாமல், ஒன்றிலே மற்றொன்றைக் காண்பது உருவக அணி என்று விளக்குகிறார்.[46] 'உருவகம் என்பது அடக்கிச் செறித்த உவமையே' என்பர் ரிட்லி.[47]

யாத்திரிகத்தில் வரும் ஓர் உருவக அணிப்பாடலைக் காண்போம். தங்கள் முதல் தூய நிலையிலிருந்து விழாத ஆதி மாந்தர்களின் பக்தி வாழ்வை விளக்கும்போது கிருஷ்ண பிள்ளை அழகுமிகு உருவகத்தைக் கையாளுகிறார். அவர்களுடைய அணிகலன்களை ஒழுக்கமாகவும், உடையைத் தூய்மையாகவும், உடலில் பூசிக்கொள்ளும் மணமிகு சந்தனத்தைக் குற்றமற்ற செயல்களாகவும், அன்பினால் பழுத்த பக்தியை அன்னமாகவும் பானமாகவும் உருவகம் செய்து நயம்பட அமைக்கிறார்.

''ஒழுக்கமே கலன்க ளாக வுடைபரி சுத்த மாக
இழுக்கறு கரும மேனிக் கிடுநறுஞ் சாந்த மாகப்
பழுக்குமுன் பத்தி யன்ன பானமாப் பகல்க ளெல்லாம்
வழுக்கறு மரபிற் போக்கி மாதவம் புரிவர் நாளும்''[48]

இப்பாடல் முழுவதிலும் உருவகம் அமைந்துள்ளதை அறிகிறோம். அரிஸ்டாட்டில், 'பிறஅணிகள் தருவதைவிட, உருவக அணி, கவிதை நடைக்குத் தெளிவு, அழகு, சிறப்பு இவற்றைத் தரு கிறது,' என்கிறார்.[49] இத்தகு நடை நலன் நிறைந்த உருவக அணிகள் இரட்சணிய யாத்திரிகத்தில் 50க்கு மேல் வந்து, கருத் துக்கு நயமும் செவிக்கு இனிமையும் தந்து பாட்டைச் சொல் லாலும் பொருளாலும் அழகுபடுத்துகின்றன.

முற்றுருவக அணி

இரட்சணிய யாத்திரிகத்தில் தனிப்பட்ட பாடல்களில் வரும் உருவகம், முற்றுருவகம் ஒருபுறம் இருக்க, கிறித்தவ வாழ்க் கையே யாத்திரையாய் உருவகம் செய்யப்பட்டுள்ளது; ஈவிரக்கம் அற்ற ஓர் எதிரியுடன் செய்யும் ஆன்மிகப் போராயும் உருவகம் செய்யப்பட்டுள்ளது. ஒரு பாடல் முழுவதிலும் உருவகம் அமைந் திருந்தால் அதனை முற்றுருவகம் என்கிறது தண்டியலங்காரம்.[50] ஆனால், இங்கு, காப்பிய முழுவதுமே உருவகமாய் அமைந் துள்ளது. இது குறித்து முன் இயலில் ஆராய்ந்துள்ளோம். எனவே, இக் காப்பியத்தை முற்றுருவக அணிக் காப்பியம் என லாம்.

சிலேடை அணி

உவமை உருவக அணிகளே அல்லாமல், யாத்திரிகத்தில் அருமையான வழக்குடைய சிலேடையணிகள் 11 உள்ளன. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலில் சிலேடை அணி அமைந் திருத்தலைக் காணலாம் :

''முத்தி நாட்டெழின் முயங்கக் காட்டலில்
நித்ய சீவநீர் நிலைய கன்றிடா
துத்த மக்குலத் தோதிமக் குழாம்
பத்தி செய்தவப் பள்ளி போலுமால்''[51]

நிலையான வாழ்வினைச் சுரக்கின்ற குளங்கள் விண்ணரசின் அழகிய வைபவங்களைப் பிரதிபலித்துக் காட்டுகின்றன, அதனால் உத்தம வகுப்பிலுள்ள அன்னப் பறவைகளின் கூட்டம் நிலையான வாழ் வுடைய நீர்நிலைகளைவிட்டு அகலாமல் அதில் வாழ்கின்றன. ஆத லால் அக்குளங்கள் திருத்தொண்டர் பக்தியோடு தவம்பயிலும்

தேவாலயம்போல உள்ளன என்பதாம். இது முதற்பொருள். பாடலில் அமைந்துள்ள இரண்டாவது பொருள்:

'நித்திய சீவ நீர்நிலே' — இவ்வுலகமாகிய வனத்தில் நெறி தப்பி அலேந்து திரிந்து இளேத்து விடாய்த்த ஆன்மாக்களுக்கு அந்த விடாயைத் தணித்து நலத்தையும், மேலான பேரின்பத்தையும், அருளிக் காக்க வல்லது கிறித்துபெருமானின் கருணேப் பெருக்கம். எனவே அதனே 'நித்திய சீவநீர்நிலே' என்முர்[52]

'முத்தி நாட்டெழின் முயங்கக் காட்டலில்' —மேலே குறிப்பிட்ட கருணேப்பெருக்கமே உயிர்களுக்குக் காணப்படாமல் இருந்த விண்ணுலகப் பேரின்ப வாழ்வினேத் துலக்கமாய்க் காட்டியது என்பதாம். இறைவரின் கருணேயே விண்ணுலக வாழ்வினே மண்ணுலக மக்களுக்கு விளங்கக் காட்டிற்று என்பதாம்.

'உத்தமக் குலத்து ஒதிமக் குழாம்' — இத்தகைய மேன்மையான பேரின்பகங்ளே அறிந்து மேன்மேலும் அவற்றையே அனுபவித்து விரும்பி, அந்த பேரின்ப நிலேயை விடாதுபற்றிக் கொண்டு முயல்கின்ற மேன்மையான மகளிர்க் கூட்டம் அன்னப் பறவைகளின் கூட்டத்தை நிகர்த்தது என்பதாம்.

'பத்திசெய்தவப் பள்ளி போலுமால்' — இந்த மேன்மையான மகளிர்க் கூட்டத்தார் ஒவ்வொரு நாளும் கைக்கொண்டு வரும் செபங்கள், தவங்கள், விரதங்கள் முதலிய நற்செயல்களும், வேதாகம நியமனப்படியும் போதனேயின்படியும் ஆண்டாண்டு முறையாக நடந்துவரும் திருச்சபை கூடுதல்கள், ஆராதனேகள் முதலியனவும் வேறுபாடின்றித் தோன்றுவதனுல் ''பத்திசெய்தவப் பள்ளி போலுமால்'' என்முர். இங்கே திருச்சபையின் ஆன்மிக வாழ்வின் நடைமுறை கூறப்பட்டது.

மற்றும் வேற்றுப்பொருள்வைப்பணி, தற்குறிப்பேற்ற அணி, வஞ்சப்புகழ்ச்சி அணி, உயர்வுநவிற்சி அணி உள்ளிட்ட பொருளணிகளும் அமைந்து பாடல்களின் பொருனின்பத்தை மிகுவிக்கின்றன.

சொல்லணி

சொல்லணிகள் பாடலின் பொருள் வளத்தைப் பொருளணிகளேப்போலச் சிறப்பியாவிட்டாலும், பொருளுணர்ச்சிக்குச் சொல்லமைப்பு மாற்றம் துணேசெய்கிறது என்பர்.[53] சொல்லணிகளுள் முக்கியமாகக் கருதப்படுவது மடக்கு. ஒரு சொல்லே

மீண்டும் மீண்டும் வந்து வேறு பொருள் தந்து நிற்பது மடக்கு எனப்பெறும்.[54] பின்வரும் யாத்திரிகப் பாடலில் மடக்கணி அமைந்துள்ளமை காணலாம்:

''வனம டங்கலும் போதகம் வரிய்ளி மருவும்
வனம டங்கலும் பொதகக் குருளேயு மயங்குங்
கனம டங்கலும் போதக வுங்களி மயில்கள்
கனம டங்கலும் போதகந் தரும்பல காட்சி''[55]

'காடு முழுவதும் மலர்கட்கு இருப்பிடமாம்; அதனால் இசைக்கும் வண்டுகள் அவ்விடத்தை விட்டு நீங்காது தங்கும். அழகிய சிங்கங்களும், யானைக் கன்றுகளும் பகையின்றி வாழும்; மேகம் வந்து கவியும்போது செருக்குடைய மயிலினங்கள் கூவி ஆடும்; மிக்க அறியாமையைக் கல்லி எறியும் அங்குள்ள பலவாகிய காட்சிகள் நல்ல போதனையைக் கொடுக்கும்' என்பது பாட்டின் பொருள். இவ்வாறு யாத்திரிகத்தில் யமகம், திரிபு, மடக்கு முதலான அணிகள் பத்துக்குமேல் அமைந்துள்ளன. இவை புலவரின் கவித்திறத்தைக் காட்டுவதற்கென அமையாமல் கவிதையில் கலேயுணர்ச்சி உடையனவாய் அமைந்து விளங்கு கின்றன.

பாவிக அணி

பொருளணிகளும் சொல்லணிகளும் காப்பியங்கள் அல்லாத பிற செய்யுள்களிலும் காணப்படும். பொதுவகையால் செய்யுள் களில் அமையும் அணிகளேயன்றிச் சிறப்பு வகையால் காப்பியங் கட்கே உரியதாக ஓர் அணி சொல்லப்படுகிறது. அது 'பாவிகம்' என்பதாகும். தண்டியலங்காரம், ''பாவிகம் என்பது காப்பியப் பண்பே,''[56] என்கிறது. இதற்கு, 'பாவிகம் என்று சொல்லப்படு வது, பொருட்டொடர்நிலேச் செய்யுட்டிறத்துக் கவியாற் கருதிச் செய்யப்படுவதொரு குணம். அஃது, அத்தொடர்நிலேச் செய்யுள் முழுவதும் நோக்கிக்கொள்ளப்படுவதல்லது, ஒரு பாட்டால் நோக் கிக் கொள்ளப் புலப்படாதது,'[57] என்று விளக்கம் தருகின்றனர்.

கவிஞன் தான் மேற்கொண்ட காப்பியத்தில் பலபடியாக வற்புறுத்தி அமைக்கும் அறிவுரைகளே காப்பியக் குணங்களெனத் தோன்றுகின்றன. கவிஞன் தன் உள்ளக் குறிப்பில் எந்தச் சிறந்த கருத்தைக் கதைவாயிலாக உருப்படுத்திக் காட்ட விரும்புகிருனே அந்தக் கருத்தையே பாவிகம் என்று சொல்லலாம். ''கவிஞ னுடைய மனேபாவம் பாவிகம்; அதை அமைத்த பாவ சித்திரம் காப்பியம்,'' என்பர் கி. வா. ஜெகந்நாதன்.[58] கிருஷ்ண பிள்ளே, தற்சிறப்புப் பாயிரத்தில், காப்பியத்தில் நுதலிய பொருளே அறிவிக்கிருர்:

''வெற்று நேரப்போக் காய்ப்புகல் வினோதமு மன்று
புற்ற ராவிடம் பொதிந்தசெப் பெனக்கவி புனைந்து
சிற்றின் பத்திறம் திருத்திய காதையு மன்று
மற்றி தாத்தும ரட்சணை வழங்குமோர் மருந்தாம்.''[59]

என்பது அப்பாடல் அதில் சொல்லப்படும் 'ஆத்தும ரட்சணை வழங்குதல்' அதாவது, ஆன்ம மீட்பருளுதலாகிய வீடுபேறு அடைதலே இரட்சணிய யாத்திரிகக் காப்பியத்தின் பாவிகமாகக் கொள்ளலாம். காப்பியம் முழுவதும் வற்புறுத்தப்படும் செய்தி இதுவே. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொரு ளுக்குள்ளும் இப்பாவிகம் அடங்குமாயினும், சிறப்பாகச் சிலவற் றையே கவிஞன் தன் காப்பியத்துக்கு உள்ளுறையாக வைத்துப் பாடுவான். ஆதலின், அச்சிலவே பாவிகமாகக் கருதப்படும் என்பர் கி. வா. ஜ.[60] இக்கருத்தின்படியும் நாற்பொருளுள் சிறப் பாகக் காப்பிய முழுவதும் பாடப்பெற்றுள்ள வீடுபேறே இரட் சணிய யாத்திரிகத்தின் பாவிகம் என்பது தெளிவாம்.

சுவையணி

கவிதைக்கு வேண்டிய அழகுகளுள் ஒன்று சுவை. இச்சுவை உணர்வு, பாடல்களுக்கு உயிர்நாடிபோன்றது எனலாம். 'பாட் டின் நடைக்குச் சுவைகள் காந்தியூட்டுகின்றன' என்று வேமனு சொல்லுகிறார்.[61] சுவையைப்பற்றிக் குறிப்பிடும்போது தண்டியா சிரியர், பெருங்காப்பியம்,.

''நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப''[62]

என்கிறார். வடநூலார் சுவை என்பதனைத் தொல்காப்பியர் 'மெய்ப்பாடு' என்று கூறுவர். அவர்,

''நகையே யழுகை இளிவரன் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப.''[63]

என்னும் நூற்பாவில் 'நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என மெய்ப்பாடு எட்டாம்' என்பர். இச்சுவைகளுள் ஒவ்வொன்றும் தோன்றுதற்கான அடிப் படையையும் தொல்காப்பியர் கூறுகிறார். 'எண்வகைச் சுவையும் காப்பியத்தில் அமைதல் வேண்டும் என்று வலிந்து முயலுதல் ஆகாது. காப்பியத்தில் அமையும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பச் சில சுவைகள் அமையினும், போதுமானதாகும்,' என்பர் திறனாய் வறிஞர்.[64]

இரட்சணிய யாத்திரிகத்தில் உவகைச் சுவையின் தலைமைக் கூறாக எண்ணத்தக்கக் காமச்சுவை அமைந்திராமை முன்னரே சுட்டப்பட்டது. ஏனைய சுவைகள் எல்லாம் காப்பியத்தில் நிறைந்த இயல்பான உணர்வுடன் அமைந்துள்ளன. எடுத்துக் காட்டாகச் சில சுவைகளை நோக்கலாம்.

நகைச்சுவை

தொல்காப்பியர், எள்ளல், இளமை, பேதைமை, மடமை இவற்றின் அடிப்படையில் நகை தோன்றும் என்பர்.[65] நிதானியை நீதிவிசாரணை செய்ய அமைக்கப்பட்ட நீதிமன்றத்தினர் நகைச்சுவை தோன்ற அமைக்கப்பட்டுள்ளனர். இந்நீதிமன்றத் தின் தலைமை நடுவணர் மாண்புமிகு 'அறப்பகை' என்பவர். அறங்கூறுயத்தினர் பன்னிருவர்: திருவாளர்கள் கண்ணிலி, நன்றிலி, குரோதி, காமி, வீணன், துணிகரன், வம்பன், விரோதி, சழக்கன், நிட்டூரன், இருட்பிரியன், முழுப்பொய்யன் என்பவர்கள். இவர்களுள் முழுப்பொய்யனின் தீர்ப்பைக் கேட்கலாம்: நிதானி மாயாபுரி அங்காடி வழியே வந்தபோது சத்தியம் இருந்தால் வாங்குவதாக அறிவிக்கிறான். மாயாபுரி அங்காடி வணிகர், ''சத்தியத்தைத் தவிரப் பிற எல்லாம் எங்களிடம் உண்டு; அவற்றை வாங்கலாமே!'' என்று தூண்டினர். நிதானி அவற்றை மறுத்துவிடுகிறான். அக்குற்றத்திற்காக முழுப்பொய்யன் அளிக்கும் தீர்ப்பு:

''சத்திய மென்றுரை தந்த
அத்தனை யும்பொய்ய பத்தம்
எத்தனை விட்டிட லென்றான்
புத்தியி லாமுழுப் பொய்யன்.''[66]

இவை எள்ளல் அடிப்படையில் பிறந்த நகைச்சுவை எனலாம். முடிவில் நடுவர் அறப்பகை நிதானிக்குக் கொலைத் தீர்ப்பு வழங்கு கிறார்.

நகைச்சுவையுடன் நெருங்கிய தொடர்புடையது அங்கதம் அல்லது இகழ்ச்சி. தொல்காப்பியர் அங்கதத்தைக் குறிப்பிடு கிறார்.[67]

''தொல்காப்பியர், 'அங்கதம்' வசையோடும் நகையோடும் கூடியது என்று கூறி, அது 'செம்பொருள் அங்கதம்,' 'பழிகரப்பு அங்கதம்' என இருவகைப்படும் என்றனர்,'' என்று பேரா. எஸ். வையாபுரிப் பிள்ளை கூறுகிறார்.[68] மாயாபுரி நகரை வருணிக்கும் போது, அது கேடுகள் நிறைந்தது எனினும், ஆரவாரத்திலும், மாடமாளிகை கூடகோபுரம், பொதுமன்றம், மேனிலை மேடைகள் இவற்றில் பீடுசான்றது என்று புகழ்வதுபோல இகழ்கிறார்.

''கேடு சாலுமிவ் வுலகக்கோ லாகலங் கெழுமி
மாட மாளிகைக் கூடகோ புரம்பொது மன்றம்
மேடை மேனிலை யரமியத் தலமென விரவிப்
பீடு சாலுருப் பெற்றன வோவெனப் பிறங்கும்.''[69]

காப்பியத்தில் இவ்வாறு நகைப்புடன் கூடிய அங்கதச் சுவை மிகுதியும் வருகிறது.

அழுகை

இஃது அவலம். இது, 'தானே அவலித்தல், பிறர் துன்பங் கண்டு அவலித்தல்' என இரு வகைப்படும். கிறித்து பெருமான் சிலுவையில் அறையப்படுவதற்குத் தீர்ப்பு வழங்கப்பட்டார். தம் மீது சுமத்தப்பட்ட கொடிய சிலுவையைத் தோளில் சுமந்து கொண்டு, சிலுவைக் குன்றினை நோக்கி, எருசலேம் வீதி வழியே செல்கிறார். எருசலேம் நகரமகளிர், அவர் அவலம் கண்டு அவலித்தலைப் பின்வரும் பாடலில் உணரலாம்:

''காந்தள் மலர்செங்க மலமல ரைப்புடைப்பப்
பூந்தள் கருங்குவளைப் போதுநீர் முத்துகுப்பத்
தேந்தளவு தொக்கநறுஞ் சேதாம் பலையலர்த்தி
மாந்தண்டலைக்குயிலின் மென்மொழியார் மாழ்கினர்.''[70]

இம்மகளிர் அவலித்து அரற்றிய பாடல்கள் பலவாயமைய (26) அவலச் சுவையின் சிகரத்தையே எட்டுவதாய் இப்பகுதியைக் கவிஞர் உருக்கத்துடன் பாடியுள்ளார்.

அச்சம்

அச்சம் என்பது பயம். யாத்திரிகத்தில் அச்சச்சுவை மரணச் சூழலிறுத்த படலத்தில் மிகுதியாய்க் காணப்படுகிறது. மரணம் என்னும் உணர்வே மாந்தர்க்குப் பொதுவாக அச்சம் தருவதாகும். யாத்திரிகன் மரணச்சூழல் நிறைந்த பள்ளத்தாக்கினூடே திருநெறியில் முன்னேற வேண்டியுள்ளது. மரணச் சூழலின் அச்சம் அவனை உறுத்துகிறது. புலவர், அதனை 'அஞ்சுறு மரணவெப்பு'[71] என்றே வழங்குகிறார். யாத்திரிகனின் அச்ச நிலைமையைப் பின் வரும் பாடலிற் காணலாம்:

''முன்னுறக் கருதி நோக்கி முடுகுவ னெறியைப் பற்றிப்
பின்னுறத் திரும்பி நோக்கிப் பேருயிர்ப் பெறிவன் பேதுற்
றென்னுறப் படுவ தேயோ வின்னுமென் றிடைவன்
பொன்னுறப் பொதிந்து செல்லுந் தனிவழிப் போக்கன் போல்வான்.''[72]

இங்ஙனமே இரட்சணிய் யாத்திரிகத்தில் ஏனைய சுவைகளும் அமைந்து காப்பியத்தின் சுவை நலத்தை மிகுவிக்கின்றன.

1. பழமொழிகள்

மக்கள் வாழ்க்கையில் மூதுரைகளாய் வழங்கும் பழமொழிகள் இலக்கியத்தில் இடம் பெற்றுவிடுகின்றன. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது ஒரு முதுமொழி. யாத்திரிகன் தன் ஆன்மாவின் அவலநிலை பற்றி எழுந்த கவலையைத் தன் மனைவிக்குத் தெரியாமல் மறைத்துவைக்க முயன்றான். ஆனால், அவனால் இயலவில்லை. இதனை உணர்த்துவதற்குப் புலவர்: ''வியனகத் தியன்மு கத்து விளங்குமென்று உணரான் போலும்!''[73] என்னும் முதுமொழியை ஆண்டுத் தெளிவுபடுத்துகிறார். இது போன்று இரட்சணிய யாத்திரிகத்தில் 25க்கு மேற்பட்ட பழமொழிகள் இடம்பெறுற்றுள்ளன.

2. நடை பற்றிய சில குறிப்புகள்

பேச்சு வழக்கு

பதினெட்டாம் நூற்றாண்டளவிலேயே பேச்சுமொழி பாட்டில் இடம்பெறலாயிற்று. 'குறவஞ்சி', 'பள்ளு' முதலிய் சிற்றிலக்கியங்களில் இவ்வியல்பினைக் காண்கிறோம். பிற்காலத்தில் எழுந்த கீர்த்தனைகளிலும் பாரதியார் பாடல்கள் முதலியவற்றிலும் இத்தகு சொல்லாட்சி மலிந்து கிடப்பதைக் காணலாம். 19 ஆம் நூற்றாண்டில் பெருங்காப்பியம் என்ற அளவில் தோன்றிய இரட்சணிய் யாத்திரிகமும் இதற்கு விதிவிலக்காக அமையவில்லை. யாத்திரிகத்தில் நாட்டு வழக்கும் பேச்சு வழக்கும் இடம் பெற்றுள்ளன. ''மயிர்க்கிடை விலகு மேனும்''[74] ''வலம் இடம் அறியாத,''[75] ''சிரசாட்டம் கெருவிகட்கே,''[76] இன்னோரன்னவற்றை நாட்டுவழக்குக்குக் காட்டாக்கலாம். 'டாம்பீகம்,'[77] 'கோலாகலம்,'[78] 'கேட்டுவாயில்'[79] இதுபோன்ற பேச்சு வழக்கும் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன.

வடசொற்கள்

யாத்திரிகத்தில் ஐ, ஸ, ஷ, ஹ, க்ஷ, போன்ற கிரந்த எழுத்துகள் கலந்த சொற்களும் வழக்காறு பெறுகின்றன. கம்பர் காப்பிய நடையின் போக்கைத் தழுவிய கிருஷ்ண பிள்ளை இந்த வடசொல் வழக்கிலும் அவரை முற்றிலும் தழுவியிருப்பாராயின் காப்பியம் மொழிநடையில் இன்னும் சிறப்புற்றிருக்கும். வடசொற்கள் தமிழ்மொழியில் வழங்கும்போது தமிழ் ஒலி

மரபின்படி வழங்கவேண்டும் என்பதைத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.[80] கம்பர்காலம் வடமொழிக் கலப்புமிக்ககாலமாயிருந்த போதிலும், அவர் தமிழ்ஒலி வரம்பைப் போற்றியுள்ளார். யாத்திரிகத்தில் 'பத்தி', 'முத்தி' 'சீவகங்கை' போன்ற சொற்களும் உள்ளன.

19ஆம் நூற்றுண்டு இலக்கியத்தின்மீது ஒரு பொதுப் பார்வை செலுத்தினுல், கிரந்த எழுத்துகள் கலந்த சொற்கள் அந்நூற்றுண்டின் சிறந்த புலவர்களின் இலக்கிய படைப்புகளில் வழங்கியுள்ளமை காணலாம். வேதநாயக சாத்திரியார், வேதநாயகம் பிள்ளை, பேரா. பெ. சுந்தரம்பிள்ளை, மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை, இராமலிங்க அடிகள் உள்ளிட்ட பலர் பாடல்களில் இப்போக்கினைக் காண்கிறேம். 19ஆம் நூற்றுண்டின் இறுதிக் கால்பகுதியிற் பிறந்தவரான தேசிய கவி பாரதியார், 'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய சந்தம், இவற்றினையுடைய காவியம் தற்காலத்தில் செய்து தருவோன், நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனுகின்றுன். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைபடாலும் நடத்த வேண்டும்' என இக்காலக் காப்பியம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை எழுதுகிறுர்.[81]

1977 சூன் திங்கள் 26ஆம் நாள், கிருஷ்ணபிள்ளை 1860 அளவில்[82] 'இரட்சணிய சரிதம்' என்னும் தலைப்பில் கிறித்துவின் மீட்புத் திருசெயல்களைப் பாடமுற்பட்டு இயற்றிய பாடல்கள் பலவற்றை முதன்முதல் காணும் அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இப்பாடல்களின் நடையில் வடசொற் கலப்பு அருகியே அமைந்துள்ளது. இப்புதிய நூல் பற்றிய விவரமான குறிப்பு வேறு இடத்தில் வருகின்றது. கம்பர் வழியில் வடசொல் கலப்பற்ற செறிவுள்ள தமிழ் நடையில் தொடக்க நாள்களில் கவிஞர் கவி பாடியுள்ளார் என்பது இதனுல் புலப்படுகின்றது. எடுத்துக் காட்டிற்குப் பின்வரும் பாடலைப் பாருங்கள்:

''தஞ்ச மென்றடைந் தவர்பவப் பிணியினைத் தவிர்க்கும்
செஞ்சொ லாளனைத் திருமறை முதல்வனைத் தீயோர்
வஞ்ச நெஞ்சுளே அலகையின் கொடுமதி வாய்ப்ப
எஞ்சு ருதவற் கோறல்செய் வேம்என எண்ணி.''[83]

ஆனுல், கவிஞரின் நல்ல தமிழ் நடைப்போக்கில் பின்னர் மாற்றம் இருப்பதைக் காண்கிறேம்.

1878 ஏப்ரல் 'நற்போதகம்' இதழில் முதன்முதல் காப்பியம் வெளிவரத் தொடங்கியபோது, கிருஷ்ண பிள்ளை காப்பியத்தின் கதையை அறிமுகப்படுத்தி எழுதுங்கால் அதன் நடையைப்பற்றி,

> ''சில சிநேகிதர் விருப்புற்றுச் சொன்ன யோசனையின், பிரகாரம் தற்காலத்தில் கூடியவரை தெளிவான; இயற்சொற்களைக்கொண்டு காவ்யரூபமாக இயற் றப்படுகிறது''[84]

என்று கூறியுள்ளார். இதனால் கவிஞரின் காப்பிய நடை அமைப்பில் நண்பர்களின் கருத்துச் செல்வாக்கு இடம் பெற்றுள்ளமை தெரிகின்றது. இதற்கேற்ப எளிமையை நோக்கிக் காப்பிய நடை மாற்றமும் அமைகிறது.

காப்பியத்தில் நடை எளிமையைப்பற்றிய எண்ணம் கிருஷ்ண பிள்ளைக்கும் இருந்திருக்கிறது. இதனைப் பின்வரும் அவர் கூற்றாலேயே அறியலாம்:

> ''உலகத்துக்குப் பெரும்பாலும் பிரயோஜனகரமாயிருக்க வேண்டுமென்பதை யுத்தேசித்தே கூடிய்வரை இயற்சொற்களைக்கொண்டும், எவரும் முன்பின் சம்பந்தத்தைக் கவனித்துத் தெளிவாய்ப் பொருளறிந்து கொள்ளத்தக்க திரிசொற்களைக்கொண்டும் தற்கால வழக்கத்தை அனுசரித்து இடைக்கிடை சாமான்யமான வடசொற்களைக் கொண்டும் (இரட்சணிய யாத்திரிகம்) இயற்றப்பட்டிருக்கிறது''[86]

என்கிறார். இவர் காலத்தில் வடசொற்கள் செய்யுளில் வழங்கப் படுவது வழக்கம் என்னும் குறிப்பையும் இவர் கூற்றால் காண்கிறோம்.

எனவே காப்பிய நடையைப்பற்றிய இவர் கருத்துடன் மொழியின் கால வழக்கத்தையும் கருத்திற்கொண்டு காப்பியம் இயற்றியுள்ளார். யாத்திரிகத்தில் வடசொற்கலப்பு, தமிழ்மொழி வரலாற்றில் ஒரு கால நிலைமையைக் காட்டுகிறது. கிருஷ்ண பிள்ளை, காப்பியம் எளிய நடையினதாய் அமைய வேண்டும் என்று கருத்திற்கொண்டு செய்திருப்பினும், காப்பியம் அவ்வளவு எளிய நடையினதாய் இல்லை. எனினும், தெளிவும், அழகும், புதிய ஆற்றலும் தங்கு தடையில்லாத கவிதை ஓட்டமும் உடையதாய்க் காப்பியம் விளங்குகிறது.

சமயச் சொல்லாட்சி

புதிய சமயத்தின் உண்மைகளைத் தமிழ்மொழியில், 'பக்தித் தமிழில்' வெளிப்படுத்துவதற்குச் சொற்கள் கிருஷ்ண பிள்ளைக்குத் தடையாக நிற்கவில்லை. சைவ வைணவ சமயங்களில் வழங்கும் சமயப்பொருள் பொதிந்த சொற்களை இவர் எடுத்தாள்கிறார். ஆனால், அவற்றை வரையறை இன்றி ஆளவில்லை.

கடவுளை அழைக்கும்போது இந்து சமயக் கடவுளர்களின் சிறப்புப் பெயர்களை விட்டுவிட்டுப் பொதுப்பெயர்களை அப்படியே பயன்படுத்துகிறார். 'நாதன்,' 'ஆதிமூலப் பரம்பொருள்,' 'எம்மான்,' 'அமலன்,' 'ஈசன்', 'தருமமூர்த்தி', 'சருவலோக சரணியன்', 'சர்வேசுவரன்', 'பரமன்' 'பெருமான்' என்றின்னோரன்ன சொற்களை எடுத்தாள்கிறார். கடவுளைச் 'சச்சிதானந்த வேந்தன்'[86] என்றும் வழங்குகிறார்.

கடவுளுடைய திருநகரத்திற்பாயும் 'சீவ நதி' கங்கை நதியாய் மாறுகிறது. சீயோன்மலையிலிருந்து (பரம எருசலேம்) பாயும் சீவநதி, யாத்திரிகத்தில் மாமேருமலையிலிருந்து பாய்கிறது. சீயோன்மலை தமிழ் இலக்கிய மரபு வழிவந்த மேருமலையாகிறது.[87] அழியா வாழ்வளிக்கும் கனி தரும் சீவ விருட்சம் 'கற்பக' மரமாகிறது.[88] சைவசமயத் திருமுறைகளுள் ஒன்று திருமூலர் இய்ற்றிய 'திருமந்திரம்; கடவுள் திருப்பிறப்படைந்தபோது விண்ணுலகில் உண்டான வாழ்த்தொலியை திருமந்திரமுறை வாழ்த்தொலி' என்கிறார்.[89]

மடலூர்தல், பண்டை இலக்கியத்தில் அகப்பொருள் துறைகளுள் ஒன்றாய் இருந்தது. தலைமகன் தலைமகளை வரைந்து கொள்ளுவதற்குக் கொண்ட ஒரு முறை இது. பின்னர், பக்தி இலக்கியத்தில் ஆன்மா தன் தலைவனாகிய இறைவனை அடைதற் பொருட்டு மடலூர்தல் நிலை ஏற்பட்டது. மடலூர்தல் பெண்களுக்கு உரிமை இல்லாதிருந்தது. ஆன்மா பெண்ணாக உருவகம் செய்யப்பட்டமையால் இந்நிலை மாறியது. திருமங்கையாழ்வாரின் 'சிறிய திருமடலிலும்' 'பெரிய திருமடலிலும்' ஆன்மாவாகிய தலைவி இறைவனை அடைய மடலூரப் போவதாக உரைக்கும் நிலைமை அறிகிறோம்.[90] கிருஷ்ண பிள்ளை இம்மடலூர்தலை யாத்திரிகத்தில் கையாளுகிறார்; இன்னொரு புதுப்பொருளும் தருகிறார். பேரின்ப போகம் துய்க்க ஆன்மா இறைவனை அடைய மடலூரவில்லை. ஆனால், ஆன்மாக்களுக்குப் பேரின்பம் அருள இறைவனே மடலூர்ந்ததை, தன்ஆன்ம நாயகன்பால் வேட்கை மீதுற்ற ஓர் ஆன்மாவாகிய தலைவி எண்ணி ஏங்குகிறாள். இறைவர் ஆன்மாக்களின்பால் அன்பு கொண்டு அவர்களை மீட்க மடலூர்ந்தார் என்பது புலவர் ஊட்டும் புதிய பொருள்.

''ஞான மேவு நராத்தும நாயகன்
ஓல மார்குரு சொண்மட லூர்ந்தருட்
சீல மாகத் திருத்து திருமணக்
கோல முள்ளிக் குழைந்துளந் தேம்புவாள்.''[91]

இம்மடலூர்தலில் தலைமகன், கிறித்து மீட்பர்; தலைவி, ஆன்ம நாயகியாகிய திருச்சபை; மடற்குதிரை, சிலுவை மரம்; தலைவியின் ஊர், எருசலேம் திருநகரம்; மீட்பர் திருவிலாவிலிருந்து

சிந்திய செந்நீரே தலைவிக்குக் கொடுத்த அன்புப் பொருள். இவை திருமறைக் கருத்துடன் முரண்படவில்லை.

வைணவ சமயத் தத்துவமான 'சரணாகதித் தத்துவம்' கிறித்தவத்திற்குப் பொருந்தியதே. இதனைக் கிருஷ்ணபிள்ளை எடுத்துரைக்கிறார். 'நேய மிகுரட்சகன் சரண நிழலை யடைமின் சகத்தீரே'[92] என்பது இவர் வேண்டுதல். இறைவர் பக்தர்களைத் தமது அருளால் தாங்குவதைத் தெளிவுபடுத்திப் புலவர் கூறும் உவமை எண்ணத்தக்கது.

''கௌவியலை பூசைமுறை காண்டியது போலுந்
தைவிகம காகிருபை தாங்குவது நம்மை.''[93]

'தாய்ப்பூனை தன் குட்டியைக் கவ்விக்கொண்டு செல்லுதலைப் போல இறைவர் கிருபை நம்மைத் தாங்குகிறது,' என்கிறார். இறைவர் அருளை விளக்குவதற்குத் தென்கலை வைணவத்தில் வழங்கும் இவ்வெடுத்துக்காட்டைக் கிருஷ்ணபிள்ளை பயன்படுத்துகிறார். இவர் கிறித்தவராவதற்கு முன் தென்கலை வைணவர் என்பது ஈண்டு நினைக்கத்தக்கது.

'திரு' என்னும் அடைமொழி, தமிழில் சமயப் புனிதம் உள்ளனவற்றிற்கு வழங்குவதைக் காண்கிறோம். கிருஷ்ண பிள்ளையும் தம் யாத்திரிகத்தில் 'திரு' என்னும் அடைமொழியை அவ்வாறே ஆளுகிறார். 'திருவருள், திருநகரம், திருமொழி, திருவுள்ளம், திருவருளாட்சி, திருமாளிகை, திருமுன்றில்' என்பன சில காட்டுகள்.[94]

கிருஷ்ண பிள்ளை, இவ்வாறெல்லாம் கிறித்தவ சமயக் கோட்பாட்டுடன் முரண்படாத பெயர்கள், கருத்துகள், சொற்கள் முதலியவற்றைப் பயன்படுத்துகிறார். இதனால், கிறித்தவ உண்மைகளை நாட்டுக்குரிய நயமிக்க மொழியிலும் பண்பாட்டிலும் அவர் வெளிப்படுத்தியுள்ளமை தெளிவுபடுகிறது; தமிழ்மொழி எச்சமயத்தின் கருத்தையும் வெளிப்படுத்தத்தக்க ஆற்றல் மிக்கது என்பதும் புலப்படுகிறது.

நிறைவுரை

இரட்சணிய யாத்திரிகத்தின் காப்பிய நடை கம்பராமாயணத்தின் காப்பிய நடையினை அடியொற்றியது. 10 வகைப் பாக்களும் 96 வகை சந்தங்களும் அமைந்து கம்பராமாயணத்தைவிடத் தலைசிறந்த காப்பிய நடையுடன் அமைந்துள்ளது. 250க்கு மேற்பட்ட உவமை அணிகளும் 50க்கு மேற்பட்ட உருவக அணிகளும் காப்பியத்தை அழகு செய்கின்றன. காப்பியமே முற்றுருவக அணிக்காப்பியமாய் தன்னிகரற்று விளங்குகின்றது. ''சிலேடை அணிகள், சொல்லணி, சுவையணி, பழமொழிகள்'' முதலானவை நடைநலத்தை மேப்படுத்திக் காப்பியத்தைச் சிறப்பிக்கின்றன.

1 W.H. Hudson, An Introduction to the Study of Literature, 4th Indian ed p. 27.
2 மு. வரதராசன், இலக்கியத்திறன், பக். 240
3 ரெனி வெல்லாக் & ஆஸ்டின் வாரன், இலக்கியக் கொள்கை, பக். 259
4 ஷை, 257
5 மு. வரதராசன், op. cit., பக். 194, 195
6 பெருந்தொகை 1801
7 செல்வி அன்னிதாமசு 'கம்பனில் யாப்பு' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையிலிருந்து இராமாயணத்தில் உள்ள யாப்புப் பற்றிய புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்டன. காண்க: இளவேனில், பக். 42; சிறப்பாசிரியர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியம், சென்னை: இளங்கோ மன்ற வெளியீடு. 1972.
8 Quoted, W H. Hudson, An Introduction to the Study of Literature, 4th Indian Ed., P 65
9 L. Abercrombie, Principles of Literary Criticism, Reprint, p. 42
10 ஆரணிய பருவம்: நம்பிக்கை நன்னெறி பிடித்த படலம் 9.
11 பெருந்தொகை 1804.
12 ஏ.வி. சுப்பிரமணிஐயர், கல்வியில் பெரியவர் கம்பர், 2ஆம் பதிப்பு, பக்.135
13 ஷை, பக். 135
14 நேர்முக உரையாடல், நாள்: 4-7-1974; இடம்: 20ஏ, சுப்பிரமணிய முதலி தெரு, சென்னை-7
15 ஆதி பருவம்; சுவிசேஷ மார்க்கப்படலம் 128
16 ஷை., பரமராஜ்யப் படலம் 43
17 புலவர் குழந்தை, தொடையதிகாரம், பக். 121
18 ஷை., 159
19 ஷை , 175
20 ஷை., 109
21 ஷை , 139
22 அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, மறுபதிப்பு, பக். 125
23 Quoted, S. Shankar Raju Naidu, A Comparative Study of Kamba Ramayanam and Tulsi Ramayan, p. 525
24 L. Abercrombie, Principles of Literary Criticism, p. 42
25 நிதான பருவம்: அழிம்பன் தோல்விப் படலம் 70.
26 குமார பருவம்: இரட்சணிய சரிதப் படலம் 327
27 ஆரணிய பருவம்: ஆனந்த சைலப் படலம், 5.
28 காண்க, மு. வரதராசன், இலக்கியத் திறன், பக். 26
29 ஷை., 206
30 ஆரணிய பருவம்: ஆனந்த சைலப் படலம் 29
31 மு. வரதராசன், இலக்கியத் திறன், பக். 211
32 நிதான பருவம்: நிதானி நட்புப் படலம் 28,
33 புலவர் குழந்தை, தொடையதிகாரம், பக். 121
34 ஷை., 140
35 ஆரணிய பருவம்: விடாதகண்டப் படலம் 35
36 இ. சுந்தரமூர்த்தி, திருக்குறள் அணிநலம், பக். 154
37 A. Sankaran, Some Aspects of Literary Criticism in Sanskrit, 2nd Ed p. 33
38 மேற்கோள், வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், தமிழ்மொழியின் வரலாறு. 12ஆம் பதிப்பு, பக். 60-61
39 மேற்கோள், இ. சுந்தரமூர்த்தி, திருக்குறள் அணிநலம், பக். 18

40 தொல். உவமையியல் 1
41 ,, 3
42 ஆதி பருவம்: மெய்யுணர்ச்சிப்படலம் 5
43 சங்கீதம் 82:13
44 குமார பருவம்: சம்பாஷணைப் படலம் 34
45 மேற்கோள். இ. சுந்தரமூர்த்தி திருக்குறள் அணிநலம், பக். 18
46 தண்டியலங்காரம் 35
47 M.R. Ridley, Poetry and the Orldinary Reader, p. 64
48 ஆதிபருவம்: சிருஷ்டிப்படலம் 3
49 H R. Maynard, (Ed) The Works of Aristotle, Vol. II, p. 655
50 தண்டியலங்காரம் 37வது நூற்பா
51 பரமராஜ்யப் படலம் 21
52 ஒ.நோ. சமாரிய நாட்டுப் பெண்மணிக்கு இயேசு என்றென்றும் சுரக்கும் மெய்வாழ்வு நீர் அருளிய நிகழ்ச்சி, யோவான் 4
53 இ. சுந்தரமூர்த்தி, திருக்குறள் அணிநலம், பக் 198.
54 தண்டியலங்காரம் 92 ஆவது நூற்பா
55 ஆதி பருவம்: ஜீவபுஷ்கரணிப் படலம் 12
56 தண்டியலங்காரம் 91
57 ,, நூற்பாவின் உரை, தண்டியலங்காரம் மறுபதிப்பு, பக். 187, 188
58 கி வா. ஜகந்நாதன், தமிழ்க்காப்பியங்கள், பக். 193
59 இ.யா, தற்சிறப்புப் பாயிரம் 14
60 கி.வா. ஜகந்நாதன், op. cit , பக். 193
61 A. Sankaran, Some Aspects of Literary Criticism in Sanskrit, p. 33
62 தண்டியலங்காரம் 8
63 தொல்காப்பியர்: மெய்ப்பாட்டியல் 3
64 மு. வரதராசன், இலக்கியமரபு, 2ஆம் பதிப்பு, பக். 60
65 தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் 4
66 நிதான பருவம்: நிதானி கதி கூடு படலம் 68
67 தொல்காப்பியர்: செய்யுளியல் 124, 129
68 கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, மருமக்கள் வழி மான்மியம், 2 ஆம் பதிப்பு, முன்னுரை, பக். 21
69 நிதான பருவம், மாயாபுரிப் படலம் 30
70 குமார பருவம். இரட்சணிய சரிதப்படலம் 317, (315-340)
71 நிதான பருவம், மரணச் சூழலிறுத்த படலம் 6
72 ,, 3
73 ஆதி பருவம்: மெய்யுணர்ச்சிப் படலம் 7
74 நிதான பருவம்: மரணச் சூழலிறுத்தப் படலம் 38
75 நிதான பருவம்: நிதானி நட்புப்படலம் 63
76 நிதான பருவம்: மாயாபுரிப் படலம் 57
77 ,, 29
78 ,, 30
79 ,, 11
80 தொல்காப்பியம்: எச்சவியல் 5
81 ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், கல்வியில் பெரியவர் கம்பர், 2ஆம் பதிப்பு, பக். 137
82 1860 நற்போதகம், ஆகஸ்டு. பக். 166
83 இரட்சணிய சரிதம், சூழ்விசேஷப் படலம் 2
84 நற்போதகம், 1878, ஏப்ரல்
85 இரட்சணிய யாத்திரிகம், 3ஆம் பதிப்பு, பக். VII

86 ஆதி பருவம்: சிருஷ்டிப் படலம் 15
87 ஆதி பருவம்: பரமராஜ்யப் படலம் 3
88 ,, 3
89 ஆதி பருவம்: சுவிசேஷ மார்க்கப்படலம் 17
90 காண்க. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்: சிறியதிருமடல், பெரிய திரு மடல்
91 இரட்சணிய பருவம்: தருமசேத்திரப் படலம் 69
92 நிதானபருவம்: இரட்சணிய நவநீதப்படலம் 15
93 ஆதி பருவம்: கடைத்திறப்புப்படலம் 48
94 இரட்சணிய யாத்திரிகத்திலும், இரட்சணிய மனோகரத்திலும், போற்றித் திரு அகவலிலும், இரட்சணிய சரிதையிலும் பயின்றுள்ள சமய வழக்குச் சொற்களின் பட்டியல் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது காண்க.

இயல் ஐந்து

இரட்சணிய யாத்திரிகத்தின் இறையியல்

இறையியல் என்பது கடவுள்-மனித உறவுநிலையில் கடவுளைப் பற்றும் இம்மை மறுமைக் கோட்பாடுகளை விளக்குவது என்று கொள்ளலாம். கிருஷ்ணபிள்ளை இயற்றிய உரைநடை நூலாகிய 'இரட்சணிய சமய நிர்ணயம்' என்பது கிறித்தவ சமய சாத்திர நூலாய்-காப்புரையாய் விளங்குகின்றது. இதனை இரட்சணிய யாத்திரிகத்தின் விளக்கவுரை என்று மறைத்திரு ஏ. ஜெ. அப்பாசாமி கூறுகின்றார்.[1] இது மிகைக் கூற்றே. இரட்சணிய யாத்திரிகத்திற் சிதறியுள்ள சமயக் கருத்துகள் பல இதில் தொகுத்துரைக்கப்பட்டு விளக்கம் பெறுகின்றன. கவிஞர் பாடியருளிய போற்றித் திரு அகவல். இரட்சணிய சரிதம், இவர் கிறித்தவரான வரலாறு, இரட்சணிய மனோகரம் ஆகிய நூல்களிலும் இவருடைய இறையியல் கருத்துகள் காணப்படுகின்றன. எனினும் இவருடைய மணிமுடிப் படைப்பான இரட்சணிய யாத்திரிகத்தில் இறையியல் கருத்துகள் தலைமையாக வெளிப்பட்டிருப்பது இயல்பாகும். எனவே இக் காப்பியத்தில் காணப்படும் இறையியலை இங்கு ஆராய்ந்தறியலாம்.

1. திருமறைச் சார்பு

முறைப்படி ஓர் இறையியற் கல்லூரியிற் கற்று அறிஞராகிக் கிருஷ்ண பிள்ளை இறையியல் இயற்றினார் அல்லர். மேலும், இவருக்கு ஆங்கில மொழிப் பயிற்சியின்மையால் அம்மொழியிலிருந்த இறையியல் நூல்களைக் கற்கும் வாயப்புச் சிறிதும் இல்லை. ஆனால், இக் குறையை இவர் ஆங்கில மொழிப் புலமையுடன் இறையிற் புலமையும் நிறைந்த தம் நண்பர்கள் மூலம் நீக்கிக் கொள்ள முயன்றார்.

வேதாகமத்தின் அடிப்படையிலும் கிறித்தவ வாழ்க்கை அனுபவத்தின் அடிப்படையிலும் சமய உண்மைகளை இவர் பாட்டு, உரைநடை ஆகிய இரண்டிலும் வெளிப்படுத்தியுள்ளார். ஆன்ம விசாரியின் யாத்திரையே வேதத்தைப் படித்து அதன்படி ஒழுகி அவன் முக்தி அடைதலை விவரிப்பதாகும்.

மேல்வரும் பாடல் யாத்திரிகனின் தொடக்க நிலையைக் கூறுகின்றது:

''கையுறு புத்த கத்தைக் கருத்துற விரித்து நோக்கி
மெய்யுற நடுங்கி விம்மி வேதனை பொறுக்க லாற்று
தையகோ வையகோ வென் றலறிநெட் டுயிர்த்தி யாது
செய்யுறு கரும மென்று திகைத்துநின் றயரு நிரான்''[2]

இவர் இறையியலை வெளிப்படுத்தியுள்ள முறை தருக்கமுறைக்கு ஒத்துள்ளது. இவருடைய இறையியல் திருமறைச்சார்புடையது; திருத்தூய்மையாளரின் இறையியற் சாயலும் காணப்படுகிறது. வேதத்தைப்பற்றி இவர் கருத்துப் பின் வருமாறு:

> "இகபர சர்வார்த்த ஏகசாதனமாகிய இது உலக சிருஷ்டிகரும், இரட்சகரும், மனிதருடைய கிருத கிர்த்தியங்களுக்குத் தக்க பலாபலங்களையூட்டுவிக்கிறவருமாகிய கடவுளைப்பற்றியும், அவருடைய திவ்விய பரிசுத்த பரிபூரண லட்சணங்களைப் பற்றியும், அவர் வானத்தையும் பூமியையும் அவற்றிலுள்ள சராசரப் பகுதிகளையும் சிருஷ்டி செய்த முறையைப்பற்றியும், பரிபாலனஞ் செய்துவருகிற கருணைப் பிரபாவத்தைப்பற்றியும், மனுக்கள் அநுசரித்துக் கைக்கொள்ளவேண்டிய விதி நிஷேதங்களைப்பற்றியும், பாபம் உற்பத்தியான விவரத்தைப் பற்றியும், அனாதி பரம ரகஸியமாயிருந்த ஆத்தும ஞான போதனை, நீதியிரக்க சமரசம், ஆத்தும ரட்சணை, மறுமையிலுள்ள நடுத்தீர்ப்பு, மோட்சம், நரகம் இவை முதலியவைகளைப் பற்றியும், மெய்த் திருச்சபையின் பூர்வோத்தர விர்த்தாந்தத்தைப்பற்றியும், வருங்கால வர்த்தமானங்களைப் பற்றியுமுள்ள சத்தியத்தை வெளிப்படுத்துகிற கடவுள் அநுக்ஞை பெற்ற திருவாக்காம்."[3]

கிருஷ்ண பிள்ளை, "வேதமானது தேவ அநுக்ஞை பெற்றெழுதியது" பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் அருளிச் செய்யப்பெற்றது என்றும் நம்பினார்.[4] வேதத்திற்குப் பின்வரும் பெயர்களை வழங்குகின்றார்: திருவாக்கு, திருவசனம், அருள்வசனம், ஜீவ வாக்கு, ஜீவவசனம், திருமொழி, அருள்மொழி, முதிய திருவருட் சுருதி.[5]

2. கடவுள்

இறையியல் அறிவின் மூலம் கடவுள் உண்மை. ஆதலின் முதலிற் கிருஷ்ண பிள்ளையின் கடவுள்பற்றிய கருத்துகளை நாம் எண்ணலாம். 'கடவுள் விண்ணக மண்ணகங்களுக்கெல்லாம் ஆதி; முது மூலத்துக்கும் அநாதி; எல்லாம் உண்டாதற்குக் காரணர்; அளவிடற்கரிய சோதி; தூய சித்ரூப வாழ்வாகிய சர்வேசுரன்', என்று விளக்குகிறார்:

> "பூதபௌ திகங்க ளாய புவனகோ சரங்கட் கெல்லாம்
> ஆதியாய் முதுமூ லத்துக் கநாதியா யகண்டா கார
> சோதியாய் விளங்கி நிற்குந் தூயசை தந்ய வாழ்வைக்
> காதலாய்ப் பரவி நாளுங் கருத்தினுள் ளிருத்தி
> வாழ்வாம்"[6]

கடவுள் முதற்பொருள் என்றும் எல்லாவற்றையும் கடந்தவர் என்றும் கூறுகின்றார்:

''மூல காரண முதற்பொரு ளெவற்றிற்கு மும்மைக்
கால மாதியீ றிகந்துள வநாதியங் கடவுள்
கோல மாமறை குணிப்பருங் குணங்குறி யமைந்த
சீல நாயகன் றிருவருட் பரவுதுந் தினமே.''[7]

கடவுளின் குணம்

இரட்சணிய யாத்திரிகத்தில் கடவுளின் குணங்களைப் பின் வரும் பாடலிற் புலப்படுத்தியுள்ளார்:

''நீதி கருணை பரிசுத்த நேசஞ் சுயம்பு சாமர்த்தியம்
போத மினைய லட்சணங்கள் பரிபூ ரணமாய் பொருந்தியனு
ஏத மிலனுய்க் காமாதி யெறிந்து பவத்தை யெரிக்கின்ற
ஆதி தேவன் சரணநிழ லடையவாரும் செகத்திரே.''[8]

'கடவுள் நீதி, கருணை, தூய்மை, அன்பு, தானுயிருத்தல், வல்லமை, அறிவு முதலிய குணங்கள் முழுமையாய் நிறைந்தவர்; குற்றமற்றவர்; காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங் களையும் அழிக்கிறவர்; பாவத்தை எரிக்கிறவர்; ஆதியும் அந்தமு மானவர்,'' என்று புலவர் கூறுகின்றார்.

இவையேயன்றிக் கடவுளுக்குரிய 32 குணங்களையும் இரட் சணிய சமய நிர்ணயத்தில் கூறுகிறார். அவை வருமாறு: 'அருபி, நிரவயவி, விஸ்வரூபி, ஆனந்தஸ்வரூபி, ஸத்ஸ்வரூபி, நன்மை ஸ்வரூபி, மங்களஸ்வரூபி, ஞானஸ்வரூபி, தர்மஸ்வரூபி, சமானர கிதர், பாபரகிதர், திரிகாலரகிதர், காலத்துக்கு நியந்தா, மனசுக்கு நியந்தா, உலகத்துக்கு ஆதாரர், தர்மத்துக்கு ஆதாரர், அநாதி நித்திய ஸ்வயம்பு, சர்வவியாபகர், சர்வக்ஞானர். சாக்ஷி மாத்திரர், அதிபரிசுத்தர், மகோன்னதர், மகிமைப் பிரதாபர், அதிருஷியர், பரமகாருணியர், நண்பர், நீதியுடையவர், தயாளர், க்ஷமையுள்ளவர், கிருபாநிதி, சம்பூரணர், சர்வவல்லவர்.''[9] இந்த 32 குணவியல்புகளும் புறச் சமய நூல்களை ஆதாரமாய்க் கொண்டு கூறியவையாகும். திருநகரத்தின் சிறப்பினைக் கூறுங்கால் கடவுளின் அளவில்லாத கல்யாண குணங்களை மேல்வரும்பாடலில் கூறி, அத்தகைய கடவுளின் மேன்மை விளங்கும் இடம் முத்தி என்று என்று தெரிவிக்கின்றார்:

''நித்தியமாய்ப் பூரணமாய் நிர்மலமா யானந்த
நிலைய மாகிச்
சத்திய ஞானந் தருமந் தயைசாந்தம் பரிசுத்தஞ்
சர்வ சக்தி

• இத்தகைய வனந்தகலி யாணகுணத் திறைமகிமை
யிலங்குந் தானம்...........''[10]

கடவுளுக்குரிய பெயர்கள்

கவிஞர், கடவுளுக்குச் சிறப்புப் பெயர், பொதுப் பெயர் என்னும் இருவகைப் பெயர்களைக் குறிப்பிடுகிறார். கடவுளின் சிறப்புப் பெயர் குறித்துக் கிருஷ்ண பிள்ளை,

''ஜெகோவா வென்பதே பிரதான திருநாமம். இந்த மகத்தான திருநாமம் மற்றெந்த வஸ்துகளுக்காவது தேவர்களுக்காவது வேறெதற்காவது வழங்கப்படுவதன்று. இது மூல பாஷைச் சொல். இதற்கு ஆதிமத்தியாந்தரகிதர், அநாதி நித்திய ஸ்வயம்பு, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலுந் தாமாயிருக்கிறவ ரென்பதே பொருள்.

''ஏலோகீம், பலமுள்ள மூலகாரண வஸ்து என்பது அதன் பொருள், மூல பாஷையில் இந்தப் பெயர் பன்மை விகுதி பெற்றது.

''அதோனு,, ஆளுகிறவர், ஆண்டவர் என்பது அதன் பொருள்''[11]

என்று கூறுகின்றார். மோசே முனிவர் தமக்குத் தரிசனம் அருளி அழைத்த கர்த்தரிடம் அவருடைய திருநாமம் என்னவென்று கேட்டபோது, அவர், இருக்கிறவராக இருக்கிறேன் ...... இருக்கிறேன் என்பவர் எனறு கூறியதை அறிகிறோம்.[12] நித்திய ஆவியாயிருக்கின்ற பரம்பொருள் மனித வருணனையான சொற்களுக்கு அப்பால் இங்கே தம்மை வெளிப்படுத்தியுள்ளமை புலப்படுகிறது.[13]

கிருஷ்ண பிள்ளை பிதா, சிருஷ்டிகர், இரக்ஷகர், நித்தியர் என்னும் சிறப்புப்பெயர்களையும் கூறுகிறார்.[14] இவர் பொதுப் பெயர்களாகக் கூறுவன:

''பராபரன், தேவன், கர்த்தர், ஆண்டவர் என்ற பெயர்களும் வழங்குகின்றன. கடவுள், ஆதி, பரமன், ஈசன், ஈசுவரன், சர்வேசன், சர்வேசுரன், ஜெகதீசன், முதல்வன், ஸ்வாமி''[15]

என்பனவாம். கிருஷ்ண பிள்ளையின் எழுத்துகளில் பரம்பொருளுக்கு வழங்கும் 'தேவன்' 'கடவுள்' என்னும் பெயர்களுள் 'தேவன்' என்பதே பெருவழக்கு. கிருஷ்ண பிள்ளை பின்பற்றிய பழைய மொழிபெயர்ப்புத் தமிழ் வேதாகமத்தில் 'தேவன்' என்ற சொல்லே முழுவதும் ஆளப்பட்டுள்ளது. பழைய மொழிபெயர்ப்புக் குழுவினர் 'தேவன்' என்பதே 'God' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கும் கிறித்தவத்தின் பொருளுக்கும் 'கடவுள்' என்பதைவிட நெருக்கமாக வருகின்றது என்று கருதினர்.[16]

தேவன் என்பது கிறித்தவர்களுக்குள்ளே மிகுந்த வழக்காறுடையதாக இன்றும் உள்ளது. புதிய திருப்புதல்களில் தமிழ் வேதாகமத்தில் 'கடவுள்' என்பதே முழுமுதற் பரம்பொருளை அறிவிக்கும் தக்க சொல் என்னும் அமைவில் இதனையே வழங்கியுள்ளனர்; இவ்வழக்கு விரைவாகப் பரவி வருகின்றது. பொதுப்பெயர்களுள் கிருஷ்ண பிள்ளை 'கடவுள்' என்பதையும் இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் தம்பி முத்தைய பிள்ளை 'தேவன்' என்பதே பொருத்தமுடையது என்று கருதினர்.[17] இவையே யன்றிக் கடவுளுக்கு வழங்கும் குணப்பெயர்களையும் குறிப்பிடுகிறார். கடவுளைப் படைப்பாளராகவும், அரசனாகவும், தாய் தந்தையாகவும் கிருஷ்ண பிள்ளை காண்கிறார். இப்பாங்கினை நோக்குவோம்.

படைப்புக் கடவுள்

'கடவுள் ஒன்றுமில்லாமையில் அனைத்துலகங்களையும் தோற்றுவித்தார்; முதலில் ஒன்றைக்கொண்டு மற்றொன்றை உண்டாக்கவில்லை,' என்று இவர் நம்புகிறார்; இக்கருத்தை, 'இல்லாமையில் எல்லாவற்றையும் உண்டாக்கினர்' என்பதனால் அறிவிக்கிறார். பின் வரும், பாடல் இதனைத் தெளிவாக்குவது புலப்படும்:

''இல்லா மையிலே வெளிவான் முகட்டெண் ணிறந்த
பல்லா யிரகோ டியவாம் பகிரண்ட கோளம்
எல்லாம் படைத்தொண் விதிகாட்டியியங்கு வித்த
சொல்லாற் றன்மிகும் பரலோக துரந்த ரேசன்.''[18]

திருமறை, ''இல்லாதவைதத் தம் சொல்லால் இருக்கச் செய்பவருமாகிய கடவுள்'' என்கிறது[19] கடவுள் அனைத்துலகங்களையும் படைக்கப் பயன் படுத்திய ஆற்றல் அவருடைய 'சொல்லாற்றல்' இதனை, ''சொல்லொன்றால் அனைத்துலகும் தோற்றுவித்தாய்''[20] என்று கூறுகிறார் நம் கவிஞர். கடவுள் தாம் அவ்வாறு படைத்த உலகங்கள் எல்லாம் ஒரே ஒழுங்குமுறைக்கு உட்பட்டு இயங்குமாறு ஒழுங்குமுறை எல்லையையும் வைத்தார்.[21] அவர் அவ்வுலகங்களை ஆட்சிபுரிந்து வருவதை ''அலகிலாப் புவனங்களெல்லாம் படைத்தளித்து ஆள்கின்ற ஐயன்''[22] என்று புலவர் சுட்டியுள்ளார்.

கடவுள் ஆறு நாளுக்குள்ளே எல்லா உலகங்களையும் படைத்தமையைத் திருமறை சொல்லுகிறது.[23] அவ்வாறு படைத்த உலகங்களைக் கடவுள் தம் திருமைந்தர்க்கு ஈந்தார்.[24] இவைபற்றிய கிருஷ்ண பிள்ளையின் கருத்தைப் பின்வரும் பாடலிற் காணலாம்:

''கருத்துறு கரும முற்றக் கருதியோர் வாக்கினாலே
உருத்திகள் குவல யத்தை யோரறு திவசத்துள்ளே
திருத்தித்தங் குடைகீ ழாக்கித் தெய்விகக் குமரற் கீந்தார்
வருத்தமிங் கெவனோ வெல்லாம் வல்லசித் தருக்கு மாதோ!''[25]

இப்படைப்பு நாள்களின் கால அளவுபற்றி வெவ்வேறு கருத்துகள் நிலவுகின்றன[23]. எல்லாம் வல்ல கடவுளுக்கு இவ்வுலகங்களை ஆறு நாள்களில் படைத்தல் அரிதன்று என்பதைக் கிருஷ்ண பிள்ளை நம்புகிறார்.

கடவுளை அரசனாகவும் காண்கிறார் கிருஷ்ணபிள்ளை. பரமராச்சியப்படலத்தில் வரும் 66 பாடல்களிலும் அரசியற் படலத்தில் வரும் 14 பாடல்களிலும் அரசர் என்னும் கடவுளின் ஆட்சி நிலை பல நிலைகளில் புலப்படுத்தப்படுகின்றது. இக்கருத்தும் வேதாகமத்தில் வழங்குவதே. 'கடவுள், சொல்லுக்கு அப்பாற்பட்ட மேன்மையின் அழகு மிளிர்ந்த மிக மேலான விண்ணகத்தில் ஆட்சி செய்கின்ற எல்லாம் அறிந்தவராகிய அரசர்''[27] என்று விளக்குகிறார். இவர் கடவுளையும் அவருடைய அரசாட்சியையும் பலவாறு வருணிக்கிறார். அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடலாம்.

அரசர்

''சொல்லாற் றன்மிகும் பரலோக துரந்த ரேசன்''[28]
....எங்கும்
செங்கோல் பிடித்துத் தனியாழி செலுத்த நாளும்
தங்கா வலையுய்த் தரசாட் சிசெய் சார்வ பௌமன்''[29]
''வானுடு போற்றத் திறைகொள்ளு மகேச வள்ளல்''[30]
''விந்தைப் பெருமாள் விபூதாதி பன்வேந்தர் வேந்தன்''[31]
''உலகாட்சி செய்ரா ஜவி ராஜன்''[32]
''தருமத் துரையா யதயோர்ச் சிதசக்க ரேசன்''[33]
என்பன சில வருணனைகளாம்.

'கடவுள் தம் வலப்பக்கத்தில் 'குமரேசனா'கிய கிறித்துப் பெருமான் வீற்றிருக்க, நீதியுடன் ஆட்சிபுரிகிறார்.[34] திருவருள் மிகுந்து ஒரு குடையின் கீழ் இவ்வுலக அருளாட்சி செய்துவரும் கடவுள் வேந்தர் தம் குடிகளுக்குக் கட்டளையருளி அவர்களைக் கடாட்சித்துக் காத்தருள்கிறார்' என்கிறார் கிருஷ்ண பிள்ளை.

''திருவருள் மலிந்து செங்கோல் செலுத்தியிச் சகத்தை முற்றும்
ஒருகுடை நிழற்கீ ழாக்கி யுவந்நுகாத் தளிக்கும் வேந்தன்;''[35]

திருமறையில் கடவுள் அரசர் என்று வழங்கப்பட்டுள்ளார்; பழைய ஏற்பாட்டில், ''சேனைகளின் கர்த்தராகிய அரசர்,''[36] ''விண்ணக வேந்தர்'',[37] என்றெல்லாம் வழங்கப்படுகிறார். இக்கருத்துப் புதிய ஏற்பாட்டிலும் தொடர்கிறது. ''உம்முடைய இராச்சியம் வருவதாக!''[38] என்பது புதிய ஏற்பாட்டிற் காணப்படும் வேண்டுதல். புதிய ஏற்பாட்டில் காணப்படும் திருச்

சபையை, 'உலகிலுள்ள கடவுள் அரசு' என்பர்.[39] அதிலவுலக நோக்கில் திருச்சபையின் அரசாங்க அமைப்பு முழுமையான முடியரசாகும்.[40]

தாய் தந்தையார்

கிருஷ்ண பிள்ளை, கடவுளைத் தாயாகவும் தந்தையாகவும் காண்கிறார்.

''அன்னையாய் அப்பனாய் அன்றுதொட் டின்றுமட்
டென்னையன் பொடுபுரந் தென்றும்நன் றேதரும்''[41]

இறைவர், என்கிறார். 'கடவுள் ஆன்மாக்களைத் தந்தையைப் போல அவர்கள் தவறிழைக்குங்கால் கடிந்தும், தாயைப்போல அவர்களை அணைத்தும் காக்கிறார்' என்பதனை,

''இனைய நூல்வழிப் போக்கருக் கிகபரத் திறையாம்
முனைவன் றாதையிற் கடிந்துதாய் முறைமையிற் றாங்கி''[42]

என்று பாடுகிறார்; மேலும், கடவுளைத் ''தாயினும் இனிய தற்பரன்''[43] என்கிறார்.

'கடவுள் தம் உயிர் மைந்தரை மக்களை மீட்பதற்காக உயிர்ப் பலியாக்கினார். அவர் தம் உயிரைக்கொடுத்து ஆன்மாக்களுக்கு மீட்பருளினார். இது தாயன்பினும் மிக்கது என்னும் பொருள்பட, ''தாயேனு மகவின்பொருட்டு உயிரை ஈவளோ!''[44] என்று வியக்கிறார்.

கடவுளைத் தந்தையாக, கிறித்துவின் திருஅவதாரத்திற்குப் பின்னரே புதிய ஏற்பாட்டில் நன்கு அறிய இயல்கிறது. 'கடவுள் மக்களுக்குத் தந்தை' என்னும் கருத்து பழைய ஏற்பாட்டில் அருகியே தோன்றுகிறது;[45] புதிய ஏற்பாட்டில் மிகமிக வெளிப்படையாகவும் நெருக்கமாகவும் காணப்படுகிறது. கிறித்து, தம் சீடர்களுக்குக் கடவுளிடம் வேண்டுதல் செய்யக் கற்பித்தபோது, ''விண்ணுலகத்திலுள்ள எங்கள் தந்தையே.''[46] என்று தொடங்குமாறு கற்பித்தருளினார்.

கடவுள் தம் திருமைந்தராகிய இயேசுவின் மூலம் ஆன்மாக்களைத் தடுத்தாட்கொள்ளுகிறார். கடவுள் கிறித்துவைத் தம் முதல் மைந்தராகவும், அவர்மூலம் ஆட்கொள்ளப்படும் அன்பர்களை கிறித்துவுக்குள் தமக்கு மைந்தர்களாகவும் பாவிக்கிறார். இதனை, ''வலியப்பிடித்து இழுத்து உன் மகிமைக்கு உயர்த்திக் கிறித்துவுக்குள் எனையு மைந்தனாப் பாவித்தனை'[47] என்று பாடியதால் அறிகிறோம்.

கடவுளைத் தந்தையாகவும் கிறித்துவைத் திருமைந்தராகவும் வெளிப்படுத்தியிருப்பினும் அவ்விருவரும் ஒன்ருய் இருக்கிருர்கள் என்பதனைக் கிறித்துவின் அருண்மொழியினைக்கொண்டே விளக்க முற்படுகிருர் புலவர். இதனைப் பின்வரும் பாடலில் உணரலாகும்:

''என்னில் வேறல ரெந்தையு மெந்தையார்
தன்னில் வேறலன் யானுமித் தன்மையின்
மன்னு மென்னை மய்லறக் காண்டலே
உன்ன தேசனைக் காண்டலென் றுன்னுமின்''[48]

கிறித்துவையே தந்தையாகவும் தாயாகவும் காண்கிருர் கிருஷ்ணபிள்ளை:

''இப்பா ருய்யவென்றே மனுக் கோலமெ டுத்தவெங்கள்
அப்பா வுன்னையல் லாலெனக்கார்துணை யாருறவே''[49]

''தாயே தந்தைதமர் குருசம்பத்து நட்பெவையும்
நீயே யெம்பெருமான் கதிவேறிலை நிண்ணயங்காண்.''[50]

மேற்கண்ட பாடலடிகளில் கிறித்துவைத் தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும், நண்பராகவும், எல்லாவற்றிற்கும் எல்லாமாகவும் கொள்ளுவதனைக் காண்கிறோம்.

3. உலகம்

கடவுள் இவ்வுலகத்தையும் இதன் அடங்கலையும் ''கலைமதி மாந்தர்க் கென்றே கையளித்தனர்''[51] என்று இரட்சணிய யாத்திரிகம் கூறுகின்றது. கடவுள் முதல்மகனுகிய ஆதாமுக்கு இந்நிலத்து உரிமைகளை எல்லாம் வழங்கித் தம் செங்கோலின்கீழ் மன்னவனுகி மனுமுறை வழுவாது ஆட்சிசெய்யுமாறு அருளினுர்:

''முன்னவ னுதா மென்ற முதன்மனு மகனை நோக்கி
இந்நிலத் துரிமை யெல்லா மீந்தன மெங்கோ லின்கீழ்
மன்னவ னுகி நீயே மனுமுறை வழுவா வண்ணம்
நன்னராண் டிருத்தி யுள்ள நலமெலாந் துய்த்தின் டென்ருர்.''[52]

முதல்மாந்தர் வீழ்ச்சிக்கு முற்பட்ட உலகம், விண்ணுலகம் போன்று இருந்தது. 'பாவம் இல்லை; பயம் இல்லை; சாதல் இல்லை; கோபமும் பகையும் இல்லை; மக்சள் பண்பில் மாசு இல்லை; துன்பம் தொடர்தல் இல்லை. உலகத்தின் பொருள்கள் எல்லாம் யாவர்க்கும் பொதுவாய் இருந்தன. கொள்வாரும் இலர்; கொடுப்பாரும் இலர்; மக்களுக்கு எவ்விதக் குறைவும் இல்லை. பிணி மூப்புச் சாக்காடு இல்லை. ஐம்பொறிகளுடன் புலன்களும் தூய்மையால் விளங்க, உண்மையான உணர்ச்சியோடு வானவரும் வியக்குமாறு ஆதாமும் ஏவாளும் இறைவருடன் பக்தி பூண்டு ஒழுகி வந்தனர்,'[53] என்று வருணிக்கிருர் புலவர்.

ஆனால், சாத்தானுடைய் நயவஞ்சகத்திற்கு ஆட்பட்ட உலகம், ''வஞ்சனை பயில் பிரபஞ்சவனம்'' ஆயிற்று.[54] சடப் பொருள் உலகமும் சாபத்திற்குட்பட்டது.[55] உலகம் தீவினைக் களஞ்சியமாயிற்று; பாவங்களுக்கு இருப்பிடமாயிற்று. இத் தீமைகள் எல்லாம் கடவுளரசுக்கு எதிராகச் சாத்தான் அமைத்த தீய ஆட்சியினால் ஏற்பட்டன என்கிறார்.[56] உலகம் 'நாசதேசம்' என்னும் வழக்குக்கு உட்பட்டுவிட்டது;[57] 'பொய்யுரைப்பவரே உலகில் புண்ணியர்', என்னும் நிலையும் அமைந்துவிட்டது என்றும் இரட்சணிய யாத்திரிகம் கூறுகின்றது[58] யுக முடிவில் உலகமும் அதன் நிறைவும் கடவுள் நீதியின் விளைவால் அழியும் என்றும் காப்பியம் தெரிவிக்கின்றது:

''எரிதரு தேவ கோப விருங்கனன் மாரி பெய்து
விரிதிரை யுலகும் யாமும் வெந்தழிந் தொழிவே மன்றோ.''[59]

பாவத்திற்கு உட்பட்ட உலகம் அழிந்ததும் கடவுள் பரிசுத்த மும் நீதியும் நிறைந்த புதிய உலகத்தை படைப்பார் என்று திருமறை வெளிப்படுத்துகின்றது (வெளி.21,22).

4. மாந்தர்

யாத்திரிகத்தில், முதல் மனிதன் ஆதாமை 'மிருத்திகேயன்' என்றும், அவனது துணைவியை 'அத்தினி' என்றும் கவிஞர் வழங்குகிறார்.[60] பூமியின் மண்ணிலிருந்து ஆதாம் படைக்கப் பட்டதனால் மிருத்திகேயன் (மண்ணவன்) என்றார். திருவடியார் பவுலும் ஆதாமை 'மண்ணவன்' என்றே வழங்குகிறார்.[61] ஆதாமின் எலும்பிலிருந்து ஏவாள் படைக்கப்பட்டதனால் அவள் 'அத்தினி' (எலும்பிலிருந்து உண்டானவள்) என்று அழைக்கப்பட்டுள்ளாள்.

கடவுள் தம் சாயலாக மனிதனைப் படைத்தார். மண்ணினால் தாம் உருவாக்கின வடிவத்திற்குள் உயிர் மூச்சை ஊதினார். அவன் உயிருள்ளவனானான். இதனைக் கிருஷ்ணபிள்ளை, 'மனுஷன் ஜீவனும் ஆத்துமாவுங்கூடிய விவேகாத்தும தேகியாய்ப் படைக் கப்பட்டவன்,''[62] என்று கூறுகிறார். ஆன்மா என்பது, ''அறிவு, ஞானம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், விவேகம், யூகம், யுக்தி முதலிய ஞானதத்துவங்களோடு காரியாகாரியங்களை நிதானித்துச் சரீரத்தையாண்டு நடத்துகிற சித்துப்பொருள் (சித்தென்பது மறைந்திருந்தும் விளங்கக்கூடிய பொருள்),''[63] என்று விளக்குகிறார். கடவுள் உலகங்களைப் படைக்கத் தொடங் கியபோது எல்லாவற்றையும் படைத்த பின்னர், இறுதியில் மனிதனைப் படைத்தார். உலக உயிரினங்கள் யாவற்றுள்ளும் அவனே பழுதற்ற படைப்பு. மேன்மைமிக்க படைப்பு. மனிதன்

படைப்பின் மணிமுடி என்பர். தூய பண்புகள் அனைத்தும் நிறைந்தவன். இவ்வுலகத்தின் மீதும் இதன் உயிரினங்களின் மீதும் அவனுக்கு அதிகாரமளித்தார்.[64]

பகுத்துணர்வு, அறிவு, ஞானம், தூய்மைநிலை, ஆன்மப்பேறு அழிப்பதற்கரிய மனச்சான்று முதலான நல்லியல்புகளை மாந்தர்க்கு அருளி அவர்களைக் கடவுள் 'ஏதேன்' என்னும் ஆசிரமத்தில் குடியிருக்கச் செய்தார்; தம் திருவாக்கை மீறுமல் காத்து வாழு மாறும் நல்லுரை அருளினர்.

''பகுத்துணர் வறிவு ஞானம் பரிசுத்த மகத்துப் பாக்யம்
உருக்கரு மனச்சான் றின்ன வுவந்தினி தளித்து நஞ்சொற்
செகுத்திடா திருமி னென்று சீவவாக் கருளித் தேவ
மகத்துவ வரசன் வைத்தார் மாந்தரைப் புதிய வைப்பில்''[65]

கடவுள், மாந்தரை உரிமையுடன் வாழுமாறு படைத்தார். இந்த உரிமை, ''தேவாதீனத்துக்கு உட்பட்ட சுயாதீனமுடையது என்றும் கிருஷ்ண பிள்ளை கூறுகிறுர்.[66] அச்சுயாதீனத்தை மேலும் பின்வருமாறு விளக்குகிறுர்:

''மனிதனுக்குச் சுயாதினத்தை மாத்திரங் கொடுத்து அம்மட்டோடே விட்டுவிடாமல், ஞானம், விவேகம், நல்மனசாட்சி இவைகளையும் அருளிச்செய்து, அவன் தன்னை நன்னிலையிற் காத்துக்கொள்ளத்தக்க சர்வசக்தனுகவே அவனைப் படைத்தார். மேலுந் தான் தேவனுற் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டி யென்றும், சார்வதா தன்னுடைய சிருஷ்டிகருக்குக் கீழ்ப் படிந்து நடந்துகொள்ளத்தான் கடமைப்பட்டவனென்றும், இந்த உணர்ச்சி எந்நாளும் அவனுள்ளத்தில் நிலைப்படும் பொருட்டு இன்னது செய்யத்தக்கது இன்னது செய்யத்தகாது என்ற விதிநிஷேதக் கற்பனையையும் அருளிச் செய்து, அதை மீறி நடந்தால் இன்னதண்டனை சம்பவிக்குமென்றும் திட்டமாய் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறுர்.''[67]

முதன்மாந்தர் யாவரும் போற்றத்தக்க நிலையில் கடவுளிடம் பக்திபூண்டு ஒழுகி வந்தனர். அவர்கள் காலத்திலிருந்த உலகின் நிலையைப் பின்வரும் பாடல் சொல்லோவியமாக்கு வதைக் காணலாம்:

''பாபமே யில்லை பாவ பயங்கர மில்லை தேவ
சாபமு மில்லை சாவுஞ் சஞ்சலத் தொடர்பு மில்லை
கோபமும் பகையு மில்லை குணதோட மில்லை மிக்க
ஆவலு மில்லை பூரு வாச்சிர மத்தர்க் கம்மா!''[68]

5. பாவம்

'பாவம் உலகில் எவ்வாறு தோன்றியது!' என்னும் வினவை எழுப்பி, அதற்குப் பின்வருமாறு கிருஷ்ண பிள்ளை விடையளிக்கிறார்:

> 'எப்படியெனில், தேவன் தமது தூதர் வசத்தில் இப்பிரபஞ்சத்துச் சில பகுதிகளை ஆளும்படி யொப்புவிக்க, அவர்களில் ஒருதூதன் தன் உத்தியோகத்திலுயர்ந்து, சிருஷ்டிகராகிய கடவுளுக்குச் சமமாயிருக்க வேண்டுமென்கிற ஆணவ சிந்தையுள்ள தனது இஷ்டர்களால் ஏவுண்டு அவர்களுடனே கூடிச் சருவ வல்லவராகிய தேவனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணியதினாலே தேவன் அவனையும் அவனிஷ்டர்களையும் கீழே தள்ளிவிட்டார். அவர்கள் தேவனுக்கு விரோதிகளாயிருந்ததினாலே அவரது சிருஷ்டிகளாகிய ஆதாம் முதலான மனிதரனைவரையும் பாவத்தில் விழுத்தித் தங்களைப் போலாக்கி வருகிறார்கள்.''[69]

மேலே குறித்த விளக்கத்தைப் பழைய ஏற்பாட்டில் ஏசாயா தீர்க்கருடைய திருவாக்கை[70] அடிப்படையாகக்கொண்டு, கிருஷ்ண பிள்ளை கூறியுள்ளார். 'தற்பெருமையினால் தன்னை முதலில் கெடுத்துக்கொண்ட சாத்தான், முதன்மாந்தர் கடவுளுடன் தூய பக்திபூண்டு பேரின்பத்துடன் வாழ்தலைக்கண்டு பொறாமைப் பட்டு, அவர்களையும் வஞ்சித்து, மன்னுயிர்த் தொகுதியைப் பெருந்துன்பத்திற்கு ஆளாக்கிவிட்டான். விலக்கப்பட்ட கனியை உண்ணும்படி முதலில் ஏவாளை ஏமாற்றி, அவளைக்கொண்டு ஆதாமையும் வஞ்சித்து பாவத்திற்குட்படுத்தினான்'[71] என்று இரட்சனிய யாத்திரிகத்தில் பாடுகின்றார்:

> ''தன்னையே கெடுத்தான் முன்னந் தற்பெரு மையினா லந்தோ
> பின்னையும் பொறாமை யாலே பிறரையுங் கெடுத்தான் வாளா
> மன்னுயிர்த் தொகுதி கும்பி மலக்கிடங் களைய வைத்தான்
> என்னையீ தென்னை யென்கே ளிருநிலத் திறுத்த கேட்டை.''[72]

'பாவம் என்பது என்ன?' தேவகட்டளையை மீறி விலக்கப் பட்ட மரத்தின் கனியை அருந்தி முதன்மனிதர் பாவியானவர்''[73] என்று கிருஷ்ண பிள்ளை விடை தருகிறார். சுயாதீனமுள்ள மனிதன் தேவ கட்டளைக்குப் பதிலாகத் தன் சொந்த விருப்பத்தைத் தெரிந்து கொண்டதினால் பாவம் பிறந்தது. திருவசனம், ''நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம்,''[74] ''ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால் அது அவனுக்குப் பாவமாயிருக்கும்''[75] என்று கூறுகின்றது. மேலும், பாவம், என்பதற்குப் ''பாசம், பந்தம், கர்மம், மலம் இவ்வெல்லாம் பாவமென்ற பொருள் குறித்த சொற்களன்றி வெவ்வேறு

பொருள் குறித்தவைகளல்ல. இவற்றிலெந்தச் சொல்லைப் பிரயோகித்தாலும், உலகத்தில் சாமான்ய வழக்கமாயிருக்கிற பாவமென்றேயாகிறது,''[76] என்றும் விளக்குகிறார். பாவத்தைக் 'கரிசில்' என்றும் வழங்குவர்.[77]

பாவத்தை இருவகைப்படுத்துகிறார். ''இருவகைப் பவத்தூறேங்கி''[78] அவை; ''ஜென்ம பாவம், செய்கை பாவம் என இரண்டாம்''[79] என்கிறார். பிறவியின் மூலமாக வருவது 'ஜென்ம பாவம்' என்பது கருத்து. இதனை ''மாதா கருபத்தி யானுற்ற கணமே ஜன்ம பாவம் வந்து பற்ற''[80] என்று கூறுகிறார். உலகில் பிறந்த உயிர், நன்மை தீமை அறிந்து, இச்சைக்குட்பட்டுத் தவறிழைப்பது 'செய்கை பாவம்'[81] என்கிறார். வேதத்தில் பாவத்தைக் குறித்த இத்தகைய பாகுபாடு இருப்பதாகத் தோன்றவில்லை. கத்தோலிக்கத்தின் தாக்குறவால் 'ஜென்ம பாவம்' (Original Sin) என்னும் பாகுபாடு திருத்தமுறைக் கிறித்தவத்தினர் வகுத்தது. கடவுள் செய்யக்கூடாது என்று சொன்னதைச் செய்வது, கடவுள் செய்யுங்கள் என்று சொன்னதைச் செய்யாமலிருப்பது என்று இரு வகையாகவும் பாவத்தை விளக்குவர்.[82] விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே! என்றும் திருமறை கூறுகின்றது.

பாவத்தின் விளைவுகள்

'பாவமாகிய கனியை உண்டதனால், கடவுள் மாந்தர்க்கருளிய சிறப்புகள் யாவும் பிடுங்கப்பட்டன; மக்களைப் பெருங்கேடும் மரணமும் சூழ்ந்துகொண்டன. இனிய சுவையை உடைய பாலில் உறை கலந்த காரணத்தால் முழுவதும் அடியோடு கெட்டுவிடுதல்போல, ஒழுங்கு நெறியிலிருந்து நீங்கிய கனியின் சுவையானது உலகெங்கும் கலந்து, உலகைக் கறைப்படுத்தி, இவ்வாழ்வின் தீவினைத் தொகுதியோடு சேர்ந்து, மக்களைக்கொடிய மரணமாகிய முடிவில்லாத துன்பச் சிறையில் அடைத்துவிட்டது, என்று பாவத்தின் விளைவைக் கிருஷ்ண பிள்ளை கூறுகிறார்.

''உறைகலந்துதீஞ் சுவையபா லொருங்கரக் கெடல்போல்
முறையி னீங்கிய கனிச்சுவை யுலகெலா முயங்கிக்
கறையி னுக்கிவெம் மரணத்தின் கரையறு
சிறையி னுய்த்தது சென்மசஞ் சிதத்தோடு செறிந்து.''

''கருவிலே விடம்போற் பாவங் கலந்துபின் கதித்துப் பாழ்த்த
உருவிலு மனுதி யந்தக் கரணத்து மொருவ தாக
மருவிநின் றுடற்றி நாளு மரணபா தலத்தைக் காட்டித்
தெருவிலே விடுக்குஞ் செய்கை செகங்கண்டு தெருளா
[தின்னும்''[83]

இப்பகுதியில் மாந்தரின் தோற்றம், வீழ்ச்சி, இதனால் உண்டான துன்ப நிலைகளைக் கூறினோம். மேல்வரும் பகுதிகளில் மாந்தரின் உயர் வாழ்வும், தூய்மையும் மேன்மையும் இணைத்துக் கூறப்படுகின்றது.

6. இயேசு கிறித்து

இரட்சணிய யாத்திரிகத்தில் காப்பியத் தலைவனுக்குத் தலைவராகக் கிறித்து இருப்பதைக் கண்டோம். காப்பியத்தில் 20 விழுக்காடு பாடல்கள் கிறித்துவின் வாழ்க்கையைப் பாடுகின்றன என்பதையும் குறிப்பிட்டோம். இதனால் அவர் காப்பியத்தில் பெறும் சிறப்பிடம் புலப்படுகின்றது.

''கிறித்து கடவுள் மும்மையில் ஒருவரான திருமைந்தர், கடவுள் திருவார்த்தை; அவர் மனிதரை மீட்கும்பொருட்டு மனித அவதாரம் செய்தருளினார்; அவரே கடவுள் திருமைந்தர் என்றும் மனிதமைந்தர் என்றும் இயேசு கிறித்து என்றும் சுருதி வாக்கியங்களில் வெளியாக்கப்பட்டுள்ளார்''[84] என்கிறார் கிருஷ்ண பிள்ளை. இவருடைய மிகப் பழைய நூலான இரட்சணிய சரிதத்திலே,

> ''மெய்யொளியே வித்தகமே வேதத்தின் விழுப்பொருளே [மேசியாவே
> துய்யபரி சுத்தத்திரித் துவத்தில் ஒன்றும் தனிச்சுடரே.''

என்று இயேசுவை விளிக்கின்றார்.[85] யாத்திரிகத்தில் அவரை:

> ''வேதமே வேத விளக்கமே விளக்கின்
> விழுத்தகு சோதியே விமல
> போதமே போதங் கடந்தமெய்ப் பொருளே
> பொருள்புலப் படவெளி வந்த
> நாதமே யூத குலநரா திபனே''[86]

என்று இயேசு கிறித்துவை: வேதம், வேதவிளக்கம், சோதி, பரிசுத்த போதனை, மெய்ப்பொருள், நாதம் என்று போற்றுகின்றார்.

மனித அவதாரம்

இயேசு, ''தூய ஆவியினால் மனிதாவதாரஞ் செய்தார்; ''கன்னிமரியின் மகவாய் உலகில் திருஅவதாரம் எடுத்தார்; மன்னுயிர்கள் எல்லாம் விண்ணக வாழ்வு பெறும்பொருட்டுத் தம்முயிரையும் சிலுவையில் பலியாக்கினார்,'' என்று பின்வரும் யாத்திரிகப் பாடலில் கிருஷ்ண பிள்ளை அறிவிக்கிறார்:

''கன்னி பாலனுய்க் காசினி தனிலவ தரித்து
மன்னு சீவகோ டிகளெலாம் வான்கதி மருவத்
தன்னு யிர்ப்பரித் தியாகமுஞ் சிலுவையிற் றந்த
என்னு பாசனு மூர்த்தியை யஞ்சலித் திடுவோம்''[87]

'தேவத்திருமைந்தர் தம் குருதியைக் கொடுத்துச் சீவ கோடிகளை மீட்க'[88] மனிதாவதாரம் செய்தார் என்று இரட்சணிய யாத்திரிகம் கூறுகின்றது.

மீட்புத் திருப்பணி

கிறித்து, தம் மீட்புத் திருப்பணியினைச் சிலுவைக் குன்றில் நிறைவு செய்தார். 'என் குருதியைக் கொடுத்து மக்களின் ஆன்மாக்களை மீட்பல்,'[89] என்று அருளிய திருவாக்கை அவர் செயற்படுத்துவதைக் கிருஷ்ண பிள்ளை,

''நந்தம்வினை தொலைத்திடற்காய் நரனாகி நலிந்திரத்தஞ்
சிந்தையுயி ரவஸ்தையுறச் சிலுவைமிசைக் கண்டேனே''[90]

என்று பாடுகிறார். 'உலகை விழுங்கிய பாவமென்னும் மேகம் எங்கும் பரவி, துன்பமென்னும் கடல் நீரைப் பருகிப் பொழிந்த மரணமென்னும் ஆற்றில் மீட்பர் பெருமான் எண்ணற்ற ஆன்மாக்களைத் தாம் ஒருவரே இடுக்கிக்கொண்டு அவ்வாற்றில் நீந்தினார்; ஆற்றின் வேகத்தில் இழுப்புண்டார்; தவித்தார்; என்றாலும் அவ்வான்மாக்களைக் கைவிடாமல், அவர்களின் மீட்பைக் கருத்திற்கொண்டு தம் திருப்பாடுகளை நிறைவு செய்தார்,'[91] என்று சொல்லோவியமாக்குகிறார் காப்பியத்தில் கவிஞர்:

''பாருண்ட பாவக் கொண்டல் படர்ந்துவே தனையா மாழி
நீருண்டு பொழிந்த நீத்த நீடிய மரண வாற்றிற்
சீருண்ட பெருமா னெண்ணில் சீவரை யிடுக்கி நீந்தி
ஈருண்டு தவித்து கைவிட் டிலர் தனியிடர்ப்பட் டாரால்.''[92]

'ஆதியில் திரிச்சொல்லாய், திரித்துவத்தில் நடுவராய் மாந்தர்க்கு மீட்பருள மீட்பின் திருமூர்த்தி மரணத்துக்குள் அடங்கி, இறைத் திருமொழிகள் (தீர்க்கதரிசன ஒழுங்கு) ஒழுங்கு மாறா வண்ணம் உயிருற்றெழுந்தார். விண்ணவரும் மண்ணவரும் போற்றிப் பணிந்தனர்,[93] என்று அவர்தம் மீட்பின் திருப்பணி நிறைவைப் பாடுகின்றது காப்பியம்.

'நீதியிரக்கச் சமரசர்'

கிறித்து திருநெறியைக் காப்பியத்தில், 'நீதியோடு இரக்கச் சமரச நெறி'[94] என்றே அமைக்கிறார். கிறித்துவினது மீட்பின் அருட்பணியை விளக்கக் கிருஷ்ண பிள்ளை அடிக்கடி பயன்படுத்தும் ஒரு தொடர், 'நீதியிரக்கச் சமரசர்' என்பது. இதன் விளக்கத்தை

முதன்முதல் அவருடைய நண்பர் தனுக்கோடிராஜு கவிஞருக்கு விளக்கிக் கூறுகின்றார்.

''பரிசுத்த தெய்வத்துக்கும் தேவ கட்டளையை மீறிப் பாபாந்த காரச் சிறையிலடைபட்டு நித்திய தண்டனைக்கு அருகராயிருந்த பாபிகளாகிய மனுஷருக்கும் மத்தியஸ்தராகவும், நீதியிரக்க சமரசராகவும் பிணை நின்று மனிதாவதாரஞ்செய்த தேவ குமாரனாகிய கிறிஸ்து நாதர் திரிகரண சுத்தராய் நியாயப் பிரமாண முழுவதையுங் கைக்கொண்டுநடந்து, கலமிஷரகிதமான நீதியையும், சகல மனிதருடைய சகல பாவங்களையும் தாமே யேற்றுக் கொண்டு, அவர்கள்மேல் வரவிருந்த தேவ நீதியின்படியாயுள்ள தண்டனைகளையெல்லாம் தாமே யடைந்து, ஆத்தும கஸ்தியோடு சரீரத்தும் ரத்தம் பிரவாகிக்க அவஸ்தைப்பட்டு முடிவிற் சிலுவையிலறையுண்டு, பாவப் பிராயச்சித்த பலியாகிப் பிராணத்தியாகஞ் செய்து, என்றென்றைக்குங் குறைவுபடாத புண்ணியத்தையும், மரித்த மூன்றும் நாள் ஜெயப் பிரதாபராயுயிர்த்தெழுந்து ஆத்தும கோடிகளுக்கு நித்திய ஜீவனாகிய இரக்ஷிப்பையும் சம்பாதித்தாரென்றும்; பரத்துக் கெழுந்தருளிப் பிதாவின் வலப் பாகத்து கிருபாசனரூடராய் வீற்றிருந்து பிதாவை மன்றாடி விசுவாசிகளுக்கு இரக்ஷிப்பை அருளிச் செய்கிறாரென்றும், இவர் சர்வாந்திரியாமிப் பொருளாயிருப்பதினால் இவர் சம்பாதித்த இரக்ஷிப்பை சமஸ்த மனுஷருக்கும் ஸ்வாதந்திரியப் படத்தக்கது தானென்றும், ஒருவன் பாப உணர்ச்சியும் உத்தம மெய் மனஸ்தாபமுடையனாய்க் கிறிஸ்து ஒருவரே பாபநாசர், உலக ரக்ஷகர், எனக்காகப் பிணை நின்று தானடைய வேண்டிய தண்டனையைத் தாமடைந்து தீர்த்துத் தம்முடைய புண்ணிய பலத்தாலென்னை இரக்ஷிக்கிறாரென்றும் யாதாமொருவன் திரிகரண சுத்தனாய் விசுவாசிக்கிறானோ அவனுக்கு அந்த விசுவாசமே அவனை நீதிமானாக்கிக் கிறிஸ்துவின் புண்ணிய பலத்தை யூட்டுகிறதென்றும், அதுவே அவனுக்கு இரக்ஷிப்பென்றும், அவனே ஜீவன் முத்தன் ...''[95]

கிறித்து நீதியும் இரக்கமும் சமரசமாகும்படி உலகில் திருஅவதாரஞ்செய்தார் என்பதை அவருடைய எழுத்துகளில் 1860 அளவிலேயே காண்கிறோம்.[96]

பொன்னகரில் நீதியும் இரக்கமும் சமரசப்படும் திருக்கோபுர வாயில் ஒன்றுண்டு. கடவுள் நீதியையும் இரக்கத்தையும் சமரசப் படுதியது சிலுவையில் இயேசுபெருமான் சிந்திய திருக்குருதி ஆதலினால், அத்திருக்கோபுர வாயிலில் திருக்குருதியில் தோய்க்கப்பெற்ற ஒரு சிலுவைக்கொடி அழகோடு எழும்பி மலர்போலும் தனது அழகு மிகு திருக்கரத்தைக் காட்டி, 'மனித இனத்தவரே! நீங்கள் எல்

லாரும்' என்னிடத்தில் வாருங்கள்' என்று அழைப்பதுபோல உலகின் நாலு திக்கும் அசையும் என்று பின் வரும் பாடலில் கூறு கின்றார்:

''புரக்கவருந் திருக்கருணைப் புத்தமுத கடமாம்பொன்
னகர்க்கு நீதி
இரக்கசம ரசமாய் திருக்கடைக்கோ புரவாயி
லெழில்கொண் டோங்கி
வரக்குருதிக் கறைதோய்ந்த வொருசிலுவை மணித்துவச
மலர்க்கை காட்டி
நரக்குலத்தீர் வம்மினென விளிப்பதுபோன் றலங்குவன
நாலு திக்கும்.''[97]

''கடவுள் நீதியையும் இரக்கத்தையும் சமரசப் படுத்துவதற்காகக் கிறித்து சிலுவைத் திருப்பாடுகளை மேற்கொண்டார்'' என்பதனை,

''சீவாதி பதியேக திரித்துவத்தி லொன்றான தேவ மைந்தன்
தாவாத கருணையினாற் பேரன்பு மயமான தனுக்கொண் டுண்டி
மூவாத முதனீதி யிரக்கசம ரசம்புரிவான் முதுநீர் வையஞ்
சாவாத படிதானே பலியாகி சீவன்விட்ட தகைமை பாராய்''[98]

என்று பாடுகிறார் புலவர்.

கிருஷ்ண பிள்ளை, இரட்சணிய சமய நிர்ணயத்தில் எழுபதுக்கு மேற்பட்ட திருவசனங்களை ஆராய்ந்த பின்னர், இயேசு கிறித்துவைப்பற்றித் தமது திரண்ட கருத்தினை,

''இயேசு கிறிஸ்து நாதருக்கு ஜெகோவாவென்றும், தேவனென்றும், கர்த்தாவென்றும், ஆண்டவரென்றும் தேவ திருநாமங்கள் வழங்குகின்றன. அதனால், முதலாவது அவர் தேவத் தன்மையுடையவரென்றும்; இரண்டாவது, அவர் அநாதி நித்திய ஸ்வயம்புவாய் என்றென்றைக்கும் மாறாதவராயிருக்கிறாரென்றும்; மூன்றாவது, அவர் சர்வவியாபகமுடையவரென்றும்; நான்காவது, சர்வக்ஞராய் எல்லாரையும் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறவரென்றும்; ஐந்தாவது, அவர் சர்வ வல்லமையுள்ளவரென்றும், ஆகவே மெய்யான தேவலக்ஷணமுடைய பரிசுத்த தேவனென்றும்; சிருஷ்டி ஸ்திதி ஆத்மரக்ஷைக்குக் கர்த்தாவாய் உலகத்துக்கு ஆதரராய் மரித்தவர்களை உயிரோடெழுப்பி உலகமுழுவதுக்கும் அவரவர் கிரியைக்குத் தக்கபிரகாரம் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறவராய் ஆளுகை செய்வதில் அவர் மெய்யான தேவன்தானென்றும்; இன்னும் மனிதர்

களுக்கு மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, விசுவாசம், நீதி, பரி சுத்தம், புத்திரசுவீகாரம் திவ்வியசமாதானம், நித்திய ஜீவன் முதலிய கிடைத்தற்கரிய மகத்தான புனித வரப்பிரசாதங்களை யருளிச்செய்கிறவரென்றும்; தேவ ஆவியைத் தம்முடைய அடி யார்களுக்கு அநுக்கிரகிக்கிறவர் என்றும்; இப்படி மெய்க்கடவு ளுக்குரிய திவ்வியலக்ஷணங்கள் அவரிற் பூரணமாய்ப் பொருந்தி யிருக்கின்றனவென்று தெளிவாய் அறிகிறோம்,''[99]
என்று கூறுகிறார்.

7. தூய ஆவியானவர்

தூய ஆவியானவரைக் குறித்து, ''பரிசுத்தமான திவ்விய மெய்யறிவை உலகத்துக்கு வெளிப்படுத்தியருளி யநுக்கிரகிக்கிற தேவன்; மகத்துவமுள்ள ஜெகோவாவுக்குரிய திருநாமங்கள் தரிக் கப்பட்டிருத்தலில் அவரும் பிதாவோடு நிருவிகற்பாயுள்ள தேவன்; சர்வஞான முதலிய தேவலக்ஷணங்கள் நிறைவாயுடைய தேவ வஸ்து; திருச்சபையெங்கும் பரிசுத்தத்தை நிலைப்படுத்திப் பெருகச் செய்து வளர்த்துவருகிறவர்; திரியேக தெய்வத்துவத்தில் நிரு விகற்பாயுள்ள அதிபரிசுத்தத்துவம்''[100] என்று கிருஷ்ண பிள்ளை கூறுகிறார்.

தூய ஆவியானவர் கடவுள் மும்மையில் ஒருவர்; மூன்றாமவர். ஆன்மாக்களை இறைவழிப்படுத்தும்' தூய பெருமான். '[101]உள்ளத் தில் மெய்ப் பக்தியை வித்திட்டு அதற்கு அருள்நீர் பாய்ச்சித் துன்பம் எல்லாம் நீக்கி, ஆன்மாவில் குடிகொண்டு, அதனைத் தேற்றி முத்தியடையச் செய்யும் 'இதய நாயகன்' [102]என்றும் யாத்திரிகத்தில் விளக்குகிறார்:

''திரித்துவ பராப ரத்தில் திகழுதி பரிசுத் தாத்ம
ஒருத்துவ வநாதி நித்ய வுயர்மகத் துவமே போற்றி
விரித்தமுன் னீர்மு கத்து விந்தையாய் விளங்கி மேனாள்
திருத்தகு புவனம் பூத்த தெய்வமே போற்றி போற்றி.

மறைவழிப் படாரா மாந்தர் வன்மனந் தனிற்போராடி
இறைவழிப் படுத்துந் தூய வெம்பெரு மானே போற்றி
சிறைவழிப் பட்டோர்க் குள்ளந் தெளிந்தநோ வாவைக் [கொண்டு
முறைவழிப் போத மீந்த முக்தியா ரணனே போற்றி.

சுத்தமெய் விசுவா சத்தைத் துரிசற விளக்கித் தூய
பத்தனு மாபி ராமைப் பாதுகாத் தளித்தாய் போற்றி
நித்திய சிவ மார்க்க நெறிகடைப் பிடித்து நின்ற
உத்தமர்க் கியாண்டு நீங்கா வுறுதுணை யானாய் போற்றி

வலிந்தெனை மருவு கென்று மருட்டிய வனிதைக் குள்ளம்
மெலிந்தழி யாது முன்னோர் விடலையைக் காத்தாய் போற்றி
மலிந்திடு ராச போகம் வரைந்தினத் தோடு மோசே
நலிந்துறு நிந்தை நச்ச நயந்தரு ளளித்தாய் போற்றி.

கோட்டமற் றுளந்தி ருத்திக் குலவுமெய்ப் பத்தி வித்தி
நாட்டம்வைத் தருணீர் பாய்ச்சி நலிவெலா மகற்றி யாதும்
வாட்டமின் றுக வோம்பி வரகதி விளைவித் தன்பர்
ஈட்டமார்ந் துயத்துய்ப் பிக்கு மிதயநா யகனே போற்றி.''[103]

8. திரியேகக் கடவுள்

மும்மையில் ஒருமை நிலையே, திரியேகக் கடவுள் நிலை என்பது. மும்மையில் ஒருமைத்தன்மை, ஒருமையில் மும்மைத்தன்மை என்பதாகும். இதனை, ''ஒன்று மூன்றுய ஒருவன்''[104] என்றும், ''ஒன்றிலே மூன்றாய், மூன்றும் ஒன்றதாய் உலப்பிலதாய்''[105] என்றும் கிருஷ்ண பிள்ளை கூறுகிறார். ''ஒப்பற உயர்ந்த வொரு திரியேக மெய்ப் பரம்பொருள்''[106] என்றும் பொற்றித் திருஅகவலில் போற்றுகின்றார்.

கடவுள் மும்மைத்தன்மை ஓர் இறையியல் மறைபொருளாய் இருக்கிறது. இதனைக் கிருஷ்ண பிள்ளை சில வகைகளில் விளக்க முயல்கிறார். தந்தை என்ற நிலையில் கடவுள் உலகம் யாவையும் படைத்து மாந்தர்க்கு அருளினார்; அவர்கள் பாவத்துக்கு உட்பட்டுத் தூய நிலையிலிருந்து விழுந்தபோது அவர்களை மீட்கும் பொருட்டு இறைமைந்தரானார்; தூய ஆவியானவராய் உலகில் தோன்றி ஆன்மாக்களுக்கு ஞானவரமருளினார் என்றும் விளக்குகிறார். இதனை இரட்சணிய யாத்திரிகத்தில்,

''தந்தை யாகி உலகனைத்துந் தந்து மநுக்கள் தமைப்புரக்க
மைந்த னாகிப் புனிதாவி வடிவாய் ஞான வரமருளிப்
பந்த மறநின் றிலங்குதிரி யேக பரமன் பதாம்புயத்தைச்
சிந்தை யாரத் தொழுதேத்திச் சேர வாரும் செகத்தீரே''[107]

என்று பாடுகிறார். மேலும், இரட்சணிய சமய நிர்ணயத்தில் இதனைக் கிருஷ்ண பிள்ளை, 'பிதாவானவர் சிருஷ்டித்தாரென்றும், குமாரனானவர் இரக்ஷித்தாரென்றும், ஆவியானவர் பிழைப்பித்துப் பரிசுத்தமாக்குகிறாரென்றும்' கூறுகிறார், ஆவியானவர் ஈகிறவர் என்றும் விளக்குகிறார்[108] இரட்சணிய மனோகரத்தில்:

''செயலிலே தந்தையாய் மைந்தனு யாவியாய்த்
திகழ்ந்துதிரி யேக பரமன்
சிருஷ்டிஸ்திதி ரக்ஷணிய செய்கையினில் மூவராய்ச்
சிந்தனையி லொருவ ராகி...''[109]

என்றும் பாடுகிறார். இதனால் கடவுள் ஒருவரே என்பதும், அவர் மாந்தருடன் உறவு கொண்டு தம்மைத்தாம் வெளிப்படுத்திய நிலையிலே மூவராய்க் காட்சியளிக்கிறார் என்பதும் துலக்கமாகின்றன. டாக்டர் சி. சி. கிராபோர்டு என்பார், ''கடவுள் ஆவியாயிருக்கிறார். அஃது அவருடைய இயற்கை. கடவுள் தனியொருவர். இருப்பினும் அவருடைய ஒருமை இயற்கைநிலை, திருவசனங்களில் பிதா, மைந்தர், தூய ஆவி என்று வெளிப்படுத்தியிருக்கின்றவாறு ஒரு மும்மை ஆள்தன்மையினை உள்ளடக்கமாகக் கொள்ளுகிறதாய்க் காணப்படுகிறது,''[110] என்று கூறுகிறார். மேலும் அவர், ''கடவுளின் திரித்துவப் பண்பின் போதனை இரட்சிப்பின் திட்டத்திற்கு இன்றியமையாதது. கடவுள் இந்த மும்மைப் பண்பில்லாத தனி ஒருவர் என்னும் நிலை இருக்குமாயின் கடவுளுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தம் இருக்கவியலாது; பாவப் பரிகாரம் இருக்கவியலாது; இறைவரிடம் பரிந்து மன்றாடுதல் இருக்கவியலாது; இரட்சிப்பு இருக்கவியலாது'' என்று கூறுகின்றார்.[111]

ஒருமையில் மும்மைப் பண்புநிலை மனித அனுபவத்திற்கு முற்றிலும் மாறுபட்டதன்று. ரெய்மாண்டு கால்கின்ஸ் (Raymond Calkins) என்னும் இறையியல் அறிஞர், 'மும்மை நிலை என்னும் பண்பு உலகம், மனித வாழ்வு இவற்றின் கட்டுமானம் முழுவதிலும் இருந்து வருகின்றது. சடப் பொருள் உலகத்திலே மூவளவைக் கூறுகளைக் காண்கிறோம்; மனித வாழ்வில் மும்மை வினைசெயலை [(function—மனம் (mind), சித்தம் (will), உணர்ச்சி (feeling)] என்னும் நிலையில் காண்கிறோம். இவ்வாறே இயலுலகு அனைத்திற்கும் மொத்த உயிரியக்க வாழ்வாய் விளங்கும் தேவதத்துவத்துள் கிறித்தவ சிந்தனை: பிதா, திருமைந்தர், பரிசுத்த ஆவி மூவருக்கும் நிலையான இடத்தை அளித்திருக்கிறது' என்று கூறுகிறார்.[112]

கிருஷ்ண பிள்ளை 'திரித்துவம்' என்பதைத் தத்துவம் என்ற நிலையில் பின்வருமாறு கூறுகிறார்:

> ''திரியேக தேவன் என்ற இந்தத் திருநாமம் மனிதர் மனதுக்கும் புத்திக்கும் எட்டாத பரம இரகசியமானது. ஆயினும், மனதுக்காவது புத்திக்காவது விரோதமானது அன்று. மெய்ச் சுருதியில் கடவுள் ஏகவஸ்துவென்றும், அந்த வஸ்துவே மூன்று தத்துவங்களுள்ள ஒரு பொருள் என்றும், அந்த தத்துவங்கள் தம்மில் நிருவிகற்பாயுள்ள ஏகவஸ்துவேயென்றும், ஆதலால், தேவன் ஒருவரேயன்றி மூவரல்லர் என்றும், திருத்துவராய மூவரில் ஒருவர் முந்தினவருமல்லர் பிந்தினவருமல்லர், மூவரும் சமநித்தியரும் சரிசமானருமாமென்றும் வெளிப்பட்டிருக்கிறது.[113]

திருவசனத்தில் 'திரித்துவம்' என்னும் சொல்வழக்குக் காணப்படவில்லை. ஆனால், திரித்துவப்பொருள் வழக்குப் பல இடங்களில் காணப்படுகின்றது.[114] இவற்றுள் இரண்டு இடங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் ஓரிடத்தில், 'பிதா, மைந்தர், தூய ஆவி' என்றும், மற்றொன்றில், ''பிதா, திருச்சொல், தூய ஆவி' என்றும் வழங்கப்பட்டுள்ளன.[115]

கடவுள் மும்மையியல்பினராய் இருத்தலினால் மூவரும் முரண்பட்ட தனித்தனி தேவர் அல்லர் என்றும், இம்மும்மையியல்பை நம்பிக்கையால் தெளியமுடியும் என்றும் கிருஷ்ண பிள்ளை கருதுகிறார். திருவசனங்கள் பலவற்றை மேற்கோள் காட்டிய[116] பின்னர்,

> ''......பிதா, குமாரன், பரிசுத்த ஆவியென்கிற மூவரும் சுவாபத்திலும் குணத்திலும் செய்கையிலுஞ் சித்தத்திலும் யாதொரு விகற்பமும் வேறுபாடுமில்லாமல் எல்லா வகையிலும் ஒத்துச் சகல லோகங்களையும் ஆண்டு நடத்திவருகிற முறைமையில் மூவரும் பிரத்யேகமான மூன்று தேவர்களாயிராமல் திரியேகக் கடவுளாய்த் தம்முடைய மெய்ச்சுருதியிற் பிரதிபிம்பிக்கிறாரென்பதை விசுவாசக்கண்கொண்டு தரிசிக்கலாம்,''

என்று வரையறுக்கிறார்.[117]

9. திருச்சபை

கிறித்து அருளிய மீட்பின் பயனாய் உலகில் விளங்குவது அவருடைய திருச்சபை. இதனை,

> ''மெய்க்கிறிஸ்தவ வேதியர் தாங்குழீஇத்
> தொக்க தாயமெய்த் தூய திருச்சபை''[118]

என்று கூறுகிறார். கிறித்துவின் அடியார் திருக்கூட்டமே திருச்சபை. புலவர், ''தேவகுடும்பம்.''[119] ''வேத புங்கவர் குழாம்,''[120] ''சாது சங்கம்'',[121] ''தீங்கின்றி உயிர்பெற்றேகுந் திவ்விய திருக்கூட்டம்''[122] ''பத்திசெய் தவப்பள்ளி''[123] என்றெல்லாம் விளக்குகிறார்.

பவுலடியார் உலகளாவிய திருச்சபையைக் கிறித்துவின் திருவுடலுக்கு உவமித்து விளக்குகிறார்; இஃது உள்ளூர்த் திருச்சபைக்கும் பொருந்தும். உலகளாவிய திருச்சபைக்கும் பொருந்தும். பவுல் கிறித்துவின் திருவுடலைத் திருச்சபை என்றும், அதன் தலை கிறித்து என்றும், அதன் உறுப்புகள் கிறித்தவர்கள் என்றும் வருணிக்கிறார்.[124] கிருஷ்ண பிள்ளையும் பவுலடியாரின் இக்கருத்தையொட்டிக் கிறித்துவின் திருச்சபையை வருணிக்கிறார்:

''சென்னி தேவ குமாரன் திருச்சபைக்
கிந்நி லத்திருத் தொண்டரெல் லாமுடல்
அன்ன வாப்பரி சுத்த வயிக்கியம்
மன்னி நின்று வளர்க்குந் தருமமே.''[125]

இப்பாடலில் புலவர், திருச்சபை என்பது என்ன என்பதை விளக்குவதுடன், கிறித்துவின் திருத்தொண்டர்களுக்குள்ளே பிரிவினை இருப்பதை விரும்பாதவராய், அவர்கள் ஒற்றுமையில் நிலைத்து வாழ்ந்து அறத்தை வளர்க்கவேண்டும் என்று உணர்த்துவதையும் அறிகிறோம்.

திருச்சபையும் உலகமும்

திருச்சபை உலகில் மக்கள் வாழ்வில் இன்றியமையாதது என்பதைக் காட்டுவதற்கு ஓர் உவமையைப் பயன்படுத்துகிறார் புலவர். 'கரிய கடலால் சூழப்பட்ட உலகிற்கு விண்ணில் விளங்கும் ஞாயிறும் தண்மதியும் எவ்வளவு இன்றியமையாதனவோ, அவ்வளவு இன்றியமையாதது உலகிற்குத் திருச்சபை,' என்கிறார்.

''மைக்க டற்புவிக் கெத்துணை வான்கதிர்
தக்க தத்துணைச் சால்புடைத் துத்தம
மெய்க் கிறிஸ்தவ வேதியர் தாங்குழீஇத்
தொக்க தாயமெய்த் தூய திருச்சபை''[126]

'சத்தியம், தருமம, பொறுமை, தயவு, கண்ணோட்டம், சித்தத் தூய்மை, உண்மைப் பக்தி என்பன போன்ற நல்லறங்களை வாழ்க்கையில் போற்றும் கடவுளின் திருக்குழாமாகிய திருச்சபை அடியார்கள் உலகில் வாழ்கின்றார்கள். அதனால் உலகம் அழிவுக்குட்படாமல் நிலைத்து வாழ்கிறது,' என்று யாத்திரிகத்தில் கிருஷ்ணபிள்ளை கூறுகிறார்.[127] இங்கு,

''பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்''[128]

என்னும் திருவள்ளுவர் திருவாக்கும் நினைவுகூரத்தக்கதாம்.

திருச்சபையின் செயல்நோக்கம்

திருச்சபை வெண்பிறைபோல உலகில் தோன்றியது. இன்றைய நிலையில் முழுமதியைப்போல உலகெங்கணும் ஆன்மிக ஒளி வீசி வருகிறது.[129] ஆல வித்தைப் போன்றதாய்த் தோன்றியது திருச்சபை. ஆலமரம் வளர்ந்து விரிந்து பரந்து தன்னிழல் தங்குவோர்க்குத் தண்ணளி தந்து இளைப்பாற்றுகிறது. அதுபோலத் திருச்சபை உலகில் பரவி வளர்ந்து தீமையை அகற்றி நன்மை செய்து மக்களுக்கு ஆன்மிக இளைப்பாறுதலை அருளுதல்வேண்டும் என்கிறார்[130] கிருஷ்ணபிள்ளை.

திருச்சபையாகிய விளக்கு திருமறையின் ஒளிவீசி, அஞ்ஞான மாகிய இருளை அழித்து அறிவொளி பரப்பி, உட்கருவிகளாகிய மனம் முதலியவைகளிலும் அவற்றிற்குப் புறத்தே உள்ள எல்லா வற்றிலும் உண்மை விளங்குமாறு செய்கிறது; தீமை உள்ளே நுழையாதவாறு பாதுகாக்கிறது; அச்சத்தை அகற்றித் திருமறை யின் செந்நெறியைத் தெளியக்காட்டி ஆன்மாக்களை நல்வழிப் படுத்துவது திருச்சபையின் திருப்பணியாகும் :

''இருள றுத்தொளி பரப்பியுள் ளகம்புற மெங்கும்
பொருள்வி ளக்கிமோ வகைபுறங் காத்து
மருள கற்றிநூல் வழித்தெரித் தென்றும்வா டாது
தெருள ளித்தொளி கிளைத்தது திருச்சபை தீபம்''[131]

திருச்சபையின் தலைவராகிய கிறித்துவே, மாந்தர்க்கும் கடவுளுக்கும் இடையில் நடுவராய் இருந்து, மக்களை இறையுடன் ஒப்புரவாக்கி வருகிறார்[132] இறையியலார் திருச்சபையைக் கடவுளர சுக்கும் ஒப்பிடுவர். அதனை உலகிலுள்ள கடவுளரசு என்பர். இறைவன் 'பொன்னடிக்கு அன்பு செய்யும் புண்ணியர் குழா' மாகிய[133] திருச்சபையானது, அன்பு வழி நின்று, மக்கள் துயர் துடைத்துப் பக்திமார்க்கத்தைப் போற்ற வேண்டும்[134] என்று கூறுகின்றது காப்பியம்.

10. திருக்கட்டளைகள்

திருச்சபையின் தலைமையான திருக்கட்டளைகள் இரண்டு: இவற்றைச் 'சாக்கிரமெந்துகள்' (Sacrements) என்று வழங்குவர். கிருஷ்ண பிள்ளையும் இவற்றை 'சாக்கிரமெந்து' என்றே வழங்கு கிறார். இதனைத் தமிழ்ப்படுத்தித் 'திருக்கட்டளைகள்' என்று வழங்கியிருக்கலாம். இவைபற்றி வேறோர் இடத்திலும் முன்னர்க் குறிப்பிட்டிருக்கிறோம்[135] இவை குறித்துக் கிருஷ்ணபிள்ளை,

''............ ....
இரவியெனுந் திருச்சபையி னிலையாக வழங்கிவரு மிரண்டு ஞான
வரமிகுசாக் கிரமெந்தின் முன்னதுஞான ஸ்நானம் மற்றொன் [றிந்தப்
பரமவிருந் தாநமது பரமகுரு வேயிவை யேற் படுத்தி னரே''[136]

என்று கூறுகிறார்: ஞாயிற்றுக்கு ஒப்பான திருச்சபையின் திருக் கட்டளைகள் இரண்டு; முந்தியது திருமுழுக்கு; மற்றது திருவிருந்து. இவற்றை மீட்பர் பெருமானே ஏற்படுத்தியருளினார் என்கிறார். திருவிருந்து ஏற்படுத்தப்பெற்ற வரலாறு இரட்சணிய சரிதத்தின் ஆய்வில் கூறப்பட்டது.[137]

புலவர், திருச்சபையில், இத்திருக்கட்டளைகளின் பயனையும் அறிவிக்கிறார். 'திருமுழுக்குப் பெறுவோர், திருச்சபையில் சேரு வர்,' என்றும், 'நற்கருணையைப் பயபக்தியுடன் உட்கொள்வோர்,

பக்தியில் ஊன்றித் திருச்சபையில் நிலைத்து உயிர்வாழ்வர்', என்றும் குறிப்பிடுகிறார்[137] மக்களின் மீட்புத் திட்டமாகத் திருச்சபை அமைந்திருப்பதைக் குறிக்கின்றார். திருக்கட்டளைகளை வேதியர் வாழ்வின் தொடக்கத்துடனும் முடிவுடனும் இணைத்துப் பின்வரும் பாட்டில் கூறுகின்றார்;

''ஒளிக்குறி வாயி லூடு
புகுந்து, ஒருவழிப்பட்டு, உள்ளம்
தெளிக்கும்நல் உரைகேட்டு, ஆன்ம
தீக்கைபெற்று, அளவில் இன்பம்
அளிக்கும்நற் கருணை ஆய
ஆரமிர்து உண்டு; வேந்தன்
விளிக்குநாள் அளவும் தூய
விதிவிலக்கு ஓம்பல் வேண்டும்.''[138]

இப்பாட்டில் திருமுழுக்கினை 'ஆன்ம தீக்கை' என்று தமிழ்ப் பண்பாட்டில் கூறுவதையும், நற்கருணையை 'அளவில் இன்பம் அளிப்பது' என்றும் 'ஆரமிர்து' என்றும் அழைப்பதைக் காண்கிறோம். அமிழ்தம் நிலையான வாழ்வளிக்கும் உணவு என்பது தமிழ்மரபு. ஆன்மாவின் நிலையான வாழ்வுக்கு 'நற்கருணை' ஊன்றுகோலான ஆன்ம உணவாக இருத்தலின் அமிழ்தம் என்கிறார் கவிஞர்.

11. கிறித்தவ சித்தாந்தம்

கிருஷ்ணபிள்ளை 'கிறித்தவ சித்தாந்தம்' என்னும் தொடராட்சியைப் பயன்படுத்தி, கிறித்தவ மீட்பின் கோட்பாட்டினை விளக்குகிறார். சித்தாந்தம் என்னும் சொல் சைவத்தில் மிகுதியும் ஆட்சி பெறுவதாகும். சித்தாந்தமாவது, 'முடிந்த முடிவு என்பதாம்'

கிறித்து மனித மீட்பின் திருப்பணியைச் சிலுவைப் பலியில் நிறைவு செய்தருளினார். இதனை மக்கள் எவ்வாறு தங்களுக்குரியதாக்கிக்கொண்டு மீட்படைந்து வீடுபேற்றினைப் பெற இயலும்? புதிய ஏற்பாட்டு ஆகமங்களில் திருத்தூதுவர் நடபடிகள் ஆகமம் மக்கள் மீட்படையும் வழிமுறைகளைக் கூறுகின்றது என்பதைக் குறிப்பிட்டோம். இவற்றுள் (1) விசுவாசம், (அப். 2:37;8:16-31); (2) மனந்திரும்புதல் (அப். 2:38; 17:30-31); (3) அறிக்கையிடுதல் (அப். 8:35-38); (4) திருமுழுக்குப் பெறுதல் (அப். 2:38; 5:32; 8;9;10;); (5) நிலைத்திருத்தல் (அப்.2:42; 144:22) என்னும் படிநிலைகளை அறிகின்றோம். இது புதியஏற்பாடு வெளிப்படுத்தும் மீட்பின் சட்டம். கவிஞர் இதனைக் காப்பியத்தின் இடையிடையே தெரிவிக்கின்றார்.

''விசுவாச மெனக்கருளி வியனுலக மயலளைந்த
பசுவாச னையகற்றிப் பதியுலகம் பரிந்தருளே''[139]

என்னும் அடிகளில் விசுவாசத்தின் தேவையைக் கூறுகின்றார். 'இதயத்தில் விசுவாசச் சுடரை ஏற்றி' என்று வேறு இடத்தில் குறிப்பிடுகின்றார்.[140] மனந்திரும்புதலைக் ''குருசுயர்த்த பெருமானைக் குறிக்கொண்டு மனந்திரும்பி''[141] என்று அறிவிக்கின்றது காப்பியம். கிறித்தவனின் விசுவாச அறிக்கையை மெய்யுணர்ச்சிப் படலத்திலும், விசுவாச விளக்கப் படலத்திலும் சிறப்பாகக் காண்கின்றோம். கிறித்துவில் கொண்ட விசுவாசத்தின் அறிக்கையை வாயினாலும் வாழ்க்கையினாலும் செய்யவேண்டும் (ரோமர். 10:9,10; மத். 10:32,33; 1 தீமோ. 6:12). முழுக் காப்பியமே இதன் விளக்கமாய் அமைந்துள்ளது. திருமுழுக்கினைக் காப்பியத்தில் மீட்பின்சரிதத்தைக் கூறுங்கால் தெரியப்படுத்துகின்றார்.[142] நிலைத்திருத்தலின் போதனையும், அதனைக்கடைப் பிடித்தலால்வரும் போராட்டமும் காப்பிய வளர்ச்சியாயிருக்கின்றது. இந்த நிலைத்திருத்தலை, ''மேழிகைப் பிடித்தனன் விடுக்கிலேனினி''[143] என்பதால் யாத்திரையின் தொடக்கத்திலேயே அறிகின்றோம். எல்லாம் கடவுளின் அருளாலே வாய்க்கப் பெறுகின்றது என்பதைப் பின்வரும் பாடல் புலப்படுத்துகின்றது:

''அருளி னாலெமை யறிந்தன மருள்வழிப் பட்டேம்
அருளி னாரமு துண்டன மருளுயி ரடைந்தேம்
அருளி னாற்புறங் கண்டன மடுபகை யனைத்தும்
அருளி னாற்கதி யடுத்தன மருட்கடை திறமின்.''[144]

கவிஞர் இந்தக் கிறித்தவ மீட்பின் சித்தாந்தத்தினை பின்வருமாறு தொகுத்தும் இரட்சணிய சமய நிர்ணயத்தில் கொடுத்துள்ளார் : ''எவரும் திருமுழுக்குப் பெற்று, முக்கரணத்தூய்மையுடன் திரியேகக்கடவுளை வழிபடவேண்டும்; கட்டளைகளையும் விதிவிலக்குகளையும் முழு மனத்துடன் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். ஒவ்வொருவரும் உண்மையாய்த் தாம் பெரியபாவி என்பதை உணர்ந்து மெய் மனத்தாங்கலுடன் பாவ வழியைவிட்டு விலகி, மனந்திருந்திக் கிறித்துவே பாவத்தை அழிப்பவர், மீட்புக் கடவுள் பாவத்திலிருந்து விடுதலைதரும் கழுவாய்ப் பலியாய்த் தம்மைக் கையளித்து உயிர்த்தியாகம் செய்த மகா பிரபு; அவருடைய புண்ணிய வல்லமையாலன்றித் நமக்கு ஆன்ம ஈடேற்றம் கிட்டாது என்றும் கண்ணீருடனும் பெருமூச்சுடனும் அருட்பீடத்தை நெருங்கிப் பொறிபுலன்களை ஒடுக்கி, உண்மையடக்கத்துடன் கூடிய பயபக்தியுடன் மூன்று வேளையும் எல்லா மக்களும் தனித்தனி எப்போதும் வேண்டுதல் செய்துவரல் வேண்டும். இவ்வாறு பயின்று வாழ்ந்து வருங்கால், கடவுள் அருள், பாவ

மன்னிப்பையும் மனச்சமாதானத்தையும் அருளிச் செய்து சீவன் முக்தராக்குவிக்கும்; மரணத்துக்குப் பின் அழிவில்லாத உயிர் வாழ்வுடைய விண்ணுலகத்தில் சேர்க்கும்,'' என்பது இரட்சணிய சமய சித்தாந்தம் என்பதாகும்.[145] இங்குக் கூறிய சித்தாந்தக் கருத்துகளையே சோகபூமிப் படலத்தில் வரும் இரட்சணிய போதனையிலும் கூறுகின்றார்.

கிருஷ்ணபிள்ளை கூறியுள்ள இச்சமய சித்தாந்தத்தில் திருத் தூய்மையாயர் இறையியலின் தாக்குறவு காணப்படுகிறது. பத் தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் பரவிய திருத்தமுறைக் கிறித்தவ நற்செய்தியின் இயல்பினை இஃது எதிரொளி செய் கிறது.

திருத்தூய்மையாளர் இறையியலில் 'அருள்' (Grace) சிறப் பழுத்தம் பெறுகிறது.[147] இவ்வியல்பினைக் கிருஷ்ண பிள்ளையிடம் காண்கிறோம் பின்வரும் இரட்சணிய யாத்திரிகப் பாடலில்,

''பத்தி யோவிசு வாசமோ பகருமெய் யன்போ
சித்த சுத்தியோ சற்கரு மத்திஞேர் திறனே
முத்தி யின்கரை பிடித்தது யாதெனின் மூலம்
அத்த னைக்குநம் மாண்டகை கிருபையே யாமால்''[148]

என்று முத்தியின் கரை பிடித்தற்கு மூலமாய் அமைந்தது கிறித்துவின் 'கிருபையே' (அருள்) என்று சிறப்பழுத்தம் கொடுத் துள்ளதைக் காண்கிறோம்.

12. மறுமைக் கோட்பாடு

கிருஷ்ணபிள்ளை உலகமுடிவில் அறத்தின் வெற்றியிலும் தீமை யின் அழிவிலும் நம்பிக்கை கொண்டிருந்தார்; மறுமையிலுள்ள இறுதி நடுத்தீர்ப்பு, சுவர்க்கம், நரகம் இவற்றிலும் நம்பிக்கை யுள்ளவராயிருந்தார்.[149]

இறுதி நடுத்தீர்ப்பில் மாந்தர் அனைவரும் உயிர்த்தெழுந்து கிறித்துவின் திருமுன்னர் நிற்க, அவர், நீதியாய் அவரவர் செய் கைக்குத் தக்கவாறு பலனளிப்பார்: அப்பலன் என்றும் அழியாதது என்றும் நம்பினார். இதனை,

''பூதலத்திறந் தோருயிர்த்தெழுந் தெம்பிரானடுப் புரியுநாள்
நீதியாய்வரு பலனுநித்திய நீக்கமின்றுல கத்துளீர்''[150]

என்பதால் அறிகிறோம். அந்நடுத்தீர்ப்பில் பூதலத்தைக் கெடுத்த தூதருக்குச் சாத்தானுடைய வழியைப் பின்பற்றியவர்களுக்கும் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படும்.[151]

"பூத லத்தைக்கெ டுத்தபொல் லாங்குடைத்
தூத ருக்கும் மார்க்கத் தொகுதிக்கும்
நாதன் றண்டனைத் தீர்ப்புந வில்கையில்
...."[152]

புதிய வானமும் பூமியும் படைக்கப்பட்டு, அவற்றிற்கான விதி நிடேதங்களை வகுப்பார் என்றும் காப்பியம் கூறுகிறது.

"புதிய வானும் வியம்ப டைத்துமேல்
விதிநி டேதம்வி தித்திரம் மாண்டகை
அதிப னுவர சானுமன் காலைநீர்
................................."[153]

இவை கிறித்துவின் இரண்டாம் வருகையில் நடப்பன வாகும்.[154]

கிறித்துவின் செங்குருதியினல் கழுவப்பட்டு இவ்வுலகில் திருமறை வழியில் உறுதியாக நிலைத்து வாழ்ந்தவர்களுக்கு விண்ணுலகிலே மறுமை வாழ்வில் கிட்டம்போகும் மெய்வாழ்வுக் கனி, மெய்வாழ்வுத் தண்ணீர், தூதர்களைப்போல இயேசுபெருமானுடன் வாழும் வாழ்வு, எப்பொழுதும் கிறித்துவைத் தரிசித்து வாழும் பேரின்ப வாழ்வு முதலானவற்றை சுவர்க்காரோகணப் படலத்தில் விவரிக்கின்றார்.

நிறைவுரை

இரட்சணிய யாத்திரிகத்தின் இறையியல், திருமறையின் அடிப்படையில் அமைந்ததாயுள்ளது. அதில் இவருடைய ஆன்மிக வாழ்க்கை அனுபவமும் கலந்து வெளிப்படுகிறது. இறையருள் ஆன்மிக வாழ்க்கையிற் சிறப்பழுத்தம் பெறுகிறது.

கிறித்தவ இறையியல் கருத்துகளை வெளிப்படுத்துவதற்குக் கிருஷ்ணபிள்ளை புறச்சமயக்கலைச்சொற்களைப் பயன்படுத்துகிறார். வேதம், ஆகமம், சித்தாந்தம், தீட்சை, சச்சிதானந்தம், அவதாரம், முத்தி என்பன சில எடுத்துக்காட்டுகளாம். இது குறித்து வேறோர் இடத்திலும் ஆராய்ந்துள்ளோம். யாவற்றையும் தொகுத்து நோக்கின், கிருஷ்ணபிள்ளை, இரட்சணிய யாத்திரிகத்தில் இறையியற் கருத்துகளை நாட்டின் நயத்திற்குரிய முறையில் திருமறைச் சார்பில் அறிவித்திருக்கின்றார் என்பது தெளிவாம்.

1 A.J. Appasamy, Tamil Christian Poet, p.69
2 மெய்யுணர்ச்சிப் படலம்-4
3 இரட்சணிய சமய நிர்ணயம், பக். 19
4 ஷை., பக். 162; ஒ. நோ. : II தீமோ. 3.16,17

5 ஷை., பக். 220
6 தற்சிறப்புப் பாயிரம்-1
7 தற்சிறப்புப் பாயிரம்-3
8 நிதான பருவம்: இரட்சணிய நவநீதப் படலம்-2
9 இ.ச.நி., பக். 30
10 பரமராச்சியப் படலம்-30
11 ஷை., பக். 161
12 யாத்திராகமம் 3:13-15
13 Vide, C.C. Crawford, The Eternal Spirit : His person and powers, pp. 327 ff
14 இ.ச.நி., பக். 161
15 ஷை., பக். 161.
16 David Devadoss, Life of Muthiah Pillai pp. 9-10; ஒ.நோ. : சபாபதி குலேந்திரன், கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு பக். 55-65.
17 Lpid,, p. 9 ff
18 ஆதிபருவம் : அரசியற்படலம்-2
19 ரோமர் 4:17 (கத்தோலிக்க மொழியாக்கம்)
20 இரட்சணிய மனோகரம் ; தோத்திரம் 1 ஒ.நோ. யோவான் 1:1-3
21 ஷை., 1.
22 ஷை., சந்நிதிமுறை, பரமார்த்த பரம நிதியே-6
23 ஆதியாகமம் 1:1-25
24 யோவான் 1:1-3
25 ஆதிபருவம் : சிருட்டிப் படலம்
26 cf., C.C. Crawford, Survey Course in Christian Doctrine, Vol. I. pp. 46-50
27 ஆதிபருவம் : சிருட்டிப்படலம் 1
28 அரசியற்படலம் 2
29 ஷை , 3
30 ,, 4
31 ஷை , 5
32 ,, 6
33 ,, 8
34 அரசியற் படலம்-13
35 மெய்யுணர்ச்சிப் படலம்-16
36 ஏசாயா 6:5
37 தானியேல் 4:37
38 மத்தேயு 6:10
39 மத்தேயு 6:10; 26:29; அப்போஸ்தலர் 2:1-47
40 டான் டீ வெல்ட், வேதாகமத்தில் உள்ள திருச்சபை, முதல்பாகம், பக். 420-433
41 இ.ம., 11 பாவவுணர்ச்சி-3
42 ஆதிபருவம் : பூர்வபாதைப் படலம் 17
43 போற்றித் திருஅகவல்-53
44 இ.ம , சந்நிதிமுறை : ஞானசம்பந்தகுரு-1
45 ஏசாயா 66:13; சங்கீதம் 63:5; 103 : 13; ஏசாயா 49:15
46 மத்தேயு 6:9
47 இ.ம. சந்நிதி முறை : பரமார்த்த பரமநிதி-4
48 குமார பருவம : இரட்சணிய சரிதப் படலம்-19
49 இ.ம., கிறிஸ்துவே எனக்கெல்லாமாயிருக்கிறூர்-4

50 ,, 8
51 ஆதிபருவம் : சிருஷ்டிப் படலம்-3
52 ,, 5
53 ,, 11-13
54 ஆதிபருவம் : மெய்யுணர்ச்சிப் படலம்-1
55 ஆதியாகமம் 3:17
56 நிதாதன பருவம்: மாயாபுரிப் படலம்-19
57 ,, 22
58 ,, 48
59 மெய்யுணர்ச்சிப் படலம்-9
60 சிருட்டிப் படலம்-6
61 1 கொரிந்தியர் 15:47
62 இ.ச நி., பக். 204
63 ,, பக். 204
64 ,, பக். 190, 191
65 ஆதிபருவம்: சிருஷ்டிப் படலம்-4
66 இ ச.நி., பக். 209
67 இ.ச.நி., பக். 191
68 ஆதிபருவம்: சிருஷ்டிப்படலம்-11
69 இ ச.நி., பக். 194. cf , C C. Crawford, Survey Course in Christian Doctrine, Vol. I., pp. 128 ff
70 ஏசாயா 14:12-15
71 ஆதி பருவம்: இராசதுரோகப் படலம்-5,6
72 இராசதுரோகப படலம் 6
73 இ.ச.நி., 191., ஒ.நோ. : 1 யோவான் 3:4,8: யாக்கோபு 4:17
74 1 யோவான 3:4
75 யாக்கோபு 4:17
76 இ ச.நி., பக். 186
77 பவுல் இராமகிருட்டிணன், திருவடி மாலை, பக்.20
78 ஆதிபருவம்: பரமராச்சியப் படலம்-12
79 இ ச.நி., 197
80 இ.ம., சந்நிதிமுறை : பரமார்த்த பரம நிதியே-5
81 ,,
82 டான் டீ. வெல்ட், வேதாகமத்தில் உள்ள திருச்சபை, பக். 151-153
83 ஆரணியபருவம்: சோகபூமிப்படலம்-39; மேலும் காண்க: ஆதிபருவம்: பூர்வபாதைப் படலம்-3
84 இ.ச.நி., பக். 162
85 சூழ்வினைப் படலம்-17
86 விசிராந்திப்படலம்
87 இ.யா. : கடவுள் வாழ்த்து 5
88 ஷை , ஆதிபருவம்: இராசதுரோகப் படலம், 9-11
89 ,, 11
90 ஜீவ புஷ்கரிணிப் படலம் : விசுவாசக் காட்சி-7
91 இரட்சணிய சரிதப் படலம-121
92 இரட்சணிய சரிதப் படலம் 122
93 மேற்படி., 431
94 இ.ம., 27 போற்றித் திருவிருத்தங்கள் 1
95 பா. இ. இ. வ , பக். 26-27
96 நற்போதகம், 1860, பக். 165

97 இ யா., பரம ராச்சியப்படலம் 39
98 இ.யா., இரட்சணிய சரிதப்படலம் 376
99 இ. ச. நி., பக். 167
100 மேற்படி பக். 168
101 இகபரசந்திப் படலம் போற்றித் திருவிருத்தங்கள் 35-36
102 மேற்படி., 36
103 இ. ம. போற்றித் திருவிருத்தங்கள்; பரிசுத்த ஆவியின் பரம் 32-36
104 போற்றித் திருஅகவல் 40
105 இ. யா., கடவுள் வாழ்த்து 2
106 போற்றித் திருஅகவல் 2
107 மேற்படி நிதான பருவம் : இரட்சணிய நவநீதப் படலம் 1
108 இ ச. நி., பக். 70
109 இ. ம., சந்நிதி முறை, யேசு நாயக ஸ்வாமி 10
110 C.C. Crawford, Survey Course in Christian Doctrine Vol. I, p. 66
111 C C. Crawford, The Eternal Spirit : His Person and Powers, pp. 295ff.
112 Quoted, Ibid., p. 294
113 இ. ச. நி., பக். 162
114 மத்தேயு 28:19; யோவான் 14:26; 15:26; 2 கொரிந்தியர் 13:14
1 பேதுரு 1:2
115 மத்தேயு 28:19, 1 யோவான் 5:7
116 இ.ச. நி. பக். 168, 169.
117 ,, ,, 169
118 இ. யா., ஆதி பருவம் : வரலாற்றுப் படலம் 2
119 இ. யா., நிதான பருவம் : இரட்சணிய நவநீதப்படலம் 98
120 ,, அலப்பலை வரைந்த படலம் 1
121 மேற்படி 71
122 ,, மரண நிழலின் பள்ளதாக்கு 60
123 ,, ஆதி பருவம் : பரம ராச்சியப் படலம் 21
124 எபேசியர் 2:16; 5:23; 1 கொரிந்தியர் 10:17; 12:13-17
125 இ.யா., ஆதி பருவம் வரலாற்றுப்படலம் 4
126 மேற்படி 2,3
127 ,, 5
128 குறள் 996
129 இ.யா., ஆதி பருவம் : பூர்வபாதைப்படலம் 6
130 மேற்படி 7
131 ,, 8
132 ,, 9
133 இ. ம., பிழைநினைந்திரங்கல் 1
134 இ.யா., நிதான பருவம் : அலப்பலை வரைந்தபடலம் ஒ. நோ. இரட்சணிய சரிதப் படலம் 494
135 காண்க, இயல் நான்கு பக். 116-17

136 இ.யா., குமார பருவம்: இரட்சணிய சரிதப்படலம் 51
137 காண்க, இயல் ஏழு பக். 216-17
138 இ. ம., வேதியரொழுக்கம் 3
139 சுமைநீங்கு படலம் 18
140 சுவிசேஷ மார்க்கப் படலம்-159
141 காட்சிப் படலம்-27
142 இரட்சணிய சரிதப்படலம்-51
143 யாத்திராமப் படலம்-17
144 சுவர்க்காரோகணப் படலம் 83
145 இ.ச.நி., பக். 19, 20
146 இ.யா., ஆரணிய பருவம்: சோகபூமிப் படலம் 36-77
147 Encyclopaedia Britanica Vol. 18, p. 879
148 இ.யா., இரட்சணிப பருவம் : இகபர சந்திபடலம் 50
149 இ.ச.நி., 19
150 இ.ம., உண்மை வற்புறுத்தல் 6
151 இ.யா., இரட்சணிய பருவம் : சுவர்க்காரோகணப் படலம் 19
152 ,, ,, 50
153 வெளி. 20-22.

இயல் ஆறு

முடிப்புரை

தமிழ் மொழியும் இலக்கியமும் இருபதாம் நூற்றுண்டில் இன்று பெற்றுள்ள வளர்ச்சிக்கு வழிகோலியது பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஏற்பட்ட தமிழ் மறுமலர்ச்சி என்னலாம். இந்த மறுமலர்ச்சிக்கு ஒரு பெருங்காரணமாய் அமைந்தது மேலைநாட்டுக் கிறித்தவத்தின் தாக்குறவு என்பது தோன்றுகிறது. இத்தாக்குற வின் தலையாய விளைவுகளில் ஒன்று, தமிழ்க் கிறித்தவர்களால் தமிழில் புதிதாய்ப் படைக்கப்பட்ட தமிழ்க் கிறீத்தவ இலக்கிய மாகும். கிருஷ்ண பிள்ளை பத்தொன்பதாம் நூற்றுண்டின் பின் முக்காற் பகுதியில் வாழ்ந்தவர் (1827-1900).

இவர் பெருங்காப்பியம் பாடிய புலவர்மட்டு மல்லர்; இலக்கணச் சூடாமணி என்னும் இலக்கண நூலை உரைநடையில் செய்துள்ளார்; 512 பாடல்கள் அமைந்த காவிய தரும சங்கிரகம் என்றும் பன்னூற்றிரட்டினைத் தொகுத்துள்ளார். இது ஒரு சிறந்த நீதி நூற்கோவையாக விளங்குகிறது. இரட்சணிய சமய நிர்ணயம் என்னும் சமய சாத்திர நூலையும், பாளையங் கோட்டை எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை கிறிஸ்தவனுன வரலாறு (நான் கிறிஸதுவைக் கண்ட வரலாறு) என்னும் தமிழ் மொழியில் தோன்றிய முதல் தன் வரலாற்று நூலையும் இயற்றியுள்ளார். இரட்சணிய மனோகரம் என்னும் பக்திப் பனுவலைப் படைத்துள்ளார். என்னுடைய பதிப்பின்படி இதில் அமைந்துள்ள 34 பதிகங்களுள் இரட்சணிய யாத்திரிகத்திலிருந்து எடுக்கப்பட்டவை (11 தேவாரங்கள் உட் பட) 28; மனோகரத்தின் மொத்தப் பாடல் தொகையில் 75.5 விழுக்காடு. ஏனையவை தனியாகப் பாடி இணைக்கப்பெற்றவை. இரட்சணிய சரிதம், போற்றித் திரு அகவல் ஆகிய பாடல்களையும் இயற்றியுள்ளார். 1892 முதல் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் தமிழ் வெளியீட்டுப் பகுதியின் முதல் ஆசிரியராக அமர்ந்து பணியாற்றியபோது பல நூல்களை பதிப்பித்து இருக்கிருர். அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று டாக்டர் கால்டுவெல் எழுதிய பரத கண்ட புராதனம் எனும் நூலாகும். இவை போக இரட்சணியக் குறள், இரட்சணிய பால போதனை ஆகிய செய்யுள் நூல்களையும் இயற்றியுள்ளார். ஆனுல் பின்னவை இரண்டும் நமக்குக் கிட்டவில்லை. இந்நூல்களைப் பற்றிய விரிவான ஆராய்ச் சியினை எ. ஆ. கிருஷ்ணபிள்ளையின் நூல்கள் - ஓர் ஆராய்ச்சி என்னும் என்னுடைய நூலில் காணலாம்.[1]

இவர்தம் வாழ்க்கையும் இலக்கியப் படைப்புகளும் தமிழர் நாகரிகத்திலும், பண்பாட்டிலும், இலக்கியத்திலும் ஒரு

வரலாற்றுக் காலக்கட்டத்தில் நுழைந்து, தனக்குரிய நிலையான இலக்கியமும் பெற்ற ஒரு புதிய சமயத்தின் வரலாறு, அதன் தாக்குறவுகளை அறிவதற்கு ஒரு நிலைக்களமாய் விளங்குகின்றன.

1. சிலருடைய கருத்துகள்

இரட்சணிய யாத்திரிகத்தையும் கிருஷ்ணபிள்ளையையும் குறித்து அறிஞர்கள் சிலர் தங்கள் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அவற்றை எண்ணிப் பார்க்கலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர், எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, 'தமிழ்ப்பணியன்' என்றும் போற்றப்படும் கிருஷ்ணபிள்ளை என்கிறார்.[2] டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், 'உண்மையான தமிழ்க் கிறித்தவப் புலவர்' என்று கூறுகிறார்.[3] சோமசுந்தரப்பூவண்ணன் 'மகாவித்துவான் எனப் புகழ் பெற்ற கிருஷ்ண பிள்ளை' என்று எழுதுகிறார்.[4] தமிழ்க் கிறித்தவப் புலவர்கள் இவரைக் 'கிறித்தவக் கவியரசர்' எனவும், 'மீட்புக் கவிஞர்' எனவும், 'நற்செய்திக் கவிஞர்,' 'அருட்கவிஞர்' எனவும் போற்றுகின்றனர்.

ஆனால், கிருஷ்ண பிள்ளையைக் 'கிறித்தவக் கம்பர்' எனப் போற்றுதலே பெரு வழக்காயிருக்கிறது. தமிழகத்தின் தலைசிறந்த காப்பியப் புலவரை அடியொற்றி இவர் ஒரு பெருங்காப்பியம் செய்தமையால், இவ்வாறு வழங்கப்படுகிறார்போலும். கவிஞரின் கவிபாடும் ஆற்றலை மனோன்மணியம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை போற்றியுள்ள பான்மையினைக் கண்டோம். டி. ஜி. தங்கராசனார் என்பார், 'கிறிஸ்தவக் கம்பன் கிருஷ்ண பிள்ளை' என்ற தலைப்பிட்டே இவரது வாழ்க்கை வரலாற்றினை வரைந்துள்ளார். ஆனால், அவர் கிருஷ்ண பிள்ளையைக் 'கிறிஸ்தவக் கம்பன்' என்று ஏன் வழங்குகிறார் என்பது பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. இவ்வழக்குப் பழமையுடையதே; கவிஞரின் வாழ்நாட் காலத்திலே உண்டானது.

கிருஷ்ணபிள்ளை வாழ்ந்த காலத்திலே இவர் 'கிறிஸ்தவக் கம்பர்' எனப் போற்றப்பெற்றுள்ளமையை அறிகிறோம். இரட்சணிய யாத்திரிகம் வெளியிடப்பெற்ற 1894ஆம் ஆண்டில் நற்போதக இதழில் இதற்கு நூல் மதிப்புரை வந்துள்ளது. இதில் சுவிசேஷமுத்து என்பவர் கம்பராமாயணத்தையும் இரட்சணிய யாத்திரிகத்தையும் ஒப்பிட்டுப் பின்வருமாறு கூறுமிடத்து, அவரைக் 'கிறிஸ்தவக் கம்பர்' என்று முதன்முதல் வழங்கியுள்ள குறிப்பு நமக்குக் கிட்டுகிறது.

"5. கம்பராமாயணம் ஒரு கட்டளைபோலும் இரட்சணிய யாத்திரிகம் அதிலமைந்த ஒரு இட்டிகைபோலுமிருக்கிறது. சொல்வளம், சொற்சுவை, கருத்து, கற்பனுலங்கார முதலிய வற்றில் யாத்திரிகம் கம்பராமாயணத்திற்குத் தாழ்ந்ததல்ல; பொருளின்மையில் யாத்திரிகம் அதிசிரேஷ்டமானது. ஏனெனில் இதய சுவாமியின் இரக்ஷணிய புண்ணியமாகிய சத்தியம் இக்காவியத்தில் ஆதியோடந்தமாய் ஜொலித்துக் கொண்டிருக்கிறதே! முழுக்கவும் பேரின்பக் கருத்தை அமைத்துக் கவிபாடுதல் மகா கஷ்டம்.

"6. ஆகவே இவருக்குக் கிறிஸ்தவக் கம்பனென்னும் நாம தேயம் தரிப்பிக்கின்ருேம். இக்கவிஞர் கம்ப நாடற் கிணையாகாரென ஆட்சேபிக்கின் மூன்று விஷயத்தில் மாத்திரம் அப்படியாகார். முதலாவது கம்பனைப்போல் தமது காப்பியத்தில் அபத்தாபாச வர்ணனை செய்யாததா லும்; இரண்டாவது, இயல்புக்கு மிஞ்சின கற்பனுலங்காரம் அமைக்காததாலும்; மூன்ருவது, நரஸ்துதி செய்யாத தாலுமே. இம்மூன்று விஷயமும் கிறிஸ்து சமய பரிசுத்தத் திற்கும், தெய்வீக போதனைக்கும் ஏற்காதவையாதலின் அவற்றை நீக்கிவிடுதல் குற்றமன்று, நியாயமே."[5]

இதனை அடுத்து, 'கிறிஸ்தவக் கம்பர்' என்னும் வழக்கு வரலாறு பெற்றுவிடுகின்றது.

1866இல் பிறந்தவரான எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை 'கிறிஸ்தவக் கம்பர்' என்று குறித்துள்ளதை முன்னரே கண்டோம். அவரது நூலின் முதற்பதிப்பு 1904இல், கிருஷ்ணபிள்ளை மறைந்த நான்காண்டுகள் கழித்து, வெளிவந்தது. கிருஷ்ணபிள்ளை, கம்பரின் காப்பிய நடையையும் அதன்போக்கையும் தழுவிக் காப்பியம் செய்தபான்மையினை அறிந்தோம். இம்முயற்சியில் இவர் வெற்றி பெற்றுள்ளார். எனவே, இவரைக் 'கிறிஸ்தவக் கம்பர்' எனப் போற்றுதல் ஏற்புடைத்தாகின்றது.

பேராசிரியர் அ. சீனிவாசராகவன், 'ஒரு நூற்ருண்டுத் தமிழ்க் கவிதை' என்னும் தமது நூலில் இரட்சணிய யாத்திரிகத்தைக் குறித்து எழுதும்போது, "பழைய நூல்களை அப்படியே பின் பற்றும் ஆர்வமும் கிறிஸ்தவ சமயக் கருத்துகளைக் கருத்துகளாகவே தரும் பாங்கும், பிரசார நோக்கமும் சிறிது குறைவாக இலங்கியிருந்தால், கிருஷ்ணபிள்ளை கவிதை இன்னும் உயர்ந்த தனித்தன்மையின் சோபைபெற்று விளங்கி இருக்கும்; 'கிறிஸ்தவக் கம்பன்' என்றல்லவா உபசாரமாக அவரைப் பாராட்டுகிருர்கள்? அதைவிட, உண்மையிலே தமிழ் பிரான்சிஸ் தாம்சனுக அவர் இலகி இருத்தல் கூடும்," என்று கூறுகிருர்.[6]

கிருஷ்ணபிள்ளை முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோல இரட்சணிய யாத்திரிகத்திலே போற்றியிருந்தாலும், இவர் விரும்பிய மாற்றங்களைத் துணிந்து செய்துள்ளார். இவைபற்றி முன்னரே ஆராய்ந்திருக்கிறோம். கிருஷ்ணபிள்ளை மரபுவழிக் கவிஞராய்க் காணப்படுகிறார் என்பது உண்மையே. ஆனால், இவர் காப்பியத்தில் புதியபோக்குகளுக்கு இடமளித்துள்ளார். கவிஞர் பழைய நூல்களை அப்படியே பின்பற்றவில்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் காமச் சுவையைத் தவிர்த்துக் காப்பியம் படைத்துள்ளதைச் சுட்டலாம். காமச்சுவை தவிர்த்து ஒரு காப்பியம் படைத்து வெற்றிபெறுதல் எளிய சாதனையன்று.

இரட்சணிய யாத்திரிகம் வெளியிடப்பட்ட மறு ஆண்டில், 1895இல் 'இந்து' ஆங்கில நாளிதழில் இதற்கு மதிப்புரை வெளியாயிற்று, அம்மதிப்புரையில், ''இக்காலத்தில் தமிழில் வெளியிடப்பட்டுள்ள வேறு எந்த நூலும் இதன் இலக்கியச் சிறப்புக்கு மேற்பட்டது அன்று. இது ஒரு பெருங்காப்பியம் என்றாலும். தமிழில் உயர்நிலையினவாய் வெளிவந்துள்ள இலக்கியங்களில் இக்காலப்போக்குக்கு ஏற்றாற்போலக் காணப்படுகிற பெண்மையின் அழகையும் கவர்ச்சிக் கூறுகளையும் வருணிக்கும் உயர்வு நவிற்சியான வருணனை இதில் ஏதும் இல்லை'' என்று கூறப்பட்டுள்ளமை ஈண்டுக் குறிக்கத்தக்கது.[7] காப்பியம் முதனூலைப் போலக் கற்போர் ஆர்வத்தைத் தொடர்ந்து முடிவுரையில் நிலைக்கச் செய்யும் தன்மையினதாய் விளங்குகிறது.

மேலும், 'கிறிஸ்தவ சமயக் கருத்துகளைக் கருத்துகளாகவே தரும் பாங்கும்' சுட்டப்பட்டது. கிருஷ்ணபிள்ளை இவ்வாறு தருவதாகக் காணப்படும் இடங்களாக ஓரிரண்டைச் சுட்டலாம்.[8] இவற்றைப் புலவர் காப்பியத்தில் வரும் பாத்திரங்கள் வாயிலாக ஏற்ற சூழலுடனும் இலக்கிய நயத்துடனும் அமைத்துவிடுகிறார். இவர் கிறித்தவக் கருத்தைப் பயன்படுத்தும் பாங்கினை அறியப் பின்வரும் எடுத்துக்காட்டை உன்னலாம்: மரணச் சூழலுக்கிடையில் யாத்திரிகன் செல்கிறான். அவனை அச்சம் ஆட்கொள்ளுகிறது. அப்பொழுது, ''கிறிஸ்து எனக்கு உயிர்: மரணம் எனக்கு வருவாய்,''[9] என்னும் சமயக் கருத்தை உள்ளத்தில் நினைத்து உறுதிபெறுகிறான். அவன்,

''ஆவியே யகலு மேனு மாரருட் கிறிஸ்து வேயென்
